


COMICS PDF TIMES
HSC

# முழுநிலவில் முதல்இரவு!

(திடுக்கிடும் மர்ம நாவல்)

COMICS PDF TIMES
HSC

எழுதியவர் :

மர்மக்கதை திலகம்

நாஞ்சில் பி. டி. சாமி

கலைப்பொன்னி

11, வெங்கலக்கடைத் தெரு,

மதுரை-1. போன் நி. 24001.

பதிப்புரிமை உடையது.
முதற் பதிப்பு—1970.

இந்நூலில் காணப்படும் பெயர்கள் சம்பவங்கள் அனைத்தும் கற்பனையே. இருப்போர் இறந்தோர் எவரையும் குறிப்பன அல்ல.

NOT FOR SALE
FAN MADE ONLY

# மலிவுப் பதிப்பு

உள்நாடு விலை ரூ. 1—00
வெளிநாடு விலை ரூ. 1 00

# 1. கட்டிலறையில் ஒரு மிருகம்!

குளிர்ச்சியான முழு நிலவு வானத்தில் தவழ்ந்து வந்துகொண்டிருந்தது.

இன்பக் கிளுகிளுப்பை உண்டுபண்ணும் இரவு நேரம் அது. மனித அரவம் பெட்டிப் பாம்புபோல் அடங்கிவிட்ட அமைதியான சூழ்நிலை.

மீனு தன் உடலை 'கில்லென்று' பனிக்காற்று தழுவுவதை உணர்ந்தாள். பசுமையான மெத்தைக் கட்டிலில் மல்லாந்தபடியே படுத்திருப்பதைப் போன்ற நினைவு—பலவித நறுமணத்தை வாரியிறைக்கும் பூந்தோட்டம் அருகிலேயே இருப்பதைப் போன்ற பிரமை......

முற்றிலும் புதிய—வசதி நிறைந்த—ஆடம்பரப் பொருட்களுடன் கூடிய ஓர் அறையினுள்தான் இருக்கிறோம் என்ற எண்ணம் இயல்பாகவே அவளுக்கு இருந்தது.

அவள் இமைகளை விரிக்க படுபிரயாசை—பகீரதப் பிரயத்தனம் செய்து கொண்டிருந்தாள். கண்களைத் திறக்க நினைத்தபோதிலும் இமைகள் ஒத்துழைக்கவில்லை.

"எனக்கு என்ன ஆயிற்று? நான் இங்கே எப்படி வந்து சேர்ந்தேன்?" என்று அவள் தன்னைத்தானே கேட்டுப் பார்த்துக் கொண்டாள்.

பதில் கிடைக்கவில்லை. கனவுலகத்தில் மயக்க நிலையிலேயே சஞ்சரித்துக்கொண்டிருப்பதைப் போன்ற ஒரு பிரமை உண்டாயிற்று.

சூரிய வெளிச்சத்தின் வெப்பம் அதிகரிக்க — அதிகரிக்க பனித்துளிகள் கரைந்து மறைவதைப்போல் நேரம் செல்லச் செல்ல ஓரளவு தெளிவு பெற்றாள்.

மீனு...!

அதுதான் அந்தப் பருவ மாதுவின் பெயர்! காட்டில் மலர்ந்த அந்த முல்லையை ஓர் அயோக்கியன் பறித்துக்கொண்டு வந்துவிட்டான்.

COMICS PDF TIMES

அவளுக்கே அது தெரியாது. என்ன நடந்திருக்கிறது என்பதைக் கற்பனை செய்து பார்க்கும் திறனும் அவளுக்கில்லை. ஆனால் தனக்கு ஆபத்து காத்துக்கொண்டிருக்கிறது என்பதை மட்டும் அவள் புரிந்து கொண்டாள்.

ஆபத்து என்ற உணர்வுகள் மூளையைத் தாக்கியதும் அவள் ஓர் அதிர்ச்சியுடன் கண்களைத் திறந்து கொண்டாள்.

புகையின் நடுவே நின்று கொண்டிருப்பதைப் போல் மங்கலாகத் தெரிந்தது. பிறகு கொஞ்சம் கொஞ்சமாக அந்தப் புகை மறைந்து பரிபூரணத் தெளிவு உண்டாயிற்று.

அது இரட்டைக் கட்டில்கள் கொண்ட படுக்கையறை ஆடம்பரத்தை எதிரொலிக்கும் விதத்தில் அங்கேயுள்ள பொருட்கள் காணப்பட்டன.

அவள் இதுவரையில் இப்படியொரு மெத்தைக் கட்டிலைப் பார்த்ததே இல்லை. ஊது புருவின் மென்மையான தூவல்களைப்போல் அல்லவா பசுமையாக இருக்கிறது.

பீறு இனம் தெரியாத திகிலோடு, நெஞ்சு 'பக்கென்று' அடித்துக்கொள்ள எழுந்து உட்கார்ந்து அறை முழுவதும் பார்வையை ஓடவிட்டாள்.

அது விசாலமான அறை.

தரையைப் பார்க்க முடியாதபடி விரிப்பு போடப்பட்டிருந்தது. சோபாக்கள் பரப்பப்பட்டிருந்தன. சுவர்களில் பல அரை நிர்வான 'ஹிப்பி' அழகிகளின் வர்ணப் படங்கள்.

குளிர்ந்த காற்று தாளரீதியான ஓசையின் பின்னணியுடன் இலேசாகத் தவழ்ந்து வந்து கொண்டிருந்தன.

அது ஏர்கண்டிஷன் அறை.

"கிராமத்தில் குடிசை வீட்டில் அம்மாவுடன் வாழ்ந்துவந்த நான் இங்கே எப்படி வந்தேன்?" என்று அவள் எழுந்து நின்று தன்னைத்தானே கேட்டுக் கொண்டவாறு எதிரில் தெரிந்த நிலைக் கண்ணாடியில் தன்னுடைய தோற்றத்தைப் பார்த்தாள்.

வழக்கத்தைப் போன்ற எளிமையான தோற்றம்தான். எடுப்பான இளமையின் பிடிப்பு அழகை எடுத்துக் காட்டுவதற்குப் பேருதவி புரிந்தது. இந்த அளவுக்கு முகத் தோற்றத்தையும் நிலைக் கண்ணாடியில் பார்ப்பது இதுதான் முதல் தடவை. அதனால் தன்னைப்

பார்க்கும்போது முற்றிலும் மாறுபட்ட பருவச் செழிப்புடன் கூடிய ஒரு பெண்ணைப் பார்ப்பது போன்ற உணர்வே உண்டாயிற்று. உரமிட்டு வளர்க்கப்பட்ட தென்னங்கன்றுபோல் காணப்பட்டாள்.

தன் தோற்றத்தைப் பார்க்கப் பார்க்க 'இவ்வளவு அழகாகவா இருக்கிறோம்' என்ற மனப் பூரிப்பு உண்டாயிற்று.

அவள் இன்னும் நெருக்கமாகக் கண்ணாடியின் அருகில்போய் நின்று பார்த்தாள்.

எதையோ அவள் கழுத்தில் பார்த்துவிட்டாள்.

கருநாகப் பாம்பு கழுத்தில் மாலையைப்போல் கிடக்கிறதா? படமெடுப்பதைப்போல் தோன்றுகிறதே!

அவள் பீதியுடனும், பேரிடி தாக்கியதைப் போன்ற அதிர்ச்சியுடனும் பார்த்தாள்.

அது அது... தாலிக்கயிறு அல்லவா? பொன் சரட்டில் திருமாங்கல்யம் கோர்க்கப்பட்டிருக்கிறதே!

தன் கழுத்தில் கிடப்பது மாங்கல்யம் என்பதையும், அது ஒருவனுக்கு உரிமையானவளாக ஆக்கப்பட்டிருக்கும் அடிமைச் சாசனம் என்பதையும் தெரிந்து கொண்டாள்.

இது யார் கட்டிய தாலி...? இந்த ஆடம்பர வாழ்வு யாரால் எப்படிக் கிடைத்தது? கிராமத்தில் ஏழ்மையான வாழ்க்கை நடத்தி வந்த தன்னை இங்கே கொண்டுவந்தது யார்?

அவள் இப்படி தனக்குள் கேட்டுக்கொண்டபோது குளியல் அறையின் கதவைத் திறந்துகொண்டு ஒரு மனிதர் எல்லா பற்களும் தெரியும்படியாகச் சிரித்தவண்ணம் வந்தார்.

அவள் நெஞ்சு பகீரென்றது.

அவர் அரைக் கிழவர் கண்ணபிரான் ஆயிற்றே? கிராமத்தில் தன் பின்னாலேயே சுற்றிக்கொண்டிருந்த அவர் இங்கே எப்படி வந்தார்? வீட்டுக்கு வந்து அம்மாவுடன் இரண்டொரு தடவை பேசிக் கொண்டும் இருந்திருக்கிறாரே!

"மீனு... பயப்படாதே... நான்தான் இந்த ரூமை 'புக்' பண்ணியிருக்கிறேன். சென்னையிலேயே இதுதான் பெரிய ஹோட்டல். இங்கே எல்லா வசதிகளும் உண்டு."

அவர் இப்படிச் சொன்னதும் தன்னை வாலிபராக மனத்தில் நினைத்துக்கொண்டார் போலும். நெஞ்சை வேறு நிமிர்த்திக்கொண்

டார். சட்டையோ, [illegible] பவுன் தங்கச் சங்கிலி [illegible]

கண்ணபிரான் தன்னை [illegible] சரிகை வேட்டி சரசரக்க [illegible] தார். வெற்றிக்குரிய ஆனவப் [illegible] களில் நெளிந்தோடியது விஷம [illegible] யும் 'உர்ரென்று' பார்த்தார்.

இதற்கு முன்னால் அவர் [illegible] களையே பார்த்திருக்க மாட்டாரோ?

அவள் தன்னுடைய நிலைமையை [illegible] இந்தச் சண்டாள அரைக் கிழவன்தான் எ[illegible] யைக் கட்டிவிட்டான்.

தன்னுடைய தாயாரும் இந்த அயோக்[illegible] செய்துவிட்டாளோ?

மீனு தன்னுடைய ஆபத்தான நிலையைப் [illegible] டதும் தடுமாற்ற மடைந்தாள். நின்றுகொண்டிருக்க [illegible] தள்ளாடினாள். சோபாக்கள் சுற்றுவதைப் போலிருந்தன. [illegible] சுழலுவதைப் போன்ற பிரமை. அந்த அறையே சக்கரம்போல் [illegible] கிறதா?

அவள் கீழே விழுந்துவிடாமல் இருக்க தரை விரிப்பில் உட்கார்ந்து, "ஐயா .... என்ன நடந்தது? என் கழுத்தில் தாலி கட்டியது யார்? என்று கேட்டாள். கண்ணீர் பொங்கியது.

"ஐயையோ... அதற்குள் தரையில்போய் [illegible] கொண்டாயே...! கட்டில் எதற்காகப் போடப்பட்டிருக்கிறது [illegible] என்பதை மறந்துவிட்டாயா?" என்று சொன்ன கண்ண[illegible] வந்து தன் பக்கத்தில் உட்காரும்படி கொஞ்சினார்.

அவருடைய விபரீதமான ஆசை, [illegible] விதம் அவள் உள்ளத்தில் பெரும் கொ[illegible] ணியது. இரண்டில் ஒன்றைப் பார்த்துவிடத் துணிந்[illegible]

கோழைகளாக ஒதுங்கியே [illegible] களுக்கு கோப உணர்ச்சி வந்துவிட்டால் [illegible] போகி றோம் என்பதே அவர்களுக்குத் [illegible] ஆபத்து வந்தக் கோணத்திலிருந்து [illegible] துணிந்து விடுவார்கள்.

தன் வாழ்க்கையை அந்த அரைக்கிழவர் பாழாக்கிவிட்டாரே என்பதை உணர்ந்து கொண்டதும் அடிபட்ட பெண்புலிபோல் சீறிக் கொண்டு அவள் எழுந்து நின்றாள்.

"என் கழுத்தில் தாலி கட்டியது யார்?" என்று அவன் பொன் தாலியைப் பிடித்து இழுத்துக்கொண்டே கதறினாள்.

"என்னைத் தவிர வேறு யார் உனக்கு கணவனாக முடியும்? நான்தான் தாலி கட்டினேன். வயது உன்னைவிட அதிகமான போதி லும் இன்னும் நான் வாலிபத்தைக் கடந்துவிடவில்லை என்பதை என்னால் உறுதிகூற முடியும்." அவர் எல்லா பற்களையும் இழித்தார்.

கோபம் பொங்கிக்கொண்டு வரும் அவள் முகத்தைப் பார்ப் பதற்கு அவருக்குப் பேரானந்தமாக இருக்கவேண்டும்.

எவ்வளவு ஆணவமும், திமிரும் நிறைந்த பேச்சு அது. பெண்களை மண்ணில் நெளியும் புழுக் கூட்டமாக அவர் நினைத்து விட்டாரா? பணம் இருக்கிறதே என்ற அகந்தையினால் சமூகத்தின் கட்டுத் திட்டங்கள் எல்லாவற்றையுமே தகர்த்துவிடலாம் என்று முடிவுகட்டிக் கொண்டாரா?

மீனா தனக்குவந்த ஆபத்தைப் புரிந்துகொண்டதும் முகத்தை இரு கைகளாலும் மூடிக்கொண்டு குலுங்கிக் குலுங்கி அழுதாள். தன் கழுத்தில் கட்டாயத் தாலி கட்டியிருக்கும் அந்தக் கீழ்த்தரமான இழிந்த மிருகத்தை எப்படி கணவனாக ஏற்றுக்கொள்ள முடியும்?

அதிலும் நேர்மையான முறையில்கூட தாலி கட்டவில்லையே. கடத்திக் கொண்டுவந்து, மயக்கமடையச் செய்து தன்நிலை மறந்த சூழ்நிலையில் அல்லவா தாலி என்ற பெயரால் கழுத்தில் விலங்கை மாட்டியிருக்கிறான்!

அவள் அழுது ஓய்ந்த பின்பு, "நீங்கள் என்னை எப்படியோ நினைத்துக்கொண்டீர்கள் போலிருக்கிறது. நான் தமிழ்ப் பெண்தான். கல்லானாலும் கணவன், புல்லானாலும் புருஷன் என்று எண்ணும் உயர்ந்த மரபைச் சார்ந்தவள்தான். ஆனாலும் உணர்ச்சிகளைச் சாக டித்து யாருக்கும் தெரியாமல் தாலி என்று ஒன்றைக் கட்டியதை நான் அங்கீகரிக்கத் தயாராக இல்லை. நீங்கள் என் கணவர் இல்லை"

ஒரு பெண் தூங்கிக்கொண்டிருக்கிற நேரத்தைப் பார்த்து ஒருவன் தாலி கட்டிவிட்டால் உடனே மனைவியாகிவிட முடியுமா? முடியும் என்றால் பெண்களின் வாழ்க்கை முழுவதும் என்றைக்கோ சீரழிந்து சின்னாபின்னமாகியிருக்குமே!

COMICS PDFTIMES

அவள் இப்படித்தான் [illegible] எதிர்பார்த்திருந்தாள். அதனால் [illegible] வில்லை. அதற்குப் பதிலாகச் சிரித்து [illegible]

"மீரு, உன் அம்மாவின் [illegible] திருமணம் நடந்தது. [illegible] யிரம் ரூபாயையும் ரொக்கமாகக் [illegible] உன்னை என் சட்டப்படி [illegible]"

அவளுக்கு [illegible] கடனுக்காக இரவும் பகலும் [illegible] வந்தது [illegible] கொண்டுவந்து [illegible] மானத்தைக் [illegible] தால்கூட [illegible]

ஆனாலும் பணம் கொடுத்து [illegible] அவருக்கு [illegible]

தியாகம் விலைமதிப்பற்றதுதான்! ஆனால் அந்தத் தியாகம் அர்த்தமின்றி செய்யப்படுவதைக் கூட அவள் விரும்[illegible] அதற்குப் பெயர் தியாகமும் ஆகாது.

"உங்களுக்கு பத்தாயிரம் ரூபாய் கொடுத்துவிட்டால் என்னை விட்டுவிடுவீர்கள் அல்லவா?"

அவர் 'இடி இடி' என்று சிரித்தார் "பைத்தியக்காரப் பெண்ணே! பேரம் முடிந்தபிறகு அதற்கு மறு விலை கிடையாது. இப்பொழுது நான் உன் கணவர் இன்றிரவு நமக்கு முதல் இரவு. அதிலும் முழு நிலவுடன் கூடிய இந்த இந்த இரவே நமக்கு முதல் இரவாக அமைவது என்றால் அதைவிடவும் நமக்கு ஆனந்தம் வேறு எதுவுமே இருக்க முடியாது."

முழு நிலவாம்! முதல் இரவாம்! பாதிக் கிழவரின் பேராசையை நினைக்க நெஞ்சுக்குள் வெடிகுண்டு வெடித்து விட்டதைப் போலிருந்தது, அவளுக்கு.

அவள் ஆவேசமடைந்தவளாய், "நீங்கள் பெரிய மனிதர் என்பதால் மரியாதைக் கொடுத்துப் பேசுகிறேன் என்னை விட்டுவிடுங்கள். என்றைக்காவது ஒரு நாள் நீங்கள் கொடுத்த பணம் முழுவதையுமே திருப்பிக் கொடுத்து விடுகிறேன்" என்று சொன்னாள்.

அதை அவர் ஏற்றுக்கொள்ளவில்லை [illegible] ஏற்கனவே மது போதையுடன் இருந்த அவர், [illegible] கண்டதும் இன்னும்

போதை வெறிக்குள்ளாகி தலைகால் தெரியாமல் ஆடத்தொடங்கி விட்டார்.

அவள் கனியானாள். அதைப் பிழியும் கட்டைகள் ஆனார் கண்ணபிரான்.

''திருப்பிக் கொடுத்துவிடப்போகிறாயா? பரிதாபத்திற்குரிய பேதைப் பெண்ணே! இது நம்முடைய முதல் இரவு! இந்த இரவில் நாம் ஆனந்தமாக இருக்கவேண்டும். நமக்குள் எந்தவிதமான சண்டை சச்சரவுகளும் கூடாது.''

இப்படிச் சொன்ன அவர் இரு கைகளையும் அகலமாக விரித்துக் கொண்டு அவளை நோக்கி ஓடி வந்தார். நாக்கில் எச்சில் சுரந்து உதட்டுக் கோணத்தில் வழிந்தது.

மீனா அதைக்கண்டு, பருந்தைக்கண்டதும் குலைநடுங்கும் கோழிக்குஞ்சைபோல் ஒரு மூலையில் பதுங்கினாள்.

அவர் ஓடிவந்து முழங்கைக்கு மேலே புஜத்தை அழுத்தமாகக் கவ்விப் பிடித்துக்கொண்டார்.

அவ்வளவுதான்! மீனாவுக்கு எங்கிருந்துதான் இவ்வளவு கோபம் பொங்கியதோ தெரியவில்லை. சட்டென்று. தலையால் அவருடைய நெஞ்சை முட்டித்தள்ளி விடுவித்துக்கொண்டு தாலிக்கயிற்றை 'வெடுக்கென்று' அறுத்து அவர் முகத்திலேயே வீசி எறிந்தாள்.

அந்தச்செய்கை – அவளுடைய ஆவேசம் காதல் கலையில் கை தேர்ந்த பேர்வழியான கண்ணபிரானை நிலைகுலைய வைத்தது. துடித்துப்போய்விட்டார்.

வாய்க்குள் பிடிபட்ட நண்டு தன்னுடைய காலால் கொக்கின் கழுத்தைத் துண்டித்துவிட்டதைப் போன்ற பேரதிர்ச்சி அவர் பச்சை இரத்த வெறிபிடித்த கொடூரமான மிருகமாகவே மாறிவிட்டார்.

அவர் மிருகபலத்துடன் அவள்மீது பாய்ந்து குஸ்தி பிடிப்பது போல் தரையில் கிடந்து உருண்டார். மிகமிக ஆவேசமான உணர்ச்சி மயமான போராட்டம்—எவ்வளவு சிரமம் எடுத்துக்கொண்டாவது அவளுடைய புனிதத்தைச் சூறையாடிவிடவேண்டும் என்ற துடிதுடிப்பு.

அவர் இரத்தம் சூடேறி நரம்புகள் வெடித்துவிடுதைப்போல் முறுக்கேறி இருந்தன. கைகளும் கால்களும் இரும்புத் தூண்களாயின. தளர்ந்து போயிருந்த உடல் இப்பொழுது தேக்குமரமாகி யிருந்தது.

COMICSPDF TIMES

மீனு தனக்கு வரவிருக்கும் ஆபத்தை உணர்ந்து கொண்ட வரையில் கைகளாலும், கால்களாலும் அடித்துத் தள்ளிவிட்டு கடிக்கலானாள்.

அவள் கடித்து விடுவாள் என்பதை எதிர்பார்க்காத கண்ணபிரான் 'ஆ' என்று அலறி சற்றே விடுவித்ததும், அவள் துள்ளி எழுந்து மேஜையில் இருந்த மதுப்புட்டியைக் கையில் எடுத்தாள்.

"என் பக்கத்தில் வராதே. இனியும் என்னைத் தொட்டால் இதைக்கொண்டே உன் மண்டையைப் பிளந்து விடுவேன். உயிர் வாழவேண்டும் என்ற ஆசை இருந்தால் நெருங்காதே.

அவள் கத்தினாள்

அவருடைய காதுகள் அடைத்துக் கொண்டன. அவளுடைய இளமையைச் சுவைக்கவேண்டும் என்ற பசிகொண்ட ஆவேசத்தை தவிர வேறு எதுவுமே அவருக்கில்லை. கொஞ்சம் ஏமாந்தால்கூட உடனே அவள் கதவைத் திறந்துகொண்டு ஓடிப்போய் விடுவாள்.

கண்ணபிரானுக்கு ஒரு மனப்பான்மை உண்டு அதாவது தோல்வி என்றால் கொஞ்சங்கூட அதைத் தாங்கிக்கொள்ள மாட்டார். அப்படிப்பட்ட மனப்பக்குவமும் அவருக்குக் கிடையாது

மறுபடியும் இரண்டு பேர்களும் போராடினார்கள் கீரியும் பாம்பும் பின்னிப் பிணைந்துகொண்டு சண்டை போடுவதைப்போன்ற போராட்டம் தொடர்ந்து நீடித்தது.

இனியும் ஏமாந்தால் அவர் தன்னுடைய பருவத்தை ருசி பார்த்து விடுவார் என்று அவள் பதறி பின்னால் வரப்போகும் விளைவுகளைப்பற்றிக் கொஞ்சம்கூட கவலைப்படாமல் மதுப்புட்டியை எடுத்து அவருடைய மண்டையில் முழு பலத்துடன் ஒருபோடு போட்டாள்.

"அய்யோ" என்ற அலறல்.

கண்ணபிரான் மண்டையைப் பிடித்துக்கொண்டு மரம்போல் அப்படியே நின்றார். நாற்புறமும் இரத்தக் கோடுகள் வழிந்தன. உச்சந்தலையிலிருந்து இரத்தம் பீறிட்டுக்கொண்டு பொங்கியது.

சில விநாடிகள் வரையில் செயலற்றுப்போய் பிரேதம்போல் நின்றுகொண்டிருந்த கண்ணபிரான் அப்படியே சாய்ந்து தரையில் குப்புற விழுந்தார்

வெட்டிப்போட்ட மரம் சாய்ந்ததைப்போல் இருந்தது. அவரிடம் மூச்சுப்பேச்சு எதுவுமே இல்லை.

அவர் இறந்து விட்டாரா? உடலில் உயிர் ஒட்டிக்கொண்டிருப்பதாகவே தெரியவில்லையே?

பீதியும் பதட்டமும் அடைந்த அவள் குனிந்து பார்த்தாள். கண்ணபிரானின் கண்கள் ஆடுபோல் வெளுத்திருந்தன. ஆட்டின் கண்களையே நினைவுபடுத்தின.

அவர் இறந்துவிட்டார் என்பதைத் தெரிந்துகொண்டதுதான் தாமதம், அவளை பயம் பிடித்துக் கொண்டது.

அந்த மனிதன் தன்னை எப்படியோ கடத்திக்கொண்டு வந்து பலவந்தமாகக் கெடுக்க முயற்சி செய்தது உண்மை. ஆனால் அதற்குப் பதிலாக அவரைக் கொலைசெய்வது சரியில்லையே

அவள் தனக்கு வந்திருக்கும் ஆபத்தை உணர்ந்து கொண்ட வரையில் ஒருகணம் அப்படியே நின்றாள். பிணத்தை மாறிமாறிப் பார்த்தாள். பீதியுற்றவளாய் 'ஓ'வென்று வாய்விட்டுக் கதறி அழுதாள்.

கொலை நடந்திருக்கும் விஷயம் வெளியே உள்ளவர்களுக்குத் தெரிந்ததும், அடுத்த கணமே செய்தி போலீஸாருக்கு எட்டிவிடும். அதன்பிறகு ஆபத்து எப்படி எப்படி வரும் என்று விளக்கத் தேவையே இல்லை.

அவள் குலைநடுக்கத்துடன் தோள்பட்டையைக் குலுக்கிக் கொண்டாள். கண்ணெதிரில் தூக்குக்கயிறு தொங்குவது அவளுக்குத் தெரிந்தது. அந்தக் கயிறை நோக்கி 'பரபர'வென்று இழுத்துச் செல்வதைப் போன்ற மனப்பிராந்தி.

"ஐயோ நான் என்ன செய்வேன்? ஒரு மனிதனைக் கொன்று விட்டேனே."

இப்படி அவள் அலறியவளாய் கதவுப் பக்கமாக வந்து நின்றாள். மெல்லக் கதவைத் திறந்து வெளியே பார்த்தாள்.

அதிர்ஷ்டவசமாக வராந்தாவில் யாருமே இல்லை.

உடனே அவள் வெளியே வந்து கதவைச் சாத்திவிட்டு பூனை போல் சந்தடி செய்யாமல் நடந்து அங்கிருந்து வெளியேறினாள்.

## 2. இருளில் நடந்தது...?

ஒரு மனிதனைக் கொன்றுவிட்டோமே என்ற பய உணர்ச்சி மீனாவைப் பேயாக அடித்தது. இந்த உலகத்தில் உள்ள மாந்தர்கள் எல்லோரும் கையை நீட்டிச் சுட்டிக் காட்டியவாறு, 'நீ ஒரு கொலைகாரி' என்று கூவுவதைப்போல் மனத்தை அச்சுறுத்திக்கொண்டே இருந்தது.

கண்ணபிரான் செய்திருக்கும் காரியம் சாதாரணமானதல்ல. தன்னை மயக்கமடையச் செய்து ஊரிலிருந்து எப்படியோ கடத்திக் கொண்டுவந்து கழுத்தில் கட்டாயத் தாலியும் கட்டிவிட்டார். அது மட்டுமல்ல; முதல் இரவை ஆடம்பரமான ஹோட்டலிலேயே வைத்துக் கொள்ளவும் திட்டமிட்டு வேலை செய்தார். அவரை மட்டும் அடித்துக் கொல்லாமல் இருந்திருந்தால் நல்லபாம்பின் தலையை 'நறுநறு' என்று கடித்துத் தின்னும் கீரிப்பிள்ளையைப்போல் தன்னுடைய இளமையையும் சுவைத்துப் பார்த்திருப்பார்.

அவள் சென்னை நகரத்து பிரகாசமான வீதிகள் வழியாக சாலைகள் நெடுக அதிவேகமாக நடந்துகொண்டே இருந்தாள்.

இரவு பன்னிரண்டு மணிக்கு மேல் இருக்கலாம். எனவே வீதிகளும் சாலைகளும் வெறிச்சோடிக் கிடந்தன. சில ரிக்ஷாவண்டிக்காரர்கள்தான் வண்டிகளிலேயே உட்கார்ந்து தூங்கிக்கொண்டிருந்தார்கள்.

அவள் ஒரு ரிக்ஷாவண்டிக்காரரிடம் ரெயில்வே ஸ்டேஷன் எங்கே இருக்கிறது என்று விசாரித்தாள்.

வண்டிக்காரர் அவள் நின்றிருந்த நிலை ஒருமாதிரியாக இருந்ததால் தனிமையைக் கண்டு விசாரித்தார்.

அவள் ஒரு மனிதரை மதுப்புட்டியினால் அடித்துக் கொன்று போட்டுவிட்டு தப்பித்து வந்திருக்கும் விபரத்தைச் சொல்லவில்லை. சொன்னால் அதுவே பெரும் ஆபத்தில் வந்து முடிந்துவிடுமே!

'ரெயில்வே ஸ்டேஷன் பக்கத்தில்தான் இருக்கிறது. வண்டியில் ஏறிக்கொள். நொடிப்பொழுதில் கொண்டுபோய் விட்டுவிடுகிறேன்.'' என்றார் வண்டிக்காரர்.

அவளிடம்தான் காசே இல்லையே. எப்படி அவள் ரிக்ஷா வண்டியில் சவாரி செய்யமுடியும்?

அவள் வேறு வழியின்று தன் நிலையை விளக்கியதும், "ஏறிக் குந்து அம்மா. பணம் இல்லாவிட்டால் போகிறது. மனுஷாள்தான் முக்கியம்.'' என்று சொன்னான்.

ஏழைகள்தான் இரக்கமனப்பான்மை கொண்டவர்கள். இரக்க குணத்துக்கும் பணத்துக்கும்தான் ஏழாம் பொருத்தம் ஆயிற்றே. இரக்கம் இருக்கும் இடத்தில் பணம் ஒருபோதுமே வந்து சேராது. அப்படியே வந்து சேர்ந்தாலும் இரக்கம் காரணமாகக் கொஞ்சம் கொஞ்சமாகக் கரைந்துவிடும்.

அவன் அவளைத் தன்னுடைய வண்டியில் ஏற்றிக்கொண்டான். அவளைப் பற்றி விசாரித்தான்.

மீனு மிகவும் பக்குவமாக நடந்துகொண்டாள். கொஞ்சம்கூடச் சந்தேகத்தை வரவழைத்துக்கொள்ளவில்லை. எதுவுமே நடக்காததைப் போலவே வெளிப்பார்வைக்குக் காணப்பட்டாள்.

ஸ்டேஷன் வந்தது. அவள் இறங்கிக்கொண்டாள்.

அடுத்து என்ன செய்வது?

பிளாட்பாரத்தில் நின்றுகொண்டிருந்த ஒரு பாசஞ்சர் ரயில் வண்டியில் டிக்கட் எடுக்காத பிரயாணியாய் ஏறிக்கொண்டாள்.

வண்டியில் சில ஆண்களும் பெண்களும் உட்கார்ந்து தூங்கி வழிந்துகொண்டிருந்தார்கள். பெண்களுக்குப் பக்கத்தில் மீனுவும் உட்கார்ந்து ஜன்னல் விளிம்பில் தலைவைத்தவாறு தூங்க ஆரம்பித்தாள்.

மனத்தில் ஏற்பட்ட வலியும், உடல் தளர்ச்சியும் உடனே அவளைத் தூங்கச் செய்தன

அதன்பிறகு அவள் கண்விழித்துப் பார்த்தபோது ரயில்வண்டி போய்க்கொண்டிருப்பதுதான் அவளுக்குத் தெரிந்தது. ஒரு சிலர் எழுந்து உட்கார்ந்திருந்தார்கள். சிலர் ஒருவர் மேல் ஒருவராக விழுந்து புரண்டுகொண்டிருந்தார்கள்.

ரயில் நகரத்தின் எல்லையைத் தாண்டியது.

ஒரு ஸ்டேஷனில் ரயில் நின்றது. உட்கார்ந்தபடியே அது என்ன ஸ்டேஷன் என்று பார்த்தாள்.

காட்டுப்பாக்கம்.

இதுதானே ஊர்...?

அவள் உடனே அவசரம் அவசரமாகக் கீழே இறங்கினாள். நல்லவேளையாக டிக்கட் பரிசோதகரிடம் அவள் மாட்டிக்கொள்ள வில்லை. வேறு வழியாக வந்து தப்பித்துக்கொண்டாள்.

மீனுவின் கோபம் முழுவதும் தன் அன்னையின் மீதே இருந்தது. அவள்தானே பணத்துக்காகத் தன்னைப் பலியிட்டவள். அவளுடைய சம்மதத்தின் பேரில்தானே கண்ணபிரான் கடத்திச் சென்றான். பலவந்தமான முறையில் மனைவியாக்கிக்கொள்ளவும் முயற்சி செய்தான்.

அவள் வேகமாக ஒற்றையடிப்பாதை வழியாக ஓடினாள். நகரத்தில் நெஞ்சை உலுக்கிக்கொண்டிருந்த பயம் இப்பொழுது கொஞ்சம்கூட அவளுக்கில்லை. அவள் பிறந்து வளர்ந்து ஆடி ஓடித் திரிந்த பகுதியல்லவா இது!

COMICS PDF TIMES

மீனு தன் குடிசையை அடைந்து சாத்திக் கிடந்தக் கதவைத் தட்டி, ''அம்மா... அம்மா'' என்று கூப்பிட்டாள்.

அது ஊரின் கடைசிக் கோடியில் உள்ள குடிசை. மற்ற குடிசைகளின் தொடர்பு இல்லை. அதனால் மீனு அங்கே வந்து கதவைத் தட்டியதை யாரும் பார்த்திருக்க முடியாது.

உள்ளே இருந்து பதில் இல்லை. காலைவேளையாக இருப்பதால் அயர்ந்து தூங்கிக்கொண்டிருக்கிறாளா?

அவள் கல்வரமடைந்த போதிலும் மறுபடியும் கதவைத் தட்டினாள். கூப்பிட்டாள்.

வீட்டினுள் தாயார் இல்லையா? பதிலே இல்லையே...

சந்தேகத்துடன் பூட்டு தொங்குகிறதா என்று கதவைப் பார்த்தாள்.

பூட்டு இல்லையே!

தாயார் வீட்டினுள்தான் படுத்துத் தூங்கிக்கொண்டிருக்கிறாள் என்பதைத் தெரிந்துகொண்டதும் அவள் கதவைப் பலமாகத் தள்ளிப் பார்த்தாள்.

கதவு திறந்துகொண்டது.

உள்ளே பூட்டப்படவில்லை.

அவள் உள்ளே குனிந்து வந்தாள். எதையும் பார்க்க முடியாத கும்மிருட்டாக இருந்தது. ஆனாலும் அது பதினெட்டு மாதங்களாக வாழ்ந்த குடிசை என்பதால் உள்ளே தயக்கமின்றி நடந்துவந்து வழக்கமாக அம்மா படுத்துக்கொள்ளும் இடத்தைத் துலாவினாள். தடவினாள்.

அவளுடைய தாயார் குறிப்பிட்ட அதே இடத்திலேயே படுத்துக்கிடந்தாள். ஆனால் அவளுடைய தாயாரைத் தொட்டு உசிப்பிய போதுண்டான உணர்ச்சி முற்றிலும் மாறுபட்டு இருந்ததே. தாயாரைத் தொட்டது போன்ற உணர்வே உண்டாகவில்லையே.

அவள் பீதியும், கலவரமும் அடைந்தவளாக, ''அம்மா'' என்று கூவிவிட்டு தோள்பட்டையைப்பிடித்து குலுக்கினாள்.

விறைத்துப்போயிருந்த ஏதோ ஒன்றைத் தொட்டுவிட்டதைப் போன்ற உணர்ச்சி. மரக்கட்டையா?

உயிருள்ள ஒரு ஜடப்பொருளைத் தொடுவதைப் போன்ற உணர்ச்சி கைக்கு உண்டாகவில்லை.

அவள் பயந்தவளாய் கையைப் பிடித்தாள். பனிக்கட்டியாகக் குளிர்ந்திருந்தது.

அவ்வளவுதான்! "அய்யோ அம்மா" என்று கதறினாள் மீனு. தன்னுடைய தாயார் இறந்துவிட்டாள் என்று அவளுக்கு நன்றாகவே தெரிந்தது.

"அம்மாவை யாராவது கொன்றுபோட்டுவிட்டார்களா?" இப்படியொரு எண்ணம் மனத்தை உந்தித்தள்ளியதும், அவள் "அம்மா...அம்மா..." என்று கதறி அழுதவாறு வெளியே ஓடிவந்து கூப்பாடு போட்டாள். ஓலமிட்டு அழுதாள்.

அந்தக் கூக்குரலைக் கேட்டு தூங்கிக்கொண்டிருந்தவர்கள் என்னவோ ஏதோ என்று பதறியவர்களாய் ஓடிவந்து கூடினார்கள். ஒருவர் கையில் லாந்தர் விளக்கு இருந்தது.

"என்னது...என்ன நடந்தது?" என்று ஆளுக்கொரு விதமாகக் கேட்டார்கள், கிராமத்துக்காரர்கள்

"என் அம்மா செத்துவிட்டாள் போலிருக்கிறது. தயவு செய்து வீட்டுக்குள் வந்து பாருங்களேன்." என்று அவள் கூறி அழுது கொண்டு முன்னால் ஒரு குடிசையினுள் மறுபடியும் நுழைந்தாள்.

மற்றவர்களுடன் பரபரப்புடன் உள்ளே வந்தார்கள்.

லாந்தர் விளக்கு வெளிச்சத்தில் மீனுவின் தாயார் பிணமாகச் சுருண்டு கிடப்பது தெரிந்தது.

அவள் கண்கள் முட்டைகளைப்போல் வெளியே பிதுங்கிக் கொண்டு வந்திருந்தன. நாக்கு வெளியே நீண்டிருந்தது. கழுத்து நெரிக்கப்பட்டிருப்பதற்கு அறிகுறியான தடயங்கள் தென்பட்டன.

மீனு மற்றவர்கள் தடுத்தும் கேட்காமல் தாயாரின் பிணத்தின் மீது விழுந்து வாயிலும் வயிற்றிலும் அடித்துக்கொண்டு கதறிக் கதறி அழுதாள். "எந்தப பாவிகளோ என் அம்மாவைக் கொன்றுவிட்டார்களே" என்று கதறினாள்.

அதற்குள் கிராமத்தலைவர் அங்கே வந்துவிட்டார். முதல் வேலையாக அவர் குடிசையில் இருந்தவர்களை எல்லாம் வெளியேற்றினார்.

நடந்திருப்பது கொலை அல்லவா?

மீனு வாசலுக்கு வெளியே உள்ள வேப்பமரத்தின் அடியில் தலைவிரிகோலமாக உட்கார்ந்துகொண்டு, "அம்மா...என்னை அனாதையாக்கிவிட்டு நீ போய்விட்டாயே..." என்று கூவிக் கூவி அழலானாள்.

COMICS PDF TIMES

மற்ற பெண்களும் அவளைக் கட்டிக்கொண்டு ஒப்பாரி வைத்தார்கள்.

சிறிது நேரத்திற்கெல்லாம் விடிந்துவிட்டது. சூரிய வெளிச்சம் எங்கும் பரவியது.

மீனு எல்லாவற்றையும் தெரிந்துகொண்டாள். தன்னைக் கடத்திச்சென்ற கண்ணபிரான்தான் தாயாரையும் கொன்றுவிட்டான் என்பதில் சந்தேகம் இல்லை.

ஆனால் இதை எப்படி வெளியே சொல்லமுடியும்? கண்ணபிரான் உயிரைத்தான் அவள் குடித்துவிட்டு வந்திருக்கிறாளே! தான் கடத்திச்செல்லப்பட்டதையோ, கழுத்தில் கட்டாயத்தாலி கட்டப்பட்டதையோ, முதல் இரவின் பிடியிலிருந்து தப்பித்து வந்ததையோ சொன்னால்கூட ஆபத்துதான்!

அவள் தனக்கு இப்படியொரு கெட்ட நேரம் வந்ததைக்கண்டு 'பொருமிப் பொருமி' அழுதாள். எவ்வளவு விரைவில் வாழ்க்கை சீர்குலைந்துவிட்டது இப்படி நடக்கும் என்று அவள் கொஞ்சம்கூட எதிர்பார்க்கவில்லை.

மீனு ஏழையாக இருந்தபோதிலும் கிடைத்ததை வைத்துக் கொண்டு அமைதியான முறையிலேயே வாழ்க்கை நடத்திவந்தாள். வித்தியாசமான எண்ணம் கொண்ட ஆண்களுடன் பழகும் சூழ்நிலை என்றைக்குமே வந்ததில்லை.

ஆனால் இப்பொழுது......?

ஒரே இரவுக்குள் அவள் எல்லாவற்றையும் மொத்தமாகவே அனுபவித்துவிட்டாள்.

சிறிது நேரத்திற்கெல்லாம் போலீஸ் சப்-இன்ஸ்பெக்டரும், போலீஸ்காரர்களும, போலீஸ் இலாகாவைச் சேர்ந்த உதவியாளர் களும் அங்கே விரைந்து வந்தார்கள்.

அவர்களைப் பார்த்ததும் மீனு நடுங்கினாள். தன்னை நோக்கி வந்துகொண்டிருப்பதைப் போலவே அவளுக்குத் தோன்றியது. தன்னைக் கைது செய்துகொண்டு போய்விடுவார்களோ என்ற மரணப் பீதி.

இனிமேல் காக்கிச் சட்டை போட்ட யாரைப் பார்த்தாலுமே பயந்துதானே ஆகவேண்டும். எந்த நேரத்தில் என்ன ஆகும் என்று எப்படிச் சொல்லமுடியும்?

கிராம மக்கள் எல்லோருமே அங்கே கூடியிருந்தார்கள்.

போலீஸார் அவர்களை விலக்கிக்கொண்டு பிணத்தைப் பார்வையிட்டார்கள். அது சம்பந்தமான குறிப்புகளைத் தயாரித்தார்கள்.

மீனு இன்னும் அழுதுகொண்டே இருந்தாள். கண்களிலிருந்து கண்ணீர் தொடர்ந்து வழிந்துகொண்டே இருந்தது.

பிணத்தை ஒரு வண்டியிலேற்றி போலீஸார் எடுத்துச் சென்றதும், விசாரணைக்காக மீனுவையும், மற்றுமுள்ள முக்கியமானவர்களையும் சப்-இன்ஸ்பெக்டர் ஸ்டேஷனுக்கு அழைத்துச் சென்றார்.

## 3 காலையில் முளைத்த காளான்

மீனு தொடர்ந்து கண்ணீர் வடித்துக்கொண்டே இருந்தாள். தன்னுடைய தாயாரைக் கொலை செய்தவனை தானே கொன்றுவிட்டதால் அது சம்பந்தமாக யாருடனும் மூச்சுவிட முடியவில்லை.

பத்து மாதம் சுமந்து பெற்ற தாய் அன்று மாலையில் தகனம் செய்யப்பட்டாள்.

இந்த உலகத்தில் வாழ்ந்து அல்லல்கள் பல பெற்றுவந்த ஒரு தாயின் கதை அத்துடன் முடிந்துவிட்டது.

மீனு அன்றிரவு தன் சொந்தக்காரர்களின் வீட்டில் படுத்துக்கொண்டாள். தாயார் இல்லாத வீட்டில் இருக்கவே அவளுக்குப் பிடிக்கவில்லை.

காலையில் அவள் கண்விழித்து மற்றவர்கள் வற்புறுத்தியதின் பேரில் ஏரிக்கு குளிக்க போனபோது அங்கே வந்த ஓர் ஆசாமியைக் கண்டதும் திடுக்கிட்டாள்.

ஏனென்றால் அந்த ஆள் பார்த்த பார்வை முரட்டுத்தனமாகவும், மூர்க்கத்தனமாகவும் இருந்தது.

மீனு தனக்குத் துணையாக சிறுமி ஒருத்தியை அழைத்து வந்திருந்தாள்.

அவள் பிறந்த ஊர் இதுவாகவே இருந்தபோதிலும், பர்மாதான் அவளை வளர்த்து ஆளாக்கியது. பர்மாவுக்கு தன் தாய் தந்தையோடு பிழைக்கப்போன அவள் தந்தையை அங்கேயே பறிகொடுத்தாள். அகதிகளாக அதன்பிறகு வெளியேற வேண்டிய கட்டாயம் அதன்பிறகு அவர்களுக்கு உண்டாயிற்று.

பிறந்த ஊரிலேயே அவளும் அவள் அம்மாவும் மறுபடியும் வாழ்க்கையைத் துவக்கினார்கள். பதினெட்டு மாதங்கள் வறுமையுடன் போராடினார்கள். ஏற்கனவே அவர்கள் பட்டிருந்த கடன் சுமை நெருங்கியது. கடன் கொடுத்தவன் தினசரியும் வந்து கழுத்தை அறுத்தான். அவர்களுடைய வாழ்க்கை போராட்டக்களமாக மாறியது.

இறுதியில் கண்ணபிரான் என்ற கிழட்டுப் பணக்காரன் அவளைக் கடத்தி வந்து கழுத்தில் கட்டாயத்தாலியும் கட்டிவிட்டான். அதன் காரணமாக இரு உயிர்களும் பறந்தன.

ஏற்கனவே நொந்து நொடிந்துபோயிருந்த மீனா, முரட்டுப் பார்வை பார்த்துக்கொண்டு வரும் அறிமுகம் இல்லாத அந்த ஆசாமியைப் பார்த்ததும், அதற்குமேல் நடக்கமுடியாத நிலையில் பயந்து போய் நின்றாள்.

எதிரில் வந்து நின்ற அவன், அவளை மேலும் கீழுமாக ஆராய்ந்துவிட்டு, "உன் பெயர்தான் மீனாவா?" என்று கேட்டான்.

அவள் பரிதாபமாக தலையை உயர்த்திப் பார்த்தாள். அவன் தன்னைத் தேடிக்கொண்டு வந்திருக்கும் பட்டணத்து ஆசாமியாகத் தான் இருக்கவேண்டும்.

கண்ணபிரானை அடித்துக் கொன்ற செய்தியை அறிந்து வஞ்சம் தீர்த்துக்கொள்ளும் நோக்கத்துடன் இங்கே வந்திருக்கிறானோ?

தான் வேறு ஒருத்தி என்று சொல்லித் தப்பித்துக்கொள்ளலாம் என்று நினைத்தபோதிலும் மனம் அதற்கு இடம் தரவில்லை. "என் பெயர்தான் மீனா... உங்களுக்கு என்ன வேண்டும்?"

"ஓ... நீதான் மீனாவா? நீ இப்படித்தான் இருப்பாய் என்று ஆரம்பத்திலேயே கற்பனை செய்து வைத்திருந்தேன். சீக்கிரமாகக் குளித்துவிட்டு வா. உன்னிடம் மனம்விட்டுப் பேசவேண்டும்."

"இப்பொழுதே சொல்லிவிடலாமே."

"பரவாயில்லை, முதலில் குளியல் வேலை முடியட்டும்."

மீனா தன்னுடன் வந்திருந்த சிறுமியின் கையைப் பிடித்தவாறு சென்று ஏரியில் பாய்ந்து குளித்தாள். சில நிமிடங்களில் குளியல் வேலையை முடித்துக்கொண்டு மாற்றுப்புடவை உடுத்தி வந்தாள்.

ஒரு மரத்தடியில் அந்த ஆசாமி நின்று கையிலிருந்த கத்தியினால் ஒரு கிளையைச் சீவிக்கொண்டிருந்தான்.

"வா மீனு... என்னுடைய அவசரத்தைப் புரிந்துகொண்டு சீக்கிரமாகவே குளித்துவிட்டாய். இனி என்னுடன் புறப்படுவதற்கு எந்தவிதமான தடையும் இருக்காது என்று நினைக்கிறேன்."

அவன் இப்படிப் பேசுவான் என்று மீனு எதிர்பார்க்காததால் மறுபடியும் பேரதிர்ச்சிக்குள்ளானாள். "என்னை எங்கே கூப்பிடுகிறீர்கள்?" என்று கேட்டாள்.

"நான் போலீஸ் இலாகாவைச் சார்ந்த ஹெட்கான்ஸ்டபிள். உன்னைக் கைது செய்து கொண்டு போவதற்காக வந்திருக்கிறேன். கிராமத்தில் பரபரப்பு உண்டுபண்ணக்கூடாது என்பதற்காக நான் மட்டும் தனியாக வந்தேன்" என்றான் அவன்.

அதைக் கேட்டதும் அவளுக்கு மூச்சு முட்டியது. கடுமையான அதிர்ச்சிக்குள்ளானாள். கண்ணபிரான் கொலையுண்ட செய்தி போலீஸாருக்கு எட்டிவிட்டது என்பதில் கொஞ்சமும் ஐயமில்லை.

அவள் குளித்திருந்த போதிலும் உடலெங்கும் வியர்ப்பதை உணர்ந்தாள். "என்னை எதற்காக கைது செய்ய வந்திருக்கிறீர்கள்? நான் தப்பு செய்தேன்?"

"எல்லாவற்றையும் நான் சென்னையில்போய் ஸ்டேஷனில் வைத்துப் பேசிக்கொள்ளலாம். கிராமத்தில் உள்ள யாரிடமாவது ஏதாவது சொல்ல விரும்புகிறாயா?"

அவள் 'இந்த வெட்கக்கேடான விஷயத்தை யாரிடமும் சொல்ல விரும்பவில்லை' என்பதைப்போல் பரிதாபமாக தலையை அசைத்தாள்.

அகதிகளாக பர்மாவிலிருந்து வந்தாள். இடையிலோ வறுமை—இப்பொழுதோ வேதனை—ஒரு விநாடி நேரம்கூட நிம்மதியே இல்லாத நிலைமை.

சிறுமியை அனுப்பிவிட்டு மீனு அந்த தலைமைப் போலீஸ்காரருடன் சென்றாள்.

சாலையின் ஓரமாக கார் நிறுத்தப்பட்டிருந்தது.

அவளை பக்கத்தில் உட்கார வைத்துக்கொண்டு காரை வெகு வேகமாக ஓட்டிச்சென்றார் அந்த தலைமைப் போலீஸ்காரர்.

சென்னைக்குப்போய் அந்தக் கார் காந்தி நகரில் உள்ள ஒரு வீட்டின் முன்னால்போய் நின்ற பிறகுதான் அவளுக்கு உண்மை புரிந்தது. தன்னை ஏமாற்றிக்கொண்டு வந்திருப்பது போலீஸ்காரர் அல்ல என்பதைத் தெரிந்து கொண்டாள்.

சுற்றிலும் காம்பவுண்டுச் சுவர்கள் அமைக்கப்பட்டிருந்தன. வெளியே உள்ளவர்களால் பார்க்க முடியாத அளவுக்கு சுவர்கள் இருந்தன.

காரை விட்டுக் கீழே இறங்கிய மீனு, "இது போலீஸ் ஸ்டேஷன் இல்லையே... நாம் வேறு எங்கேயோ வந்திருக்கிறோம் போலிருக்கிறதே." என்று பயந்தாள்.

"இது பெரிய போலீஸ் அதிகாரியின் பங்களா. உன்னைத் தனிப்பட்ட முறையில் நேரடியாகவே விசாரிக்க விரும்புகிறார்." என்று சொன்னான் அவன்.

இனி அவள் என்ன பேசமுடியும்? வாழ்க்கையில் பலவிதமான இன்னல்களை ஏற்று நொந்துபோயிருக்கும் அவள் நல்லது கெட்டது பற்றி எப்படிச் சிந்திக்க முடியும்.

அவள் பயந்து பயந்து மாளிகையின் ஹாலினுள் நுழைந்ததும் அங்கே சோபாவில் சாய்ந்து கிடந்த மனிதரைக் கண்டதும் தூக்கிவாரிப் போட்டதைப்போன்ற நிலையில் திடுக்கிட்டாள்.

யாரைக் கொலை செய்துவிட்டதாக அவள் நினைத்துக்கொண்டிருக்கிறாளோ, அதே ஆள்தான், கண்ணபிரான்தான் அங்கே உட்கார்ந்திருந்தார். தலையைச் சுற்றிலும் துணியினால் கட்டுப்போடப்பட்டிருந்தது.

அவள் தன்னையும் அறியாமல், "நீங்களா......?" என்று கூவினாள்

பின்னால் அவளை அழைத்து வந்திருந்தவன் நின்றுகொண்டிருந்தான். அவன் கையில் பளபளக்கும் கத்தி மின்னிக்கொண்டிருந்தது! அவள் ஓட எத்தனித்தால் அந்தக்கணமே கத்தி அப்படியே ஓடை முதுகினுள் இறங்கிவிடும்.

கண்ணபிரான் மறுபடியும் எல்லா பற்களையும் காண்பித்துக்கொண்டு, "நீ எங்கே போனாலும் உன்னை விடமாட்டேன். என்றென்றுமே நீ எனக்குச் சொந்தமானவள்." என்று சொன்னான்.

அவள் அப்படியே நின்றுகொண்டிருந்தாள். தன்னை அபகரித்துக்கொள்வதற்காக தாயாரின் உயிரையும் எடுத்துக் கொண்டார்களே என்பதை நினைத்துக் கொண்டதும் கோபம் சீறியது.

மீனு தன் தாயார் கொலையுண்டதைச் சொல்லிவிட்டு, "என் குடும்பத்தையே நாசமாக்கியது போதும் என்னை விட்டுவிடு." என்று அழுதாள்,

"உன் அம்மாவை நான் கொன்றுவிட்டேனு, ஆளைவிட்டு? அது தவறு. எனக்கு எதுவுமே தெரியாது நாங்கள் யாருமே அந்தக் குற்றத்தைச் செய்யவில்லை.'' என்றார் கண்ணபிரான்.

"அப்படியானல் என்னுடைய அம்மாவைக் கொலை செய்தது யார்?" என்று கத்தினாள் மீரு.

"எங்களுக்கு எதுவுமே தெரியாது. ஆனாலும் உன் தாயாரை, அதாவது என்னுடைய மாமியாரைக் கொலை செய்தது யார் என்பதைக் கண்டுபிடிக்க உடனடியான முயற்சிகளை மேற்கொள்கிறேன்.'' என்றார் கண்ணபிரான்.

மாமியார் என்ற எழுத்துக்களை அவர் அழுத்திச் சொன்ன விதம் அவளுக்குக் கொஞ்சம்கூட பிடிக்கவில்லை. ஆனாலும் அவனிடமே வந்து ஆபத்தான நிலையில் மாட்டிக்கொண்டிருக்கும்போது என்னதான் செய்யமுடியும்?

அவள் தீர்மானமாக ஒரு முடிவுக்கு வந்து சொன்னாள். "என் அம்மாவைக் கொலை செய்தது யாராக வேண்டுமானாலும் இருந்து விட்டுப் போகட்டும். அவனுக்குரிய கூலியை கடவுள் கொடுத்துக் கொள்வார்."

கண்ணபிரான் சிரித்துவிட்டு நெற்றி வலிக்கவே கையினால் அழுத்திக் கொண்டார்.

"என்னை எதற்காக ஏமாற்றி இங்கே கொண்டுவந்திருக்கிறீர்கள்?''

"அதை இன்னுமா உன்னால் புரிந்துகொள்ள முடியவில்லை? நான் உன் கணவன். கழுத்தில் தாலி கட்டியவன். நீ அந்தத் தாலியை அறுத்து எறிந்துவிட்ட போதிலும் நமக்குள் இருக்கும் கணவன்—மனைவி என்ற உறவைக் கடவுளே வந்து குறுக்கிட்டால் கூட அறுக்க முடியாது.''

கண்ணபிரான் இப்படிச் சொல்வதற்கும் "பேப்பர்'' என்ற குரலோடு தினசரிப் பத்திரிகை உள்ளே 'சரேலென்று' வந்து விழுவதற்கும் சரியாக இருந்தது.

ஒன்பது மணிக்கு என்ன பத்திரிகை?

அவர் விழிக்க, ''இன்றைக்கு மெயில் லேட்டுங்க...'' என்று சொன்னவாறு வாசல் பக்கமாக வந்து நின்று உள்ளே கட்டிலை பார்த்தான் வாலிபன் ஒருவன்.

அவன் சுறுசுறுப்புடன் இயங்கும் துடிப்பு நிறைந்தவனாகக் காணப்பட்டான்.

மீரு சட்டென்று திரும்பி அவனைப் பார்த்தாள். கண்கள் அவனை நோக்கிக் கொஞ்சுவதைப் போலிருந்தன.

"ஏய்...நீ இங்கேயா இருக்கிறாய்? உன்னைத் தேடிக்கொண்டு நான் எத்தனை விதமாக சென்னை முழுவதும் அலைந்து கொண்டிருக்கிறேன் வா." என்று சொன்னவன் சட்டென்று அவள் கையைப் பிடித்து இழுத்தான்.

கண்ணபிரானும், அவனுடைய கையாளும் செய்வதறியாது திகைத்தார்கள். இப்படியொரு நிகழ்ச்சி நடைபெறும் என்பதை அவர்கள் எப்படி எதிர்பார்த்திருக்க முடியும்?

மீரு கையை விடுவித்துக் கொள்ளவில்லை. இந்தச் சூழ்நிலையைப் பயன்படுத்தித் தப்பித்துக் கொள்ளலாம் என்ற முடிவுக்கு வந்து "மச்சான்... நீங்கள் இங்கேயா இருக்கிறீர்கள்? உங்களைத் தேடிக்கொண்டுதானே நாங்கள் பர்மாவிலிருந்தே வந்தோம்." என்று உற்சாக நடிப்புடன் பொங்கினாள்.

இதுதான் தக்க வாய்ப்பு என்பதைப் புரிந்து கொண்டவனைப் போல் அந்த வாலிபன் கையை விட்டுவிடாமல், "கடவுள்தான் நம்மை ஒன்று சேர்த்திருக்கிறார். அவருக்கு நாம் நன்றி சொல்வோம்." என்று சொன்னான்.

கண்ணபிரான் நிலைகுலைந்தபோதிலும் சுதாரித்துக்கொண்டு "என்னடா ராஜாமணி இதெல்லாம்...?" என்று கேட்டார்.

"இவள் என் அத்தை பொண்ணுங்க... இவளைத்தான் தினசரியும் நான் தேடிக்கொண்டிருந்தேன். உங்கள் வீட்டில் வைத்து நாங்கள் சந்திக்கவேண்டும் என்ற விதி இருந்திருக்கிறது."

அவன் அவர் எதையோ சொல்ல உதடுகளைக் குவிப்பதற்குள் கையைப் பிடித்தபடி 'பாபர'வென்று இழுத்துச் சென்றான்.

கண்ணபிரானும், அவனுடைய கையாளும் என்ன செய்வது என்று தோன்றாதவர்களாக விழித்துக்கொண்டிருந்தார்கள்.

## 4. அபாயத்தை நோக்கிச் செல்லும் ஆரணங்கு!

நடிப்பில் சிவாஜி கணேசனை வீழ்த்தும் அளவுக்கு முன்னேறிச் சென்றுவிட்ட ராஜாமணி வீதிக்கு வந்ததும் அவளுடைய கையை விட்டான்.

அவள் இன்னும் நடுநடுங்கிக்கொண்டிருந்தாள். அது மனித முகம் போல் இல்லை.

"யாரம்மா நீ...? எப்படி இந்த ஆசாமிகளிடம் வந்து சிக்கிக் கொண்டாய்? இவர்கள் எதுவேண்டுமானாலும் செய்யும் அயோக்கியர்கள் ஆயிற்றே!" என்று அவன் அன்பு முழுவதையும் வார்த்தைகளிலேயே தேக்கினான். "நான் கண்ணபிரான் வீட்டில்தான் வாடகைக்கு இருக்கிறேன்." என்று சொன்னான்.

அவள் இமைகளைப் பெரிதாக விரித்துக்கொண்டு பார்த்தாள். "நீங்களும் இந்த வீட்டிலேயா?" என்று கேட்டாள்.

"இல்லை... இல்லை... நான் இங்கே பேப்பர் போடுவதற்காக வந்து போவதுடன் சரி. நான் வேறொரு வீட்டில் குடியிருக்கிறேன்." என்றான் ராஜாமணி.

அவன் செய்த உதவியை மிகமிகப் பெரிதாக அவள் ஏற்றுக் கொண்டாள். என்றென்றும் தனக்கு அவன் உதவி செய்வான் என்றும் நம்பினாள்.

இரண்டு பேர்களும் பக்கத்துப் பக்கமாக நடந்து சென்றார்கள். ராஜாமணி ஒரு கையினால் சைக்கிளைப் பிடித்திருந்தான். சைக்கிள் இரண்டு பேர்களுக்கும் நடுவே இருந்தது.

மீனு வழி நெடுக கண்ணபிரான் திருவிளையாடல்கள் பற்றி விளக்கிக்கொண்டே வந்தாள். ஆனால் அவர் தன் கழுத்தில் தாலி கட்டியதை மட்டும் சொல்லவில்லை. அதை அவள் மறைத்தாள்.

இந்த வெட்கக்கேடான விஷயத்தை ஒரு வாலிபனிடம் எப்படி பெருமையுடன் சொல்லிக்கொள்ள முடியும்?

அதேசமயத்தில் கண்ணபிரான் தன்னைப் பெண்டாளத் துடிக்கிறார் என்பதை மட்டும் விளக்கத் தவறவில்லை. அவரால் தன் கற்புக்கு எந்த விநாடியிலும் ஆபத்து ஏற்படக்கூடும் என்றும் கூறினாள். வார்த்தைக்கு வார்த்தை அவனுக்கு நன்றி தெரிவித்தாள்.

"கண்ணபிரானை எப்படிக் கவனிக்க வேண்டுமோ, அப்படி நான் கவனித்துக் கொள்கிறேன்." என்று சொன்ன ராஜாமணி, "அடுத்து என்ன செய்யலாம் என்று முடிவு செய்திருக்கிறாய்? ஊருக்கே போய்விடப் போகிறாயா?" என்று கேட்டான்

"நான் அங்கே போய் என்ன செய்யப்போகிறேன்? சென்னையிலேயே எனக்கு ஏதாவது ஒரு வேலை வாங்கிக் கொடுங்கள்."

அவள் 'வாங்கிக் கொடுக்கும்படிச் சொன்னதும்,' ராஜாமணி சுற்றுப்புற சூழ்நிலைகளையும், கண்ணபிரானால் வரப்போகும் ஆபத்துக்களையும் மறந்து வாய்விட்டுச் சிரித்தான். "நீ கேட்ட வேலை எந்த கடையில் விற்கிறது என்று தெரியவில்லை."

அந்த வேடிக்கையை அவள் புரிந்து கொண்டாள். தன்னைத் தொடர்ந்து வந்துகொண்டிருந்த பயங்கரத்தைப் பற்றிய அச்சமும் சிறிது நேரத்துக்கு அவளைவிட்டு அகன்றது. பல வருடங்களாக அவனுடன் நெருங்கிப் பழகியதைப் போன்ற பிரமை. நீண்ட நாட்களாகவே அவனுடன் ஒன்ருக வாழ்ந்துவிட்டதைப் போன்ற எண்ணம். கணநேரப் பழக்கம் அவளை எப்படியெல்லாமோ கற்பனை செய்ய வைத்துவிட்டது.

''சிறிது நேரத்திற்கு முன்னால் வரையில் இந்த உலகத்தில் எல்லா நம்பிக்கைகளையும் இழந்திருந்தேன். வாழ்க்கையை கடலோடு முடித்துக் கொள்ளலாம் என்ற முடிவும் ஏற்பட்டிருந்தது. இப்பொழுது தான் ஏனே வாழவேண்டும் என்ற அற்ப ஆசை உண்டாகிறது.'' என்று அவள் சொல்லிவிட்டு தலையைத் தாழ்த்திக் கொண்டாள்.

அவளுடைய ஏழ்மைத் தோற்றம்—பரிதாப நிலைமை—அன்பு செறிந்த பார்வை ஆகியவை அவனைக் கவர்ந்தன. அவளுக்கு தன்னால் இயன்ற முழு உதவிகளையும் செய்யவேண்டும் என்று மனப்பூர்வமாக எண்ணினுன்.

முதல் வேலையாக அவளை ஒரு ஹோட்டலுக்கு அழைத்துச் சென்று பசியைப் போக்கினுன். தேவையான துணிமணிகளையும் கடனுக்கு வாங்கிக் கொடுத்தான்.

அத்துடன் நின்றுவிடாமல் ஒரு ப்பளிக் டெலிபோன் பூத்துக்கு வந்து யாருக்கோ டெலிபோன் செய்தான்.

மீனு வெளியே நின்றவாறு அவன் என்ன செய்கிருன் என்பதையே கவனித்துக் கொண்டிருந்தாள்.

''குட் மார்னிங் மாலினி, நான்தான் ராஜாமணி பேசுகிறேன். உங்களிடமிருந்து எனக்கு உதவி தேவைப்படுகிறது. செய்யமுடியுமா? என்று டெலிபோனில் கேட்டான் ராஜாமணி.

''உதவியா? உங்களுக்கா...? நான் என்ன செய்யவேண்டும் என்று சொல்லுங்கள். செய்து முடிக்கத் தயாராக இருக்கிறேன்.'' என்று மறுமுனையிலிருந்து ஒரு பெண் இனிமையாகப் பேசும் குரல் கேட்டது.

அவன் எதிர்பார்த்த மாலினிதான் டெலிபோனில் பேசினுள்.

''உடனே என் ரூமுக்கு வருகிறீர்களா?'' என்று அவன் அவசரப்பட்டான்.

''உங்கள் ரூமுக்கா? ஏன்?''

''ரொம்பவும் அவசரம். நீங்கள் வர முடியுமா? முடியாதா?''

"அந்த அவசரமான விஷயத்தை டெலிபோனில்தான் பேசுங்களேன்."

"நேரில்தான் சொல்ல வேண்டும். டெலிபோனில் பேசினல் ஐந்தாம் படையைச் சார்ந்த யாராவது ஒட்டுக் கேட்டுக்கொண்டிருப்பார்கள்."

"ஓ'கே... பத்து நிமிஷத்தில் உங்கள் ரூமில் நான் இருப்பேன்..."

"தாங்க் யூ மாலினி."

அவன் ரிசீவரைக் கொக்கியில் தொங்கப் போட்டுவிட்டு கீழே இறங்கி வந்தான்.

"மீனு, உன்பக்கம் கொஞ்சம் அதிர்ஷ்டக் காற்று வீசத் தொடங்கியிருக்கிறது என்று நினைக்கிறேன். மாலினி பெரிய இடத்துப்பெண். அவள் மனது வைத்தால் உனக்கு எப்படியும் வேலை கிடைத்துவிடும்."

"மனது வைப்பார்களா?"

"என்மேல் அவளுக்கு எல்லையற்ற அன்பு உண்டு. அதனல் நிச்சயம் உனக்கு உதவி செய்வாள் என்று நம்புகிறேன்."

ராஜாமணி அவளை ஒரு சைக்கிள் ரிக்ஷாவில் ஏற்றிவிட்டு அவளுக்கு முன்னல் சைக்கிளில் ஏறிச்சென்றான்.

அவனுடைய சிறிய வீடு நாற்புறமும் மரம் செடிகளுடன் கூடிய தோட்டத்தினுள் இருந்தது. மாதம் எழுபது ரூபாய் வாடகை. குறைந்த வருமானத்தை வைத்துக்கொண்டு அங்கே எளிய முறையில் வாழ்ந்து வந்தான் ராஜாமணி.

கிராமச் சூழ்நிலையைக் கொண்ட அந்த வீடு மீனுவுக்கு நன்ருகப் பிடித்துவிட்டது.

"இந்த வீட்டில் ஏழு ஆண்டுகளாகக் குடித்தனம் இருக்கிறேன்." என்று சொன்னன் ராஜாமணி, ஒரு நாற்காலியை இழுத்துப் போட்டு அதில் உட்கார்ந்து கொண்டே.

எதிரில் கிடந்த பெஞ்சின்மீது மீனு, அவன் வற்புறுத்தியதின் பேரில் அமர்ந்திருந்தாள்.

அவள் வீட்டை நன்ருக ஆராய்ந்தாள். எந்தப்பொருளும் சீராக இருக்கவேண்டிய இடத்தில் வைக்கப்படவில்லை. அங்கொன்றும் இங்கொன்றுமாக விழுந்து கிடந்தன.

மீனு எல்லாவற்றையும் பார்த்துவிட்டு, "உங்கள் மனைவி வீட்டில் இல்லையா?" என்று கேட்டாள்.

தாயாரின் மறைவு நெஞ்சை அடிக்கொருதரம் அழுத்திக் கொண்டிருந்தபோதிலும், ராஜாமணியிடம் ஏற்பட்டிருந்த புதிய நட்பு வேதனையின் பளுவை ஓரளவு குறைப்பதற்கு உதவியாக இருந்தது.

''என் மனைவியா? இன்னும் கொஞ்ச நேரம் போனால் நாலைந்து குழந்தைகளுக்கு அப்பா என்று சொல்வாய் போலிருக்கிறதே! நான் ஒரு நித்திய பிரம்மச்சாரி யாரிடம் பெண் கேட்டாலும் கொடுப்பதற்கு மறுத்து விடுகிறார்கள்.'' என்று வேடிக்கையாக அவன் சிரித்தான்.

அவன் கல்யாணமானவன் என்பதைத் தெரிந்து கொண்டதும் மீனு, முதல் வேலையாக எழுந்து அறையைச் சுத்தம் செய்து, எந்தெந்த பொருட்கள் எங்கெங்கே இருக்கவேண்டுமோ, அங்கெங்கே எடுத்து வைப்பாள். அவன் தடுத்தும் கேட்கவில்லை

அவள் பின்புறத்தில் முகத்தையும் கைகளையும் கால்களையும் அலம்பிவிட்டு முன் ஹாலுக்கு வந்தபோது சிரித்த முகத்துடன் ஒரு நாகரிகப் பெண்மணி வந்துகொண்டிருப்பதைக் கண்டு ஏனோ திடுக்கிட்டாள்

இந்தப் பெண்ணின் பெயர்தான் மாலினியா? பணக்கார வீட்டுப்பெண் என்று ராஜாமணி சொன்னது இவளைத்தானா?

''ஹலோ மாலினி...கமின்...சொன்னதைப் போலவே தவறாமல் வந்து விட்டீர்களே!'' என்று ராஜாமணி சொன்னதும்,வந்திருப்பவள் மாலினிதான் என்று ஊர்ஜிதம் செய்து கொண்டாள் மீனு?

அவள் மீனுவைக் கண்டதும் ஒன்றும் பேசத்தோன்றாதவளாக அப்படியே நின்றாள். சிரிப்புடன் கூடிய முகம் திடீரென்று களையிழந்து விட்டது.

பிறகு அவள் உதடுகளில் குறும்புத்தனமான புன்னகை மலர்ந்தது. ''மிஸ்டர் ராஜாமணி, எங்களை எல்லாம் திகைப்பில் ஆழ்த்தவேண்டும் என்பதற்காகத்தான் சொல்லாமல் கொள்ளாமல் கல்யாணம் செய்து கொண்டீர்கள் போலிருக்கிறது.''

ராஜாமணிக்கும் அதிர்ச்சி. அதைப்போன்றநிலை மீனுவுக்கும்.

அவன் சற்றும் தாமதிக்காமல், ''மீனு. நீங்கள் காத்துக் கொண்டிருப்பது தவறு. நான் அன்றைக்கும் பிரமச்சாரி—இன்றைக்கும் பிரமச்சாரி. எனக்கு இன்னும் கல்யாணமே ஆகவில்லை. இந்தப் பெண்ணுக்கு நம்மால் இயன்ற உதவியைச் செய்யவேண்டும் என்

பதற்காகவே உங்களுக்கு டெலிபோன் செய்து வரவழைத்தேன்" என்று சொன்னான்.

அவன் நிலைமையை விளக்கியதும் மாலினி ஒரு நாற்காலியில் அமர்ந்துகொண்டு, "ஐ ஆம் சோ சாரி... மேலெழுந்தவாரியாகப் பார்த்துவிட்டு என் மனத்தில் பட்டதைச் சொல்லிவிட்டேன்." என்று சொன்னாள்.

அவர்கள் இருவரும் பொருத்தமான ஜோடிகள்தான் என்பதை மீனுவின் உள்ளுணர்வுகள் ஏற்றுக்கொண்டன. அவர்கள் மனப்பூர்வமாக ஒருவரையொருவர் காதலிக்கும் காதலர்களாகத்தான் இருக்கக்கூடும் என்று நம்பினாள்

ராஜாமணி அவனிடம் மீனுவின் நிலைமையை விளக்கிவிட்டு, "நீங்கள் மனது வைத்தால் உங்கள் ஊறுகாய் கம்பெனியிலேயே ஏதாவது வேலைபோட்டுக் கொடுக்க முடியும்." என்று சொன்னான்.

"எங்கள் ஊறுகாய் கம்பெனியிலா? நன்றாக யோசனைசெய்து பாருங்கள். சித்தப்பா பெரும்பான்மையான நேரங்களில் மனிதனாகவே இருக்கமாட்டார். அவர் தொடர்பு வைத்திருக்கும் கூட்டாளிகளில் யாருமே நல்லவர்களாக இருக்கமாட்டார்கள் என்பதே என்னுடைய கருத்து"

அவள் இப்படிச் சொன்னதும் ராஜாமணி சிரித்துக்கொண்டு, "கம்பெனிக்கு நீங்கள்தான் எஜமானி என்பதை மறந்துவிட்டீர்களா?" என்று நினைவுபடுத்தினான்.

"எதையுமே நான் மறக்கவில்லை. ஆனாலும் நிர்வாகம் சித்தப்பாவின் கையில் இருக்கிறதே என்றுதான் யோசிக்கிறேன்." என்று சொன்ன மாலினி ஒரு யோசனை செய்தாள்

மீனு நேராகவே சென்று அவளுடைய சித்தப்பா குபேரனைச் சந்தித்து வேலை கேட்கவேண்டும் என்பதுதான் அவளுடைய திட்டம். தேவை என்றால் சிபாரிசு செய்வதற்கும் அவள் தயாராகவே இருந்தாள்.

அவளுடைய எண்ணங்களை ராஜாமணியும் வரவேற்றான். ஒப்புதலும் கொடுத்தான்.

அன்றிரவு மீனு அவனுடைய அறையிலேயே தங்கினாள் அவளுக்குத் தன்னால் எந்தவிதமான களங்கங்களும் வரக்கூடாது என்பதற்காக ராஜாமணி வெளியே திண்ணையிலே படுத்துக்கொண்டான்.

இரவு முழுவதும் மீனு பயமின்றி தூங்கினாள். கடுமையான அசதியும், ராஜாமணி எந்நேரமும் உதவி செய்யத் தயாராக இருக்கிறான் என்ற தெம்பும்தான் அவளுடைய அமைதியான தூக்கத்திற்குக் காரணம்.

அவள் தன் வாழ்க்கையில் ஏற்பட்ட மிகமிகக் கடுமையான அதிர்ச்சிகளைத் தாங்கிக்கொண்டாள். மனத்தைத் தேற்றிக் கொள்ளவும் செய்தாள்.

மறுநாள் பத்துமணிக்கு ராஜாமணி கொடுத்திருந்த விலாசத்தையும் கையில் எடுத்துக்கொண்டு நேராக ஊறுகாய் கம்பெனிக்கு வந்தாள். தனக்கு வேலை கிடைக்க அவள் வேண்டாத தெய்வங்களே இல்லை.

வெளியே பெரிய இம்பாலா கார் நிறுத்தப்பட்டிருந்தது.

மாலினியாவது, அவளுடைய சித்தப்பா பேரனாவது அங்கே வந்திருக்கலாம்.

காம்பவுண்டினுள் நுழைந்ததும் காவலுக்கு நின்று கொண்டிருந்த கூர்க்கா ஓடிவந்து, ஜாவ்...ஜாவ்...'' என்று கத்தினான்.

''எனக்கு இந்தி தெரியாது. தமிழில் சொல்லுங்கள்.'' என்றாள் மீனு. இதைப்போன்ற கம்பெனிகளில் அல்சேஷியன் நாய்களுக்குப் பதில் கூர்க்காவினரைத்தானே நிறுத்தியிருக்கிறார்கள்.

''பொம்பளே...என்ன வேண்டும்?'' என்று அவன் இப்பொழுது தமிழை எப்படியெல்லாமோ வளைத்துக்கொண்டு கேட்டான்.

''மாலினி அம்மா என்னை இங்கே வந்து பார்க்கும்படிச் சொல்லியிருக்காங்க... அதனால் தான் வந்தேன்'' என்று மீனு சொன்னாள்.

அப்பொழுது ஒரு தடியன் உள்ளேயிருந்து ஓடிவந்து, ''எஜமான் கூப்பிடுகிறார்: வா உள்ளே...'' என்று அழைத்தான்.

கூர்க்கா அவனுக்கு ஒரு கும்பிடு போட்டான். அவனுக்கும் இங்கே அதிகச் செல்வாக்கு உண்டுபோலும்.

அவன் தன்னுடைய பெயரை மூக்கன் என்று அறிமுகம் செய்து கொண்டான். ''ஆனால் என்னை எல்லோரும் கோட்டு கோதண்டம் என்றுதான் சொல்வானுங்க.''

''கோட்டு கோதண்டமா? ஏன்?'' அவனிடம் கொஞ்சம் பேச்சுக் கொடுத்தால் ஒருவேளை பலன் ஏதாவது கிடைக்கக்கூடும் என்ற நம்பிக்கை அவளுக்கிருந்தது.

"ரௌடி பசங்களிலேயே நான்தான் இதன் முதலில் கோட்டு கோதண்டம்...கோட்டு கோதண்டம்னு சொல்ராங்க."

"நீங்கள் ரௌடியா?"

அவள் பயந்து விட்டாள். ரௌடி என்று தன்னை பிரமாதமாக விளம்பரம் செய்து கொள்ளும் ஒருவன் நம்பி அவன் பின்னால் எப்படிச் செல்ல முடியும்?

இது உண்மையான ஊறுகாய் கம்பெனிதானா? அல்லது ரௌடிகளின் ஒய்ந்த மடமா?

"ரௌடி என்று சொன்னதுமே பயந்து விடாதே கண்ணு' நான் இப்பொழுது ரொம்ப நல்லவன். கோட்டு கோதண்டம் கதையை நீ கேக்கலியே...ஒருநாள் சைதாப்பேட்டையிலே பெரும் கலாட்டா ஒருத்தன் சோடாப்புட்டிகளை எடுத்து 'சர்சர்'னு வீசிக்கினே இருந்து இருந்தான். யாருமே அவன் பக்கத்தில் போகலே. ஆனால் நான் தெனவிட்டா ரேக்ளா வண்டியிலே ஏறிப்போனேன். பறந்து வந்த சோடாப்புட்டிகளை எண்ணிக்கினே நின்னேன். பார்த்தானுக நம்ப பசங்க. இவருல்லே பெரிய வாத்தியார்னு நினைச்சு சொந்தமாகவே ஒரு கோட்டை வாங்கி எனக்கு மாட்டிவிட்டுட்டானுங்க. அன்னையிலே நான் கோட்டு கோதண்டம்"

அவன் தன்னுடைய பெருமைகள் எல்லாவற்றையுமே வரிசையாக எடுத்துச் சொல்லிக் கொண்டே இருந்தான்.

"நான் உங்களை கோட்டு கோதண்டம் என்று கூப்பிடலாம் அல்லவா?"

வாழ்க்கையில் நொந்து நொறுங்கிய பின்பு எப்படி வேண்டுமானாலும் நெளிந்து கொடுத்துத் தப்பித்துக்கொள்ளும் மனப்பக்குவத்தை அவள் பெற்றிருந்தாள்.

"சீக்கிரமாக நான் இந்தக் கோட்டையே கழற்றி எறிந்து விடலாம் என்று நினைத்துக் கொண்டிருக்கிறேன். அதனால் நீ என்னை மூக்கன் என்றே சொல்லலாம்."

அவளை மூக்கன் அழைத்துச் சென்று சுழல் நாற்காலியில் மீசையைத் திருகியவாறு உட்கார்ந்திருந்த குபேரனிடம் அறிமுகம் செய்து வைத்துவிட்டு, "பாவம், சின்னப்பொன்னு ஏதாவது வேலை போட்டுக் கொடுங்க," என்று சொன்னான்.

அவன் பேசிய தோரணை மிரட்டுவதைப் போலிருந்தது.

குபேரன் கோட்டும் சூட்டும் அணிந்து பணத்திலேயே செழித்து வளர்ந்த ஆடம்பர மனிதராகக் காணப்பட்டார். ஐம்பது

வயதைக் கடந்துவிட்ட அவர், இன்னும் இளமை குறைவில்லை என்பதை எடுத்துக் காட்டும் விதத்தில் அலங்காரம் செய்திருந்தார்.

அவர் நின்றுகொண்டிருந்த மீனுவை உன்னிப்பாகக் கவனித்தார். உள்ளங்காலிலிருந்து உச்சந்தலை வரையில் அணுஅணுவாக ஆராய்ந்தார். பிறகு கறுத்த உதடுகள் இலேசாக நெளிந்தன.

"என்ன வேலை போட்டுக் கொடுத்தாலும் செய்வாய் அல்லவா"

அவர் இப்படிக் கேட்டதும், தனக்கு வேலை கிடைக்குமோ, கிடைக்காதோ என்று நினைத்துக்கொண்டிருந்த மீனு நம்பிக்கையுடன் நிமிர்ந்து பார்த்தாள். அந்த விநாடி முதல் வேலையை ஒப்புக்கொண்டு சுறுசுறுப்புடன் பணியாற்றுவதைப் போன்ற பிரமை.

"நிச்சயமாகச் செய்வேன். சொல்லுங்கள் அய்யா." என்று அவள் ஆர்வத்துடன் துடித்தாள்.

"நாங்கள் என்ன சொன்னாலும் 'அனுசரித்து' நடந்துகொள்வாய் அல்லவா?"

அவர் 'அனுசரித்து' என்று சொன்னதின் உட்பொருள் அவளுக்கு விளங்கவில்லை. ஆனாலும் அவள் வேலை கிடைத்தால் போதும் என்ற எண்ணத்துடன், "நீங்கள் சொல்லும் வேலைகளை எல்லாம் செய்வேன்." என்று சொன்னாள்.

"கோட்டு .. போய் பத்திரங்களை எடுத்துக்கொண்டு வா. முதலில் எல்லா பத்திரங்களிலும் கையெழுத்து வாங்கிக்கொள்."

கோட்டு கோதண்டம் என்ற மூக்கன் பத்திரங்களை எடுத்துக்கொண்டு ஒவ்வொன்றிலும் மீனுவின் கையெழுத்தை வாங்கிக்கொண்டான்.

அவன் போனதும் குபேரன் தன் மீசையைத் திருகிக்கொண்டு "உன்னை பாக்கில் டிப்பார்ட்மெண்டில் போட்டிருக்கிறேன். பொறுப்புடன் நடந்துகொள்ள வேண்டும்." என்று சொன்னவர், "சம்பளம் எவ்வளவு எதிர்பார்க்கிறாய்?" என்று கேட்டார்.

"நீங்கள் என்ன விரும்புகிறீர்களோ, அதைத் தரலாம்." என்றாள் மீனு. வேலை கிடைத்துவிட்டதில் அவளுக்கு ஒருவித மன நிம்மதி இருந்தது. இனிமேல் வாழ்நாட்களை நிம்மதியுடன் கடத்திச் செல்லலாமே!

"சம்பளம் முன்னூறு ரூபாய். தங்குவதற்கு இலவசமான வீடு. வழக்கம்போல் போனஸ்களும் உண்டு."

அவர் இப்படிச் சொன்னதும் தன்னுடைய காதுகளையே நம்ப முடியாமல் திணறினாள் மீனு.

எடுத்த எடுப்பிலேயே சென்னையில் இத்தகைய வசதிகள் கிடைப்பது என்றால்...?

மூக்கன் கோட்டை இழுத்துச் சரிசெய்துகொண்டு அங்கே வந்தான்.

"ஏய் கோட்டு .. இவளை அழைத்துக்கொண்டு உள்ளே போய் வேலை செய்யும் இடத்தைக் காட்டு. இதோ நானும் நொடிப்பொழுதில் வந்துவிடுகிறேன்." என்று சொன்னார், குபேரன்.

"வா்ம்மா கண்ணு." என்று கோட்டு கோதண்டம்—அதாவது மூக்கன் என்ற பெயரைக்கொண்டவன்சொல்லிவிட்டுமுன்னால்நெஞ்சை நிமிர்த்திக்கொண்டு போனான்.

மீனா தனக்கு வேலை கொடுத்து ஆதரிக்கும் குபேரனை நோக்கிப் பெரிதாக ஒரு கும்பிடு போட்டுவிட்டு அவன் பின்னால் சென்றாள்.

மலர்ந்த முகத்துடன் குபேரனும் போனார்.

அப்பொழுது பொறியினுள் வைக்கப்பட்டிருக்கும் தேங்காய்த் துண்டை நோக்கிச் செல்லும் எலியின் கதி தன்னுடையது என்பதை மீனா எண்ணிப் பார்க்கத் தவறிவிட்டாள்.

## 5 கொடூரமான தண்டனை!

உள்ளே பல பெண்கள் வரிசை வரிசையாக உட்கார்ந்து ஊறுகாய்களை புட்டிகளில் அடைக்கும் பணியில் உற்சாகமாக ஈடு பட்டிருந்தார்கள்.

"உனக்கு இந்த செக்ஷனில் வேலை இல்லை. உன்னை நாங்கள் ஸ்பெஷல் ஊறுகாய் பிரிவில் போட்டிருக்கிறோம். அந்த செக்ஷனுக்கே நீதான் தலைவி." என்று பெருமையுடன் சொன்னான், கோட்டு கோதண்டம் என்ற மூக்கன்.

முன்னால் போய்க்கொண்டிருந்த மீனா புரியாமல் விழித்த போதிலும் விளக்கமாக எதையும் கேட்க விரும்பவில்லை. எந்த வகையிலாவது வேலை என்று கிடைத்தால் போதும். ராஜாமணிக்காகவாவது சில நாட்கள் வாழவேண்டும் போலிருந்..

கடைசியாக மற்ற அறைகளோடு தொடர்பு இல்லாத பாதாள அறை ஒன்றிருந்தது. அங்கே அவளை அழைத்துச் சென்றார்கள்.

அந்த அறை முற்றிலும் மாறுபட்டதாக இருந்தது. அங்கே இருந்த ஆண்களும் பெண்களும்கூட அப்படியேதான் இருந்தார்கள். பார்ப்பதற்கு அது வேறு ஓர் உலகம்.

"உனக்கு இங்கேதான் வேலை." என்று குபேரன் சொல்லிக் கொண்டிருந்தபோது ஒருவன் பரபரப்புடன் ஓடிவந்து "மங்காத்தாவுக்கு பைத்தியம் பிடித்துவிட்டது. அவளை என்ன செய்வது?" என்று கேட்டான்.

மீனு அபாயத்தில் வந்து சிக்கிக்கொண்டவன்போல் என்ன செய்வது என்று தோன்றாதவளாக விழித்துக்கொண்டிருந்தாள். ஏதோ ஒரு பயங்கரம் நடக்கப்போவதைப் போலவே தோன்றியது.

"அந்தக் கழுதையை இங்கே தூக்கிக்கொண்டு வாருங்கள். என்னவென்று பார்த்துவிடுவோம்."

குபேரன் முகம் எப்பொழுதும் போல் களையாக இல்லை. நாக்கைத் தொங்கப் போட்டுக் கொண்டு நிற்கும் ஓநாயாகவே அந்த முகம் தோன்றியது

கண் இமைக்கும் நேரத்திற்குள் இரண்டு தடியர்கள் கொடி போன்ற இளம்பெண் ஒருத்தியைத் தூக்கிக்கொண்டு ஓடிவந்தார்கள். அவளுடைய அழகிய உடல் கரை மீன் போல் அவர்களுடைய வலிமை பொருந்திய கைகளின் நடுவே கிடந்து துடித்துக்கொண்டிருந்தது.

மீனு செயலற்றுப்போய் நின்றுகொண்டிருந்தாள். இதுவரையிலும் அவள் அனுபவித்தறியாத பயம் நெஞ்சைத் தாக்கியது.

இந்தப் பெண்ணை இவர்கள் என்ன செய்யப்போகிறார்களோ?

குபேரனின் முகம் இன்னும் கொடூரமாக மாறியது. அந்த முகத்தை அவளால் பார்க்கவே முடியவில்லை.

அவளை தடியர்கள் கீழே இறக்கிவிட்டார்கள்.

அவள் ஊளையிட்டாள். தலைமுடிகளைக் கலைத்துக்கொண்டும், ஜாக்கட்டைக் கிழித்துக்கொண்டும் ஆர்ப்பாட்டம் செய்தாள். பலவிதமான குரல்களில் பாட்டுப் பாடினாள். திடீரென்று நடனமும் ஆடினாள்.

அவளை இன்னும் கூர்மையாக பக்கத்தில் போய் நின்று கொண்டு ஆராய்ந்த குபேரன், "உனக்கு உண்மையிலேயே பைத்தியம் தானா?" என்று கேட்டார்.

அவள் பதில் சொல்லாமல் குரலை உயர்த்திக்கொண்டு பாட்டுப் பாடினாள். பலவிதமான சிரிப்பொலிகளைக் கிளப்பினாள்.

"இவளுக்கு பைத்தியம்தான் பிடித்துவிட்டது எஜமான்." என்று உறுதி செய்தான் கோட்டு கோதண்டம் என்ற மூக்கன்.

"அப்படியா? இவளுக்குப் பிடித்திருப்பது உண்மையான பைத்தியமா, போலிப் பைத்தியமா என்பதை நாம் வேதனையின் மூலம் தெரிந்துகொள்ளலாம். இவளை நம்முடைய சோதனை அறைக்குக் கொண்டுபோங்கள்."

குபேரன் கட்டளைக்கு மறுப்பு இருக்க முடியுமா?

அவளை மறுபடியும் தடியர்கள் பந்துபோல் தூக்கிக்கொண்டு ஓடினார்கள்.

"மீனு நீயும் வா... இதைப் போன்ற காட்சிகளை நீயும் நேரிலேயே பார்ப்பது நல்லது. அப்பொழுதுதான் ஒருவிதப் பயம் இருந்துகொண்டே இருக்கும். கடமையைச் சரிவரச் செய்யவேண்டும் என்ற அக்கறையும் உண்டாகும்"

குபேரன் பயமுறுத்துவதைப்போல் சொல்லிவிட்டு மீனுவையும் அழைத்துக்கொண்டு பக்கத்து அறையினுள் நுழைந்து நெல் வேக வைப்பதற்குப் பயன்படுத்தப்படும் மின்சார அடுப்பையும், அதன் மேல் வைக்கப்பட்டிருக்கும் பெரிய அண்டாவினுள் ஒரு நபர் தாராளமாக மூழ்கிக் குளிக்கமுடியும்.

அண்டாவின் பெரும்பகுதி தண்ணீர் நிரப்பப்பட்டிருந்தது. அந்தத் தண்ணீர் கொதித்துக்கொண்டிருந்தது.

"மீனு... நீ அப்பளம் பொரிப்பதைப் பார்த்திருப்பாய் என்று நினைக்கிறேன். இப்பொழுது இங்கே ஒரு மனித அப்பளத்தையும் பொரித்தெடுக்கப் போகிறோம்" என்று குபேரன் சொன்னார்.

அவர் இப்படிச் சொன்னதும் தன்னை யாரோ கொதிக்கும் தண்ணீரில தூக்கிப் போட்டுவிட்டதைப் போன்ற பீதியை மீனு அனுபவித்தாள். அவள் துடித்துப்போய்விட்டாள். ஏதோ பேசவேண்டும் என்று நினைத்தபோதிலும் வார்த்தைகள் தொண்டைக்குமேல் வர மறுத்துவிட்டன.

தடியர்கள் அந்தப் பெண்ணின் கையைப் பிடித்து 'பரபர' என்று இழுத்து வந்தார்கள்.

உள்ளாடை—மார்புக்கச்சை ஆகியவை மட்டுமே அந்தப் பேதையின் மானத்தை மறைப்பதற்கு உதவின.

சந்தன நிறத்தைக்கொண்ட அவள் உடல் துடிதுடியாய் துடித்தது. மரணத்தின் கோரத்தைக் கண்டு அஞ்சினாள். இதுவரையிலும் அவளை ஆட்டிப் படைத்துக்கொண்டிருந்த பைத்தியம் எப்படி எங்கே மறைந்ததோ என்று தெரியவில்லை.

"ஏ குட்டி... உண்மையிலேயே உனக்குப் பைத்தியம்தானா? எங்கள் எல்லோரையுமே நீ இளிச்சவாயர்கள் என்று நினைத்து விட்டாயா? உண்மையைச் சொல்." என்று குபேரன் குமுங்கினான்.

அந்தப் பாதாள அறையினுள் வைத்து என்னென்ன அக்கிர மங்கள் நடந்தாலும் ஏன் எதற்கு என்று தட்டிக் கேட்பதற்கு யாருமே இல்லையே. தட்டிக் கேட்க நினைத்தாலேயே அவர்கள் உயிர்நாடியைத் தட்டி எடுத்துவிடுவானே!

அந்தப் பெண்மணி அலறித் துடித்தவளாய், "எனக்குப் பைத்தியமே இல்லை. சும்மா தமாஷ் செய்யவேண்டும் என்பதற்காக பைத்தியம் பிடித்திருப்பதைப்போல் நடித்தேன். என்னை மன்னித்து விடுங்கள். இன்றைக்கு ஏப்ரல் முதல் தேதி அல்லவா?" என்று சிரித்துவிட்டு சாகஸ வித்தைகள் பல காட்ட முயன்றாள்.

எந்த வித்தையுமே அவரிடம் எடுபடவில்லை. அவர் அட்டகாச மாகச் சிரித்துவிட்டு, "ஓ... ஏப்ரல் முட்டாள் ஆக்கலாம் என்று பார்த்தாயா? இப்பொழுது நாங்களும் உன்னை ஏப்ரல் முட்டாள் ஆக்குகிறோம்." என்று சொன்னவர், "இவளைத் தூக்கி தொட்டியில் போடுங்கள்." என்று உறுமினார்.

மீனா நிலை கொள்ளாமல் தவித்தாள். இந்தக் கோரத்தைப் பார்க்கவேண்டும் என்பதற்காகவா இங்கே வேலைக்கு வந்திருக்கிறாள்?

"நான் வெளியே போய் நின்றுகொண்டிருக்கிறேன். இங்கே இருந்தால் திடீர் என்று மாரடைப்பு வந்துவிடும் போலிருக்கிறது." என்று பதறினாள்.

'பயப்படாதே... உன் உயிரைப் பாதுகாப்பது எங்கள் பொறுப்பு. நீ இதைப் போன்ற வேடிக்கையான காட்சிகளை நேரடி யாகவே பார்த்து மகிழவேண்டும்" என்று கூறி அவளை வெளியே போகவிடாமல் தடுத்தார், குபேரன்.

அந்தப் பெண்ணை முரடர்கள் தூக்க எத்தனித்ததும் அவள் விலாங்கு மீனைப்போல் நழுவி ஓடிவந்து அவருடைய கால்களில் விழுந்து அப்படியே தாவிப் பிடித்துக்கொண்டு கதறினாள்.

"முதலாளி... என்னை மன்னித்துவிடுங்கள். இனிமேல் என்றைக்குமே நான் தவறு செய்யமாட்டேன்."

"இன்றைக்கு ஏன் அப்படி நடந்துகொண்டாய்? உன்னு டைய மன மாற்றத்துக்கு யார் காரணம்?"

"யாரும் அல்ல; இங்கிருந்து ஓடிவிடலாம் என்ற எண்ணத் துடன் நானாகவேதான் பைத்தியம் பிடித்தவள்போல் நடித்தேன்."

"எனக்கு கண்டபடியெல்லாம் நடிக்கிறவர்களைப் பிடிக்காது. உன்னைப்போன்ற சபல புத்தி படைத்த பெண்கள் உயிரோடு இருந்தால் அதனால் எங்களுக்குத்தான் ஆபத்து உண்டாகும். அதனால் உன்னை இப்பொழுது அப்பளம்போல் பொரித்துவிடப் போகிறோம். இன்னும் சிறிது நேரத்தில் உன் அழகிய உடல் அகோரமாக மாறி விடும். ஒன்றை மட்டும் நீ சாவதற்கு முன்னால் தெரிந்துகொள்ள வேண்டும். எங்களுக்கு எதிராக நடந்துகொள்ளும் மனப்பான்மை கொண்டவர்கள் எக்காரணத்தைக்கொண்டும் உயிர் வாழவே முடியாது. அவர்களுடைய மரணம் மிக மிகக் கொடூரமானதாக இருக்கும்."

இப்படி உறுமிய குபேரன் வியர்வையால் நனைந்தவாறு நின்றுகொண்டிருக்கும் அந்தப் பெண்மணியைப் பார்த்துக் கொக்கரித்தான்.

அவள் இன்னும் கால்களை விடவில்லை. கெட்டியாகப்பிடித்துக் கொண்டு உயிருக்காக மன்றாடினாள். வாழவேண்டுமென்ற துடிதுடிப்பு ஒவ்வொரு அசைவுகளிலிருந்தும் பிரதிபலித்தது.

ஆனால் குபேரன் அவளுக்காக இரக்கம் காட்டவேண்டுமே! காலைக் கவ்விக்கொண்டிருந்த அவளை உதறித் தள்ளிவிட்டு, நிமிர்ந்து பார்த்தார்.

அவள் அலங்கோலமான நிலையில் தூரத்தில்போய் உருளைக் கிழங்குபோல் கிடந்தாள்.

"இன்னும் ஏன் வேடிக்கை பார்த்துக்கொண்டு நிற்கிறீர்கள்? தூக்கிப்போடுங்கள். வடைபோல் சுட்டு எடுங்கள்."

குபேரன் இப்படிச் சொன்னதும் தடியர்கள் இருவரும் அவளுடைய கைகளையும் கால்களையும் ஜோடி ஜோடியாக இணைத்துக் கட்டினார்கள்.

அவள் துள்ளினாள்—துடித்தாள்—துவண்டாள். தன் உயிரைக் பாதுகாத்துக் கொள்ளப் போராடினாள். வாய்விட்டுக் கதறினாள். "இனிமேல் தப்பே செய்யமாட்டேன்." என்று மன்றாடினாள்.

ஆனால் எதுவுமே அவர் காதுகளில் போட்டுக் கொள்ளவில்லை. அவர் வெறித்தனம் கொண்டவராக பொங்கிக்கொண்டிருந்தார். அவள் கோரமான முறையில் சாகும் காட்சியைப் பார்த்தாலன்றி வேறு வேலை ஓடாது என்ற நிலை ஏற்பட்டது.

அவள் கதறக் கதறத் தூக்கிக்கொண்டு போனார்கள். அவள் நெளிந்தாள். துள்ளினாள். குதித்தாள்.

அண்டாவில் உள்ள தண்ணீர் கொதித்துக் கொந்தளித்துக் கொண்டிருந்தது. ஆவி பறந்த வண்ணம் இருந்தது.

மீனு கொதிக்கும் நீரில் இறக்கப்போகும் பெண்ணைப் பார்க்க முடியாதவளாக நிலைதடுமாறினாள்.

அந்த நேரத்தில் தடியர்கள் இருவரும் அந்தப் பெண்ணை அப்படியே தூக்கி கொப்பரையில் போட்டார்கள் கொதிக்கும் நீர் சிதறி அடிக்க வீறிட்டு அலறினாள் அவள்.

கண் இமைக்கும் நேரம்தான்.

ஆவி அடங்கியது. உடலெங்கும் பொரிக்கப்பட்ட அப்பளங்கள் போல் புடைத்துக்கொண்டு தள்ளின. அவள் உடல் வெந்த நிலையில் அகோரமாக இறந்து கிடந்தாள்.

அந்தக் கோரக் காட்சியைப் பார்த்துக்கொண்டிருந்த மீனுவுக்கு நெஞ்சு வெடித்துவிட்டதைப் போலிருந்தது. அவள் மயக்கமடைந்த நிலையில் அப்படியே சாய்ந்து விழுந்தாள.

## 6. கயவர்களின் வேட்டை !

மீனு மறுபடியும் கண்விழித்துப் பார்த்தபோது ஏர்கண்டிஷன் அறையினுள் படுத்துக் கிடப்பதை உணர்ந்தாள். ஒரு பெண் அகோரமான முறையில் கொல்லப்பட்ட காட்சியை நேருக்கு நேராகப் பார்த்துவிட்டதால் அவள் அதிர்ந்து போயிருந்தாள்.

''மீனு... பயப்படாதே... இங்கேயுள்ள சில பெண்களுக்கு நல்ல புத்தி சொல்லிக் கொடுக்கவேண்டும் என்பதற்காகவே அவளுக்கு இப்படியொரு சிறு தண்டனையைக் கொடுத்தேன்.'' என்று குபேரன் எந்தவிதக் கவலையும் இல்லாமல் சிரித்துக்கொண்டே சொன்னார்.

அவள் எழுந்து உட்கார்ந்தாள். சிறு தண்டனையாமே அது! பதினெட்டு வயதுகூட நிரம்பாத ஒருத்தியை அப்படியே கொதிக்கும் நீரில் தூக்கிப் போட்டு பதைக்கப் பதைக்கக் கொல்வதற்குப் பெயரா சிறு தண்டனை? இதை விடவும் கவு இரக்கமற்ற கோர மரணம் வேறு எதுவும் இருக்க முடியாதே!

மீனு எதிரில் இருப்பது தன்னுடைய முதலாளி குபேரன் என்பதைத் தெரிந்துகொண்டதும் சட்டென்று கட்டிலைவிட்டுக் கீழே இறங்கித் தரையில் உட்கார்ந்தாள்.

"பரவாயில்லே, உனக்கு நான் அடுத்த ஸ்தானம் கொடுக்க நினைப்பதால் எழுந்து கட்டிலில் உட்காரலாம் நமக்குள் எந்தவித மான ஏற்றத் தாழ்வுகளும் கிடையாது." என்று அவர் சொன்னார்.

அவள் அங்கிருந்து எழுந்திருக்கவேண்டுமே! இடுப்பு ஒடிந்து விட்டதைப்போல் அல்லவா ஆகிவிட்டது, இப்படியொரு கொடூரமான காட்சியை நேரிலேயே பார்க்க நேரிடும் என்று அவள் கொஞ்சம்கூட எதிர்பார்க்கவில்லேயே.

"நான் சொன்னால் தப்பாக எடுத்துக்கொள்வீர்களா?" மீனு தான் பரிதாபமாக இப்படிக் கேட்டாள். ஏற்கனவே இறந்துபோன பெண் இன்னும் நினைவுத்திரையில் வந்தல்லவா பயமுறுத்துகிருள்.

"நியாயமான எதற்கும் என்னிடமிருந்து கோபத்தை எதிர் பார்க்க முடியாது. மொத்தத்தில் நான் லாபம் சம்பாதிக்கக்கூடியதாக இருக்கவேண்டும்."

அவருடைய எண்ணம் மிகவும் தெளிவாக வெளிப்பட்டது.

அவள் தட்டுத் தடுமாறிய போதிலும் எப்படியும் பேசித்தானே ஆகவேண்டும் என்ற எண்ணத்துடன், "எனக்கு வேலே?ய வேண் டாம். நான் ஊருக்கே போய்விடலாம் என்று நினைக்கிறேன்." என்று சொன்னாள்.

அவ்வளவுதான்! குபேரன் 'ஹா ..ஹா...' என்ற அட்டகாச மான சிரிப்பொலியுடன் எழுந்து குறுக்கும் நெடுக்குமாக நடக்கலானார்.

"பைத்தியக்காரப் பெண்ணே! நீ எப்பொழுது பத்திரங்களில் கையெழுத்துப் போட்டாயோ, அந்த விநாடி முதல் நீ எங்களில் ஒருத்தியாகிவிட்டாய். இங்கே நாங்கள் என்ன சொல்கிறோமோ அதைத் தட்டாமல் வேலே செய்யவேண்டும். எக்காரணத்தைக் கொண்டும் யாரிடமும் எதுவும் சொல்லக்கூடாது. இதில் எதையாவது மீறினல் சிறிதுநேரத்திற்கு முன்னல் ஒரு பெண் எப்படிச்செத்தாளோ, அதே முறையில் உன்னேயும் பொரித்து எடுக்கப்படும்"

என்னமாதிரியாக அவர் உறுமிவிட்டார். விசித்திரமான ஆள் விழுங்கி மிருகம் ஒன்று ஊளையிடுவதைப்போலவே அது இருந்தது.

அவள் தன்னுடைய நிலேயைப் புரிந்துகொண்டவளாய், "நீங்கள் என்னேக் கொல்ல விரும்பினல் தாராளமாகக் கொல்லலாம்" என்று சொன்னாள்.

உடனே அவர் கொடூரமாக நகைத்துவிட்டு, "பேதைப் பெண்ணே! உன்னேடு மட்டும் நான் கதையை முடித்துக்கொள்வேன்

என்று எதிர்பார்க்கவேண்டாம். உனக்கு ஒருவன் உதவி செய்கிறான் அல்லவா? அவனைத்தான் அச்சாரமாக முதல் பலிகொடுப்பேன். அவன் சாகத்தான் வேண்டும் என்றால் உன் விருப்பப்படி செய்யலாம்.'' என்று வலைவிட்டான்.

தன்னால்—தனக்காக இன்னொரு மனித உயிர்பலி ஆவதா? வேண்டாம்... வேண்டாவே வேண்டாம்...

அவள் தன்னை எந்தச் சூழ்நிலைக்கும் தயார்படுத்திக்கொண்டு ''நீங்கள் என்ன சொன்னாலும் அதைக் கேட்கிறேன். உங்கள் சொற்படி நடக்கிறேன். ஆனால் நல்ல இதயம் படைத்த ராஜாமணிக்கு மட்டும் எந்தவிதமான தீங்கும் செய்துவிடாதீர்கள்.'' என்று கதறினாள்.

அவளுடைய பலவீனம் எங்கே இருக்கிறது என்பதை குபேரன் கண்டுபிடித்துவிட்டார். இனிமேல் அவருக்கு கவலையே இல்லை. அவளை எப்படி வேண்டுமானாலும் ஆட்டிப் படைக்க முடியும்.

அவள் குளிர்ந்த நீரால் முகத்தைக் கழுவி, ஒரு கிளாஸ் தண்ணீரும் குடித்துவிட்டு தனக்கிடப்பட்ட வேலையைச் செய்வதில் முனைந்தாள்.

மாலையில்

வெளியே அவளுக்காக ராஜாமணி சைக்கிளில் காத்துக் கொண்டிருந்தான்.

சரியாக ஆறு மணிக்கு மீனு வெளியே வந்தாள். அவன் உயிரை பயங்கரவாதிகள் எடுத்துக்கொள்ளக்கூடாது என்பதற்காக தன்னுடைய முகத்தை மிகவும் தெளிவாக வைத்துக்கொள்ள பகீரதப் பிரயத்தனம் எடுத்துக்கொண்டாள்.

அவன் சைக்கிளைத் தள்ளிக்கொண்டே வந்து, ''மீனு...வேலை கிடைத்துவிட்டதல்லவா?'' என்று கூவினான்.

தனக்குக் கிடைத்திருக்கும் 'அந்த' வேலையை எப்படி வெளியே சொல்ல முடியும்? சொன்னால் குபேரன் அதைக் கேட்டு வாலை மடக்கிக் கொண்டு சும்மா இருப்பானா?

அவள் தன் மனத்தில் கொந்தளித்துக்கொண்டிருக்கும் உணர்ச்சிகளைக் கொஞ்சமும் வெளிக்காட்டிக் கொள்ளாமல், '' அதிர்ஷ்டவசமாக எனக்கு வேலை கிடைத்து விட்டது.'' என்று சொன்னாள்.

''ரொம்ப ரொம்ப சந்தோஷம்... முதலில் உன்னுடைய பாராட்டுதல்களை மாலினிக்குத் தெரியப்படுத்து.'' என்று அவன் சிரித்துவிட்டு அழைத்துச் சென்றான்.

இரண்டு பேர்களும் மனப்பிடிப்புடன் கூடிய பல விஷயங்கள் பற்றிப் பேசினார்கள். அவள் சிறிது நேரத்திற்குத் துன்பத்தை மறந்து சிரித்தாள்.

"இன்றிரவும் நம்முடைய வீட்டுக்குத்தானே வரப்போகிறாய்?" என்று கேட்டான் அவன்.

"நான் வேறு எங்குமே தங்கக்கூடாதாம். அவர்கள் தனியாக எனக்கு ஒரு வீட்டை ஒதுக்கிக்கொடுத்திருக்கிறார்கள்." என்றாள் அவள் தலையைத் தாழ்த்திக்கொண்டே.

"ஓ... அதற்குள் உனக்கு வீடே கிடைத்துவிட்டதா? பரவாயில்லையே. நான் கூட வீட்டைக் காலி செய்துவிட்டு உன்னுடன் வந்துவிடலாம் போலிருக்கிறதே." என்று அவன் சிரித்தான்.

அதற்குள் அவள் பதில் சொல்வதற்குத் தன்னைத் தயார் செய்து வைத்திருந்தாள். "எங்கள் கம்பெனியில் சில கட்டுத்திட்டங்கள் இருக்கின்றன. கல்யாணமாகாத பெண்களுக்குத்தான் வேலை. ஆண்களுடன் அதிகப் பழக்கம் வைத்துக்கொள்ளக்கூடாதாம். அப்படியே பழக்கம் வைத்துக்கொண்டாலும்கூட இரவில் அவர்களுடன் தங்கக்கூடாதாம்."

"நான்தானே உன்னுடன் தங்க நினைக்கிறேன்."

"இருந்தாலும் அதனால் சில தொல்லைகள் ஏற்படக்கூடுமோ என்று பயப்படுகிறேன். கொஞ்ச நாட்கள் வரையில் நாம் தனித்தனியாக ஒதுங்கியே இருப்போம்."

"ஒதுங்கி என்றால்...? கொஞ்சம் கொஞ்சமாக என்னை மறந்துவிடப்போகிறாயா?"

"அப்படிப்பட்ட எண்ணமே எனக்குக் கிடையாது. என் உடலில் கடைசி மூச்சு இருப்பது வரையில் உங்களை நான் மறக்கவே மாட்டேன். எதிர்பாராத விதமாக நான் திடீரென்று இறந்துவிட்டால் கூட உங்களையேதான் சுற்றிக்கொண்டு இருப்பேன்."

அவள் கண்கள் நீரைச் சிதற அடித்தன. நெஞ்சில் சுமை அழுத்தியதின் காரணமாக விம்மிச் சரிந்தது.

"நான் உன்னை விட்டு எங்கும் போகமாட்டேன்."

"என்னை நீங்கள் கண்ணபிரானிடமிருந்து காப்பாற்றினீர்களே, அந்த ஒன்றே எனக்குப் போதுமானது. அதற்காக நான் உங்கள் அடிமையாக ஆயுள் முழுவதும் இருக்கலாம்."

"வேண்டாம் .. நீ அடிமைப்பெண்ணாக என்றைக்குமே மாற வேண்டாம். நாம் சரிக்குச் சரியாக நல்ல நண்பர்களைப் போல் பழகுவோம்"

நன்றி மறப்பது நன்றன்று என்பதைப் போல் முதல்வேலையாக ராஜாமணி மாலினிக்கு டெலிபோன் செய்து அவளுடைய கம்பெனியில் வேலை கிடைத்திருக்கும் விபரத்தைச் சொன்னான்.

"ஓ...அப்படியா? ரொம்ப ரொம்ப சந்தோஷம். சித்தப்பாவுக்குத்தான் நம்முடைய முதல் நன்றியைத் தெரியப்படுத்த வேண்டும்" என்று சொன்னவள், சுமார் பத்து நிமிடங்கள் வரையில் டெலிபோனிலேயே 'போர்' அடித்தாள்.

ஒரு மாதம் உருண்டோடியது.

மீனு வழக்கம்போலவே வேலைக்குப் போனாள். மனச்சாட்சிக்கு கொஞ்சம்கூட எவ்வித பிடிக்காத காரியங்களைச் செய்தாள்.

தினசரியும் அவள் ராஜாமணியைச் சந்திக்கத் தவறுவதில்லை. அவனைச் சந்திக்காமல் இருந்தால் இரவில் தூக்கமே வராது. ஒரு முறையாவது அவன் முகத்தைப் பார்த்துத்தான் ஆகவேண்டும்.

மீனு அவனை உயிராக நேசித்தாள். தன்னையே அவனிடம் எந்த நேரத்திலும் ஒப்படைக்கத் தயாராகவும் இருந்தாள். இந்த உலகத்திலேயே அவளுக்கென்று இருக்கும் ஒரே ஆதாரம் அவன் மட்டும்தானே! அவன் இல்லாவிட்டால் அவள் யாருக்காக, ஏன் வாழ வேண்டும்?

நாளாக நாளாக அவர்களுக்கிடையே இருந்த அன்பு பன்மடங்கு வேகத்தில் வளர்ந்து அப்படியே காதலாகக் கனிந்து மலர்ந்தது. இன்பத்தின் உச்சிக்கே இருவரும் சென்றுவிட்டார்கள்.

ராஜாமணி அவளை மனப்பூர்வமாகக் காதலித்தான். உரிய நேரத்தில் அவளைக் கல்யாணம் செய்துகொள்ளவும் தயாராக இருந்தான்.

அவள் பகல் முழுவதும் வேலைக்குச் செல்வாள். இரவில் பத்து மணி வரையில் அவனுடன் சிரித்துச் சிரித்து மகிழ்வாள். கொஞ்சிக் கொஞ்சி ஆனந்தமடைவாள்.

கண்ணபிரானுடைய குறுக்கீடுகளும் அவளுக்கு இடையிடையே உண்டாகத்தான் செய்தன. அவர் மறைமுகமாக மிரட்டி வழிக்குக் கொண்டுவர முயற்சி செய்தார்.

ஒருநாள் அவளை வழியில் சந்தித்து, "மீனு, என்னதான் இருந்தாலும் ஒரு உண்மையை மட்டும் நினைத்துப் பார்க்க மறந்து விடக்கூடாது. நான் உன் கழுத்தில் தாலி கட்டிய கணவன்." என்று நினைவுபடுத்தினார்.

அவள் தரையில் கோபத்துடன் காரி உமிழ்ந்துவிட்டு, "ஒரு பெண்ணின் வாழ்வைச் சீர்குலைக்க உங்களைப் போன்ற பெரியமனிதர்கள் எத்தனை பேர்கள் கிளம்பியிருக்கிறீர்கள் என்பது தெரியவில்லை. உங்களுக்கே இது வெட்கமாக இல்லையா?" என்று சாடினாள்.

"நான் எதற்காக வெட்கப்படவேண்டும்? என் மனைவி பேசும் வார்த்தைகள் எப்படிப்பட்டதாக இருந்தாலும் அதைக் கேட்டு மகிழத் தானே வேண்டும்." என்று அவர் சிரித்தபோது பொய் பற்கள் இரு செட்டும் ஒன்றோடொன்று ஒட்டிக்கொண்டன. அவர் சட்டென்று இரண்டையும் சரிசெய்துகொண்டார். பொய்ப் பற்கள் என்பதை அவள் தெரிந்துகொண்டால் மானம் போய்விடுமே.

"நான் மறுபடியும் சொல்கிறேன், உங்கள் மனைவி அல்ல."

"உன் கழுத்தில் நான் தாலி கட்டினேன். தேவைப்படும் போது நான் இதை ராஜாமணியிடமும் சொல்ல முடியும்."

அவர் இப்படிப் பேசியதும் மீனு கலகலத்துப்போனாள். தன் இடைய வாழ்க்கையைச் சீரழிப்பதற்கென்றே சிலர் கிளம்பியிருப்பதைக் கவனிக்கும்போது அழுகை அழுகையாக வந்தது.

"நீங்கள் பெரிய மனிதர். என்னோடு தந்தையைப் போல் வாழ்ந்து என்ன சுகத்தைக் காணப்போகிறீர்கள் தயவுசெய்து என்னை விட்டுவிடுங்கள். அவரிடம் எதையாவது உளறி என் எதிர் காலத்தையே இருளடையச் செய்துவிடாதீர்கள்."

அவள் மிகவும் உருக்கமாக மன்றாடிக் கேட்டுக்கொண்டாள்.

ஆனால் அவர் மனமாற்றம் அடைய வேண்டுமே!

"மீனு, நான் கிழட்டுப்புலிதான்! நீ மான்குட்டிதான்! ஆனாலும் என்றைக்காவது ஒருநாள் உன்னைச் சுவைத்தே தீருவேன். இது சத்தியம். கண்ணபிரான் வாழ்க்கையில் தோல்வி என்பதே கிடையாது" என்று அவர் கொக்கரித்தார்.

பாவம் மீனு! கடுமையான அதிர்ச்சிக்குள்ளாகி வெலவெலத்த கட்டடம் போலாகிவிட்டாள்.

# 7. காதலி நீயா?

மீனுவைச் சந்தித்துவிட்டு வந்த பின்பு ராஜாமணி இந்த உலகத்தில் இல்லை. அவன் பகல் நேரத்தில்கூட கட்டிலில் படுத்த வாறு அவளைப்பற்றி இன்பக் கனவுகள் காண ஆரம்பித்து விட்டான்.

மீனு இனிமையானவள் - அழகானவள் - கண்ணுக்கு குளிர்ச்சி யானவள்;—அவளை நினைத்துக் கொண்டிருந்தால்கூட பசிதாகம் எதுவுமே எடுக்காது.

அவள் எப்படியெல்லாம் சிரித்தாள்; பூவாய் மலர்ந்தாள்; சொல்லாத காதல் கதைகளை எல்லாம் சொன்னாள். அவளைப்போன்ற தேனினும் இனிமையானவளை இந்த உலகத்தின் எந்த மூலையிலும் சந்திக்க முடியாது. அத்தனை அழகும் இளமையும் அவளிடம் தஞ்ச மடைந்திருந்தன.

அவன் படுக்கையில் புரண்டான். கண்களைமூட எத்தனித் தான். ஆனால் அந்த பேரழகியின் சிரித்த முகம் அவனுடையகண்களை மூடிவிடாமல் வதைத்தது.

அவளுடன் தனிக்குடித்தனம் நடத்திக் கொண்டிருப்பதைப் போன்ற ஒரு புதுக்கனவு. அப்படியே தூங்கிவிட்டான். மறுபடியும் இன்பக்கனவு தாக்கியது.

சுமார் ஒருமணி நேரம் வரையில் அந்தக் கனவிலேயே அவன் சஞ்சாரம் செய்தான்.

திடீரென்று ஓர் அதிர்ச்சி. யாரோ தன்னை அடித்துவிட்டது போன்ற பிரமை.

தூங்கிக்கொண்டிருந்த ராஜாமணி பயங்கரகனவு கண்டவனைப் போல் திடுக்கிட்டு கண்விழித்துப் பார்த்தான்.

எதிரில் வீட்டுக்குச் சொந்தக்காரரான கண்ணபிரான் ஆத்திரத் துடன் நின்றுகொண்டிருந்தார். அவருடைய உடல் குலுங்கிக் கொண்டிருந்தது. கைத்தடியால் தரையில் தட்டி ''என்னடா கொடக் கூலி கட்டாதவனுக்கு சாப்பாட்டுக்குமேல் தூக்கம்?'' என்று இரைந் தார், துள்ளினார்.

அவன் சிரித்துக்கொண்டே எழுந்து நின்று, ''கொடக்கூலி ட்டாதவன் தூங்கக்கூடாது என்று சட்டம் எதுவும் இல்லையே

அப்படியே நான் உங்களுக்கு எவ்வளவு வாடகைப் பாக்கி தரவேண்டும்? இரண்டு வருடம் தானே'' என்று அலட்சியமாகச் சொன்னான். கவலைப்படும் வழக்கம்தான் அவனுக்குக் கிடையாதே! மேலும் வாடகைப் பணத்தை மோசம் செய்து கொள்ளும் எண்ணமும் அவனுக்கில்லையே!

ராஜாமணி அன்றாடம் பத்திரிகைகளை வீடுதோறும் விநியோகம் செய்யும் ஏழை வாலிபன்தான்! கள்ளங்கபடமற்ற அவன், சூதுவாதின்றி எல்லோரிடமும் சகஜமாகப் பழகுவான், தான் சொல்லுவது மற்றவர்களுடைய மனத்தைப் புண்படுத்துமா, புண்படுத்தாதா என்றெல்லாம் அவனுக்குச் சிந்திக்கத் தெரியாது. அவன் ஒரு விசித்திரமான பிறவி. ஆனால் கட்டுக்கடங்காத இளமையும் கம்பீரமான தோற்றமும் இயல்பாகவே படைத்தவன்.

அவன் சொன்ன வார்த்தைகள் கிழவர் கண்ணபிரானை மேன்மேலும் ஆத்திரமடையச் செய்தன. இரண்டு வருடமாக வாடகைக் கொடுக்காமல் கிண்டல் செய்து பேசும் அவனை மறுபடியும் வீட்டில் விட்டுவைக்க அவருக்கு அறவே விருப்பம் இல்லை. இரண்டில் ஒன்று பார்த்து விடவேண்டும் என்ற ஒரே முடிவுடனேயே வந்திருந்தார்.

இரண்டு பேர்களுக்கும் கடுமையான வாக்குவாதம் வளர்ந்தது. அவன் சாதாரணமாக நினைத்துப் பேசிய வார்த்தைகள் எல்லாம் அவரை மிகமிகக் கடுமையாகத் தாக்கின. கெட்டதையே நினைக்கும் கொடூரமான நெஞ்சமல்லவா அது!

கடைசியில் கண்ணபிரான், ''வீட்டை இப்போதே நீ காலி செய்தாக வேண்டும்'' என்று கத்தினார்.

இவ்வளவு கண்டிப்பான வார்த்தையைக் கேட்டதும் ராஜாமணி கலங்கினான். சென்னையில் நினைத்தவுடனேயே வீடு கிடைப்பது என்பது அவ்வளவு எளிதில் நடக்கக்கூடிய காரியமா? ஓரளவு திருப்தியான வீடு கிடைக்க பல நாட்களை வீணாக்க வேண்டிய அவசியம் எற்படும்.

அவன் கெஞ்சினான், விரைவில் வாடகை கொடுத்து விடுவதாகவும் மன்றாடினான். தொண்டை கரகரத்தது.

ஆனால் பிடிவாதக்காரரான கண்ணபிரான் அதற்குச் சம்மதிக்கவேண்டுமே. ''இன்றைக்கு எப்படியும் வீட்டைக் காலி செய்தே ஆகவேண்டும், இல்லாவிட்டால் உன்னையும் பெட்டி படுக்கைகளையும் தூக்கி வெளியே எறிந்துவிடுவேன்'' என்று கத்தினார். அரக்கம்

அவருடைய கருணை உள்ளத்திலிருந்து விடைபெற்றுச் சென்று விட்டது.

கண்ணபிரான் ஐம்பது வயதைக் கடந்துவிட்ட அரைக்கிழவ ராக இருந்தபோதிலும் பலசாலிதான் என்பதில் கொஞ்சமும் ஐயம் இல்லை. உருளைக்கிழங்குபோல் உருண்டு திரண்ட அவர், ராஜாமணி யை அலாக்காகத் தூக்கிவந்து வெளியே போட்டாலும் ஆச்சரிப்பட முடியாது.

அவர் மேன்மேலும் மனத்தைப் புண்படுத்தியவாறு பேசவே ராஜாமணி வீட்டைக் காலிசெய்துவிட்டு எங்கேயாவது போய்விடுவது என்ற முடிவுக்கு வந்தான். மானம் போய்விட்டால் அதன் பிறகு வாழ்வும் ஒரு கேடா? மனிதனாகப் பிறந்துவிட்ட ஒவ்வொருவருக்கும் அமைதி தானே முக்கியம்.

"நான் வீட்டைக் காலி செய்வதைப்பற்றி கொஞ்சமும் வருத்தப்படவில்லை. ஆனால் இரண்டு வருடமாக வாடகை கொடுக்காமல் போகிறேனே என்றுதான் வருத்தப்படுகிறேன். நான் போன பின்பு நாணயமாக நடக்காதவன் என்று நீங்கள் ஊரெல்லாம் பேசுவீர்கள்" என்று வருத்தத்தோடு சொன்னான்

அப்பொழுது கண்ணபிரான் சொன்ன கேலிகலந்த சொற்கள்......? அவன் தன்மான உணர்ச்சியுடன் தனக்கிருந்த ஒரே ஒரு "டிரங்குப் பெட்டி"யை மட்டும் தூக்கிக்கொண்டு ஒரு மூலையில் சாத்தி வைத்திருந்த சைக்கிளைப் பிடித்துத் தள்ளினான்.

உடனே கண்ணபிரான் சைக்கிளைப் பிடித்துக்கொண்டு, "என்னுடைய வாடகைப் பாக்கிக்காக சைக்கிளை எடுத்துக்கொண்டேன்" என்றார்.

எப்படியாவது அவனை அங்கிருந்து துரத்திவிட்டு ஆக்கிரமித்துக்கொண்டால் தான் மட்டும் அங்கேயே சொகுசாக வாழ்க்கை நடத்தலாம் என்ற ஆசை அவருக்கு இருந்தது.

ராஜாமணிக்கு அவர் சொன்னது என்னவோபோல் இருந்தது, குடலினுள் யாராவது கையை நுழைத்து குடலைப் பிடித்து உருவி இழுக்கிறார்களா?

சைக்கிளை வேண்டுமானாலும் அவன் இழப்பதற்குத் தயாராக இருந்தான். ஆனால் சைக்கிளின் 'சீட்டுக்கு' அடியில் உள்ள குழாயினுள் மறைத்து வைத்திருந்த பத்திரத்தை மட்டும் இழக்க முன்வரவில்லை. காரணம்......? அந்தப் பத்திரம் விலைமதிப்பற்றது. மாலினி

என்ற இளம் பெண்ணுக்குச் சொந்தமான அந்தப் பத்திரத்தை தன்னுடைய பாதுகாப்பில் வைத்திருந்தான்.

முறையாக அவன் சைக்கிளைக் கேட்டுப் பார்த்தும் பயன் கிட்டாமல் போகவே, வேண்டுமென்றே ஒரு பொய்யைச் சொன்னான்.

''உங்களுக்கு இந்த சைக்கிள்தானே வேண்டும். தாராளமாக எடுத்துக் கொள்ளுங்கள். நான் இந்த சைக்கிளை சென்டிரல் ஸ்டேஷனில் எடுத்தேன். அதன் சொந்தக்காரன் இப்பொழுது போலீஸ் ஸ்டேஷனில் புகார் செய்திருப்பான். நீங்கள் இந்த சைக்கிளை எடுத்துக்கொண்டால் நீங்களும் சைக்கிளும் போலீஸ் ஸ்டேஷனில் போய் தான் நிற்பீர்கள். நான் எழும்பூர் ஸ்டேஷனில் போய் வேறு சைக்கிளை எடுத்துக் கொள்கிறேன்.''

அவன் இப்படி அலட்சியமாகச் சொன்னதும் கண்ணபிரான் அலறிவிட்டார். சைக்கிளைப் பிடித்திருந்த கை தானாகவே விலகியது, "அடப்பாவி, திருட்டு சைக்கிளையா என் வீட்டினுள் வைத்திருக்கிறாய்? முதலில் இந்த சைக்கிளை எடுத்துக்கொண்டு வெளியே போ. நீ எனக்கு வாடகை கொடுக்காமல் நாமம் போட்டாலும் பரவாயில்லை."

''வாடகை கொடுக்காமல் ஏமாற்றும் பழக்கம் எனக்குக் கிடையாது. என் கைக்கு பணம் வந்ததும், உங்களுக்கு வரவேண்டிய பணம் தானாகவே வரும்.'' என்று சொன்ன அவன் சைக்கிளைத் தள்ளிக்கொண்டு வெளியே போனான். இதுவரையிலும் வாழ்ந்து கொண்டிருந்த வீட்டைவிட்டு வெளியேறுகிறோமே என்பதை நினைத்த போது அவனுக்கு அழுகை வரத்தான் செய்தது,

அவன் சைக்கிளை ஓட்டியவாறு நாலைந்து மைல் வந்து விட்டான். நாணயமாக நடக்க முடியவில்லையே என்ற வேதனை அவனை என்னவெல்லாமோ செய்தது.

''ராஜாமணி கொஞ்சம் நில்.'' என்ற குரல் பாதையின் பக்க வாட்டிலிருந்து கேட்டது.

சைக்கிளை ஓட்டியபடியே ராஜாமணி திரும்பிப் பார்த்தான்.

வழக்கமாக பத்திரிகை வாங்கிக்கொள்ளும் பெரியவர் ஒருவர், பிளாட்பாரத்தின் மீது நின்றுகொண்டிருந்தார்.

அவன் சைக்கிளை விட்டிறங்கி அவர் எதிரில் சென்றான். "நாலைந்து மாதங்களாகவே உனக்கு பேப்பர் பாக்கியைக் கொடுக்கா

மல் இருந்துவிட்டேன்." என்று கூறிய அவர் மூன்று பத்து ரூபாய் நோட்டுக்களை எடுத்து அவனிடம் கொடுத்தார்.

பணத்தைப் பெற்றுக்கொண்டதும் அவன் வீட்டுக்காரகண்ணபிரானை நினைத்துக்கொண்டான். இந்த முப்பது ரூபாயையும் கொடுத்துவிட்டால் அவர் மகிழ்ச்சியடைவாரே என்று எண்ணினான். உடனே அவன் சைக்கிளில் ஏறி வீட்டுக்காரக் கிழவரின் வீட்டுக்கு விரைந்தான்.

ராஜாமணி சைக்கிளை அஜாக்கிரதையாக ஓட்டிக்கொண்டு வந்த போது ஒரு பெண் திடீரென்று குறுக்கே பாய்ந்ததைக் கண்டு 'பிரேக்' போட்டான் ஆனால் அதற்குள் சைக்கிள் அவள் மீது மோதி கீழே தள்ளிவிட்டது.

ராஜாமணியும் சைக்கிளோடு கீழே விழுந்தான். இரண்டு பேர்களும் ஒன்றாகக் கிடந்தார்கள்.

சட்டென்று துள்ளி எழுந்த ராஜாமணி, கீழே விழுந்துகிடந்த அந்தப் பெண்ணின் கையைப் பிடித்துத் தூக்கி நிறுத்தியதும் அவள் தன்னுடைய காதலி மீனாவாக இருப்பதைக் கண்டு வியப்புற்றான்.

மீனா அவனைப் பார்த்ததும், "ராஜா, நீங்களா?" என்று கூவிவிட்டு அதற்குமேல் எதுவுமே பேசமுடியாதவளைப்போல் தத்தளித்தாள். அவளுடைய முகம் பேயறைந்துவிட்டதைப்போல் வெளுத்துப் போயிருந்தது

ராஜா அவளுடைய முகத்தையும், அதில் காணப்பட்ட சலனங்களையும் கவனித்துவிட்டு, ' ஏன் மீனா என்னவோபோல் இருக்கிறாய்? உடம்புக்கு ஒன்றும் இல்லையே.'' என்று பாபரப்போடு வினவினான். அவள் சோர்வாகக் காட்சியளித்தது அவனுடைய நெஞ்சைத் தாக்குவதுபோல் இருந்தது.

"நான் எப்போதும்போல் நன்றாகத்தானே இருக்கிறேன்.'' என்று கூறிவிட்டு இருக்க முயன்ற மீனா, "எனக்கு அவசரமான வேலை இருக்கிறது. மறுபடியும் நான் வந்து உங்களைச் சந்திக்கிறேன்.'' என்று படபடத்தாள்.

அவனுக்கு ஒன்றுமே விளங்கவில்லை. அவள் ஏன் இப்படி படபடக்கிறாள் என்பதோ புரிந்துகொள்ளமுடியாத புதிராக இருந்தது.

மீனா எப்பொழுதும் தெளிவாகவே இருப்பாள். அமைதியாகவும் பேசுவாள். ஒருமுறைகூட அவளுக்கு குரல் கிரீச்சிட்டுக கத்தாது.

ஆனால் இப்பொழுது அவளுடைய நிலை முற்றிலும் மாறுபட்டு இருந்தது. பழைய தெம்பு. கலகலப்பு எதுவுமே அவளிடத்தில் இல்லை. அவள் இடியால் தாக்கப்பட்டவள்போல் காணப்பட்டாள்.

ராஜாமணி அவளுடைய இடது கையைப் பார்த்தான்.

ஆறு வளையல்களுக்குப் பதில் ஐந்து வளையல்கள் மட்டுமே காணப்பட்டன, ஒரு வளையல் உடைந்து கையில் குத்தியதற்கு அடையாளமான இரத்தக்கசிவு பளிச்சிட்டது.

"மீனு, என்ன இதெல்லாம்? நீ யாருடனாவது சண்டை போட்டுக்கொண்டு வந்தாயா? வளையல் உடைந்து கையில் குத்தியிருக்கிறதே." என்று கேட்டான் படபடப்போடு.

"நான் யாருடனும் சண்டை போடவில்லை. எதற்காக நீங்கள் மனத்தைப் போட்டுக் குழப்பிக்கொள்கிறீர்கள். நான் மறுபடியும் சாயங்காலம் வந்து உங்களை கடற்கரை காந்திசிலை அருகில் சந்திக்கிறேன்" என்று உளறிய மீனு அவனுடைய பிடியிலிருந்து தன்னை விடுவித்துக்கொண்டு வேகமாகப் பறந்தாள், சிட்டுப்போல.

கலவரமடைந்த ராஜாமணி ஓடும்போது அவளுடைய பின் புறத்தைப் பார்த்தான்.

இரத்தக்கறை வெண்மையான தாவணியில் படிந்திருந்தது. அதைத் கவனித்துவிட்டதும் ராஜாமணி வீரிட்டுக் கத்திவிட்டு, மீனுவின் தாவணியில் இரத்தம்... அவள் பரபரப்புடன் ஓடியதற்கும், இந்த இரத்தக் கறைக்கும், உடைந்த வளையலுக்கும் ஏதாவது சம்பந்தம் இருக்குமா?' என்று தன்னைத்தானே கேட்டுப் பார்த்துக் கொண்டான்.

ஆனால் பதில் கிடைக்கவில்லை.

அவள் யாரையாவது கொலை செய்துவிட்டு வருகிறாளா? இல்லாவிட்டால் ஏன் இப்படி தலைதெறிக்கும் வேகத்தில் ஓடுகிறாள்? படபடத்தாள்?

மீனு என்றைக்குமே இப்படி நடந்துகொண்டதில்லை. அவன் பார்த்ததும் குழைந்துவிடுவாளே! ராஜா ராஜா என்று கூறிக் கொண்டே இருப்பாளே!

ஏதோ ஒரு பங்கரம் அவளுடைய வாழ்வில் நடந்திருக்க வேண்டும் என்று எண்ணிய ராஜாமணி, சைக்கிளை நிமிர்த்தி அதில் ஏறி உட்கார்ந்தான். கால்கள் 'பெடல்' கட்டைகளை வேகமாகச் சுற்றத் தொடங்கின.

அவன் மனத்தின் வேகத்தோடு சைக்கிளின் உருளைகளும் போட்டி போட்டன.

## 8. ஒரு பயங்கரம்!

ராஜாமணியின் உடல் ஏதோ ஒரு கிலியுடன் நடுநடுங்கிக் கொண்டிருந்தது. தான் மீனாவைப் பற்றியே நினைத்துக்கொண்டிருந்த தால் இப்படியொரு தடுமாறறம் ஏற்பட்டிருக்கவும் செய்யலாம் என்று எண்ணிக்கொண்டான்.

மீனாவைப் பொறுத்த வரையில் அவள் மிகவும் நல்லவள், ஒரு பெரிய கம்பெனியில் வேலைசெய்து வந்தாள். அவளுக்கென்று இந்த உலகத்தில் யாருமே இல்லாததால் அனாதை என்றுதான் சொல்லவேண்டும்.

அவள் அழகு நிரம்பியவள். இயற்கை வனப்பே போதுமான அளவுக்கு இருந்ததால் செயற்கைச் சாதனங்களின் துணையை ஒரு போதுமே நடமாட்டாள். இது அவனுக்கே தெரியும்.

மீனாவை நினைத்து எதை எதையோ கற்பனை செய்து அர்த்த மில்லாமல் குழம்பிப் போனதால், குடியிருந்த வீட்டை அடைந்ததும், உள்ளேபோக மனமின்றி "கண்ணபிரான் ஸார்...கண்ணபிரான் ஸார்" என்று கூப்பிட்டான். ஏனோ குரல் நல்லபடியாக ஒலிக்க வில்லை.

அவர் மிகவும் இழிவாகப் பேசிவிட்டதால் வீட்டினுள் செல்லு வதற்கு அவனுக்கு மனம் வரவில்லை. என்னதான் பெரிய மனிதராக இருந்தாலும் மரியாதை என்று ஒன்று இருக்கவேண்டாமா? அவன் வெறுப்படைந்தான். அவனுடைய தன்மான உணர்ச்சி வந்து வெளி யிலேயே நிற்க வைத்தது ஆயினும் போலி கௌரவத்துக்கு அடிமை யாகக் கூடாது என்ற எண்ணத்துடன், "கண்ணபிரான் ஸார், நீங்கள் என்னை வெளியே தள்ளினீர்கள். ஆனாலும் பணத்தை எடுத்துக் கொண்டு மோசம் செய்ய எனக்கு மனம் வரவில்லை. அதனால் பணம் கொடுப்பதற்காகவே உள்ளே வருகிறேன்" என்று சொன்னவன் வாசலில் வந்து நின்று உள்ளே பார்த்தான்.

கதவு என்று பெயரளவுக்கு இருந்த ஒரு பலகை திறந்த படியே கிடந்தது. ஆனால் உள்ளேயிருந்து எந்தவிதமான பதிலும் வரவில்லை அவர் கதவைத் திறந்துப் போட்டுக்கொண்டு பகலிலேயே தூங்க ஆரம்பித்துவிட்டாரோ?

அவன் வாசல் சட்டத்தைப் பிடித்துக்கொண்டு உள்ளே தலையை நீட்டி யாராவது இருக்கிறார்களா, என்று கவனித்தான்.

முன்பு தான் படுத்திருந்த அதே இடத்தில் வீட்டுக்காரரான கண்ணபிரான் படுத்துத் தூங்கிக்கொண்டிருந்தார். எதிர்பார்த்ததைப் போன்ற தூக்கம்தான். ஆனால் குறட்டை இல்லை.

அவரைப் பார்த்ததும் ராஜாமணிக்கு சிரிப்புதான் வந்தது. முன்பு தான் தூங்கியபோது அவர் வந்து கலாட்டா செய்தார்! சாப்பிட்ட பின்பு தூங்கியதற்காகக் கோபித்துக்கொண்டார். இப்பொழுது அவரே தூங்குவது என்றால்... ஏழைக்கு ஒரு நீதி... பணக்காரனுக்கு ஒரு நீதியா? நல்ல உலகம்...! ஆளுக்கொரு சட்டத்தை வைத்திருக்கிறது.

வீட்டினுள் சென்று அவரை எழுப்பி பணம் கொடுக்க நினைத்து ராஜாமணி உள்ளே சென்று தூங்கிக்கொண்டிருந்த கண்ணபிரானைப் பார்த்து, "ஸார்... ஸார்..." என்று கூப்பிட்டான். அவர் அயர்ந்து தூங்கிக்கொண்டிருந்ததைப் போல் தோன்றவே தோள்பட்டையைப் பிடித்து குலுக்கினான் உலுக்கினான்.

மனிதன் தடித்த ஆசாமிதான்! தோள்பட்டை எப்படி தேக்கு மரக்கட்டைபோல் உருண்டு திரண்டு இருக்கிறது!

அவன் எழுந்திருக்காமலும் அசைந்து கொடுக்காமலும் இருக்கவே ராஜாமணி திகிலடைந்து அவருடைய நெஞ்சுத் துடிப்பைப் பார்த்தான்.

அந்தோ!

நெஞ்சு துடிக்கவில்லை.

அவருடைய நெஞ்சிலிருந்து இரத்தம் கொப்பளித்துக்கொண்டிருந்தது. அவர் இறந்துவிட்டார் என்பதைத் தெரிந்துகொண்டதும் ராஜாமணி பயந்து போய் வீரிட்டுக் கத்தினான். ஒரு பிணத்தின் அருகில் நின்றுகொண்டு தொட்டுவிட்டோம் என்பதை நினைத்துக்கொண்டதும் உடல் சில்லிட்டது.

COMICS PDF TIMES

அவர் இறந்துவிட்டார். அதுவும் கத்தியால் குத்தப்பட்டு படுகொலை செய்யப்பட்டிருக்கிறார். அவருடைய மரணம் ஒருமணி நேரத்திற்குள் நடந்திருக்கிறது.

அவருடைய உயிர் பிரிந்துவிட்டதால் தனக்கு அபாயம் ஏற்படக்கூடுமோ என்று நினைத்துப் பயந்த ராஜாமணி தற்செயலாகக் கீழே பார்த்தான்.

தரையில் மல்லிகைச்சரம் கிடந்தது. அதன் பக்கத்தில் பாதியாக உடைந்த வளையல் துண்டு ஒன்றும் காணப்பட்டது.

எதையோ நினைத்துக்கொண்ட ராஜாமணி, கண்ணபிரானின் கொலையில் ஒரு பெண்ணும் சம்பந்தப்பட்டிருக்கலாம் என்று எண்ணி அந்த மல்லிகைச் சரத்தையும், வளையல் துண்டையும் எடுத்து சட்டைப் பையினுள் போட்டுக்கொண்டு திருதிருவென்று விழித்தான்.

உடைந்த வளையல் துண்டு... மல்லிகைச்சரம்...

அவனுக்கு நினைவு வந்துவிட்டது. மீனாவின் வளையல்களில் ஒன்று உடைந்து அவளுடைய கையைக் குத்தி காயப்படுத்தியிருந்தது. அந்த வளையல்களில் ஒன்றுதான் இதுவும். மீனாவின் பொருட்கள் இந்த அறையினுள் எப்படி வந்தன?

அப்படியானால் மீனா இந்த வீட்டினுள் வந்து ..

அதற்குமேல் ராஜாமணியால் கற்பனை செய்ய முடியவில்லை. மீனா இந்த வீட்டினுள் வந்திருக்கிறாள் என்பதில் கொஞ்சமும் ஐயமில்லை. மல்லிகைச சரமும் அவளுடையதாகத்தான் இருக்கவேண்டும். மல்லிகைச்சரம் சூட்டிக்கொள்ளும் வழக்கமும் மீனாவுக்கு உண்டு.

அப்படியானால்...அப்படியானால்? மீனா தாவணியில் இந்தக் கறைகூட காணப்பட்டதே! அவள்தான் அவரைக் கொலை செய்துவிட்டாளா? கத்தியால் குத்திக் கொலைசெய்யும் அளவுக்கு அவளுக்குத் துணிச்சல் வந்துவிட்டதா? பெண் சீறினால் புலியாகவும் மாறிவிடுவாள் என்பது மீனாவைப் பொறுத்தவரையில் உண்மையா?

மீனுதான் கண்ணபிரானைக் கத்தியால் குத்திக் கொலை செய்திருப்பாளோ என்று ஐயுற்ற போதிலும், உடனே அவனுடைய உள் மனம் "மீனு அப்படிப்பட்ட காரியங்களைச் செய்யக்கூடியவள் அல்ல." என்று மறுத்துக் கூறியது. மீனுவை மிகவும் நன்ருக அவனுக்குத் தெரியுமே! அவள் அவனுடைய உயிர்க் காதலி ஆயிற்றே.

மீனுவை விசாரித்தால் உண்மையைத் தெரிந்துகொள்ளலாம் என்று எண்ணிய ராஜாமணி வெளியே ஓடிப்போய்விடலாம் என்ற எண்ணத்துடன் காலைத்தூக்கி வைத்ததும் தெருவில் கார்வந்து நிற்கும் ஓசையையும், கதவுகள் திறந்து மூடப்படும் சப்தத்தையும் கேட்டுத் திடுக்கிட்டு நின்ருன்.

குதிரைகளின் குளம்படி ஓசையைப்போல் பூட்ஸ் ஒலிகள் எழுந்தன. போலீஸ் இன்ஸ்பெக்டர் ஒருவரும் சில போலீஸ்காரர்களும் வீட்டினுள் விரைந்து வந்தார்கள்.

ராஜாமணி அவர்களைக் கண்டதும் மெதுவாக நழுவ எத்தனித்தான். அவர்களிடம் சிக்கிக்கொண்டால் என்ன ஆகுமோ? கொலைக் குற்றத்தை தன் தலையில் தூக்கிப் போட்டுவிட்டால்கூட ஆச்சரியப்பட முடியாதே!

அவன் நடுங்கினுன். திகிலோடு விழித்தான்.

அவனைப் பார்த்த இன்ஸ்பெக்டர் குணாளன் "பட்டப் பகலிலேயே படுகொலை. அதே இடத்திலேயே கொலைகாரன்" என்று சொன்னுர்.

அவர் சாட்டிய குற்றம் ராஜாமணியை என்னவெல்லாமோ செய்தது. அபாயத்தில் வலிய வந்து சிக்கிக் கொண்டோமே என்ற எண்ணத்துடன் நடுநடுங்கிட போனுன்.

"ஸார், நீங்கள் என்னை தவருக நினைத்துவிட்டீர்கள்போல் தோன்றுகிறது. நான் இங்கே வருவதற்கு முன்னலேயே இறந்து கிடக்கிருர்" என்ருன் அவன்.

"இது உன்னுடைய அறைதானே...?"

''மத்தியானம் இரண்டுமணி வரையில் இது என்னுடைய அறையாகத்தான் இருந்தது. இரண்டு வருடங்களாக நான் வாடகை கொடுக்காமல் இருந்ததால் காலி செய்யும்படிச் சொல்லி விட்டார்கள். நான் வேறு வழியின்றி காலி செய்தேன்.''

''காலி செய்துவிட்டுச் சென்ற நீ மடிபடியும் எதனால் இந்த வீட்டுக்கு வந்தாய்? அவருடன் சண்டை போடலாம் என்ற நோக்கத்துடனா...?

''அப்படியெல்லாம் இல்லை இன்ஸ்பெக்டர். நான் பேப்பர் போட்ட பழைய பாக்கி முப்பது ருபாய் வசூலாகியது. அந்தப் பணத்தைக் கொடுத்துவிட்டுப் போகலாம் என்ற எண்ணத்துடனேயே இங்கே வந்தேன். நான் வந்து பார்த்தபோது அவர் செத்துக் கிடக்கிறார் இன்ஸ்பெக்டர்'' என்று சொன்ன ராஜாமணி முகத்தை இரண்டு கைகளால் மூடிக்கொண்டு அழுதான்.

''நீலிக் கண்ணீர் வடிக்க வேண்டாம். உண்மையைச் சொல் நீ இவரைக் கொலை செய்தாயா இல்லையா?'' இன்ஸ்பெக்டர் அதட்டினார்.

''உண்மையைத்தானே சொல்லவேண்டும். சொல்லுகிறேன். வாழைக்குலை என்று சொன்னால்கூட நான் பயப்படுவேன் ஸார். அப்படிப்பட்ட நான் ஒரு மனிதனைக் கொலை செய்வதற்கு கத்தியை கையில் தொட்டிருப்பேன் என்று நம்புகிறீர்களா ஸார்? நான் கொலை செய்யவில்லை. இதை எங்கே வேண்டுமானாலும் வந்து சத்தியம் செய்யத் தயாராக இருக்கிறேன்'' என்று உணர்ச்சியுடன் சொன்ன ராஜாமணி, ''இப்பொழுதே கோயிலுக்கு வாருங்கள். சத்தியம் செய்கிறேன்.'' என்று படபடத்தான்.

'சத்தியம் செய்தால் உடனே ஏமாந்துவிடுவோம் என்று நினைத்தாய் போலிருக்கிறது. நீயும் இவரும் வாடகை சம்பந்தமாக சண்டை போட்டிருக்கிறீர்கள் என்பது சந்தேகத்திற்கு இடமில்லாமல் தெரிகிறது. அதனால் நீ ஏன் ஆத்திரமடைந்து அவரைக் கொலை செய்திருக்கக்கூடாது என்று கேட்கிறேன்.''

ராஜாமணி அவருடைய குற்றச்சாட்டை கண்டிப்பாக மறுத்து, "நான் கொலை செய்யவில்லை ஸார், நிரபராதி" என்று சொன்னவன், "இந்த வீட்டினுள் கொலை நடந்திருக்கிறது என்பதும், இதே இடத்தில் நான் இருக்கிறேன் என்பதும் உங்களுக்கு எப்படித் தெரிந்தது?" என்று கேட்டான்.

சிறிது நேரத்திற்கு முன்னால் இந்த வீட்டில் கொலை நடந்திருப்பதாக யாரோ ஒருவன் எங்கிருந்தோ டெலிபோன் செய்தான். ஆனால் அவனுடைய குரலும் உன்னுடைய குரலும் ஏறத்தாழ ஒன்றாகவே இருக்கின்றன." என்றார் இன்ஸ்பெக்டர்.

"நல்லவேளை, நானும் கொலைகாரனும் இரட்டைக்குழந்தைகள் என்று சொல்லாமல் விட்டீர்களே" என்று சொன்ன ராஜாமணி, "உங்களுக்கு டெலிபோன் செய்த அதே ஆசாமிதான் கொலைகாரனாக இருக்கவேண்டும். என்மீது கொலைக்குற்றம் வரவேண்டும் என்பதற்காக போன் செய்து என்னைக் காட்டிக்கொடுக்கச் செய்திருக்கிறான்" என்றான்.

"நீ என்னதான் சொன்னாலும் உன்னை நம்பப்போவதில்லை. சந்தேகத்தின் பேரில் கைது செய்திருக்கிறோம்."

இன்ஸ்பெக்டர் குணாளன் இப்படிச் சொன்னதும், அவருடன் வந்த போலீஸ்காரர்களில் ஒருவர் ராஜாமணியின் சட்டையைப் பின்புறமாகச் சேர்த்துப் பிடித்துக்கொண்டார்.

அவன் பதறினான். "என்னை விட்டு விடுங்கள்." என்று கதறினான் தன் கழுத்தில் தூக்குக்கயிறு மாட்டிவிட்டதைப் போன்ற குலைநடுக்கம் உண்டாயிற்று.

## 8. உயிர் காப்பாள் தோழி !

நீண்ட நேரம் விசாரணை செய்த பின்பு இன்ஸ்பெக்டர் குணாளன், நீ பேப்பர் போட்டு பிழைப்பு நடத்தும் ஏழையாக இருந்

தாலும் உன்னை அலட்சியப்படுத்தமாட்டோம். நீ கொலை செய்திருக்க மாட்டாய் என்றே நம்புகிறேன். ஆனால் பொறுப்பான யாராவது ஜாமீன் கொடுத்தால் உன்னை விடுதலை செய்வதற்கு ஏற்பாடு செய்கிறேன்'' என்று சொன்னவர், ''உனக்குத் தெரிந்தவர்கள் யாராவது இருக்கிறார்களா?'' என்று கேட்டார்.

''தெரிந்தவர்களா? நான் பேப்பர் போடும் வாடிக்கைக்காரர்கள் எல்லோருமே எனக்குத் தெரிந்தவர்கள்தான். ஆனால் என்னை நம்பி யாராவது வந்து ஜாமீன் கொடுப்பார்களா என்றுதான் தெரியவில்லை.''

அவன் நம்பிக்கை இழந்த நிலையில் பேசிய அதே நேரத்தில், ''நான் உங்களுக்கு ஜாமீன் கொடுக்கிறேன். உங்களுக்கு எந்தவிதமான கவலையுமே வேண்டியதில்லை'' என்று ஒரு குரல் வாசல் பக்கமாகக் கேட்டது.

எல்லோருமே வாசலை நோக்கினார்கள்.

பணத்தில் புரண்டு விளையாடும் பாக்கியம் பெற்ற இளம்பெண் மாலினி நாகரிகத்தில் எதிரொலிக்கும் விதத்தில் ஆடைகுறைப்பு செய்துகொண்டு அசைந்து அசைந்து வந்து இன்ஸ்பெக்டர் குணாளனைப் பார்த்துக் கைகூப்பினாள். நடனமாடுவதைப் போலிருந்தது அது.

மாலினிதான் ராஜாமணியிடம் காலை, மாலை ஆகிய இரு வேளைகளில் பத்திரிகை வாங்கும் வாடிக்கைக்காரர்களில் அவளும் ஒருத்தி.

லட்சாதிபதியான அவள் ஜாமீன் கொடுப்பதற்காக வந்தது அவனுக்கு வியப்பாகவும் ஆச்சரியமாகவும் இருந்தது. பணக்காரர்களிடத்தில் மற்றவர்களுக்கு உதவவேண்டும் என்ற கருணையை எதிர்பார்ப்பது குதிரைக்கொம்பு அல்லவா!

''மாலினி, நீங்களா எனக்கு ஜாமீன் கொடுக்க வந்தீர்கள்? என்னால் என் கண்களையே நம்ப முடியவில்லை'' என்று சொன்னான் ராஜாமணி, நன்றியுடன்.

இன்ஸ்பெக்டர் குணசேகரன் அவளை உட்காரும்படி சொன்னார். பணக்காரர்களுக்கு எந்த இடத்துக்குச் சென்றாலும் அங்கே மதிப்பு இருக்கத்தானே செய்கிறது.

மாலினி உட்காராமல் ராஜாமணியின் பக்கத்தில் நின்று கொண்டிருந்தாள். "நீங்கள் ஜாமீன் கொடுப்பதை உங்கள் சித்தப்பா ஆட்சேபிக்க மாட்டார்கள் அல்லவா?" என்று கேட்டார் இன்ஸ்பெக்டர் குணசேகரன்.

"யார் ஆட்சேபித்தாலும் அதைப்பற்றி எனக்குக் கவலை இல்லை. நான் இப்பொழுது பதினெட்டு வயதைக் கடந்துவிட்ட மேஜர் பெண். சுதந்திரமாக எந்த முடிவு வேண்டுமானாலும் எடுப்பதற்கு எனக்கு உரிமை இருக்கிறது."

அவள் இப்படி விளாசியதால் இன்ஸ்பெக்டர் இந்தக் காலத்துப் பெண்களிடம் ஜாக்கிரதையாகத்தான் நடந்துகொள்ளவேண்டும் என்ற எண்ணத்துடன் மௌனமாக இருந்தார்.

"மாஜிஸ்திரேட்டின் தனிப்பட்ட உத்தரவின்பேரில் இவனை விடுதலை செய்ய ஏற்பாடு செய்கிறேன்" என்றார் இன்ஸ்பெக்டர்.

"தாங்க்யூ" என்று சொன்ன மாலினி அவனிடம் ஆறுதல் கூறிவிட்டு அங்கிருந்து கிளம்பினாள்.

மறுநாள் முதல் வேலையாக மாஜிஸ்திரேட்டிடம் ஜாமீன் மனு எழுதிக் கொடுத்துவிட்டு அவனை அழைத்து வந்தாள் மாலினி.

ராஜாமணி பெண் போல் அழுதுகொண்டே இருந்தான். அவனுடைய கண்களிலிருந்து கண்ணீர் வடிந்துகொண்டே இருந்தது.

"என்ன ராஜா, சின்ன குழந்தையைப்போல் அழுதுகொண்டு! யாராவது உங்களைப் பார்த்தால் கேலியாகச் சிரிப்பார்கள்" என்று அவனை உரிமையோடு அழைத்தாள் மாலினி.

"என்னை நினைத்து நான் அழவில்லை. நேற்று மாலையிலும், இன்று காலையிலும் பேப்பர் போட முடியாமல் போய்விட்டதே என்று

நினைத்துத்தான் வருத்தப்படுகிறேன். எல்லோரும் என்னை ஆவலோடு எதிர்பார்த்து ஏமாந்து போயிருப்பார்கள்.''

அவன் குழந்தை உள்ளத்துடன் சொன்னதைக் கேட்டு மாலினி வாய்விட்டுச் சிரித்தாள். இந்த இருபதாம் நூற்றாண்டில் இது போன்ற மனப்பான்மை இருந்தால் சமூகத்தை எதிர்த்துப் போராடி வெற்றி பெற முடியுமா?

"நீங்கள் ஒருவர் இல்லாவிட்டால் இந்த உலகமே அழிந்து விடும் என்று நினைத்துக் கொண்டிருக்கிறீர்கள் போலிருக்கிறது. நீங்கள் பேப்பர் கொண்டு வருவீர்களா என்று சிறிது நேரம் வரையில் பார்ப்பார்கள். வரமாட்டீர்கள் என்று தெரிந்தால் உடனே வேறு பேப்பர் வாங்கிக் கொள்வார்கள். மனிதனுடைய மனோநிலையே இப்படித்தான்.'' என்று சிறியதொரு விளக்கம் கொடுத்தாள் மாலினி. அவள் கண்களிலும் கண்ணீர் மல்கியது.

அவள் சொன்னதைக் கேட்டதும் ராஜாமணி அசடுவழியும் படிச் சிரித்தான் தன்னை மட்டுமே பெரிதாக நினைத்துக் கொண்டிருப்பது தவறு போலிருக்கிறது.

''உங்களுக்குத் தெரிந்த விஷயங்கள்கூட எனக்குத் தெரியாமல் போய்விட்டது.'' என்று சொன்ன ராஜாமணி "சைக்கிள் பத்திரமாக இருக்கிறது அல்லவா?'' என்று கேட்டான்.

போலீசாரின் பாதுகாப்பில் போலீஸ் ஸ்டேஷனில் இருக்கிறது. இப்பொழுதே நாம் எடுத்துக்கொள்ளலாம்.'' என்று சொன்ன மாலினி கொலையைப் பற்றி விசாரித்தாள்.

''நான் கொலை செய்திருக்க மாட்டேன் என்று நம்புகிறீர்கள் அல்லவா?''

"நிச்சயமாக நம்புகிறேன். கடிக்கின்ற மூட்டைப் பூச்சியைக் கூட நசுக்குவதற்கு உங்களுக்கு மனம் வராது என்பது எனக்குத் தெரியும். ஆனால் கொலை செய்தது யார் என்பதை நீங்கள் தெரிந்து வைத்திருக்கலாம். கொலையாளியைக் காட்டிக்கொடுக்கக் கூடாது

என்ற நல்லெண்ணத்துடனும் இருப்பீர்கள்.'' என்றாள் அவனைக் குற்றம் சாட்டுவதுபோல.

ராஜாமணி பதில் பேசவில்லை. தன்னை அன்போடு நேசிக்கும் மீனாமீது சந்தேகத்திற்குரிய உணர்வு தோன்றிய போதிலும் அவள் பெயரைக்கூட வெளியே சொல்ல விரும்பவில்லை. மீனா கொலை நடந்த இடத்தில் இருந்திருக்கிறாள் என்பதை வெளிப்படையாக சொல்லி விட்டால் உடனே அவளை போலீஸார் கைதுசெய்து கொண்டு போய் விடுவார்கள், தன்னால் அவளுக்குத் தொல்லைகள்தான் ஏற்படும் ஆதர வற்ற அவள் மனமுடைந்து போய்விடுவாள்.

பொய் சொல்லுவதைத் தவிர வேறு வழியில்லை, என்பதை உணர்ந்துகொண்ட அவன் ''நான் கொலை செய்யவில்லை என்பதை மட்டும்தான் இப்பொழுது சொல்ல முடியும்.'' என்று சொன்னான்.

அவன் சொன்னதைக் கேட்டுச் சிரித்த மாலினி, ' இப்பொழுது சொல்லமுடியும் என்றால் பிறகு கொலையாளி யார் என்பதையும் நீங்களே சொல்லுவீர்கள் போலிருக்கிறதே. ஏனென்றால் நீங்கள் பேசும் தோரணை இப்படி இருக்கிறது.'' என்றாள்.

''என்னைக் குழப்பாதீர்கள் மாலினி. பிறகு நான் எதையாவது உளறித் தொலைத்துவிடுவேன்.'' என்று சொன்ன ராஜாமணி போலீஸ் ஸ்டேஷனுக்குப் போய் அவனுடைய சைக்கிளை எடுத்து உருட்டிக் கொண்டு வந்தான்.

ஸ்டேஷனுக்கு வெளியே வெள்ளரிப்பிஞ்சு போன்ற இளமைச் செழிப்புடன் மாலினி நின்றுகொண்டிருந்தாள். அவனை எதிர் கொண்டு வரவேற்றாள்.

''இனி நீங்கள் எங்கே போய்த் தங்கப்போகிறீர்கள்?''

''அதைப் பற்றித்தான் சிந்தித்துக்கொண்டிருக்கிறேன். இன்றிரவு போலீஸ் ஸ்டேஷன் லாக்காப்பிலேயே கழிந்துவிட்டது.''

''நான் ஒரு யோசனை சொன்னால் கேட்கிறீர்களா?''

"நிச்சயமாகக் கேட்பேன். ஏனென்ருல் இந்த உலகத்தில் நான் நன்ருக வாழவேண்டும் என்பதில் முழு அக்கறையும் உள்ளவள் நீங்கள். இந்த சைக்கிளை விலைக்கு வாங்கிக் கொடுத்ததே நீங்கள் தானே."

"இப்பொழுது சைக்கிள் பிரச்னை வேண்டியதில்லை." என்று கண்டித்த மாலினி, "எங்கள் வீட்டுக்குப் பின்ருல் 'அவுட் அவுஸ்' காலியாக இருக்கிறது. அந்த வீட்டுக்கே நீங்கள் வரலாம்" என்று சொன்ருள்.

அவுட் அவுஸில் குடியேறும் அளவுக்கு அவனிடம் பணவசதி ஏது? தினசரி இரண்டு ரூபாய் சம்பளம் கிடைப்பதே அவனுக்கு அதிக வருமானம்.

"நாஞ...? நீங்கள் வேறு யாரையோ நினைத்துக்கொண்டு பேசுகிறீர்கள்போலிருக்கிறது" என்ருன் ராஜாமணி.

"இல்லை, உங்களைத்தான் சொல்லுகிறேன்."

"என்னைக் கண்டாலேயே உங்கள் சித்தப்பாவுக்குப் பிடிக்காது. உங்கள் அத்தான் குடிமுழுகிவிட்டதைப்போல் சீறி விழுவார். கோட்டு கோதண்டம் என்ற மூக்கன் ரவுடியும் உங்கள் சித்தப்பா வுடனேயே சுற்றிக்கொண்டிருக்கிருன்."

"நீங்கள் இந்த உலகத்தில் இருக்கிறீர்கள் என்பதால், வேறு குணுதிசயத்தைக் கொண்ட யாருமே இருக்கக்கூடாது என்று நினைக்கிறீர்களா?"

"அப்படியொன்றும் இல்லை. அவர்கள் என்னை விரும்ப மாட்டார்களே என்றுதான் சொல்ல வருகிறேன்."

ராஜாமணிக்கு அது கவலையாக இருந்தது.

"அதைப்பற்றியெல்லாம் நீங்கள் கவலைப்படத் தேவை இல்லை." என்று சொன்ன மாலினி கைப்பையைத் திறந்து சில பத்து ரூபாய் நோட்டுக்களை எடுத்து நீட்டி, "இதை அட்வான்சு கொடுப்பதற்காக வைத்துக்கொள்ளுங்கள்" என்ருள்.

"என்னங்க இது?...உங்கள் பணத்தை வாங்கி உங்கள் வீட்டுக்கே அட்வான்ஸ் கொடுப்பது என்றால்...?"

உங்கள் பணமாவது, எங்கள் பணமாவது. எல்லாம் ஒரு பணம்தான். பணம் யாருடைய கையில் இருக்கிறதோ, அந்தப் பணத்துக்கு அவன் எஜமான்." என்று சொன்ன மாலினி பணத்தை அவன் கையில் வைத்து அழுத்தினாள்.

அவன் கை மட்டுமல்ல, உடலெங்கும் நடுக்கம் எடுத்தது. கண்ணபிரான் மரணத்துக்குப் பிறகு நடக்கப்போகும் காரியங்களில் எல்லாம் பயங்கரம் நிறைந்திருப்பதைப் போலவே அவன் கண்க ளுக்குத் தோன்றியது.

ஏனோ தன்னையும் மீறி பதறினான்.

## 10. காதல்ராணியின் ஆதிக்கம்!

கன்னல் மொழிப் பாவையான மாலினியின் சித்தப்பா நாற்பத்தி ஐந்து வயதைக் கடந்துவிட்டபோதிலும் முப்பத்தி ஐந்து வயது மதிக்கத்தகுந்த தோற்றத்துடனேயே காணப்பட்டார். மாலினியை ஒழித்துக்கட்டுவதைத் தவிர வேறு எந்தவித சிந்தனையும் இல்லாத குபேரன் தன் மெய்காப்பாளனைப் போன்ற மூக்கனுடன் மாடிப்படிகள் வழியாக இறங்கி வந்தார்.

"பத்திரங்கள் எல்லாம் கிடைத்துவிட்டதா?" என்று தனக்கே உரித்தான கணமான குரலை அடக்கிக்கொண்டு மெதுவாகக் கேட்டான் மூக்கன்.

"அந்தப் பத்திரத்தை நான் எங்கேயெல்லாமோ தேடிப் பார்த்துவிட்டேன். மாலினியின் குளியல் அறையினுள்கூட சோதனைப் போட்டுவிட்டேன். பத்திரங்கள் என்ன ஆயிற்று என்றே தெரிய வில்லை. மாலினி நேற்றிலிருந்து பதினெட்டு வயதைக் கடந்து விட்டாள். இனிமேல் அவள் நினைத்தால் சட்டப்படியான நடவடிக்கை

எடுத்து நம்மை எப்பொழுது வேண்டுமானாலும் வீட்டைவிட்டுத் துரத்தமுடியும். அந்தப் பத்திரங்களின் உரிமையை மாலினி மூலம் எழுதி வாங்கலாம் என்று நினைத்துக்கொண்டிருந்தேன். பெருத்த ஏமாற்றமாகப் போய்விட்டது'' என்றார் குபேரன் வருத்தமாக.

''பத்திரம் மாலினியிடமே இருக்கும் என்று நினைக்கிறீர்களா?

''ஒருவேளை அந்தப் பத்திரங்களை அவள் எடுத்திருக்கலாம். ஆனால் அவற்றை அவள் எங்கே மறைத்து வைத்திருக்கிறாள் என்பதை எப்படித் தெரிந்து கொள்ள முடியும்? பத்திரத்தைப்பற்றிய பேச்சை எடுத்தாலேயே அவள் சீறி விழுவாள்.''

குபேரன் இப்படிச் சொல்லிக்கொண்டு நடந்தபோது ''சித்தப்பா'' என்று மாலினி அழைக்கும் அதிகாரக்குரல் கேட்டது. அது அவனுடைய நெஞ்சில் அடித்ததைப் போலிருந்தது.

''மாலினியா? இதோ வந்துவிட்டேன்.'' என்று சொன்ன குபேரன் நிமிர்ந்து நடந்து சென்றார்.

கூடத்தினுள் மாலினியும் குபேரனும் நின்றுகொண்டிருந்தார்கள். வாசலுக்கு வெளியே சைக்கிள் ஸ்டாண்டுப்போட்டு நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது. அந்த சைக்கிளின் உட்காரும் ஆசனத்துக்கு அடியில் உள்ள குழாயினுள்தான் பத்திரங்கள் சுருட்டி மறைத்து வைக்கப்பட்டிருக்கின்றன என்ற ரகசியம் அவர்களுக்குத் தெரிந்தால் நிலைமை என்னவது ..?''

குபேரன் மாலினியின் பின்னால் நின்றுகொண்டு திருதிரு என்று விழிக்கும் ராஜாமணியைப் பார்த்து. இவனுக்குச் சேரவேண்டிய பேப்பர் பில்களைக் கணக்குப் பார்த்துக் கொடுத்து விட்டோம் அல்லவா?'' என்றார், ஏளனமாக.

அவள் இப்போது பேப்பர் சம்பந்தமாக வரவில்லை. வீடு கிடைக்காமல் மிகவும் சிரமப்பட்டுக் கொண்டிருக்கிறார். அதனால் நமது அவுட் அவுஸை வாடகைக்கு விடலாமே என்று நினைத்துத்தான் கூட்டிக்கொண்டு வந்தேன்.''

மாலினி இப்படிச் சொன்னதும் குபேரன் 'இடிஇடி' என்று சிரித்தார். அவருடன் சேர்ந்த மூக்கனும் சிரித்தான்.

"சாப்பாட்டுக்கே வழியில்லாத ஒருவனை அழைத்து வந்து வீடு கொடுக்கச் சொல்கிறாயே; இந்த வீட்டில் குடியிருக்கும் தகுதி கொஞ்சம்கூட அவனுக்கு வேண்டாமா? ஒரு வக்கீல், ஒரு டாக்டர், இல்லாவிட்டால் ஒரு கவர்ன்மெண்ட் சர்வென்ட் இப்படி இருந்தாலும் பரவாயில்லை. இவன் சாதாரண பேப்பர்பாய்! அதிலும் ரேஸ் புக் விற்கும் ஆள்."

தன்னைக் கேவலமாகப் பேசியதும் ராஜாமணிக்குக் கோபம் வந்துவிட்டது. "பேப்பர் பாயும் மனிதன்தான் என்பதை மறந்து விட்டீர்கள். உங்களுக்குத் தேவையானது பணம்தானே...' அந்தப் பணத்தைக் கொண்டுவந்து விட்டேன்." என்றான் சூடாக.

"நீ பணத்தைக் கொண்டு வந்திருக்கலாம். ஆனால் நாங்கள் அந்தப் பணத்தை வாங்கவேண்டாமா? உனக்கு வீடு விடப்போவதில்லை."

குபேரன் கனத்த குரலில் பேசியதும் மாலினி குறுக்கிட்டு, "சித்தப்பா, நான் அவருக்கு வீடு வாடகைக்கு விடுவதாக வாக்களித்திருக்கிறேன்." என்று சொன்னாள். அவள் குரலில் கம்பீரம் தலை தூக்கியது.

'இந்த மாதிரியான நிர்வாக விஷயங்களில் நீ தலையிடாதே மாலினி, நீ சின்னக் குழந்தை. உனக்கு ஒன்றுமே தெரியாது."

"நீங்கள் என்னை தவறாக எடைபோட்டு விட்டீர்கள். நான் பி. எஸ். ஸி. படித்துக் கொண்டிருக்கிறேன் என்பதையும், முதிர்ந்த அறிவுள்ளவள் என்பதையும் அடியோடு மறந்துவிட்டீர்கள் போலிருக்கிறது. நான் இப்போது வயதுக்கு வந்தவள். மேலும் இது எனக்குச் சொந்தமான சொத்து. எல்லா உரிமைகளும் இருக்கிறது. நான் குழந்தை அல்ல. யூ நோ...?"

உரிமைப் பிரச்னையை மிகவும் கண்டிப்பான குரலில் மாலினி கிளப்பியதும் குபேரனும் மூக்கனும் அதிர்ந்து போனார்கள். ஒருவர்

முகத்தை ஒருவர் பரிதாபமாகப் பார்த்துக் கொண்டார்களே தவிர, எதுவும் பேசவில்லை. என்னதான் பேசுவார்கள்?

அவருக்குச் சரியான சூடுகொடுப்பதாக எண்ணி மாலினி "நீங்கள் என் சித்தப்பா என்பதால் உங்களுக்கு உயர்வான இடம் தருகிறேன். அதனுல் உங்கள் கௌரவத்தை தானுகவே இழந்துவிடாமல் அவர் கொடுக்கப்போகும் அட்வான்ஸ் பணத்தை வாங்கிக் கொள்ளுங்கள்." என்று சொன்னவள், "மிஸ்டர் ராஜா, அறுபது ரூபாய் கொடுங்கள். இரண்டுமாத அட்வான்ஸ்" என்று கூறினுள்.

ராஜாமணி பயந்தபடியே நோட்டுக்களை குபேரன் கையில் கொடுத்துவிட்டு, "நாணயமாக நடந்துகொள்வேன்." என்று உறுதி கூறினுன்.

அவனை பிறகு கவனித்துக்கொள்ளலாம் என்று எண்ணிய குபேரன், "நீ உன் பழைய வீட்டுக்காரரைக் கொலை செய்துவிட்டதைப் போல் என்னையும் செய்துவிட மாட்டாயே!" என்று குத்தலாகச் சொன்னுர். அதில் எல்லாமே அடங்கியிருந்தன.

அதைக் கேட்டதும் ராஜாமணிக்குக் கோபம் வந்துவிட்டது. "நான் கண்ணபிரானைக் கொலை செய்தது போலவும், நீங்கள் நீதிபதியாக இருந்து தீர்ப்பு வழங்கியது போலவும் போல் அல்லவா பேசுகிறீர்கள், தயவுசெய்து இனிமேல் இவ்விஷயமெல்லாம் பேசாதீர்கள். அது தப்பு."

மூக்கன் இதுதான் புஜபல பராக்ரமத்தைக் காட்டுவதற்கு தக்க தருணம் என்று நினைத்து "என்ன முதலாளி, இந்த பொடிப்பயல் உங்களைக் கொலை செய்துவிடுவான் என்று பயப்படுகிறீர்கள்? நான் ஒருவன் உங்கள் பக்கத்தில் இல்லையா? அவன் உங்கள் அருகிலே நெருங்கினுல் போதும் உடனே அவனுடைய குடலை அறுத்தெறிந்து விடுவேன்." என்று கூவினுன். மீசையை வேறு முறுக்கினுன்.

"கசாப்புக்கடை நடத்திய அனுபவம் போல் இருக்கிறது இந்த ராஜாமணி வம்புச் சண்டைக்குப் போகமாட்டான். வந்த சண்டையை விடவும் மாட்டான். இது தெரியாவிட்டால் தெரிந்துவைத்துக்

கொள்ளுங்கள். இது சமயத்தில் மற்றவர்களுக்கு எச்சரிக்கையாகவும் அமையும்.''

அவன் முகத்தில் அறைந்ததைப் போல் பேசியதும் மூக்கன் வாயை மூடிக்கொண்டான்.

அதே சமயத்தில் மாடியிலிருந்து இறங்கி வந்த குமார் என்ற இளைஞன் ' இங்கே என்ன கலாட்டா?'' என்று கத்தினன்.

' வாருங்கள் குமார் மாப்பிளே! வாருங்கள்! இங்கே அநியாயம் நடக்கிறது என்று பார்த்தீர்களா? ஏற்கெனவே இவன் கொலை செய்திருக்கிருன். நேற்று முழுவதும் போலீஸ் காவலில் இருந்த இவனை உங்கள் வருங்கால மனைவி அழைத்துக்கொண்டு வந்து நம்முடைய அவுட் அவுஸையும் வாடகைக்கு விட்டிருக்கிருள். மாஜிஸ்ரேட்டு கோர்ட்டுக்குச் சென்று ஜாமீன் கொடுத்து அழைத்து வந்தவளும் அவள் தான். குமார் மாப்பிளே, நீங்கள் மலைபோல் இருக்கும்போது இதைப்போன்ற அநியாயக் காரியங்கள் நடக்கலாமா? உங்கள் வருங்கால மனைவியைக் கண்டித்து நீங்கள் தான் புத்தி சொல்ல வேண்டும்'' ஒப்பாரி வைத்தான்.

மூக்கன் அபயக்குரல் எழுப்பியதும் குமார் சட்டைக் காலரைத் தூக்கிவிட்டுக்கொண்டு ராஜாமணியையும் மாலினியையும் மாறி மாறிப் பார்த்தான். கோபத்தின் காரணமாக அவன் குண்டான முகம் சிவந்து போயிருந்தது. கண்கள் உருண்டன.

''மாலினி, என்ன இதெல்லாம்?''

''என் மனச்சாட்சிக்கு விரோதமாக நான் எதுவும் செய்யவில்லை இவர் தங்குவதற்கு இடம் இல்லாமல் கஷ்டப்பட்டார். நம்முடைய அவுட் ஹவுஸ் காலியாக இருப்பதால் நானே அவரை அழைத்து வந்தேன். கஷ்டப்படுகிறவர்களுக்கு உதவி செய்வது தவரு மிஸ்டர் குமார்? யூவார் எஜுக் கேட்டட் மேன்.''

''பார்த்தீர்களா குமார் சார்? கல்யாணம் செய்துகொள்ளப் போகும் உங்களைப் பார்த்து மிஸ்டர் குமார்? என்று சொல்லுகிருள்.

மிஸ்டர் என்றால் அதன் அர்த்தம் தெரியுமா? நீங்கள் எந்தவிதமான சொந்த பந்தம் இல்லாத மூன்றாவது ஆள்'' என்று அங்கலாய்த்துக் கொண்டான் மூக்கன்

குமார் உதட்டைப் பிதுக்கியபடி மாலினியின் முகத்தைப் பார்த்தபடியே நின்றவாறு அவளிடம் இப்பொழுது மோதுவது சரியல்ல என்று நினைக்கிறானோ என்னமோ!

''மாலினி, நான் உன்னிடம் ஒன்றுமட்டும் சொல்ல ஆசைப் படுகிறேன். நீ இன்னும் கல்யாணமாகாத கன்னிப்பெண் என்பதை மட்டும் மறந்துவிடாதே''

மாலினி அவன் சொன்னதைக் கேட்டு தலையைத் தாழ்த்தி ஒரு பக்கமாக உயர்த்தி புருவங்களை மேல்நோக்கி சற்றுச் சிரித்து விட்டு, ''நீங்கள் வாருங்கள் ராஜா. இவர்கள் இப்படி எதை யாவது சொல்லிக் கொண்டுதான் இருப்பார்கள்.'' என்று கூறியபின் சாவியை எடுத்துக்கொண்டு வெளியே போனாள்.

யாருடைய முகத்திலுமே ஈயாடவில்லை. திக்பிரமை பிடித்த வர்களைப்போல் அவர்கள் ஜோடியாகப் போகும் திசையைப் பார்த்த வாறே நின்றுகொண்டிருந்தார்கள்.

''குமார் மாப்பிளே! அவமானம் பிடுங்கித் தின்னுகிறது. நாக்கைப் பிடுங்கிக்கொண்டு சாகலாம்போலிருக்கிறது.'' என்று பொருமினார் குபேரன்.

வருத்தப்படாதீர்கள் மாமா. இந்தப்போன்ற நேரங்களில்தான் நாம் நிதானத்தைக் கடைப்பிடிக்க வேண்டும்.'' என்றான் குமார்.

''நிதானத்துடன் அமைதியாக இருந்தால் என்ன நடக்கும் தெரியுமா? லட்டு போன்ற நம் மாலினியை அந்தப் பயல் தட்டிக் கொண்டுபோய் விடுவான்.''

அதைப்பற்றி நீங்கள் கவலையே படவேண்டாம். மாலினி விஷயத்தில் நான் எப்போதும் ஜாக்கிரதையாகவும் எச்சரிக்கை யாகவுமே நடந்து கொள்வேன். அவன் நம் மாலினியின்மீது விரலை

வைத்தால்கூட போதும், அந்த நிமிடமே இரண்டு கொலைகள்விழும்'' என்று கூறிய குமார் ஆத்திரத்துடன் மாடிப்படிகள் வழியாக மேலே போனான்.

"சபாஷ் குபேரன் ஸார்! மாப்பிள்ளையைக் கருவியாகவைத்தே அவர்கள் இரண்டு பேர்களையும் தொலைத்துக் கட்டிவிடலாம் ஒரு பெண்ணுக்காகத்தானே பல கொலைகள் விழுகின்றன.'' என்று சொன்னான் மூக்கன்.

என் மருமகன்மீது எனக்கு நம்பிக்கை உண்டு. உணர்ச்சி வேகத்தில் எதிர்ப்பார்க்காத விதமாக எதையாவது செய்துவிடுவான். ஆனால் நான் முழுக்க முழுக்க நம்பியிருப்பது உன்னைத்தான்.'. என்றார் குபேரன், பொய்ச்சிரிப்பை வரவழைத்துக் கொண்டு.

என்னை நம்பிவிட்டீர்கள் அல்லவா? கவலையை விடுங்கள்.'' என்று சொன்ன மூக்கன் சிரித்ததும் குபேரனும் பதிலுக்குச் சிரிக்க வேண்டும் என்பதற்காகவே சிரித்தார்.

# 11. இரவில் நடமாடும் எமகிங்கரர்கள்!

இரவு நேரம்.

மீரு சாதாரண நாற்கட்டிலில் படுத்தவாறு தூங்குவதற்கு முயற்சி செய்துகொண்டிருந்தாள். அவளுடைய உள்ளத்தில் எத்தனையோ விதமான போராட்டங்கள் நடைபெற்றுக் கொண்டிருந்தன.

கதவு தட்டப்படும் சப்தம் கேட்டது.

அவள் எழுந்திருக்க மனம் இல்லாமல் தவித்தபோதிலும் வந்திருப்பது முக்கியமான ஆளாக இருக்கக்கூடும் என்ற எண்ணத்துடன் படுக்கையைவிட்டு எழுந்து சென்று கதவைத் திறந்தாள்.

இருட்டோடு இருட்டாக வெளியே நின்றுகொண்டிருந்தது ஒரு கரிய உருவம். அந்த மனித உருவம் சட்டென்று வீட்டினுள் வந்து உட்புறமாகக் கதவைத் தாளிட்டது.

மீரு அந்த உருவத்தைப் பார்த்ததும், "இனிமேல் என்னைத் தேடிக்கொண்டு வரவே கூடாது என்று சொன்னேன் நீங்கள் கேட்கவில்லை. இங்கே வந்திருப்பது மற்றவர்களுக்குத் தெரிந்தால் என்னவது? என்னை எல்லோரும் கௌரவமான முறையில் குடும்பம் நடத்தும் குடும்பப்பெண் என்று நினைத்துக் கொண்டிருக்கிறார்கள். தயவு செய்து அந்த எண்ணத்தை அழித்து விடாதீர்கள்." என்று அழுதுகொண்டே கெஞ்சினாள்.

கருப்பு அங்கி அணிந்திருந்த அந்த முகமூடி உருவம் உஸ்...ஸ்... என்று அதட்டிவிட்டு சில பத்து ரூபாய் நோட்டுக்களை அவள் கையில் வைத்து அழுத்தியது.

மீனு தயங்கிய போதிலும் அந்த உருவம் இந்த இடத்தை விட்டு போனால் போதும் என்ற எண்ணத்துடன் ரூபாய் நோட்டுக் களைப் பெற்றுக்கொண்டு, "சீக்கிரமாகப் போய்விடுங்கள். உங்கள் கால்களில் விழுந்து மன்றாடிக் கேட்டுக்கொள்கிறேன் தயவுசெய்து மறுபடியும் இங்கே வராதீர்கள்." என்று கூறி இரண்டு கைகளையும் தூக்கிக் கும்பிட்டாள்.

அந்த உருவம் பின்கதவைத் திறந்துகொண்டு வேகமாக வெளியேறியது.

மீனு கதவைச் சாத்தி பூட்டிவிட்டு பணத்தை தலையணைக்கு அடியில் வைத்ததும் மறுபடியும் கதவு தட்டப்படும் சப்தம் கேட்டது.

திரும்பவும் அந்தப் பொல்லாத உருவம்தான் வருகிறதா? தன் மனநிம்மதியை அந்த உருவம் அடியோடு அழித்துவிடுமா?

மீனு வேதனையால் பெருமூச்சு விட்டபோதிலும் வருவதை அனுபவித்துத்தானே ஆகவேண்டும் என்ற எண்ணத்துடன் கதவைத் திறந்து "யாரது?" என்று கேட்டாள்.

"நான்தான் மூக்காண்டி! மூக்கன் என்பது ஸ்டைல் நேம்! இவர்கள் என் சிஷ்யர்கள்! பெயர் சின்னசாமி; பெரியசாமி." என்று சொன்ன மூக்கன் தன்னுடைய இரண்டு அடியாட்கள் சகிதம் வீட்டினுள் நுழைந்தான்.

மீனுவின் முகம் சோர்ந்துவிட்டது. அவனால் என்னென்ன தொல்லைகள் ஏற்படக் காத்திருக்கின்றனவோ என்று வருந்தினாள்.

"நான் தூங்குகின்ற நேரத்தைப் பார்த்து ஏன் இப்படி வந்து தொந்தரவு செய்கின்றீர்கள்? என்னை சென்னையிலேயே இருக்கவிட மாட்டீர்களா?" என்று பொருமினாள் மீனு.

''யாரைப் பார்த்து இந்தக் கேள்வியைக் கேட்கிறுய் என்பதை நினைவுட்படுத்திக்கொள். நான் முதலாளி குபேரன் ஐயாவின் பிரதிநிதியாக வந்திருக்கிறேன். நான் இங்கே வந்திருக்கிறேன் என்ருல், அது முதலாளியே நேரில் வந்திருப்பதாகத்தான் அர்த்தம்.'' என்று முழங்கினுன் மூக்கன்.

முதலாளி என்ற சொல்லைக் கேட்டதும் மீனு பெட்டிப்பாம்பைப் போல் அடங்கிவிட்டாள். அவளுடைய அழகிய உடல் நடுநடுங்கத் தொடங்கியது.

''முதலாளி ஏதாவது செய்தி சொல்லி அனுப்பினுரா?'' என்று கேட்டாள.

நீ என்னை இப்படிக் கேட்பது விந்தையாக இருக்கிறது. நீ ஏதனுல் இரண்டு தினங்களாக வேலைக்கு வரவில்லை? ஒருநாள் நீ கம்பெனிக்கு வராவிட்டால், எத்தனை ஆயிரம் ரூபாய் நஷ்டம் ஆகும் என்பது உனக்கே தெரியும். ஏதனுல் வேலைக்கு வரவில்லை என்ற காரணத்தைத் தெரிந்து வரும்படி அனுப்பியிருக்கிருர் முதலாளி.''

மீனு உடம்பை நெளித்துவிட்டு, ''எனக்கு மனம் சரியாக இல்லை. அதனுல் சில தினங்கள் வரையில் ஓய்வு எடுத்துக்கொள்ளலாம் என நினைக்கிறேன்.'' என்று மெல்லிய குரலில் சொன்னுள்.

''ஓய்வா? உனக்கா?'' என்று கேட்டுவிட்டு 'கடகட'வென்று சிரித்த மூக்கன், ''நம்மைப்போன்ற உண்மையான ஊழியர்களுக்கு ஓய்வு எப்பொது கிடைக்கும் தெரியுமா? நம் உயிர் நம் உடலைவிட்டு பிரியும்போதுதான்'' என்று சொன்னவன், ''நாளைக்கே நீ வேலைக்கு வந்தாகவேண்டும் இல்லாவிட்டால் உன்னுடைய வலதுகை தனியாக போய்விடும்.'' என்று மிரட்டினுன்.

அவன் சொன்னதைக் கேட்டு பயந்து நடுநடுங்கிப்போன மீனு, ''நான் நாளைக்கே வேலைக்கு வந்துவிடுகிறேன். தயவுசெய்து அவசரப்பட்டு எதையும் செய்துவிடாதீர்கள்.'' என்று கெஞ்சினுள்.

"அப்படி வா வழிக்கு. நாளை காலையில் நாங்கள் உன்னை எதிர்பார்த்துக்கொண்டே இருப்போம். குறித்த நேரத்தில் நீ வேலைக்கு வரத் தவறினால் உன் வலதுகை தனியாகப் போய்விடும்." என்று எச்சரித்த மூக்கன், "சின்ன பெரியசாமி." என்று கூறி தன் கையாட்களை அழைத்துச் சென்றான்.

மீனா நெடுமூச்செறிந்துவிட்டு கதவைச் சாத்த எத்தனித்ததும், ஒருகை அந்தக் கதவைப் பிடித்து பலமாகத் தள்ளியது.

பதறிப்போன மீனா, "யாரது?" என்று கூக்குரலிட்டாள்.

"இந்த நேரத்தில் வருவது வேறு யாராக இருக்கமுடியும்? நான்தான் ராஜா." என்று சொன்னவன் உள்ளே வந்து, "என்ன மீனா அப்படிப் பார்க்கிறாய்? நான் இங்கே வருவேன் என்று கொஞ்சமும் எதிர்பார்த்திருக்கமாட்டாய் அல்லவா? என்று கூறியவன் கட்டிலில் உட்கார்ந்தான்.

மீனா அவனைப் பார்த்ததும் சிரிக்க முயன்றாள். ஆனால் சிரிப்பு உதடுகளில் மின்னிய போதிலும் பரிபூரணமாக மிளிரவில்லை.

உங்களைப் போலீஸார் பிடித்துக்கொண்டு போனதாக அறிந்தேன். என் உயிரே போய்விட்டதைப்போல் இருந்தது. இப்பொழுது உங்களைப் பார்த்த பிறகுதான் மறுபடியும் உயிர் வந்திருக்கிறது" என்று மலர்ந்த முகத்துடன் சொன்னாள் மீனா. ஆனாலும் இடையிடையே பீதியின் சாயல்கள் முகத்தில் படரத்தான் செய்தன.

"அப்படியா? என் மீது எவ்வளவு ஆசை! அன்பு இருந்தால் அது இப்படித்தான் இருக்கவேண்டும். உன் காதல் வாழ்க." என்று கூறிவிட்டுச் சிரித்த ராஜா, "ஏன் மீனா, கதவைத் திறந்து வைத்திருக்கிறாய்? சாத்தி உட்புறமாகத் தாழிடுவதுதானே!" என்று குத்தலாகச் சொன்னான்.

அவன் பேசியதன் உள் அர்த்தம் மீனாவிற்கும் புரியத்தான் செய்தது. ஆனாலும் அதை வெளிக்காட்டிக் கொள்ளாதவள்போல,

"கதவைச் சாத்திக்கொண்டு பேசினால் யாராவது பார்த்தால் தப்பாக நினைத்துக் கொள்வார்கள்." என்றாள்.

"ஆமாம், ஆமாம் தப்பாக நினைத்துக் கொள்வார்கள். பிறகு உன்னுடைய நல்ல பெயருக்கு களங்கம் வந்துவிடும்." என்று சொன்ன ராஜாமணி, "கதவு திறந்தபடியே கிடக்கட்டும்." என்று கூறிவிட்டு அவளை மேலும் கீழுமாகப் பார்த்தான்.

"ஏன் ராஜா அப்படிப் பார்க்கிறீர்கள்? நீங்கள் பார்க்கும் தோரணை எனக்கு பயமாக இருக்கிறது."

"என்ன...என்ன...நீ பயப்படுகிறாயா? ஆச்சரியமாக இருக்கிறதே. நான் வேறு விதமாக நினைத்திருந்தேன்." என்று கிண்டலாகச் சொன்ன ராஜாமணி, நான் வருவதற்கு முன்னால் ரௌடி மூக்கனும், அவனுடைய அடியாட்களும் இங்கே வந்து போனார்களே அது ஏன்?" என்று கண்டிக்கும் தோரணையில் கேட்டான்.

"இங்கே யாருமே வரவில்லை." என்று பொய் சொன்னாள் மீனா.

"உன் நெஞ்சில் கை வைத்துவிட்டு அதன் பிறகு பேசு. எதற்காக மூக்கன் வந்தான்? அவனுக்கும் உனக்கும் எந்தவிதத்தில் தொடர்பு?"

அவன் கண்டிப்பு நிறைந்த குரலில் கேட்டதும், மீனாசிரிப்பை வரவழைத்துக்கொண்டு, "எனக்கு எந்த மூக்கனையும் தெரியாது நான் உங்களிடம் பொய் சொல்வேனா? இந்த உலகத்தில் எனக்கென்றிருக்கும் ஒரே ஜீவன் நீங்கள் ஒருவர்தானே...!" என்றாள்,தொண்டை அடைத்துக்கொள்ள.

"அப்படியா? நான்தான் ஒரே ஜீவனாக உன் கண்முன்னால் தோன்றுகிறேன்போல் இருக்கிறது. பரவாயில்லை. இதையாவது சொல். நீ அன்றைக்கு ஓடிவந்து என் சைக்கிளில் விழுந்தாயே! அன்று ஏன் அவ்வளவு பதட்டமடைந்தாய்?" என்று கேட்

ராஜாமணி, அவளுடைய முகத்தைக் கூர்ந்து கவனித்தான். அவள் முகத்தில் ஏற்படக்கூடிய சலனங்களைத் தெரிந்துகொள்ள வேண்டிய அவசியம் அவனுக்கு ஏற்பட்டிருந்தது.

"நான் பதட்டமடையவில்லை. என் சிநேகிதியிடம் குறித்த நேரத்தில் வருவதாகச் சொல்லியிருந்தேன். நேரமாகி விட்டதால் தான்.

"நீ பொய் சொல்கிறாய் என்பதை உன் முகமே சொல்கிறது. பரவாயில்லை, நான் வாங்கிக் கொடுத்த ஆறு வளையல்களில் ஒன்று என்ன ஆயிற்று என்பதையாவது நான் தெரிந்து கொள்ளலாமா?"

"வளையல்.. வளையல்...ஆமாம்...அதை நான் இப்போது தான் கவனிக்கிறேன். அந்த வளையல் வேலை செய்யும்போது எனக்குத் தெரியாமலேயே உடைந்து விழுந்திருக்கும் என்று நினைக்கிறேன்."

நன்றாக நினைவுபடுத்தி எங்கே உடைந்து விழுந்தது என்று பார். ஏனென்றால் இந்த வளையலின் பின்னணியில் ஒரு ரகசியம் இருக்கிறது."

"எனக்கு எதுவும் தெரியாது. எங்கேயாவது எனக்குத் தெரியாமலேயே உடைந்து விழுந்திருக்க வேண்டும்"

"உனக்கு எதுவுமே தெரியாதா? மீனா! என் முகத்தை நிமிர்ந்து பார்த்துவிட்டு உன்னை வாழவைக்கக் காத்துக்கொண்டிருக்கும் காதலனிடம் பேசுகிறாய் என்ற உணர்வுடன் பேசு. மீனா! நானே சொல்கிறேன். என்னுடைய அறையில் கண்ணபிரான் இறந்து கிடந்தார் அல்லவா? அவருக்குப் பக்கத்தில் உன்னுடைய வளையல்களில் ஒன்று உடைந்து கிடந்தது. உன் கூந்தலில் சூட்டியிருந்த மல்லிகைச் சரமும் அங்கே கிடந்தது. போலீசார் அவற்றைக் கைது செய்துகொண்டு போய்விடுவார்களே உன் பெயரும் இந்த கொலை வழக்கில் அடிபட்டு வீணாகச் சீரழிந்து விடுமே என்ற நல்லெண்ணத்துடன் நானே அவற்றை எடுத்து பத்திரப்படுத்திக் கொண்டேன். இனிமேலாவது உண்மையைச்சொல் என்னை நீ முழுக்க முழுக்க

காதலிப்பதாக இருந்தால் எதையுமே மறைக்காதே. நல்லவள் என்ற பெயரை என் வரையிலாவது எடு."

ராஜாமணி உணர்ச்சி வசப்பட்டுப் பேசினான். அவள் எப்படியாவது தன்னுடன் ஒத்துழைப்பாள் என்ற நம்பிக்கை அவனுக்கிருந்தது.

மீனா சிரித்துவிட்டு, "நான் பொய் பேசுவதாக நினைத்துக் கொண்டு ஏதேதோ சொல்கிறீர்கள்? நீங்கள் சொல்லுவதைப் பார்த்தால் நானே கண்ணபிரானை கத்தியால் குத்திக் கொலை செய்தேன் என்று சந்தேகப்படுவீர்கள் போலிருக்கிறதே!" என்று சொன்னாள்.

"அந்த அளவுக்கு நான் 'காமன்சென்ஸ்' இல்லாதவன் அல்ல. என் மீனா மற்றவர்களுக்குத் தீங்கு நினைக்காத நல்லவளாக இருப்பாள் என்ற நம்பிக்கை எனக்குண்டு. உண்மையிலேயே நீ கண்ணபிரானை கொலை செய்திருந்தால்கூட அதை நம்பமாட்டேன்."

"அப்படியானால் உங்கள் நம்பிக்கை ஒருபோதுமே வீண் போகாது."

"வளையல் துண்டு, மல்லிகைச்சரம் ஆகியவற்றைப் பற்றி என்ன சொல்லுகிறாய் மீனா?"

"அவை என்னுடையதல்ல கண்ணபிரானைக் கொலை செய்த பெண்ணினுடையதாக அவை இருக்கலாம்."

அவள் உள்ளத்தில் ஒன்றும், புறத்தில் ஒன்றும் வைத்துக் கொண்டு சாகசத்துடன் பேசுகிறாள் என்பதைத் தெரிந்துகொண்ட ராஜாமணி, தனக்கு எதுவுமே தெரியாததைப்போல் பாவனை செய்து, "அன்று உன் தாவணியில் ரத்தக்கறையைப் பார்த்தேன். அது என்ன?" என்று கேட்டான்.

முகம் முழுவதும் 'குப்பென்று' வியர்வை வியர்த்துக்கொட்டிய போதிலும் ஒரு சிரிப்பின் மூலம் சமாளித்துக்கொண்ட மீனா, "என் தாவணியில் இரத்தக்கறையா? ஆச்சரியமாக இருக்கிறதே!" என்று சொன்னாள்.

"அந்தத் தாவணியை நான் பார்க்கவேண்டும்." என்றான் ராஜாமணி.

"நேற்றைக்குத்தான் அந்தத் தாவணியை லாண்டரியில் வெளுக்கப் போட்டேன். இன்னும் இரண்டொரு தினங்களில் வந்ததும் அதை நானே எடுத்து வந்து உங்களிடம் காட்டுகிறேன். ராஜா, ஏன் என் மீது சந்தேகப்படுகிறீர்கள்? உங்களிடம் நான் பொய் பேசுவேன் என்று எதிர்பார்க்கிறீர்களா?"

கைதேர்ந்த நடிகைகளால் கூட இவ்வளவு சிறப்பாக நடிக்க முடியாது என்பதை ராஜாமணி தெரிந்துகொண்டான். சிந்தித்துச் சிரித்து ஒன்றும் தெரியாத அப்பாவிப் பெண்மணியைப்போல் எவ்வளவு பொருத்தமாக பேசுகிறாள்.

"நீ என்னிடம் பொய் பேசமாட்டாய். ஆனால் நீ வேண்டுமென்றே பொய் பேசினால் அது உன் ராஜாவின் உயிருக்கு ஆபத்து விளைவிக்கக்கூடியது என்பதை மட்டும் மறந்துவிடாதே." என்று உணர்ச்சிப்பெருக்குடன் சொன்ன ராஜாமணி தற்செயலாக தலையணையை எடுத்துப் பார்த்தான்.

அதன் அடியில் சில பத்து ரூபாய் நோட்டுகள் இருந்தன.

மீனா அவற்றைப் பார்த்துத் திடுக்கிட்டபோதிலும் சமாளித்துக் கொண்டு, "இன்றைக்குத்தான் சம்பளம் வாங்கினேன்." என்று குறிப்பறிந்து பேசினாள்.

இன்றைக்குத் தேதி என்ன தெரியுமா? இருபத்தி நான்கு. எந்தக் கம்பெனியிலுமே சம்பளம் கொடுக்கமாட்டார்கள்"

"நான் சம்பளம் என்று சொல்லிவிட்டேன் இல்லையா? அது தவறு! அட்வான்ஸ் வேண்டும் என்று சொன்னேன். முன்கூட்டியே கொடுத்துவிட்டார்கள்."

அந்த நல்ல கம்பெனி எங்கே இருக்கிறது என்பதை நான் தெரிந்துகொள்ளலாமா?"

"தெரிந்தாலும் அதனால் உங்களுக்கு எந்தவிதமான பயனும் கிடைக்கப்போவதில்லை. ஏனென்றால் அந்தக் கம்பெனியில் ஆண்களையே வேலைக்கு எடுத்துக்கொள்ளமாட்டார்கள்."

மீனாதானா இப்படி பேசுகிறாள்; அவளுடைய உதடுகளிலிருந்து தானா இப்படிப்பட்ட சொற்கள் உதிருகின்றன என்பதை அவனால் புரிந்துகொள்ள முடியவில்லை. சைக்கிளில் அவள் மோதிய நிகழ்ச்சிக்குப் பிறகு முற்றிலும் மாறிவிட்டாள்.

ஏன் இந்த நிலை...? மீனா எதற்காக மர்மமான முறையில் வாழ்க்கை நடத்தவேண்டும்! அவள் வாழ்க்கையில் மறைந்து கிடக்கும் ரகசியம்தான் என்ன?

அவள் செய்கையை நினைத்துக் குழம்பிப்போன ராஜாமணி, "ஆல்ரைட் மீனா! நீ இப்பொழுது மனம் சரியில்லாமல் இருப்பதால் உன்னைத் தொந்தரவு செய்ய விரும்பவில்லை. இன்னொருநாள் வந்து பேசிக்கொள்கிறேன். ஆனால் ஒன்று மட்டும் நினைவுப்படுத்திக்கொள் மீனா. எந்தச் சூழ்நிலையிலும் உனக்கு உதவி செய்வதற்கு இந்த ராஜாமணி இருக்கிறான் என்பதை மட்டும் மறந்துவிடாதே!" என்று சொன்னவன், தங்கியிருக்கும் விலாசத்தையும் கூறிவிட்டு அங்கிருந்து கிளம்பினான்.

மீனா நெடுமூச்செறிந்தாள். அவளுடைய நெஞ்சம் ஏறி இறங்கியது.

# 12. கூட்டுச்சதி...?

மீனுதான் கண்ணபிரானைக் கொலை செய்திருப்பாளா? அவளுடைய நெஞ்சத்தில் அத்தகைய கொடிய எண்ணம் குடிகொண்டிருந்திருக்குமா?

ராஜாமணி தன்னைத்தானே மாறிமாறிக் கேட்டுக் கொண்டான். ஆனால் பதில் எதுவும் சரியான முறையில் கிடைக்கவில்லை. மீனு கொலைகாரியாக இருப்பாள் என்று கற்பனைகூட செய்து பார்க்க முடியவில்லை.

கலவரமடைந்த ராஜாமணி மீனுவின் நினைவாகவே நடந்து கொண்டிருந்தான். அவள் பொய் பேசினாள் என்பதையும், மர்மமான முறையில் ரகசிய வாழ்க்கை நடத்துகிறாள் என்பதையும் புரிந்து கொள்ள அவனுக்கு அதிக நேரம் பிடிக்கவில்லை.

மூக்கனும் அவனுடைய அடியாட்களும் வீட்டிலிருந்து வெளியே போனதை ராஜாமணி நேருக்கு நேராகவே பார்த்திருந்தான். ஆனால் அதை மீனு மறைத்து விட்டாள். யாருமே வரவில்லை என்று பொய் சொன்னாள்.

அவள் பொய் சொல்லவேண்டிய அவசியம் என்ன? தன்னிடமும் இரட்டை வாழ்க்கை நடத்துகிறாளா?

ராஜாமணி பலவிதமான சிந்தனையால் நடந்துகொண்டிருந்த போது சற்றுத் தொலைவில் ஒரு கருப்பு உருவம் எதிரில் வரும் கார்

களின் வெளிச்சம் பட்டுவிடாதபடி மறைந்து மறைந்து செல்வதைக் கவனித்தான். உடனே அந்தக் கருப்பு உருவத்தைப் பின்தொடர்ந்து சென்றான். அந்த உருவமும் மீனாவின் வீட்டில் இருந்துதான் வந்ததா? தானும் மீனாவும் பேசிக்கொண்டிருந்ததை வெளியே மறைந்திருந்து கேட்டுக் கொண்டிருந்ததா?

மீனாவை நினைத்துக் குழம்பிய ராஜாமணி இப்பொழுது கருப்பு உருவம் ஒரு பிரச்னையாக இருந்தது. அந்த உருவத்தினுள் ஒளிந்து கொண்டிருப்பது யார் என்பதை அவனால் புரிந்துகொள்ள முடியவில்லை.

கருப்பு உருவம் பல தெருக்களைக் கடந்து கடைசியில் குபேரனுடைய மாளிகையின் காம்பவுண்டுச் சுவரில் ஏகிறிக் குதித்தது.

பின்னாலேயே வந்துகொண்டிருந்த ராஜாமணியும் சுவர் ஏறிக் குதித்து அந்த உருவத்தைப் பின்தொடர்ந்து சென்றான். நெஞ்சில் திகில் மூண்டபோதிலும் அந்தக் கருப்பு உருவத்தின் முகமூடியைக் கிழிக்கவேண்டும் என்ற எண்ணத்துடன் நடந்தான்.

அந்தக் கருப்பு உருவம் பின்னால் திறந்து கிடந்த கதவு வழியாக உள்ளே சென்றது உடனே ராஜாமணியும் அந்த உருவத்தைப் பின்தொடர்ந்து வீட்டினுள் சென்றான். உள்ளே ஒரே இருட்டாக இருந்ததாலும், அது பழக்கப்படாத இடமாக இருந்ததாலும், அந்த உருவத்தைப்போல் வேகமாக நடந்து செல்ல முடியவில்லை. தட்டுத்தடுமாறி எப்படியோ சென்று மாயமாக மறைந்து விட்டது.

ஏமாந்து விட்டோமே என்று நினைத்தான் ராஜாமணி· கருப்பு உருவத்தைப் பிடித்திருந்தால் இந்த மாளிகையில் மறைந்திருக்கும் மர்ம மனிதன் யார் என்பதை நேருக்கு நேராகத் தெரிந்து கொள்வதற்கு வசதியாக இருந்தது.

ராஜாமணி வந்தவழியாகத் சென்று விடலாமா என்று நினைத்தபோது ''ப்ளிச்''சென்று மின்சார விளக்குகள் எரிந்தன. அவன் தூக்கிவாரிப் போட்டதைப் போன்ற நிலையில் திடுக்கிட்டுப் பார்த்தான்.

அங்கே குமார் மாப்பிள்ளே நின்றுகொண்டிருந்தான்.

அவனைப் பார்த்த ராஜாமணி, "நீங்கள்...நீங்கள்..." என்று தயங்கினான். என்ன பேசுவது என்று அவனுக்குப் புரியவில்லை.

"நள்ளிரவிலும் 'பேப்பர்' போட ஆரம்பித்துவிட்டாய்போலிருக்கிறதே. ஆனால் பின்கதவைத் திறந்துகொண்டு இப்படி திருடனைப் போல் வந்திருக்க வேண்டியதில்லை. நீ மாலினியை ஏமாற்றி அழைத்துக்கொண்டு வந்தபோதே இப்படி ஏதாவது நடக்கும் என்று சந்தேகப்பட்டேன். நான் நினைத்தது நடந்துவிட்டது." என்று சீறினான் குமார்.

"குமார் ஸார், என்னை நீங்கள் தப்பாக நினைத்துவிட்டீர்கள்" என்றான் ராஜாமணி.

"நினைக்காமல் வேறு என்னடா செய்வது? எல்லோரும் தூங்கிய பின்பு அவுட் ஹவுஸில் விழுந்துக் கிடக்கக்கூடிய உனக்கு இங்கே என்ன வேலை...? எதைத் திருடி எடுத்துக்கொண்டுபோகலாம் என்ற எண்ணத்துடன் வந்தாய்? இரும்புப்பெட்டியின் பக்கத்தில் போவதற்குள்ளேயே குமார் மாப்பிள்ளே வந்துவிட்டாரோ...?" என்று கத்திய குபேரன், குமார் மாப்பிள்ளே, போலீஸாருக்கு போன் செய்யுங்கள். அவனை விடக்கூடாது" என்று சீறினார்.

அப்பொழுது மூக்கன் விரைந்து வந்து, 'கையால் ஆகாதவர்கள்தான் போலீஸின் துணையை நாடுவார்கள். உங்கள் சோற்றைத் தின்றுவிட்டு நாங்கள் இருக்கவில்லையா? உத்தரவு கொடுங்கள். இப்பொழுதே அவனைத் தூக்கி இரண்டாகக் கிழித்துப்போட்டு விடுகிறேன்" என்று உறுமினான்.

"என்னையும் பேப்பராக நினைத்துவிட்டிருக்கிறாய் போலிருக்கிறது. நான் மனிதன் என்பதையும், ஓரளவு மூளை உள்ளவன் என்பதையும் மறந்துவிடாதே. நான் பேப்பர் பாய்தான்! ஆனாலும் பேப்பரில் வைத்து நடத்துகிற அளவுக்கு தெளிவான சிந்தனைகள் உண்டு" என்றான் ராஜாமணி. அவன் குரல் திமிருடன் தூக்கியடித்தது.

அப்பொழுது தூங்கிக்கொண்டிருந்த மாலினியும், சமையல் காரன் வாசுவும் விரைந்து அங்கே வந்தார்கள். சிறிது நேரம் வரையில் அவர்களுக்கு ஒன்றுமே விளங்கவில்லை.

"எல்லோரும் இங்கே நின்றுகொண்டு என்ன செய்கிறீர்கள்?" என்று கேட்டாள் மாலினி.

"நீ செய்த தவறுகளுக்கு நாங்கள் தண்டனை அனுபவித்துக் கொண்டிருக்கிறோம். இந்த நள்ளிரவில் ராஜாமணிக்கு நம்முடைய வீட்டில் என்ன வேலை என்று கேள்." கத்தியது குமார்தான்.

மாலினி கண்களை உருட்டி விழித்துவிட்டு, "மிஸ்டர் ராஜா, இதெல்லாம் என்ன?" என்று கேட்டாள் கோபம் பொங்கியது.

"நல்ல பாப்பு ஒன்று இந்த வீட்டினுள் நுழைந்ததைப் பார்த்தேன். அதைக் கண்டபிறகு என்னால் வெளியே இருக்கமுடியவில்லை. உடனே வந்துவிட்டேன்" என்றான் ராஜாமணி, ஓர் உறுமலுடன்.

நல்ல பாம்பா? எங்கே... எங்கே...?" என்று அலறிய மூக்கன், ஏய் வாசு, தடியைத் தூக்கிக்கொண்டு வா...? வீட்டினுள் மறைந்திருக்கும் நல்ல பாம்பைத் தேடி அடிக்கலாம்" என்று ஓலமிட்டான்.

வீட்டினுள் மறைந்த நல்ல பாம்பைத் தேடுவதைவிட நம் எதிரில் நின்றுகொண்டிருக்கும் இந்த நல்ல பாம்பையே அடித்து நொறுக்கலாம். இதைப் போன்ற ஆபத்தான நல்லபாம்பு இந்த உலகத்தில் வேறு எதுவுமே இருக்கப் போவதில்லை." என்று முழங்கினார் குபேரன்.

"என்னைக் கேட்டால் ராஜாமணியை மன்னித்துவிடலாம் என்றே சொல்லுவேன். இந்த வீட்டில் இத்தனை அசம்பாவிதங்கள் நடந்தன என்றால் அதற்குக் காரணம் நம்முடைய மாலினிதான்! அதனால் அவளைத்தான் அடித்து நொறுக்க வேண்டும்" என்று சாடிய குமார் மாப்பிள்ளை, "மாலினி, இப்பொழுது என்ன சொல்லு

கிறாய்? உன் ஆள் எதற்காக இந்த வீட்டினுள் அனுமதி இல்லாமல் நுழைந்தான் என்று கேள்?'' என்று கூறினான்.

மாலினிக்குக் கோபம் வந்துவிட்டது. ''மிஸ்டர் ராஜாமணி, நீங்கள் நடந்துகொள்ளும் முறை கொஞ்சம்கூட சரியில்லை. உங்களை நல்லவர் என்று நினைத்துக் கொண்டிருந்தேன். அந்த நினைவை நொடிப்பொழுதில் வீணாக்கிவிட்டீர்கள் இனியும் இம்மாதிரியாக நடந்துகொண்டால் அதன் பிறகு நடப்பது வேறு மாதிரியாக இருக்கும்.''

''ஆல்ரைட்!'' என்று சொன்ன ராஜாமணி அவர்களுடன் விவாதம் செய்து கொண்டிருக்கிறது சரியான முறையல்ல என்ற எண்ணத்துடன் அங்கிருந்து கிளம்பினான்.

அவன் போனதும் குபேரன், மாலினி, உன்னால்தான் எல்லா தொல்லைகளும் ஏற்படுகின்றன. உன் சித்தப்பா என்ற முறையில் இதையெல்லாம் வேடிக்கைப் பார்த்துக் கொண்டிருக்க முடியாது'' என்று இரைந்தார்.

மாலினி பதில் பேசாமல் தலையைத் தாழ்த்திக்கொண்டு தன்னுடைய படுக்கையறைக்குச் சென்றாள்.

குமார் மாப்பிளே, வாசு நீங்களும் போய் தூங்குங்கள். நானும் மூக்கனும் வியாபார சம்பந்தமாக தனிப்பட்ட முறையில் பேசப் போகிறோம்'' என்றார் குபேரன்.

குமார் மாப்பிள்ளையும், வாசுவும் அவரவர் தூங்கவேண்டிய அறைக்குச் சென்றார்கள்.

''மீனா என்ன சொன்னாள்? வேலைக்கு வருவதாக வாக்களித்து விட்டாள் அல்லவா?'' என்று மெல்லிய குரலில் கேட்டார் குபேரன்.

மூக்கன் ஒரு விஷயத்தில் தலையிட்டால் அது தோல்வியில் முடியுமா? நினைத்ததை எப்படியும் சாதித்தே தீருவேன். மீனா நாளைக்கே கம்பெனி வேலைக்கு வந்துவிடுவாள். நம்முடைய சொற்படி நடப்பதற்கும் தயாராக இருப்பாள்'' என்றான் மூக்கன், பொறுமையாக.

COMICS PDF TIMES

குபேரன் அவன் சொன்னதைக் கேட்டு மகிழ்ச்சியடைந்தார். "உன் திறமையின் மீது எனக்கு நம்பிக்கை உண்டு. ராஜாமணி விஷயத்திலும் நாம் ஒரு முடிவுக்கு வந்துவிட்டால்?"

"அதற்கும் நான் ஓர் அருமையான திட்டத்தை வைத்திருக்கிறேன். நாளை இரவு பன்னிரண்டு மணிக்கு அவன் படுகொலை செய்யப் படுவான் மாலினிக்கு இருக்கும் ஒரே துணையும் அதன்பிறகு போய் விடும். அதன்பிறகு மாலினியிடம் புதுப் பத்திரம் எழுதி வாங்கிக் கொண்டு சுதந்திரமான வாழ்க்கையை நாம் துவக்கலாம்" என்று யோசனை சொன்னான்.

"உண்மையிலேயே இது அருமையான திட்டம். ஆனால் உன்னால் ராஜாமணியைக் கொலை செய்ய முடியுமா?"

முடியுமா என்று ஏன் கேட்கிறீர்கள்! நான் என்ன கொலைகள் செய்து அனுபவம் இல்லாதவனா...? எப்படி எப்படி, எந்தெந்த வழிகளில் புதுமையான முறையில் கொலை செய்யலாம் என்று புத்தகங்கள் வேண்டுமானாலும் எழுதுவதற்குத் தயாராக இருக்கிறேன்."

"புத்தகம் எழுதும் வேலை உனக்கு வேண்டாம். ராஜாமணியைக் கொலை செய்வதற்கான ஏற்பாட்டைச் செய். நாளை இரவு பன்னிரண்டு மணிக்குப் பிறகு அவன் ஏழு வினாடி நேரம்கூட உயிருடன் இருக்கக்கூடாது."

"நிச்சயமாக இருக்கமாட்டான். அதைப் பற்றிய கவலையே உங்களுக்கு வேண்டியதில்லை" என்று உறுதியளித்த மூக்கன் அவருடைய கையைப் பிடித்துக் குலுக்கி மகிழ்ச்சி தெரிவித்தான்.

குபேரன் அடைந்த ஆனந்தத்திற்கு எல்லையே இல்லை. அந்தக் கணத்திலேயே ராஜாமணி கொலையுண்டுவிட்டதைப்போல் உணர்ந்து மகிழ்ந்தார்.

# 13. இறுதி எச்சரிக்கை!

மறுநாள் முக்கியமான வேளையில் ராஜாமணி உட்கார்ந்த படியே தன் சைக்கிளைத் துடைத்துக்கொண்டிருந்தான். இரவில் தன்னைக் கொலைக்காரர்கள் கொலை செய்யக் காத்துக்கொண்டிருக்கிறார்கள் என்பது தெரியாததால், அவனுக்கு எந்தவிதமான கவலையும் இருந்ததாகத் தெரியவில்லை.

அப்போது மாலினி வாசற்பக்கமாக வந்து நின்றுகொண்டு, "உள்ளே வரலாமா?" என்று தயக்கத்துடன் கேட்டாள். குறுஞ்சிரிப்பு அவள் உதடுகளில் மினுமினுத்தது.

ராஜாமணி நிமிர்ந்து பார்த்தான். அவள் எதனால் தயங்குகிறாள் என்பது அவனுக்குத் தெரிந்துவிட்டது. இரவில் நடைபெற்ற ரகசியமான நிகழ்ச்சியின் விளைவுதான் அது.

நீங்கள், அனுமதி கேட்ட பிறகுதான் இங்கே வரவேண்டும் என்பது இல்லை. இது உங்கள் வீடு. எப்பொழுது வேண்டுமானாலும் வரலாம். போகலாம்" என்றான் ராஜாமணி.

உள்ளே வந்து நின்ற மாலினி "நேற்றிரவு உங்கள் மனம் புண்ணாகும்படி ஏதேதோ பேசிவிட்டேன். காலையில் வந்து மன்னிப்புக் கேட்கலாம் என்று நினைத்துக்கொண்டிருந்தேன். அதற்குள் பேப்பர் போடுவதற்குப் போய்விட்டீர்கள்." என்றாள்.

இரவில் நடைபெற்றதை நீங்கள் பெரிய நிகழ்ச்சியாக எடுத்துக்கொண்டிருக்கிறீர்கள்போலிருக்கிறது. நான் அதை அப்பொழுதே மறந்துவிட்டேன்.'' என்ருன் ராஜாமணி, நெஞ்சு நெகிழ.

"அதிருக்கட்டும் நேற்றிரவு எதற்காக வீட்டிற்கு வந்தீர்கள் என்பது நாஞவது தெரிந்துகொள்ளலாமா?'

தெரிந்துகொள்ளலாம். ஆனல் தற்சமயம் முடியாது நேரம் வந்தால் நான் உங்களை அழைத்து விளக்கமாகச் சொல்கிறேன்''

''உங்களையேதான் நம்பிக்கொண்டிருக்கிறேன்.''

"என்னை நம்பிய யாருமே இதுவரையிலும் கெட்டுப்போனதில்லை.

ராஜாமணி இப்படிச் சொன்ன அதே நேரத்தில், ''ஆமாம் அவனை நம்பிய யாருமே கெட்டுப்போனதில்லை. அதனல் நீ அவனை தாராளமாக நம்பு'' என்று கத்திக்கொண்டு குமார் மாப்பிள்ளை அங்கே வந்தான். அவன் கோபத்துடன் வந்திருக்கிருன் என்பதை சிவந்துபோயிருந்த அவனுடைய முகம் பளிச்சென்று எடுத்துக் காண்பித்தது.

''வாருங்கள் குமார் மாப்பிள்ளை!' என்று சிரித்த ராஜாமணி, ''நீங்கள் எப்பொழுது பார்த்தாலும் 'சிடுசிடு'வென்று எரிந்துவிழுகின்றீர்கள். அதிகப்படியான கோபம் ஆரோக்கியமான உடம்புக்கு நல்லதல்ல என்று கூறுவார்கள்'' என்ருன் குறும்புத்தனமாக.

அதைக் கேட்டதும் குமார் மாப்பிள்ளைக்கு இன்னும் கடுமையான கோபம் வந்துவிட்டது. "பார்த்தாயா மாலினி, உன்னை எதிரில் வைத்துக்கொண்டே கேலி செய்து விளையாடுகிருன். இவனை இலேசில் விடலாமா! நீயே சொல்.''

இலேசில் ஏன் விடப்போகிறீர்கள்! கடைசியில் என்னைப் பாராட்டி பொன்முடிப்பு வேண்டுமாஞலும் கொடுங்களேன்.''

"பார்த்தாயா? பார்த்தாயா திரும்பவும் என்னைக் கேலி செய்கிருன். டேய் பேப்பர் பையா? நான் யார் என்று தெரியுமா? இரண்டு

பேர்களுமே எதிர்காலத் தம்பதிகள். ஆழம் தெரியாமல் காலைவிட்டால் நொறுக்கிவிடுவேன், ஜாக்கிரதை.''

குமார் மாப்பிள்ளை இரைந்து கத்தியதும் மாலினி இரண்டு காதுகளையும் பொத்திக்கொண்டு. ''எதனால் இப்படியெல்லாம் மனக் கோட்டை கட்டுகிறீர்களோ என்றுதான் தெரியவில்லை. ஒரு நிமிடம் கூட வாயை வைத்துக்கொண்டு சும்மா இருக்கமாட்டீர்கள் போலிருக் கிறதே'' என்று கடிந்துரைத்தாள்.

''மாலினி'' என்று சீறினான் குமார் மாப்பிள்ளை.

''உங்கள் மிரட்டலுக்கும் உருட்டலுக்கும் இந்த மாலினி பயப் படமாட்டாள். பணியவும் மாட்டாள், அதனால் தயவுசெய்து இந்த இடத்தைவிட்டுப் போய்விடுகிறீர்களா?''

மாலினி இப்படி மிரட்டியதும் குமார் மாப்பிள்ளை ''இதை விடவும் அவமானம் வேறென்ன வேண்டும்! இந்த ராஜாமணி உயிரு டன் இருக்கின்றான் என்ற திமிரில்தானே இப்படி எல்லாம் பேசுகிறாய்? விரைவில் என்ன நடக்கப்போகிறது என்பதை நீயே தெரிந்துகொள் வாய். ஒன்றை மட்டும் சொல்லுகிறேன் மாலினி! நான் பார்ப்பதற்கு அப்பாவியைப்போல் இருக்கலாம். ஆனால் பாய்ந்தால் புலிதான் என் பதை எந்தச் சூழ்நிலையிலும் மறந்துவிடாதே! ராஜாமணியின் மயக் கத்தில் என்னை எடுத்தெறிந்து பேசுகிறாய். அந்த மயக்கம் விரைவில் தெளியத்தான போகிறது.'' என்று கோபத்துடன் கூறிவிட்டு அங் கிருந்து வெளியேறினான்.

''அத்தான் ரொம்பவும் கோபித்துக்கொண்டு போய்விட்டார். எனக்கு ரொம்பவும் பயமாக இருக்கிறது.'' என்றாள் மாலினி, கவலை யோடு.

''ஏன் ..? உங்கள் அத்தான் என்னைக் கொலை செய்துவிடு வாரோ என்று பயப்படுகிறீர்களா? அதைப பற்றிக் கவலைப்பட வேண்டிய அவசியமே இல்லை. ஈட்டி எட்டிய மட்டும்தான் பாயும். அதைப்போல் உங்கள் அத்தானும் எவ்வளவு தூரம பாய்வார் என்பது எனக்குத தெரியும்'' என்று சிரித்தான் ராஜாமணி.

"உங்களுக்கு எல்லாமே விளையாட்டாகத்தான் இருக்கிறது." என்று பயத்துடன் சொன்ன மாலினி, "நான் கொடுத்த பத்திரங்கள் எங்கே இருக்கின்றன?" என்று கேட்டாள்.

"எங்கே இருக்கவேண்டுமோ, அங்கே மிகவும் பத்திரமாக இருக்கின்றன. தேவைப்படும்பொழுது தாமாகவே அப்பத்திரங்கள் வரும்."

"நான்கூடவா பத்திரங்கள் இருக்கும் இடத்தைத் தெரிந்துக் கொள்ளக்கூடாது?"

"நீங்கள் மட்டுமல்ல; வேறு யாராக இருந்தாலும் பத்திரங்கள் இருக்குமிடத்தைத் தெரிந்துகொள்ளக்கூடாது. நான் அவற்றை எடுத்துக்காட்டி முட்டாள்தனமாக நடந்துகொள்ளவும் மாட்டேன்."

மாலினி சைக்கிளின் உட்காரும் ஆசனத்தைப் பிடித்தபடியே நின்றுகொண்டிருந்தபோதிலும் அந்தப் பத்திரங்கள் உள்ளேதான் இருக்கின்றன என்பதைத் தெரிந்துகொள்ள முடியவில்லை.

"நீங்களாக விரும்பாவிட்டால் உங்களை நான் துன்புறுத்தவில்லை. ஆனால் அந்தப் பத்திரங்களை கைப்பற்றுவதற்கு என் சித்தப்பாவும், முக்கனும் அலைபாய்ந்துகொண்டிருக்கிறார்கள் என்பதை மட்டும் நினைவுபடுத்திக்கொள்ளுங்கள்."

"என்னைப்பற்றி உங்களுக்கு நன்றாகத் தெரியாது. தெரிந்திருந்தால் இப்படியெல்லாம் பயந்து பயந்து பேசமாட்டீர்கள்."

"நான் பயப்படவில்லை. உங்கள்மீது எனக்கு பரிபூரண நம்பிக்கை உண்டு. இந்த உலகத்திலேயே உங்கள் ஒருவரைத்தானே நம்பியிருக்கிறேன்."

மாலினி இப்படிச் சொன்ன அதே நேரத்தில் மீனு அவள் சொன்ன வார்த்தைகளைக் காதுகளில் வாங்கிக்கொண்டு அங்கே வந்தாள்.

மீனு எதிர்பாராத நேரத்தில் 'திடுதிப்'பென்று வந்து நிற்பதைக் கண்டதும் இரண்டு பேர்களுமே திடுக்கிட்டார்கள். பத்திரங்

களைப்பற்றி பேசியது அவருடைய காதுகளில் விழுந்திருக்குமே என்பதை நினைத்தபோது அச்சமாக இருந்தது,

''பொருத்தமில்லாத நேரத்தில் வந்துவிட்டேன் போலிருக்கிறது, ராஜாவை எவ்வளவு உயர்வாக நினைத்துக் கொண்டிருந்தேன். இங்கே வந்து நேருக்கு நேராகப் பார்த்த பிறகுதான் அவர் யார் என்பது தெரிகிறது. நான் இந்த உலகத்தில் துர்ப்பாக்கியவதிகளின் கடைசி வரிசையில் நிற்கக் கூடியவள், என்வாழ்க்கை முழுவதுமே கடைசியில் ஏமாற்றமாக முடியவேண்டியதுதானா?'' என்று பொருமிய மீனா, கேவினாள். கண்ணீரைக் கொட்டினாள்.

மாலினி திடுக்கிட்டபோதிலும், சமாளித்துக்கொண்டு, ''மீனா ஏன் இப்படியெல்லாம் பேசுகிறாய்? இங்கே எதுவும் நடந்துவிடவில்லையே'' என்று அமைதியாகச் சொன்னாள்.

அவள் இப்படிச் சொன்னது வெந்த புண்ணில் ஊசியைச் சொருகுவதுபோல் 'சுருக்'கென்று குத்தியது. தனக்குச் சொந்தமான ராஜாமணியை அவள் பணத்தைக் காட்டி பறித்துவிட்டாள் என்றே எண்ணினாள்.

''எதுவுமே நடந்து விடவில்லை என்று என்னைப் பார்த்தா சொல்கிறீர்கள்? இதை விடவும் வேறென்ன வேண்டும்? பரவாயில்லை. நான் வந்து ஏன் உங்கள் மகிழ்ச்சிக்கு இடைஞ்சலாக இருக்கவேண்டும். நீங்கள் இரண்டு பேரும் சாதாரணமாக வாருங்கள்.'' என்று வாழ்த்துவதைப்போல் சொன்ன மீனா, பொங்கி வழிந்துகொண்டிருந்த கண்ணீரைத் துடைத்துவிட்டு, ராஜா, அபாயம் காட்டாற்று வெள்ளம்போல் பொங்கி வந்துகொண்டிருக்கிறது. உங்களை நீங்களே காப்பாற்றிக் கொள்ளாவிட்டால் அழிந்து விடுவீர்கள்.'' என்று சொன்னவள் கடிதத்தை எடுத்துக் கொடுத்தாள்.

அந்தக் கடிதத்தை விடியற் காலம் நான்கு மணியளவில் கருப்பு உருவம் வந்து கொடுத்துவிட்டுப் போயிற்று. அந்தக் கடிதத்தில் மூக்கன் ராஜாமணியைக் கொலை செய்யப்போகும் திட்டம்பற்றி குறிப்பிடப்பட்டிருந்தது.

கடிதத்தைப் படித்துப் பார்த்த ராஜாமணி வாய்விட்டுச் சிரித்துவிட்டு, ''எல்லாமே வேடிக்கையான கதைகள் போல்தான் இருக்கின்றன.'' என்று சொன்னான்.

''என் கடமையைச் செய்து விட்டேன். இனிமேலாவது ஜாக்கிரதையாக நடந்து கொள்ளுங்கள்.'' என்று சொன்ன மீனா, அழுது கொண்டே ஓடினாள்.

''ஒரு பெண்ணுக்கு இன்னொரு பெண்ணைப் பார்த்தால் பொறாமை ஏற்படும் என்று சொல்லுவார்கள், அது மீனாவைப் பொறுத்த வரையில் எவ்வளவு பொருத்தம் பார்த்தீர்களா?''

மாலினி சொன்னதைக் கேட்டு ராஜாமணி சிரித்துக்கொண்டான். அவனுடைய முழுக்கவனமும் கடிதத்தின்மீதே இருந்ததால் சிரிப்பதற்கு மட்டும்தான் அவனால் முடிந்தது.

கடிதத்தில் என்ன எழுதியிருக்கிறது. லவ் லெட்டரா? அதைதான் பார்க்கலாமா?'' என்று சிரித்தாள் மாலினி. குறும்புக்காரி அல்லவா!

ஒருவருக்கு வரும் காதல் கடிதத்தை இன்னொருவர் படித்துப் பார்க்கலாமா? அது தப்பல்லவா?

''அபாயம் காட்டாற்று வெள்ளம்போல் வருகிறது என்றும் அவள் சொன்னாளே.''

''சுமுகமாக நடைபெறும் காரியங்கள்கூட அபாயகரமானவையாகத்தான் தோன்றும். ஆனால் என்னைப் பொறுத்தவரையில் இந்தக் கடிதம் மிக மிகச் சாதாரணமானது.'' என்று சொன்ன ராஜாமணி கடிதத்தை மடித்து முழுக்கால் சட்டைப் பையினுள் வைத்துக்கொண்டு மறுபடியும் சைக்கிளைத் துடைப்பதில் ஈடுபடலானான்.

அவன் எதைப் பற்றியுமே கவலைப்பட்டதாகத் தெரியவில்லை. ஆனால் மீனா கண்ணீர்வடித்துக் கதறியதுதான் நெஞ்சை உறுத்தியது.

# 14 பாதி இரவில்...?

நள்ளிரவு !

மணி பன்னிரண்டு அடிப்பதற்கு இன்னும் சில நிமிடங்களே தான் இருந்தன. ராஜாமணியைக் கொலை செய்யவேண்டும் என்ற எண்ணத்துடன் மூக்கனும் அவனுடைய அடியாட்களான சின்னசாமி, பெரியசாமி ஆகியோரும் ஆளுக்கொரு கத்தி சகிதம் ஓசைப்படாமல் நடந்து வந்துகொண்டிருந்தார்கள்.

"சின்னசாமி, பெரியசாமி, கவனமாகக் கேளுங்கள். அவன் சாதாரணமானவனாயிற்றே என்று நாம் அலட்சியமாக நினைக்கக் கூடாது. கதவை நான் மெதுவாகத் திறப்பேன். உடனே நீங்கள் இரண்டு பேர்களும் ஒரே பாய்ச்சலாகப் பாய்ந்து அவனைக் குத்திக் கொன்றுவிடவேண்டும். உங்கள் குத்தில் உடனடியாக அவன் சாகா விட்டால் உடனே நானும் என் கைவரிசையைக் காட்டுகிறேன்." என்று மெல்லிய குரலில் சொன்னான் மூக்கன்.

மூன்று பேர்களுமே மதுபானத்தில் நீந்தியிருந்ததால் ராஜா மணியைக் கொலை செய்யவேண்டும் என்ற ஒரே வெறியுடனேயே இருந்தார்கள்.

"நீங்கள் கவலைப்படவேண்டாம் வாத்தியாரே! அந்தப் பொடியனை நானே கவனித்துக்கொள்கிறேன்." என்றான் சின்னசாமி.

நான் என்று சொல்லி நம்மிடையே இருக்கும் ஒற்றுமையைக் குலேக்காதேடா, நாங்கள் கவனித்துக்கொள்கிறேம் என்று பெருமை யுடன் சொல்.'' என்று திருத்தினன் இன்னெரு ரௌடியான பெரிய சாமி.

''நாங்கள் கொலே செய்கிறேம் பாஸ், உங்களுக்குத் தூக்கம் வந்தால் நீங்கள் போய் தூங்குங்கள் பாஸ். நாங்கள் அவனேக் கொலே செய்துவிட்டு அதன்பிறகு தூங்குவதற்கு வருகிறேம்.''

தூக்கத்தைப் பிரச்னேயாக எடுத்துக்கொண்டதும் மூக்கனுக்கு கோபம் வந்துவிட்டது. தலேயில் ஆளுக்கொரு குட்டு குட்டி, ''அதிகப் பிரசங்கிகளா? நான் சொன்னதைச் செய்யுங்கள்.'' என்று சொன்னுன்.

உடனே கதவு 'விரிசோ'வென்று திறந்துகொண்டது.

மூக்கன் இன்னும் அவன் தூங்கவில்லேயோ என்று நினேத்துப் பதறியபோதிலும் நிலேமையைச் சமாளித்துக்கொள்ளலாம் என்ற எண்ணத்துடன் மெதுவாக தலேயை நீட்டிப் பார்த்தான்.

உடனே அவனுடைய முகத்தில் திகிலடைந்தது. அவன் பின்னல் வந்துகொண்டிருந்த சின்னசாமியும், பெரியசாமியும் திடுக் கிட்டு திறந்த வாயை மூடமுடியாமல் அப்படியே மரம்போல் நின்றுர்கள்.

அங்கே ராஜாமணி ஒரு நாற்காலியில் கட்டப்பட்ட நிலேயில் இறந்து கிடந்தான். அவனுடைய நெஞ்சிலிருந்து இரத்தம் கொப் பளித்துக்கொண்டிருந்தது. அவன் இறந்துவிட்டான் என்பதைத் தொங்கிப்போயிருந்த தலேயும், வெளியே நின்றிருந்த நாக்கும் பளிச் சென்று எடுத்துக் காண்பித்தன.

''ராஜாமணி இறந்துவிட்டான். அவனுக்கு பல எதிரிகள் இருந்திருப்பார்கள் போலிருக்கிறது. நாம் அவனே கொலே செய்வதற் குள் எதிரிகளே முந்திவிட்டார்கள். நமக்கு கொலே செய்ய வேண்டிய சிரமம் குறைந்துவிட்டது.'' என்று சொன்ன மூக்கன், தன் கையாட்

களையும் அழைத்துக்கொண்டு நேராக குபேரன் மாளிகையினுள் நுழைந்தான்.

குபேரன், ராஜாமணி கொலை செய்யப்பட்டான் என்ற நல்ல செய்தியைக் காதுகுளிர கேட்கவேண்டும் என்ற ஆவலினல் ஒரு இடத்திலும் நிற்கமுடியாமல் குறுக்கும் நெடுக்குமாக நடந்து கொண்டிருக்கிருர். கால்கள் தரையில் பற்ற மறுத்தன.

"வெற்றி-வெற்றி-கொஞ்சமும் எதிர்பார்க்காத மகத்தான வெற்றி. உடம்பை அலட்டிக் கொண்டிருந்த ராஜாமணி பரிதாபமாக இறந்துவிட்டான்." என்று மகிழ்ச்சியுடன் சொல்லிக்கொண்டே ஓடி வந்த மூக்கன், குபேரனை இறுகத் தழுவிக்கொண்டான்.

"சபாஷ்! இப்போதுதான் எனக்கு பாதாம்கீர் குடிப்பதுபோல் இனிப்பாக இருக்கிறது. நல்ல செய்தியைத் தந்தீர்கள். உங்களை எத்தனை தடவைகள் வேண்டுமானுலும் பாராட்டலாம்." என்று சொன்ன குபேரன் சின்னசாமி பெரியசாமி ஆகியோரின் கைகளையும் பிடித்துக் குலுக்கி பாராட்டு தெரிவித்தார்.

"ஆனல் ஒரு மாற்றம் முதலாளி. அவனை நாங்கள் கொலை செய்யவில்லை. எங்களுக்கு முன்னல் வேறு எவனே ஒருவன் போட்டி போட்டு முந்திக்கொண்டு அவனைக் கொலை செய்துவிட்டான்." என்றுன் மூக்கன்.

"ஆச்சரியமாக இருக்கிறதே! என்னல் இதை நம்பமுடிய வில்லை. ஆனலும் என்ன? எந்த வழியிலும் அவன் செத்துத் தொலைந்தால் சரிதான்." என்று வெறுப்புடன் சொன்ன குபேரன்; அதிருக்கட்டும், பிணத்தை என்ன செய்தீர்கள்? அப்புறப்படுத்தி விட்டீர்களா? ஏனென்றுல் கொலை நடந்திருக்கும் இடம் நம்முடைய அவுட் ஹவுஸ்." என்று நினைவுபடுத்தினுர்."

"இந்த மகிழ்ச்சியான செய்தியை முதலில் உங்கள் காதுகளில் போடவேண்டும் என்பதால் பிணத்தைப்பற்றி ஒன்றும் சிந்திக்காமல் வந்துவிட்டோம். விடிவதற்குள் அந்தப் பிணத்தை ஒரு சாக்குப்

பையினுள் அடைத்து எடுத்துச்சென்று கடலில் போட்டுவிட்டு வந்து விடுகிறோம். நீங்கள் எந்தவிதமான கவலையும் இல்லாமல் அமைதியாகத் தூங்குங்கள்.'' என்று சொல்லி அவரை உற்சாகப்படுத்தினான் மூக்கன்.

உடனே குபேரன் தயாராக எடுத்து வைத்திருந்த சில ரூபாய் நோட்டுக்களை அவன் கையில் வைத்து அழுத்தி, ''காரியத்தை கச்சிதமாகச் செய்துமுடி. ராஜாமணி இறந்துவிட்டான் என்பதோ, அவன் பிணம் அப்புறப்படுத்தப்பட்ட விஷயமோ எக்காரணத்தைக் கொண்டும் மாலினிக்குத் தெரியக்கூடாது. தெரிந்தால் உடனே நம் எல்லோரையுமே போலீசில் பிடித்துக் கொடுத்துவிடுவாள்.'' என்று நினைவூட்டினார்.

''இதைப் போன்றக் கொலைகளைச் செய்வதும், இரவோடு இரவாக பிணத்தை எடுத்துச் சென்று மறைப்பதும் எங்களுடைய தொழில், அதனால் பாம்புக் குட்டிகளுக்கு எதுவுமே கற்றுக்கொடுக்க வேண்டாம்.'' என்று சொன்ன மூக்கன், தன் அடியாட்கள் சகிதம் வெளியே போனான்.

ராஜாமணியின் அறைக்கதவு திறந்தபடியே கிடந்தது. ஆனால் இதுவரையிலும் எரிந்துகொண்டிருந்த விளக்கு மட்டும் அணைந்து ஒரே இருட்டாக இருந்தது.

''வாத்தியாரே! விளக்கு அணைந்திருப்பதைப் பார்த்தால் பயமாக இருக்கிறது. ராஜாமணியைக் கொலைசெய்த கொலைகாரன் வீட்டினுள்ளே பதுங்கியிருப்பான் போலிருக்கிறதே.'' என்று நடுங்கினான் சின்னசாமி.

பெரியசாமியும் அதையேதான் எதிரொலித்தான். பொதுவாக இரண்டு கொலைகாரர்கள் ஒருவருடன் ஒருவர் மோத தயங்குவார்கள்.

மூக்கன் இரண்டு பேர்களுக்கும் ஆளுக்கொரு உதை கொடுத்துவிட்டு, 'தொடை நடுங்கிப் பசங்களா, கையில் கத்தி வைத்திருப்

பதை மறந்து விட்டீர்களா?'' என்று சிறியவன் வீட்டினுள் சென்று சுவரைத் தடவி சுவிட்ச் இருக்கும் இடத்தைக் கண்டுபிடித்து விளக்கை எரிய விட்டான்.

அதே சமயத்தில் சின்னசாமியும், பெரியசாமியும் கூச்சல் போட்டார்கள்.

அவர்களுடைய செய்கையில் மேலும் ஆத்திரமடைந்த மூக்கன், பிணம் கிடந்த நாற்காலியைப் பார்த்தான், அவனும் அதிர்ச்சியால் தாக்குண்டான்.

நாற்காலியில் கயிறு மட்டும்தான் இருந்தது. ஆனால் ராஜா மணியின் பிணம் அங்கே காணப்படவில்லை.

''பிணத்தையும் கொலை செய்தவனே எடுத்துக்கொண்டு போய் விட்டான் போலிருக்கிறது. ஒருவிதத்தில் இதுவும் நமக்கு நல்லது தான். சிறிதளவு வேலைப்பளு குறைந்தது'' என்று சொன்ன மூக்கன், பிணம் வீட்டின் மற்ற அறைகளில் இருக்கக்கூடுமோ என்று சந்தே கத்துடன் ஒவ்வொரு அறையாகச் சென்று பார்த்தான்.

ராஜாமணியின் பிணம் எந்த அறையிலுமே இல்லை.

''ஆச்சரியமாக இருக்கிறது வாத்தியாரே! பிணம் எப்படியோ மாயமாக மறைந்துவிட்டதே.'' என்றான் சின்னசாமி.

''எல்லாம் நம்முடைய நல்ல நேரத்திற்கு அறிகுறிதான்.'' என்று சொன்ன பெரியசாமி, ''வாத்தியாரே! பிணம் மாயமாக மறைந்துவிட்ட செய்தியையும் குபேரன் ஐயாவின் காதுகளில் போட்டு வைக்கலாமா?'' என்று கேட்டான்.

''முட்டாள்! இந்த விஷயத்தைக் குபேரனிடம் சொன்னால் நிலைமை என்னாகும் தெரியுமா? காணாமல்போன பிணத்தைத் தேட வைத்து நம்மையும் பிணமாக்கிவிடுவான். அதனால் பிணத்தை நாமே

அப்புறப்படுத்திவிட்டதாக பொய் சொல்லவேண்டும். அப்பொழுது தான் கைநிறைய பணமும் கிடைக்கும்'' என்று சொன்ன மூக்கன், அந்த இடத்தை விட்டுக் கிளம்பினுன்.

சின்னசாமியும், பெரியசாமியும் அவனுடைய நிழலைப்போல் பின்தொடர்ந்தார்கள். எந்த வழியைக் கையாண்டாவது பணத்தை அடைந்தால் அதுவே அவர்களுக்குப் போதுமானது.

# 15 பேயின் ஆர்ப்பாட்டம்!

வீட்டினுள் சென்று எதையாவது உளறி கையில் கிடைப்பது வரையில் சுருட்டிக்கொண்டு போகலாம் என்று எண்ணிய மூக்கன் வீட்டின் அருகில் வந்ததும் மிகவும் உரத்த குரலில் பாடும் ஒரு பாட்டு கேட்டது. அங்கேயே நின்று வீட்டினுள் பாடிக்கொண்டிருப்பது யார் என்று கவனித்தான்.

அந்தக் குரல் ராஜாமணியினுடையதைப் போல் இருந்தது. இறந்துபோன அவன் ஆவியாய் அலைந்து பாடிக்கொண்டிருக்கிருனே? யாரையாவது பழிக்குப்பழி வாங்கவேண்டும் என்ற எண்ணத்துடன், அந்த ஆவி வீட்டுக்குள்ளேயே சுற்றிக்கொண்டிருக்கிறதா?

''புன்னகை வீசும் பூங்கொடி கன்னியே நாணம் ஏனடி...?'

இந்த ஒரே ஒரு வரி மட்டும்தான் மாறி மாறிக் கேட்டுக் கொண்டே இருந்தது; ராஜாமணியினுடைய குரல்தாஞ அது?

''வாத்தியாரே இறந்துபோன அந்தப் பேப்பர்காரன் பாடுகிருன்போல் தோன்றுகிறதே...? இறந்துபோன அவஞல் மறுபடியும் எப்படி உயிர்பெற முடிந்தது? எனக்குப் பயமாக இருக்கிறது. நாம் அவனைக் கொலை செய்ய முயற்சி செய்தவர்கள் என்பதாலே நமக்கும் ஆபத்து ஏற்படலாம் '' என்ருன் சின்னசாமி.

''அந்த பாட்டின் வரிகள் உங்கள் காதுகளில் விழுகிறதா வாத்தியாரே! காதலன் காதலியை நினைத்துப் பாடுவதைப் போலவே அந்தப் பாட்டு அமைந்திருக்கிறது.'' என்று சொன்ன பெரியசாமி, ''நாம் வேறு வழியாக நம்முடைய ஜாகைக்குப் போகலாமே'' என்று நினைவுபடுத்தினன்.

''வாங்கடா தொடைநடுங்கிப் பசங்களா... பேயாவது பிசாசாவது? என்னவென்று நேரிலேயே பார்த்துவிடலாம்'' என்று துணிந்து விட்ட மூக்கன் ஹாலினுள் நுழைந்தான்.

அந்த ஹாலினுள் இருட்டாக இருந்தது. நடுவே இருந்து தான் அந்தப் பாட்டு ஒலித்துக்கொண்டிருக்கவேண்டும்.

பாட்டைக் கேட்டு தூக்கம் கலைந்து எழுந்து வந்த மாலினி, விளக்குகளை எரிய விட்டுவிட்டு கோபத்துடன் பார்த்தாள்.

சோபாவின்மீது ராஜாமணி சாய்ந்து கிடந்தவாறு பாடிக் கொண்டிருக்க, குமார் மாப்பிள்ளை, குபேரன், மூக்கன், சமையல் காரன் வாசு ஆகியோர் ஆளுக்கொரு மூலையில் நின்றுகொண்டிருந் தார்கள்.

இறந்துபோன ராஜாமணி பேயாக வந்திருக்கிருனே என்று நினைத்துப் பதறிய குபேரன் பேய்...பேய்...'' என்று அலறிய வாறு ஓடிச்சென்று குமார் மாப்பிள்ளையைக் கட்டிப்பிடித்துக் கொண்டார்.

''பேயாவது மண்ணாவது, எல்லாம் பித்தலாட்டம். இந்த பேப்பர் பயலை இப்பொழுதே கிழித்தெறிந்து விடுகிறேன்'' என்று கூறிவிட்டு முன்னால் பாய்ந்த குமார், ராஜாமணி ''ஹா...ஹா...'' என்றவாறு எழுந்து நின்று சிரித்ததும் சற்றுப் பின்வாங்கினன். அவன் சிரிந்தச் சிரிப்பு உயிரை உறிஞ்சும் பேயின் சிரிப்பாக இருந்தது.

''மிஸ்டர் ராஜாமணி, என்ன இதெல்லாம்...? உங்களுக்குப் பைத்தியம் பிடித்துவிட்டதா? ஏன் இப்படியெல்லாம் ஆர்ப்பாட்டம் செய்கிறீர்கள்?'' என்று மாலினி கண்டித்தாள்.

'பைத்தியம் பிடிக்கவில்லை மாலினி தங்கச்சி. அவனுக்கு பேய் பிடித்திருக்கிறது'' என்று அலறினன் மூக்கன். அவன் குரல் ஊளையாக மாறியது.

''பேயாக இருந்தால் யாருமே பக்கத்தில் போகாதீர்கள்'' என்றான் சமையல்காரன் வாசு.

அவர்கள் சொல்லுவதையெல்லாம் காதுகளில் வாங்கிக் கொண்ட ராஜாமணி, ''ஹோ... ஹோ'' என்று அடித்ொண்டையிலிருந்து கத்திச் சிரித்துவிட்டு அங்கிருந்து வெளியே போனான்.

அதன்பிறகு ஒவ்வொருவரும் ஒவ்வொரு விதமாகப் பேசினார்களே தவிர, எந்தவிதமான பயனும் கிட்டவில்லை.

மாலினியும், குமாரும், சமையல்காரன் வாசுவும் தூங்கச் சென்ற பின்பு, குபேரன் மூக்கனை மட்டும் தனியாக அழைத்துக் கொண்டு மாடிக்குப் போனார்.

''ஏ மூக்கன்! இதற்கு நீ என்ன சொல்லுகிறாய்? அவன் நம் எல்லாரையும் முட்டாள்களாக்கிவிட்டு தன்னை யாரும் அசைக்க முடியாது என்று சவால் விடுபவனைப்போல் நடந்துகொள்வதைப் பார்த்தாயா?'' என்று அவனை கண்டிப்பதைப்போல் சொன்னார், குபேரன்.

மூக்கன் தனக்கு மகத்தான தோல்வி கிடைத்துவிட்டதைப் போல் வேதனையுற்று விழித்தான். ராஜாமணியை கற்பனையில் நினைத்துப் பார்ப்பதற்கே பயமாக இருந்தது.

ராஜாமணி தப்பிவிட்டான் போல்தான் தெரிகிறது. அவன் செத்துக் கிடப்பவனைப்போல் பாவனை செய்து எல்லோரையுமே ஏமாற்றிவிட்டான்'' என்றான் மூக்கன்.

''அவன் மிகவும் சாமர்த்தியசாலியாக இருப்பதால் பத்திரங்கள் அவனிடம்தான் இருக்கலாம் என்று நினைக்கிறேன். அதனால் நான்

முழு சக்தியையும் பிரயோகித்து முதலில் பத்திரத்தைத் தேடிப் பார்க்க வேண்டும் நாம் இந்த விஷயத்தில் ஏமாந்துவிட்டால் அவர்கள் சட்டப்படியான நடவடிக்கை எடுத்து உடனே நம்மை ஓட ஓட துரத்தி விடுவார்கள். எனக்கு இந்த வீட்டில் எந்தவிதமான பிடிப்புகளும் இல்லை.'' என்று வருத்தத்துடன் சொன்ன குபேரன் அடுத்து என்னென்ன செய்யலாம் என்று தீவிரமாகச் சிந்திக்கலானார்.

ராஜாமணி தன் வீட்டின் கதவைத் தள்ளி திறந்துகொண்டு உள்ளே நுழைந்ததும், ''என்னங்க...'' என்று கூப்பிட்டுக்கொண்டே மாலினி வந்தாள்.

''வாருங்கள் மாலினி, இந்த வேடிக்கையான கதையை உங்களிடம் சொல்லித்தான் சிரிக்கவேண்டும் என்று நினைத்தேன்''என்றான் ராஜாமணி.

நீங்கள் சிரிப்பதற்கு நினைக்கிறீர்கள். அதே நேரத்தில் உங்கள் உயிருக்கு ஆபத்து காத்திருக்கிறது என்பதும் மறந்துவிட்டீர்கள். இனிமேல் நீங்கள் ஒரு விநாடி நேரம்கூட இங்கே இருக்கக் கூடாது.''

'இங்கே இருக்கவேண்டாம் என்றுப் வெளியேபோய் பேசுவோம். எனக்கு இங்கே இருப்பதும், வெளியே போவதும் ஒன்றுதான்.''

ராஜாமணியும் மாலினியும் வெளியே வந்தார்கள். ராஜாமணி சைக்கிளை மறக்காமல் தள்ளிக்கொண்டே வந்தான்.

''இங்கு சைக்கிளையும் ஏன் தள்ளிக்கொண்டு வருகிறீர்கள்? வீட்டின் ஒரு மூலையில் போட்டு வைத்தால் அங்கேயே கிடக்காதா?'' என்று பேச்சோடு பேச்சாகக் கண்டித்தாள் மாலினி.

இதை நீங்கள் வெறும் சைக்கிள் என்ற கண்ணோட்டத்துடன் பார்க்கிறீர்கள். ஆனால் அதை நான் என் உயிரை விடவும் மேலாக மதிக்கிறேன். நானும் இந்த சைக்கிளும் ஒரு விநாடி நேரம்கூட பிரிந்திருக்கத் தயாராக இல்லை.''

"கல்யாணம் செய்துகொண்ட பிறகுகூட சைக்கிளை பிரிய மாட்டீர்களே!" என்று சிரித்தாள் மாலினி.

"கல்யாணம் செய்துகொண்ட பிறகல்லவா நாம் அதைப் பற்றிப் பேசவேண்டும். இப்பொழுது நான் பிரம்மச்சாரி. நீங்களும்..." என்று நிறுத்திய ராஜாமணி, நாம் இப்பொழுது எதற்காக கள்ளக் காதலர்களைப்போல் தனியாக வருகிறோம்...? உங்கள் குமார் மாப்பிள்ளை பார்த்தால் அவ்வளவுதான்." என்று கண்களைச் சிமிட்டினான்.

அவருக்கு வேறு வேலையே இல்லை. எப்பொழுது பார்த்தாலும் நான் என்ன செய்கிறேன், எங்கே போகிறேன் என்றெல்லாம் பார்ப்பதுதான் அவருடைய வேலை. சித்தப்பாவுடன் சேர்ந்துகொண்டு அவர் நடந்து கொள்ளுகிற முறை எனக்கு கொஞ்சம்கூட பிடிக்கவில்லை. கல்யாணமே வேண்டாம் என்றுகூட சொல்லிவிடலாமா என்று தோன்றுகிறது."

இரண்டு பேர்களும் இருட்டோடு இருட்டாக புல்வெளியில் பேசிக்கொண்டிருந்தார்கள்.

"குமார்மீது நீங்கள் வெறுப்புக் கொள்வீர்கள் என்பது எனக்குத் தெரியும். பொதுவாக ஓயாமல் குறுக்கிட்டு தொல்லைகள் கொடுக்கக்கூடிய வாலிபர்களை பெண்களுக்குப் பிடிக்காது. என்னைப் போல் இங்கிதம் தெரிந்து நடந்துகொள்பவர்கள்தான் பெண்களுக்குத் தேவை" என்று சிரித்தான் ராஜாமணி.

"போதும் ராஜாவே! உங்கள் குறும்புத்தனம்! முதலில் நாம் இங்கே எதற்காக வந்திருக்கிறோம் என்பதைப்பற்றிப் பேசுவோம்" என்றாள் மாலினி.

"மற்றவர்களுடைய இடைஞ்சல் இருக்கக்கூடாது என்பதற்காக நாம் இங்கே தனியாக வந்திருக்கிறோம்" என்று சொன்ன ராஜாமணி, தான் இறந்து விட்டவனைப்போல் நடித்து அவர்களுடைய கொலைத் திட்டத்தை முறியடித்த விஷயத்தையும் சொன்னான்.

"கொலை செய்வதற்குக்கூட என் சித்தப்பா தயாராகி விட்டாரா? இனி நாம் எச்சரிக்கையுடன் இருந்தேதான் ஆக

வேண்டும்.'' என்று சொன்ன மாலினி உங்களைக் கொலை செய்ய நினைத்தார்கள் என்பதற்கு ஆதாரம் இருக்கிறதா?'' என்றுபதறினாள்.

''அந்த ஆதாரம் நாளை கிடைத்துவிடும். உடனே சட்டரீதியான நடவடிக்கை எடுக்கலாம்'' என்று சொன்ன ராஜாமணி, ''மாலினி, உங்கள் உயிருக்கும் எந்த நிமிடமும் ஆபத்து நேரிடலாம். அதனால் விழிப்பாகவே இருங்கள்'' என்று எச்சரித்தான்.

மாலினி உண்மையிலேயே பயந்தாள். தன் சித்தப்பா பணத்துக்காகவே அப்படிப்பட்ட பஞ்சமா பாதகங்களை வேண்டுமானாலும் செய்வதற்குத் தயாராக இருப்பவர் என்பது அவளுக்குத் தெரியும். மேலும் அவருடைய கட்டளைகளை உடனுக்குடன் நிறைவேற்றி வைப்பதற்கு மூக்கன் இருக்கிறானே!

''என்னைக் கொலை செய்யவேண்டிய அவசியம் அவர்களுக்கு இருந்தபோதிலும் பத்திரங்கள் கிடைப்பது வரையில் என்னை ஒன்றுமே செய்யமாட்டார்கள். அதனால் நான் தைரியமாக இருக்கலாம்.'' என்றாள் மாலினி, ஒரு மன உறுதியுடன்.

''அப்படியானால் நான் ஜாக்கிரதையாக இருக்க வேண்டியதன் அவசியத்தை உணருகிறேன். என்னை அவர்கள் மீண்டும் மீண்டும் கொலை செய்வதற்கு முயற்சி செய்யலாம்'' என்றான் ராஜாமணி.

''ஆமாம், அதனால் நீங்கள் ஜாக்கிரதையாக நடந்துகொள்ள வேண்டும் என்பதை ஒருபோதுமே மறந்துவிடாதீர்கள்'' என்று மாலினி சொல்லிக்கொண்டிருந்தபோது ''அதைக் கவனித்தீர்களா! மனிதனைப் போன்ற அமைப்பைக் கொண்ட ஒரு கருப்பு உருவம் போகிறது'' என்று கூறி சுட்டிக் காட்டினாள்.

ராஜாமணி நிமிர்ந்து பார்த்தான் பரபரப்போடு.

மங்கலான நிலா வெளிச்சத்தில் ஒரு கருப்பு உருவம் வேகமாகப் போய்க்கொண்டிருப்பது அவனுடைய பார்வையில் பளிச்சிட்டது.

"இந்தக் கருப்பு உருவம் உங்கள் மாளிகையிலிருந்துதான் வெளியே போகிறது போல் தோன்றுகிறது. உடனே இதைப் பின் தொடர்ந்து செல்லவேண்டும். அந்த உருவம் யார் என்பதைத் தெரிந்துகொண்டால் சில பயன்தரக்கூடிய மாறுதல்கள் ஏற்படலாம்" என்று சொன்ன ராஜாமணி பத்திரமாக அவளை வீட்டுக்கு அனுப்பி விட்டு தன் சைக்கிளில் ஏறி விரைந்தான்.

ஆனால் அதற்குள் அந்த உருவம் எங்கேயோ, மறைந்து சென்றுவிட்டது.

மீனாவைத் தேடிக்கொண்டு அந்த உருவம் போயிருக்குமோ?

இப்படியொரு எண்ணம் எழுந்ததும் ராஜாமணி சைக்கிளை வெகு வேகமாக ஓட்டிச் சென்று மீனாவின் வீட்டின் எதிரில் உள்ள மரத்தின் அடியில் மறைந்து நின்றுகொண்டு கவனித்தான்.

கருப்பு உருவம் விடிவது வரையிலும் அந்தப் பக்கமாக வரவே இல்லை.

COMICS PDFTIMES

# 16. காதலில் ஒரு நாடகம்!

மறுநாள் காலையில் ராஜாமணியும் மாலினியும் ஜோடியாக மீனுவின் வீட்டிற்கு வந்தார்கள்.

மீனு வேலைக்குப் புறப்படுவதற்காகத் தயாராகிக்கொண்டிருந்தாள். அவர்கள் இருவரையும் பக்கத்துப் பக்கமாகப் பார்த்தது அவளுக்கு என்னவோபோல் இருந்தது.

வீடு தேடி வந்திருப்பவர்களை மலர்ந்த முகத்துடன் வரவேற்க வேண்டும் என்ற நல்லெண்ணம் படைத்த மீனு, ''வாருங்கள்.'' என்று கூறி இரண்டு நாற்காலிகளை இழுத்துப் போட்டாள்.

''வாழ்க்கையில் எதிர்பாராதவிதமாக முன்னேற்றம் வந்திருக்கிறது போலிருக்கிறதே, பரவாயில்லை.'' என்று சிரித்த ராஜாமணி, வீட்டை நாலா பக்கமும் பார்த்துவிட்டு, மீனு சீக்கிரமாக பணக்காரியாகிவிட்டாலும் ஆச்சரியப்படமுடியாது.'' என்று சொன்னான்.

அவன் சொன்ன ஒவ்வொரு வார்த்தைகளும் மீனுவின் நெஞ்சைக் குத்தின. ஆயினும் சமாளித்துக்கொண்டாள்.

''நான் பணக்காரியாகிவிட்டால்...?'' என்று கூறிவிட்டுச் சிரித்த மீனு, ''நேற்று நான் உங்கள் வீட்டுக்கு வந்திருந்தபோது முதலாளி மகள் என்றுகூட பார்க்காமல் ஏதேதோ பேசிவிட்டேன். எதையும் மனதில் போட்டுக்கொள்ளாதீர்கள்.'' என்று சொன்னவள் தலையைத் தாழ்த்திக்கொண்டாள்.

மாலினி முகத்தைத் தாழ்த்தியபடி ராஜாமணியை ஓரக்கண்ணுல் பார்த்துச் சிரித்தாள். "என் இருதயம் தாமரை இலையைப் போன்றது. தண்ணீர் அந்த இலையில் தங்குமா? அதைப்போல்தான் நீ சொன்ன வார்த்தைகளையும், பார்த்த வெறுப்பு கலந்த பார்வையையும் அப்பொழுதே மறந்துவிட்டேன். பொதுவாக தான் மனதாரக் காதலிக்கும் ஒருவனை இன்னொருத்தி கவர்ந்து கொண்டாள் என்ருல் ஒருவிதமான ஆவேசம் வரத்தான் செய்யும். ஆனுல் என்னைப் பொறுத்த வரையில் உன் ராஜாவுக்கு நான் தங்கை உடன் பிறக்காத அண்ணன் தங்கை என்று சொன்னுல்கூட அது எங்களைப் பொறுத்த வரையில் பொருந்தும்."

அவள் மனம் திறந்து உண்மையைத்தான் சொல்லுகிருளா? அல்லது சென்னையில் சில ஆண்களும் பெண்களும் அண்ணன்—தங்கை என்று வெளிப்படையாகச் சொல்லிக்கொண்டு திரைமறைவில் காதல் நாடகம் நடத்துகிருர்களே, அதைப் போன்றதாக இருக்குமா? மற்றப் பெண்கள் எப்படிப் பட்டவர்களாக இருந்தாலும், மாலினியைப் பொறுத்த வரையில் ஔளவு நல்லவளாக இருப்பாள் என்றே மீனு நம்பினுள். ஆனுலும் பெண்களின் உள்ளத்தில் என்னென்ன இருக்கின்றது என்பது யாருக்குத் தெரியும்?

மீனு, இப்பொழுது என்மீதுள்ள சந்தேகங்களெல்லாம் போயிருக்கும் என நினைக்கிறேன். என்னை ஓரளவு நம்பவும் செய்திருப்பாய்," என்ருள் மாலினி.

"ஓரளவு அல்ல, முழுக்க முழுக்கவே நம்புகிறேன். என் முதலாளியின் மகளாகிய உங்களை நம்பாமல் வேறு யாரை நான் நம்புவேன்? திக்கற்ற எனக்கு வேலை கொடுத்து ஆதரிக்கிறீர்கள். தேவையான பண உதவிகளையும் அவ்வப்போது செய்கிறீர்கள்."

"நான் கம்பெனி சார்பாக உன்னிடம் பேசவரவில்லை. ஒருவருக்கொருவர் தெரிந்தவர்கள் என்ற முறையிலேயே பேசவந்திருக்கிறேன். நம்முடைய பேச்சு நட்பு சூழ்நிலையிலேயே அமைய வேண்டும்."

மாலினியின் பேச்சு பிடிகையுடன் அமைந்திருக்கவே மீனு, அவர்கள் இரண்டு பேர்களும் தன்னிடமிருந்து எதைத் தெரிந்து கொள்ளலாம் என்று வந்திருக்கிறார்களோ என்று தோன்றாமல் குழம்பினாள்.

''நட்பு சூழ்நிலை என்று நீங்கள் பேசுவதின் பொருள் எனக்கு விளங்கவில்லை. இதுவரையிலும் என்னை நீங்கள் எதிர்தரப்பு ஆளாகத் தான் மதித்து வந்தீர்களா?''

உடனே ராஜாமணி மாலினிக்காகப் பரிந்துகொண்டு பேசினான். ''நட்பு சூழ்நிலை என்றால் சுற்றி வளைக்காமல் உண்மையைச் சொல்லவேண்டும் என்று சொல்லுகிறார்.''

மீனு தலையைத் தாழ்த்திக்கொண்டு, ''எதை எதையோ பேசி என்னை மேன்மேலும் குழப்பத்திற்குள்ளாக்காதீர்கள்.'' என்று சொன்னாள்.

இனிமேல் மாலினியின் ஆதரவில் இருக்கமுடியாது என்ற சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது உன்னுடைய எச்சரிக்கையின் காரணமாக பயங்கர கண்டத்திலிருந்து தப்பினேன். உனக்கு நன்றி தெரிவிக்க நினைத்தபோதிலும் என்னுடையவளாகிய உனக்கேன் நன்றி தெரிவிக்கவேண்டும் என்று என்னை நானே கேட்டுக் கொண்டேன்.''

நீங்கள் நன்றி தெரிவிக்கவும் வேண்டாம். அந்த நன்றியை நான் ஏற்றுக் கொள்ளவும் வேண்டாம். நீங்கள் 'என்னுடையவள்' என்று சொன்னீர்களே, அது ஒன்றே எனக்குப் போதும். நான் இதுவரையிலும் அனுபவித்துவந்த துன்பங்களையெல்லாம் நொடிப் பொழுதில் மறந்துவிட்டேன்.'' என்று சொன்னபோது மீனுவின் உதடுகள் ஆசைப் பெருக்கினால் துடித்தன.

''மீனு, உன் ராஜாமணியை உன்னிடமே ஒப்படைத்துவிடுவது என்ற முடிவுக்கு வந்துவிட்டேன்.'' என்றாள் மாலினி நமட்டுச் சிரிப்புடன்.

என்ன பேசுவது என்று மீனுவுக்குப் புரியாததால் மௌனமாக நின்றுகொண்டிருந்தாள்.

"ஏன் மீனு, நான் உன் வீட்டிலேயே தங்கலாம் என்று முடிவு செய்திருக்கிறேன். இதில் உனக்கு எந்தவிதமான ஆட்சேபணைகளும் இல்லையே?"

"ஆட்சேபணையா...? என் ராஜா என்னுடனேயே இருக்கப் போகிறேன் என்று சொல்லும்போது எனக்கென்ன ஆட்சேபனை இருக்கப்போகிறது? அதை என் பெருமையாகவே கருதுகிறேன். ஆனால்..."

"ஆனால் என்று பேச்சை இழுப்பது என்னை நேற்று மனிதனாகப் பாவிக்கிறாய் என்றுதான் பொருள். உண்மையான அன்பு இருந்தால் மறுவார்த்தையே பேசமாட்டாயே."

"நான் இப்பொழுதும் மறுவார்த்தை பேசவில்லை. ஆனால் நான் கல்யாணமாகாத பெண். நாம் இரண்டு பேர்களும் ஒரே வீட்டில் தங்கினால் பார்ப்பவர்கள் என்ன நினைத்துக்கொள்வார்கள்?"

ராஜாமணி அவளைப் பார்த்துச் சிரித்துவிட்டு, பார்ப்பவர்களைக் கண்டு நீ பயப்படுவதாக இருந்தால் நாளைக்கே முறைப்படி திருமணம் செய்துகொள்ளலாம். எனக்காகவேதான் உயிர் வாழ்ந்து கொண்டிருப்பதாக பலமுறை சொல்லியிருக்கிறாயே! மாலினி முன் நின்று நம் கல்யாணத்தை 'ஜாம் ஜாம்' என்று நடத்தி வைப்பார்கள். எப்படியும் நானும் நீயும் இனிமேல் தனித்தனியாகப் பிரிந்திருக்கக்கூடாது. ஒரே வீட்டில் வாழ்க்கை நடத்தவேண்டும்." என்று சொன்னவன், அவள் என்ன சொல்லப்போகிறாள் என்பதை அறியும் பொருட்டு ஆவலுடன் அவளைப் பார்த்தான்.

மாலினியும் கண்களை இமைக்காமல் அவனையே கவனித்துக் கொண்டிருந்தாள். இரண்டு பேர்களுமாகச் சேர்ந்து மீனுவிடம் ஒரு நாடகமாடவேண்டும்." என்று முன்கூட்டியே திட்டம் போட்டிருந்தார்கள்.

மீனுவின் முகம் முழுவதும் வியர்வை அரும்பியிருந்தது. என்ன பேசுவது என்று தோன்ருதவளைப்போல் தத்தளித்தாள். உதட்டைப் பிதுக்கிக் கொண்டு தடுமாற்றம் அடைந்தாள்.

"ஏன் மீனு யோசிக்கிருய்? இதுவரையிலும் என்னிடம் காட்டியது எல்லாமே போலி நடிப்புத்தானு? காதல் என்று சொன்னதும், போலி நடிப்புத்தானு? என்ன யோசிக்கிருய்? முடியாது என்று சொன்னுல் உன்னைக் கட்டாயப்படுத்தப்போவதில்லை. எதைப் பேசுவதாக இருந்தாலும் வெளிப்படையாகவே கூறலாம்." என்று அவசரப்படுத்தினுன் ராஜாமணி.

மீனு தவித்துத் தத்தளித்துவிட்டு, "நான் உங்களைப் போல் எந்த ஒரு விஷயத்திலும் படபடப்படைய மாட்டேன் நாம் இரண்டு பேரும் நிச்சயமாகக் கல்யாணம் செய்துகொள்ளத்தான் போகிருேம். அதற்காக அவசரப்பட்டுவிடக்கூடாது. நல்ல நாள் பார்க்கவேண்டாமா? நிச்சயதாம்பூலம் செய்யவேண்டாமா? வேண்டியவர்களையெல்லாம் வரவழைத்து விருந்து கொடுக்கவேண்டாமா? மேலும் இது மாசி மாதம். இந்த மாதத்தில் யாராவது கல்யாணம் செய்வார்களா? சித்திரை பிறக்கட்டும். நாம் சிறப்பான முறையில் கல்யாணம் செய்துகொள்ளலாம்." என்று ஒரே மூச்சில் பேசி முடித்தாள்.

"ஆல்ரைட்! நீ என்றைக்கு சரி என்று சொல்கிருயோ, அன்றைக்கே திருமணம் செய்துகொள்கிறேன்" என்று வெறுப்புடன் சொன்ன ராஜாமணி, வழக்கம்போல் உன்னைப் பார்ப்பதற்கு இங்கே வரலாம் அல்லவா? அதற்கொன்றும் தடையில்லையே" என்ருன்.

"நீங்கள் பகலில் எப்பொழுது வேண்டுமானுலும் வாருங்கள்."

"ஆமாம், ஆமாம். இரவில் நான் ஏன் வீட்டுப்பக்கம் வரக்கூடாது? வந்தால் உனக்கு இடைஞ்சலாக இருப்பதுடன், உன் நல்ல பெயருக்கும் களங்கம் வந்துவிடும். பக்கத்து வீட்டுக்காரர்கள் உன் நடத்தையைப் பற்றிச் சந்தேகிக்கவும் செய்துவிடுவார்கள்." என்று கிண்டலாகச் சொன்ன ராஜாமணி, 'காதலியைச் சந்திப்பதற்கு இரவு மட்டும்தான் நல்ல நேரமா என்ன? நான் பகலிலேயே வருகிறேன்."

என்று கூறியவுடன், மாலினியையும் அழைத்துக்கொண்டு புறப் பட்டான்.

மீனுவின் உள்ளம் எப்படிப்பட்டது என்பதையோ, அந்த உள்ளத்தில் என்னென்ன மறைந்து கிடக்கின்றன என்பதையோ ராஜாமணியால் தெரிந்துகொள்ளமுடியவில்லை. சமீபத்தில் அவள் நடை உடை பாவனைகள் முற்றிலுமே மாறுபட்டிருப்பதை உணர்ந் தான். குறிப்பாக அவள் இரத்தக்கறையுடன் ஓடிவந்து சைக்கிளில் மோதியபிறகு அவள் பழைய மீனுவாக இருக்கவில்லை.

அந்த மீனு சிரிப்பாள். அந்தச் சிரிப்பில் பெண்மைக்குறிய அடக்கம் இருக்கும். 'ராஜா ராஜா' என்று ஆசை ஆசையாகக்கூப்பிடு வாள். அன்பையெல்லாம் அள்ளித்தந்து பேசுவாள்.

பழைய மீனுவையும், புதிய மீனுவையும் கற்பனை செய்து பார்ப்பதற்கே ராஜாமணிக்கு வருத்தமாக இருந்தது.

கண்ணபிரானின் கொலைதான் அவளை இந்த அளவுக்கு மாற்றிவிட்டதா? அவளுடைய வீட்டுக்கு இரவு நேரத்தில் வந்து போகிறவர்கள் எல்லாம் அந்தக் கொலையுடன் தொடர்பு உடையவர்க ளாகத்தான் இருப்பார்களா?

“மாலினி, மீனுவைப்பற்றி என்ன நினைக்கிறீர்கள்? ஒரு பெண்ணை இன்னொரு பெண்ணால் எளிதில் புரிந்துகொள்ள முடியும்.” பாம்பின் கால் பாம்பறியும் அல்லவா?

இரண்டு பேர்களும் பக்கத்துப் பக்கமாக நடந்தவாறு பேசிக் கொண்டே சென்றார்கள். சைக்கிள்தான் நடுவே இருந்து இரண்டு பேர்களையும் தனித்தனியாகப் பிரித்தது

“மீனு எங்கள் கம்பெனியில் வேலை பார்க்கிறாள் என்பது மட்டும் எனக்குத் தெரியும். அவள் பெண்களுடன்கூட அதிகப்படி யான தொடர்பு வைத்துக் கொள்வதில்லை. தனியாகவே போவாள், தனியாகவே வருவாள்.”

“அவளைப்பற்றி என்ன நினைக்கிறீர்கள் என்று கேட்கிறேன்”

"ஒன்றும் தெரியாத அப்பாவிப் பெண்ணாக இருப்பாள் என்றே நினைக்கிறேன். ஆனாலும் எந்த ஒரு முடிவுக்கும் வருவது மிகவும் கடினமாக இருக்கிறது."

"லதா கம்பெனிக்கு வேலைக்குப் போவதை அடிக்கடி நான் பார்த்திருக்கிறேன். சில நாட்களில் அவள் நடந்து போவாள். வேறு சில நாட்களில் அவளை ஏற்றிச் செல்வதற்கு ஜீப் கார் வரும். ஜீப் காரில அவள் ஏறிச் சென்றதை பல நாட்களில் பார்த்திருக்கிறேன். அந்த அளவுக்கு பெரிய வேலையாக லதா பார்க்கிறாளா? உங்கள் கம்பெனியைப் பற்றி என்னைவிடவும் அதிகமாக தெரிந்து வைப்பீர்களே...!"

எனக்கு அதிகமாக எதுவும் தெரியாது. இனிமேல் வேண்டுமானால் அவள் என்ன வேலை செய்கிறாள் என்பதையும் கவனிக்கிறேன்." என்று சொன்ன மாலினி, "இப்பொழுது நீங்கள் என்ன செய்யப்போகிறீர்கள்? நேராக வீட்டுக்கே போகிறீர்களா?" என்று கேட்டாள்.

"உங்கள் சித்தப்பாவை தனிமையில் சந்தித்து சில விஷயங்கள் பேசவேண்டியிருக்கிறது. அவருடைய எண்ணத்தைத் தெரிந்து கொண்ட பிறகுதான் இப்பொழுது இருக்கும் வீட்டிலேயே தங்குவதா? அல்லது வேறு எங்கேயாவது போய் தங்குவதா என்ற முடிவுக்கு வருவேன்" என்றான் ராஜாமணி.

"அப்படியானால் நான் முதலில் போகிறேன். நான் வீட்டுக்குப் போய்ச் சேர்ந்த ஐந்து நிமிடங்கள் கழித்து நீங்கள் வாருங்கள். நாம் இரண்டு பேர்களும் ஜோடியாக நடந்து செல்லும் காட்சியை குமார் மாப்பிள்ளை பார்த்தால் அவ்வளவுதான்." என்று மாலினி சிரித்ததும், அவள் சொன்னதின் உள்நோக்கத்தைப் புரிந்துகொண்டு ராஜாமணியும் சிரித்தான்.

இரண்டு பேர்களும் நீண்ட நேரம் வரையில் மனம் விட்டு பேசிக்கொண்டே இருந்தார்கள். உள்ளத்தில் ஒளிந்து கிடந்தவை எல்லாம் வார்த்தைகளாகப் பீறிட்டுக்கொண்டு வந்தன.

சுருட்டு ஒன்று புகைத்தவாறு மாடிப்படிகள் வழியாக இறங்கி வந்த குபேரன் அமைதி இல்லாமல் தத்தளிக்கிறார் என்பதை அவருடைய முகமே படம் பிடித்துக் காட்டியது. எதிரில் வந்துகொண்டிருந்த சமையல்காரன் வாசுவின்மீது மோதிய பிறகுதான் இந்த உலகத்தில் நடமாடுவதைப் போன்ற காட்சி உணர்ச்சி ஏற்பட்டது. அவர் குற்றம் செய்துவிட்டதைப் போல் நிமிர்ந்து பார்த்தார்.

''எஜமான், மீனு என்று யாரோ ஒரு பெண் உங்களைத் தேடிக் கொண்டு வந்திருக்கிறாள். உங்களை அவசரமாகப் பார்க்கவேண்டுமாம்.'' என்று சொன்னான் வாசு.

''மீனுவா...? அவள் இங்கேயே வந்துவிட்டாளா? மாலினி பார்த்துவிட்டால் என்னுவது? ஏற்கெனவே எனக்கு ஓராயிரம் கெட்ட கெட்ட பெயர்கள்.'' என்று பதறிய குபேரன் புத்துணர்ச்சி பெற்றவன்போல் வேகமாக இறங்கி ஓடினார்.

ஹாலில், மீனு தாவணியின் நுனியை இழுத்து கழுத்தோடு சேர்த்து நெஞ்சகத்தை மறைத்து மூடியவாறு அமைதியே உருவான சிலையைப்போல் நின்றுகொண்டிருந்தாள். 'களை' என்பதே அந்த முகத்தில் இல்லை.

வேகமாக வந்த குபேரன், ''மீனு நீயா? இங்கே ஏன் வந்தாய்? இந்த வீட்டின் பக்கமே வரக்கூடாது என்று எத்தனை முறை சொல்லியிருக்கிறேன். நீ இங்கே வந்து நிற்பதை மாலினி பார்த்தால் என்னுவது? நம்முடைய உறவை எல்லோருக்கும் வெளிச்சம் போட்டுக் காட்டினால்தான் உனக்கு நிம்மதி ஏற்படுமா?'' என்று சீறினார். கால்கள் தரையில் பற்றவில்லை

மீனு பொங்கி வழிந்த கண்ணீரை உள்ளங்கையால் துடைத்துக் கொண்டு ''இந்த வீட்டின் பக்கமே வரக்கூடாது, யாருக்கும் எந்த விதமான தொந்தரவும் கொடுக்கக்கூடாது என்றுதான் நினைத்துக் கொண்டிருந்தேன். ஆனால் உங்களுக்குத் தொந்தரவு கொடுக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டுவிட்டது. அதற்காக என் மனப்பூர்வமாக வருந்துகிறேன். இனிமேல் இந்த வீட்டுப் பக்கமே வரமாட்டேன்.

நான் இங்கே வருவது இதுதான் கடைசி தடவையாக இருக்கும்'' என்று சொன்னவள், துயரமாக எழுதி வைத்திருந்த ஒரு கடிதத்தை அவர் கையில் கொடுத்தாள்.

''லவ் லெட்டரா?'' என்று கேட்டுவிட்டு அதை வாங்கி பிரித்து படித்த குபேரன் அமைதியில்லாமல் தத்தளித்துவிட்டு அவள் முகத்தைக் கூர்ந்து பார்த்தார். எத்தனையோ விதமான மாற்றங்கள் அவள் முகத்தில் ஏற்பட்டன,

''மீனு, இவ்வளவு சீக்கிரத்தில் இப்படி எனக்குத் துரோகம் செய்ய முன்வருவாய் என்பதை நான் நினைத்துக்கூடப் பார்க்கவில்லை. உன்னை எவ்வளவோ நம்பியிருந்தேன். அந்த நம்பிக்கையை வீணாக்கிவிட்டாய். இப்படியொரு முடிவுக்கு வருவதற்கு உனக்கு சரியாக இருக்கிறதா?'' என்று கூறியவர் அந்தக் கடிதத்தைக் கிழித்தெறிந்தார்.

என் மனதுக்குச் சரி என்று பட்டிருப்பதால்தான் உங்களிடமிருந்து ஒதுங்கிக்கொள்ளலாம் என்று நினைக்கிறேன்.''

''ஒதுங்கிக்கொள்வதா? அது அவ்வளவு எளிதில் நடந்துவிடும் என்று நினைக்கிறாயா? நான் உயிருடன் இருப்பது வரையில் அது நிச்சயமாக முடியாது. நீ எனக்குச் செய்த சத்தியங்களையெல்லாம் மறந்துவிட்டாய்? நீ கேட்டபோதெல்லாம் பணத்தை அள்ளி அள்ளிக் கொடுத்தேனே! உன்னை ஓரளவு வசதியாக வாழவும் வைத்திருக்கிறேனே! எல்லாவற்றையும் தேய்ந்துபோன கனவுகளாக நினைத்துவிட்டாயா?'' என்று கெஞ்சுவதைப்போல் சொன்ன குபேரன், கடைசியில் குரலில் கனத்தைத் தேக்கிக்கொண்டு, ''நீ என்னுடன் இருந்தேதான் ஆகவேண்டும். அதில் எந்தவிதமான மாற்றத்தையும் அனுமதிக்க முடியாது.'' என்று சொன்னார்.

''நீங்களே இப்படிச் சொன்னால் என்னால் என்ன செய்ய முடியும்? ஏற்கெனவே நான் குழம்பிப்போயிருக்கிறேன். இந்த உலகத்தில் வாழுவது அவசியம்தானா என்று சிந்திக்கும் அளவுக்கு எனக்கு விரக்தி ஏற்பட்டிருக்கிறது. உயிரை மாய்த்துக்கொள்ளலாமா

என்றுகூட சில வேளைகளில் நினைக்கிறேன்'' என்று சொன்ன மீனு குலுங்கிக் குலுங்கி அழுது கண்ணீர் வடித்தாள். அவளுடைய நெஞ்சுக்குள் இடி இடித்தது.

ஆனால் அவளுடைய கண்ணீரைக் கண்டு கல்நெஞ்சக்காரரான குபேரன் கலங்கவேண்டுமே!

"என்னை விட்டுப் போவேன் என்று நீ சொல்லுகிறாயே, அதைவிட 'உயிரை மாய்த்துக்கொள்ளலாமா என்று நினைக்கிறேன்' என்று சொல்லுகிறாயே, அது எவ்வளவோ மேலானது. உன் பிணத்தைக்கூட என்னைவிட்டுப் பிரிக்கமுடியாது என்றால் அதைவிட வேறு விளக்கம் வேண்டியதில்லை நானும் நீயும் இணைந்து வாழ்ந்தால் அப்பொழுது கிடைக்கும் மகிழ்ச்சியைப் போன்றது வேறு எதுவுமே இருக்கமுடியாது.''

குபேரன் உரத்த குரலில் சொன்ன அதே நேரத்தில், "அங்கே என்ன சித்தப்பா...? வீட்டையே சந்தைக்கடையாக்கிவிடுவீர்கள் போலிருக்கிறதே!'' என்று கேட்டுக்கொண்டே மாலினி வந்தாள்.

அவளைக் கண்டதும் மீனு தலையைத் தாழ்த்தியவாறு வேகமாக நடந்து சென்றாள். அவள் முகத்தை நிமிர்ந்து பார்க்கும் தெம்பும், துணிவும் மீனுவுக்கு இல்லை. மாலினி தன்னைப் பற்றி என்ன நினைத்துக்கொள்வாளோ என்ற பயம் இருக்கத்தானே செய்யும்.

"என்ன சித்தப்பா இது? ஏன் பேசாமல் நின்றுகொண்டிருக்கிறீர்கள்? உங்கள் விருப்பப்படி எதுவேண்டுமானாலும் செய்யலாம் என்று நினைத்துவிட்டீர்களா?'' என்று அவள் எரிந்து விழுந்தாள்.

குபேரன் ஒரு நாற்காலியை இழுத்துப் போட்டு உட்கார்ந்துகொண்டு, "மீனு, நம்முடைய கம்பெனியில் வேலை செய்யக்கூடியவள். லீவு வேண்டும் என்று கேட்டாள். இப்பொழுது முடியாது என்று சொல்லிவிட்டேன்.'' என்று சொன்னார் நயவஞ்சகமாக.

"நீங்கள் என்னதான் சொன்னாலும் அதைக்கேட்டு நான் திருப்தி அடையும் நிலையில் இல்லை. நிர்வாகம் ஒழுங்காகவும், நல்ல

முறையிலும் நடைபெறவேண்டும். கம்பெனியின் நிர்வாகத்துக்கு கெட்ட பெயர் ஏற்பட இந்த மாலினி சம்மதிக்கவே மாட்டாள்'' என்று சீறிய மாலினி வேகமாகச் சென்றாள்.

அவள் என்னமாய் முகத்தை வைத்துக்கொண்டு பேசிவிட்டாள்! குபேரன் அதிர்ச்சியடைந்த போதிலும் அவளை விரைவில் ஒழித்துக் கட்டிவிடலாம் என்ற எண்ணத்துடன் அமைதியடைந்தார். மாலினியால் தன்னை என்ன செய்துவிட முடியும் என்ற அலட்சியமான போக்கு அவரிடம் இருந்தது. திமிர் தலைதூக்கியது

அவர் குழப்பத்துடன் உட்கார்ந்திருந்தபோது, வரட்டுமா ஸார்?'' என்று கேட்டுக்கொண்டே ராஜாமணி வந்து எதிரில் நின்றான்.

குபேரன் திடுக்கிட்டபோதிலும் நிமிர்ந்து உட்கார்ந்து கொண்டு, ''உன் மனத்தில் என்ன நினைத்துக்கொண்டு இப்படியெல்லாம் கலாட்டா செய்கிறாய் என்று தெரியவில்லை உத்தரவில்லாமல் வீட்டினுள் நுழைவதும், பாட்டுப்பாடி கூப்பாடு போடுவதும், என் மகளைக் கூட்டிக்கொண்டு அலைவதும் நன்றாக இல்லை. அதன் பிறகு நான் கடுமையான நடவடிக்கை எடுக்கவேண்டிய அவசியம் ஏற்படும்.'' என்று மிகவும் கடுமையாக எச்சரித்தார். கிடா மீசையைத் திருகிக்கொண்டு கண்களை உருட்டினார்.

''நான் வேடிக்கையாக நினைத்துதான் அப்படி நடந்து கொண்டேன், வேறு எவ்விதமான கெட்ட எண்ணமும் இல்லை.'' என்று சொன்ன ராஜாமணி ''நான் பேப்பர் போடும் வேலையை விட்டு விடலாம் என்று நினைக்கிறேன்' என்று கூறினான்.

''இப்பொழுதுதான் பிழைக்க வேண்டும் என்ற புத்தி உனக்கு வந்திருக்கிறது. நீ வேலை தேடும் நோக்கத்துடன் வெளியூர் போய் விட்டால் மிகவும் நன்றாக இருக்கும்'' என்றார் குபேரன்,

"நான் வெளியூருக்குப் போவதாக இருந்தால் இந்தப் பிரச்சினையை உங்களிடம் கிளப்பியிருப்பேனா? உங்கள் கம்பெனியில்

எனக்கு ஏதாவது ஒருவேலை போட்டுக் கொடுங்கள். என்றான் ராஜாமணி நயமாக.

அவன் சொன்னதைக் கேட்டதும் குபேரன் எழுந்து நின்று 'கடகட'வென்று சிரித்துவிட்டு, நீ பேப்பர் போடக்கூடிய பெரிய ஆபீசர். உனக்கெல்லாம் எங்கள் கம்பெனி வேலை ஒத்து வருமா? மேலும் உன்னைப் போன்ற குறும்புத்தனம் கொண்டவர்களுக்கு வேலை கொடுப்பதும் இல்லை. வேலை கொடுத்தால் என்ன நடக்கும் தெரியுமா? கம்பெனியை இழுத்து மூடிவிட்டு காவி கட்டிக்கொண்டு காசிக்குப் போகவேண்டியதான்'' என்று குத்தலாகச் சொன்னார்.

ராஜாமணி ஏதேதோ சொல்லிப் பார்த்தும் பயன் கிடைக்காமல் போகவே, ''மாலினி சிபார்சு செய்தால் வேலை கொடுப்பீர்களா?'' என்று மெதுவாகக் கேட்டான். அதிலும் குறும்புத்தனம் தலை தூக்கியது. அதைக் கேட்ட குபேரனுக்கு எல்லையற்ற கோபம் வந்துவிட்டது தரையில் நிற்கமுடியாமல் துள்ளினார்.

''கடவுளே நேரில் வந்து சிபார்சு செய்தாலும் நீ எங்கள் கம்பெனியின் பக்கம்கூட வரமுடியாது.'' என்று அவர் ஆணவத்துடன் கொந்தளித்தார்.

அவரிடம் பேசிக்கொண்டிருப்பது பயனற்றது என்பதைப் புரிந்து கொண்ட ராஜாமணி தீர்மானமான எண்ணத்துடன் வெளியே போனான்.

மாலினி தன்னைப் பின்தொடர்ந்து வருவாள் என்று ஆவலோடு எதிர்பார்த்தான். அவள் ஏனோ வரவில்லை. அவளும் அந்தச் சாக்கடையில் கலந்து விட்டாளோ!

# 17. விளக்குகள் பலவிதம்!

குபேரன் அண்டுகோ ஊறுகாய் கம்பெனி கிண்டிக்குப் போகும் வழியில் சைதாப்பேட்டைக்கு அப்புறம் இருந்தது. இதன் நாற்புறமும் ஓர் ஆள் உயரத்திற்கு கருங்கல் சுவர்கள் எழுப்பப்பட்டிருந்தன. உள்ளே என்ன நடக்கின்றன என்பதை மற்றவர்கள் பார்க்கக் கூடாதோ!

மாலினியும் ராஜாமணியும் டாக்சியில் வந்து காம்பவுண்டுக்கு வெளியே நிறுத்தி இறங்கினார்கள்.

இதற்கு முன்னால் மாலினி இரண்டொரு தடவை அவளுக்குச் சொந்தமான பெரிய காரில் வந்திருக்கிறாள். அவளுடன் குபேரனும் வந்திருக்கிறார். இப்பொழுது வாடகைக் காரில் அவள் வந்திருப்பது இதுதான் முதல் தடவை. அதிலும் வாலிபன் ஒருவனுடன் வந்திருப்பதை பார்ப்பவர்களை எல்லாம் வியப்படையச் செய்தது.

வாசலில் காவலுக்காக நின்றுகொண்டிருந்த கூர்க்கா மாலினி இன்னார் என்று அடையாளம் தெரிந்துகொண்டு 'சல்யூட்' அடித்த போதிலும், ராஜாமணியை உள்ளே அனுமதிக்க மறுத்தான்.

அவனுடைய செய்கையைக் கண்டு ஆத்திரமடைந்த மாலினி, "ஏய் கூர்க்கா, என்னிடமே உன் அதிகாரத்தை செலுத்துகிறாயா? டிஸ்மிஸ் செய்துவிடுவேன் ஜாக்கிரதை'' என்று மிரட்டினாள்.

அந்தக் கம்பெனியின் எஜமானி அவள்தானே! அவளுக்கில்லாத அதிகாரம் இந்த உலகத்தில் வேறு யாருக்கு இருக்க முடியும்?

ராஜாமணி 'திருதிரு' என்று விழித்துக்கொண்டிருந்தான்.

கூர்க்கா வாயைப் பொத்திக்கொண்டான். குபேரன் அண்டு கோவுக்கு மாலினிதான் உரிமையாளர் என்பது அவனுக்கு மட்டுமல்ல, எல்லா தொழிலாளர்களுக்குமே தெரியும்.

"வாருங்கள் மிஸ்டர் ராஜா, நாம் போய் ஒவ்வொரு பிரிவுகளாகப் பார்த்துவிட்டு கடைசியாக மீனுவையும் சந்திக்கலாம். உங்கள் எதிர்கால மனைவியான அவள் என்ன வேலை செய்கிறாள் என்பதை நேருக்கு நேராகவே நீங்கள் தெரிந்துகொள்ள வேண்டாமா?" என்று அவள் சொன்னபோது கூடவே குறும்புத்தனமும் கொடிகட்டிப் பறந்தது.

மாலினி வினயமாகச் சிரித்ததும், ராஜாமணி சண்டை நடந்தாலும், நயவஞ்சமாக ஆபத்து நிகழுவதாக இருந்தாலும் சமாளிப்பதற்கு தன்னைத் தயார் செய்துகொண்டு அவள் பின்னால் போனான். நேர்மையான முறையில் தொழில் தோன்றவில்லை. ஏதோ ஒரு பயங்கரம் உறைந்து கிடப்பதைப் போன்ற எண்ணமே மேலிட்டது.

தொழிற்சாலை மானேஜர் சதாசிவம், மாலினியையும், ராஜாமணியையும் பார்த்ததும் திடுக்கிட்டு "மன்னிக்கவேண்டும் பாப்பா. வெளியாட்களை இங்கே அனுமதிப்பதில்லை." என்று கூறி ராஜாமணியைத் தடுத்து நிறுத்தினார்.

"ஏன் வெளியாட்களை அனுமதிப்பதில்லை? நாம் நேர்மையான முறையில் அரசாங்கத்தின் அங்கீகாரம் பெற்றுத்தானே தொழில் நடத்துகிறோம்." என்று கண்டிப்பதைப்போல் சொன்னாள் மாலினி.

"அதெல்லாம் எங்களுக்குத் தெரியாது. மானேஜிங் டைரக்டரான மிஸ்டர் குபேரன் யாரையும் எக்காரணத்தைக் கொண்டும் உள்ளே அனுமதிக்கக்கூடாது என்று மிகவும் கண்டிப்பான முறையில் உத்திரவு போட்டிருக்கிறார்; தனியாக நீங்கள் வந்திருப்பதால் உத்தரவு

உங்களுக்கு கூடப் பொருந்தும். தயவுசெய்து இவரைக் கூட்டிக் கொண்டு போய்விடுங்கள். உங்கள் சித்தப்பா வரக்கூடிய நேரம் ஆகி விட்டது. வந்து உங்களைப் பார்த்துவிட்டால் என்னை உடனே வீட்டுக்கு அனுப்பிவிடுவார்.'' என்றார் தொழிற்சாலை மானேஜர் சதா சிவம், மிகவும் கண்டிப்பாக.

நான் யாரிடமும் அனுமதி வாங்கவேண்டிய அவசியம் இல்லை.'' என்று சொன்ன மாலினி, ராஜாமணியையும் அழைத்துக்கொண்டு உள்ளே போனாள்,

அவர் 'திருதிரு' என்று விழிக்கலானார்.

உள்ளே ஏராளமான விசாலமான அறைகள் இருந்தன. அந்த அறைகளில் வரிசை வரிசையாக உட்கார்ந்து பலவிதமான ஊறுகாய் தினுசுகளை அரிந்து கொண்டிருந்தார்கள்.

சில அறைகளில் ஊறுகாய்களை பாட்டில்களில் நிரப்பி 'சீல்' வைத்துக்கொண்டிருந்தார்கள்.

எல்லா அறைகளிலும் சென்று பார்வையிட்ட ராஜாமணி, ''மீனாவை எங்குமே காணமுடியவில்லையே.'' என்று சொன்னதும், மாங்காய் ஊறுகாய்க்கு உப்பு போட்டுக்கொண்டிருந்த ஒரு பெண்ணிடம் மாலினி விசாரித்தாள்.

''அவள் பார்சல் செக்ஷனில் வேலை செய்கிறாள்'' என்று சொன்ன அந்தப் பெண்மணி அந்த அறையை நோக்கி சுட்டிக் காட்டினாள்.

உடனே மகத்தான வெற்றி கிடைத்து விட்டதைப்போல் உற்சாகமடைந்த ராஜாமணியும் மாலினியும், சாத்தப்பட்டுக் கிடந்த அந்த அறையை நோக்கி விரைவாக நடந்தார்கள். மீனாவின் மர்மம் துலங்கும் நேரம் சமீபத்தில் நெருங்கி வந்துவிட்டது.

அறைக் கதவுக்குமேல் சிவப்பு விளக்கு ஒன்று பிரகாசமாக எரிந்துகொண்டிருந்தது. அதன் அடியில் 'தொடாதே அபாயம்' என்ற எழுத்துக்கள் பளிச்சிட்டன.

ராஜாமணி அந்த எழுத்துக்களையும், சிவப்பு விளக்கையும் பார்த்தவுடன் என்ன செய்வது என்று தோன்றாமல் நின்றான். இதற்கு முன்னால் இந்த அறையின் பக்கத்திலேயே வந்திராததால் மாலினியும் விழித்தாள்.

அதே சமயத்தில் கூர்க்கா ஒருவன் ஓடிவந்து 'ஜாவ்...ஜாவ்..! சிவப்பு விளக்கு எரிந்துகொண்டிருக்கும்போது இந்த அறையின் பக்கமே வரக்கூடாது. உயிருக்கே 'டேஞ்சர்' வந்துவிடும் என்று இரைந்தான்.

அந்தக் கதவில் ஏதோ ஒரு மர்மம் இருப்பதையும், அந்த அறையினுள் சட்ட விரோதமான செயல்கள் நடக்கக்கூடும் என்பதையும் ராஜாமணி தெரிந்து கொண்டான். ஆனால் அது என்ன தொழில் என்றுதான் அவனுக்குப் புரியவில்லை.

''எதனால் உயிருக்கு டேஞ்சர் ஏற்படும்.....! மற்றவர்கள் தெரிந்து கொள்ளக்கூடாத ஆட்சமத்தொழில் ஒன்றும் இங்கே நடைபெறவில்லையே'' என்று ராஜாமணி சந்தேகத்துடன் கேட்டுக்கொண்டிருந்தபோதே, ''கூர்க்காவிடம் என்ன பேச்சு...? என்னைக் கேட்டால் நான் சொல்கிறேன்'' என்ற அழுத்தமான குரல் கேட்டது.

ராஜாமணியும், மாலினியும் திடுக்கிட்டுத் திரும்பிப்பார்த்தார்கள்.

குபேரனும் கையாள் மூக்கனும் வேகமாக வந்துகொண்டிருந்தார்கள். அவர்களுடைய நடையில் மிகுந்த பரபரப்பு காணப்பட்டது. சாய்ப்பதற்கு அவர்கள் தயாராகி விட்டார்கள்போலும்.

மானேஜர் சதாசிவம் டெலிபோன் செய்து விஷயத்தைத் தெரியப்படுத்தி இருக்கவேண்டும் என்று எண்ணிய ராஜாமணி, உங்கள் தொழிற்சாலையில் எப்படி ஊறுகாய் தினுசுகள் தயாரிக்கிறார்கள் என்பதை நேரிலேயே தெரிந்து கொள்ளலாம் என்று ஆர்வம் ஏற்பட்டது. வந்துவிட்டோம்'' என்று சொன்னான்.

குபேரன் தன்னுடைய கோப உணர்ச்சிகளைக் கொஞ்சமும் காட்டிக் கொள்ளாமல் சிரித்தார். ஆனால் அந்தச் சிரிப்பின் பின்னணியில் ஒரு பயங்கரம் மின்னுவதை ராஜாமணியால் தெரிந்து கொள்ள முடிந்தது.

"என்னம்மா மாலினி, நீயா இப்படி பொறுப்பு இல்லாமல் நடந்துகொள்கிறாய் என்பதை கனவில்கூட நினைத்துப் பார்க்க முடியவில்லை. எத்தனையோ கார்கள் இருக்கும்போது நீ சாதாரண வாடகைக் காரில் வரலாமா? நம்முடைய அந்தஸ்து என்னுவது? இங்கே இருக்கும் வேலைக்காரர்கள் என்ன நினைத்துக்கொள்வார்கள்...?" என்று உரிமையுடன் மாலினியைக் கண்டித்த குபேரன், "நீங்கள் இரண்டு பேர்களும் இப்படி நடந்துகொள்வீர்கள் என்பது முன்கூட்டியே தெரிந்திருந்தால் நானே இங்கே அழைத்து வந்து எல்லா இடங்களையும் சுற்றிக் காண்பித்திருப்பேன்." என்று அமைதியாகச் சொன்னார் எல்லாமே போலி நடிப்பு.

அவருடைய திடீர் மாற்றம் புரிந்துகொள்ள முடியாத புதிராக தோன்றியது. அவர் வந்த வேகத்தை கவனித்தபோது ஏதோ ஒன்று நடக்கப்போகிறது என்று ராஜாமணி நினைத்திருந்தான். அவன் நினைத்ததற்கு மாறுதலாக இப்போது இருந்தது.

"ராஜாமணி, நான் உனக்கு ஏன் வேலை கொடுக்கவில்லை என்பதை இங்கே வந்ததும் தெரிந்துகொள்ளலாம் என்று நினைக்கிறேன். ஏனென்றால் சுறுசுறுப்புடன் கூடிய பெண்களுக்குத்தான் இங்கே வேலை கொடுத்திருப்பேன்." என்று சொன்ன குபேரன் குறும்புத்தனமாகச் சிரித்துவிட்டு அருகில் நின்றுகொண்டிருந்த மூக்கனிடம், "இல்லையடா மூக்கா!" என்றார்.

"ஆமாம், ஆமாம். இப்பொழுது பெண்ணாக மாறினால்கூட உடனடியாக வேலை கிடைக்கும்." என்று கனத்த குரலில் சிரித்தான் மூக்கன் கேலியாக.

உணர்ச்சிகளை அடக்கிக்கொண்ட ராஜாமணி, "பெண்ணாக மாறும் பிரச்னை இருக்கட்டும். ஏனென்றால் சில ஆண்கள் பார்ப்ப

தற்கு ஆண்களைபோல் தோற்றமளித்தாலும் செய்கையால் அசல் பெண்ணாகவேதான் இருக்கிறார்கள்.'' என்று சொல்லிவிட்டு இந்தக் கதவில் ஏன் சிவப்பு விளக்கு எரிகிறது? அபாய அறிவிப்பும் எதனால் எழுதப்பட்டிருங்கிறது'' என்று கேட்டான்.

உங்களைப்போல் யாராவது பெண் வேடம் போட முயன்று 'பேக்டரியினுள்' நுழைந்தால் இதற்குமேல் போகக்கூடாது என்று மிகவும் கண்டிப்பாக எச்சரிக்கை செய்திருக்கிறோம்.'' என்றார் குபேரன்.

''ஏன்...? இந்தக் கதவுக்குப் பின்னால் மற்றவர்கள் பார்க்கக் கூடாதா? பார்வையாளர்களுக்கு இப்படியாக சந்தேகம் ஏற்படுவது இயல்புதானே...?''

பார்வையாளர்களைப் பற்றியோ மற்றவர்களைப் பற்றியோ நாங்கள் கொஞ்சமும் கவலைப்படுவதில்லை. ஊறுகாய் தயாரிப்பதில் சில நுட்பமான வேலைகள் இருக்கின்றன. எங்கள் ஊறுகாய்களுக்கு மார்க்கட்டில் அதிகப்படியான கிராக்கி இருக்கிறது. ஏனென்றால் அதற்குக் காரணம், எங்கள் ஊறுகாயின் தனித்தன்மைதான். அந்தத் தன்மைகூட பகிரங்கமாக எல்லோருக்கும் காண்பித்து வியாபாரத்தைக் கெடுத்துக்கொள்ள நான் தயாராக இல்லை மாலினி சிறுபிள்ளை. அவளுக்கு இந்தத் தொழிலைப் பற்றி எதுவுமே தெரியாது அதனால் நான் அர்த்தமில்லாமல் அவளைக் கோபித்துக்கொள்ளப்போவதில்லை'' என்று சொன்ன குபேரன், ''உங்களுக்கு இங்கே வேலை முடிந்து விட்டது அல்லவா?'' என்று வினவினார்.

சிவப்பு விளக்கு எரிந்துகொண்டிருக்கும் இந்த அறையையும் பார்த்துவிட்டால் ஓரளவு திருப்தி ஏற்படும்'' என்று சொன்னான் ராஜா மணி, ''வேலையும் முடிந்துவிடும்'' என்றான்.

உடனே குபேரன் சுவர் ஓரமாக இருந்த ஒரு பொத்தானைப் பிடித்து சுமார் ஐந்து நிமிடங்கள் வரையில் அழுத்தினார். பிறகு சிவப்பு விளக்கு மறைந்து பளிச்சென்று பச்சை விளக்கு எரிந்தது.

கதவைப் பிடித்துத் தள்ளிய குபேரன், "வாருங்கள் உள்ளே போய்ப் பார்க்கலாம்." என்று கூறி ராஜாமணியையும், மாலினியையும் அழைத்துச் சென்றார்.

அந்த அறையில் மீனாவைத் தவிர வேறு யாருமே இல்லை. அவள் தரையில் உட்கார்ந்தபடியே சில பாட்டில்களுக்கு 'லேபிள்' ஒட்டிக்கொண்டிருந்தாள். குபேரனையும், மற்றவர்களையும் பார்த்தவுடன் மரியாதைக்காக எழுந்து நின்றாள். மின்னல் அவள் கண்களைத் தாக்கியதா?

இவ்வளவு விசாலமான அறையில் ஒரே ஒருத்தி மட்டும் வேலை செய்துகொண்டிருந்தது ராஜாமணிக்கு வியப்பாக இருந்தது. ஆனாலும் பிறகு மீனாவிடம் விரிவாக விசாரித்துக்கொள்ளலாம் என்ற எண்ணத்துடன், ''இந்த லேபிலில்தான் வியாபார சூட்சுமமே அடங்கியிருக்கிறது'' என்று குயுக்தியுடன் சொன்ன ராஜாமணி வெளியே வந்தான். மற்றவர்களும் வந்தவுடன் கதவு தானாகவே மூடிக்கொண்டது. திரும்பவும் அதே சிவப்பு விளக்குத்தான் எரிந்தது.

# 18. கன்னியின் கதறல்!

மாலை ஐந்து மணி வரையில் மீனுவின் வருகையை ஆவலோடு எதிர்பார்த்து அவள் வீட்டுக்கு எதிரிலேயே ராஜாமணி நின்றுகொண்டிருந்தான். மாலினியை குபேரன் அழைத்துச் சென்றுவிட்டதால் அவன் தனியாக வந்துவிட்டான். மாலினிக்கும் குபேரனுக்கும் வாய்ச் சண்டை ஏற்பட்டிருக்கும் என்று அவனுக்குத் தெரியும். ஆயினும் அவளுக்கு உதவியாக எதுவுமே செய்யமுடியவில்லை.

சரியாக ஐந்தரை மணிக்கு ஒரு ஜீப்கார் 'சரேலென்று' பாய்ந்து சென்றது.

அவள் பூட்டை அகற்றி கதவைத் திறப்பது வரையில் பேசாமல் நின்றுகொண்டிருந்த ராஜாமணி, கதவைத் தள்ளியதும், "ஹலோ மீனு, இப்போதுதான் ஆபீஸ் வேலை முடிந்ததுபோல் இருக்கிறது." என்று கேட்டுக்கொண்டே பின்னால் வந்து நின்றான்.

மீனுவின் முகத்தில் எத்தனை எத்தனையோ உணர்ச்சிகள் பொங்கி மறைந்தன. உதடுகளும் சலனமடைந்தன. என்ன பேசுவது என்றோ, எப்படி நடந்துகொள்வது என்றோ தோன்றாமல் தத்தளித்தாள்.

"நான் திடீரென்று வந்துவிட்டதால் வாயடைத்து போய்விட்டதா? நான்தான் உன் அன்பிற்குரிய ராஜா வந்திருக்கிறேன். பேப்பர்பாய்."

"வாருங்கள்." என்று சிரித்துக்கொண்டே சொன்ன மீனு இரண்டு கைகளையும் தூக்கிக் கும்பிட்டுவிட்டு தப்பு செய்துவிட்டவளைப்போல் விழித்தாள்.

"வரும்போது சீமைத்தண்ணீர் போட்டுவிட்டாய் போலிருக்கிறதே." என்று சொல்லிவிட்டுச் சிரித்த ராஜாமணி வீட்டினுள் நுழைந்ததும் முதல் வேலையாகக் கதவைச் சாத்தித் தாளிட்டான். "இன்றிரவு நான் உன்னுடன்தான் இருக்கப் போகிறேன்." என்று சொன்னான் பிடிவாதமாக.

"கல்யாணம் ஆவது வரையிலும் தயவுசெய்து அந்த ஒரு எண்ணத்தை மட்டும் மறந்துவிடுங்கள். அதுவரையிலும் நான் தனியாகத்தான் இருந்தாகவேண்டும். என் புனிதமான பெயரைக் கெடுத்துக்கொள்ள விரும்பவில்லை."

"ஆமாம்... புனிதமான உன் பெயருக்கு எந்தவிதமான குற்றமும் ஏற்படாமல் இருக்கவேண்டியதுதான்." என்று சொன்ன ராஜாமணி, "இன்றைக்கு நான் உன்னுடன் கண்டிப்பாக நடந்துகொள்ள வந்திருக்கிறேன். எதையாவது சொல்லி மழுப்ப நினைத்தால் நம்முடைய தொடர்பு அறுந்துவிடும் என்பதை இப்பொழுதே சொல்லிவிடுறேன். என்னை நீ இழந்துவிடுவாய்." என்று எச்சரித்தான்.

மீனு தூணில் சாய்ந்தவாறு "முருகா" என்று முணுமுணுத்தவாறு, "நான் உயிருடன் உருப்பது வரையில் நம்முடைய தொடர்பு நீடித்தேதான் ஆகவேண்டும். உங்களையே நான் இழக்க நேர்ந்தால் அதன்பிறகு நான் உயிர்வாழ்வேன் என்று நினைத்துக்கொண்டிருக்கிறீர்களா? ஏற்செனவே நான் நொந்து நொறுங்கிப் போயிருக்கிறேன்." என்று சொன்ன மீனு, குலுங்கிக் குலுங்கி அழுது கண்ணீர் வடித்தாள்.

அவள் அழுதபடியே நின்றுகொண்டிருந்த நிலைமைப் பார்ப்பதற்கு ராஜாமணிக்குச் சங்கடமாகத்தான் இருந்தது. ஆனால் கண்ணபிரானைக் கொலை செய்த கொலையாளியைக் கண்டுபிடித்துத் தருவ

தாக போலீஸாரிடம் வாக்களித்திருந்ததால் அவளைத் துன்புறுத்துவதைத் தவிர வேறு வழியில்லை.

முதலில் சிவப்பு விளக்கு மர்மத்தைப்பற்றித் தெரிந்து கொள்ள விரும்பினன். குபேரனின் குடும்பத்துக்கும், கண்ணபிரானின் கொலைக்கும் சம்பந்தம் இருக்கக்கூடுமோ என்ற ஐயம் அவனுக்கு இருந்தது.

''நீ குபேரன் அண்டு கோவில் ஊறுகாய் பார்சல் செய்யும் பிரிவில் தானே வேலை பார்த்து வருகிருய்?''

''ஆமாம்!''

''இனிமேல் அந்த வேலைக்கு நீ போகவேண்டாம். அதை நான் விரும்பவில்லை.

''அந்த வேலையைத் தொடர்ந்து செய்யவேண்டும் என்ற எண்ணம் எனக்கு மட்டும் இருக்கிறதா என்ன? ஆனல் ஐந்து வருடங்களுக்கு நான் ஒப்பந்தம் செய்யப்பட்டிருப்பதால் அதை மீறமுடியாத நிலையில் இருக்கிறேன். எப்படியோ மூன்று வருடங்கள் கழிந்து விட்டன. இனிமேல் இருப்பது இரண்டே இரண்டு வருடங்கள்தான். அதன்பிறகு நானும் உங்களைப்போல் சுதந்திரப் பறவையாகிவிடுவேன்.''

மீரு சொல்லுவதில் பாதியளவாவது உண்மை இருக்கக் கூடும் என்று ராஜாமணி நினைத்தான். அவள் சொல்லும் எல்லாவற்றையுமே புறக்கணித்துவிட முடியுமா, என்ன?

''பரவாயில்லை, உன் ஒப்பந்தப்படி இன்னும் இரண்டு வருடங்கள் தொடர்ந்து வேலை செய்வது பற்றி எனக்கு எந்தவிதமான ஆட்சேபனைகளும் இல்லை. ஆனல் ஒன்றை மட்டும் நீ ஒளிக்காமல் என்னிடம் சொல்லியேதான் ஆகவேண்டும். சிவப்பு விளக்கு எரிந்து கொண்டிருந்த அறையினுள் நீ மட்டும்தானே இருந்தாய்? அது ஏன்? உண்மையிலேயே நீதான் அபாயமான பெண்ணு?'' அந்த விளக்குக்கும் உனக்கும் என்ன சம்பந்தம்?''

''ஒருவிதத்தில் நான் மற்றவர்களுக்கு அபாயமான பெண்ணுகத்தான் இருக்கலாம். நான் அந்த அறையில் முக்கியமான வேலையில் ஈடுபட்டிருக்கிறேன். ஆனால் அது சம்பந்தமாக நான் எதுவும் சொல்ல தயாராக இல்லை. கம்பெனியின் ரகசியங்களை வெளியே சொன்னால் அதைப்போன்ற எஜமான துரோகம் வேறு எதுவுமே இல்லை.''

''அப்படியானால் உன்னையே முழுக்க முழுக்க நம்பிக்கொண்டிருக்கும் உன் காதலன் ராஜாமணிக்கு மனப்பூர்வமாகத் துரோகம் செய்யப்போகிறாயா?''

''இது துரோகம் அல்ல ராஜா. ஏனென்றால் அந்தக் கம்பெனியில் எப்படி ஊறுகாய் தயாரிக்கிறார்கள் என்பதையோ, எத்தனை பேர்கள் வேலை செய்கிறார்கள் என்பதையோ நீங்கள் தெரிந்துகொள்ள வேண்டிய அவசியம் இல்லை. அதனால் உங்களுக்கு எந்தவிதமான நன்மைகளும் ஏற்படப்போவதில்லை. திரும்பவும் அந்தக் கம்பெனியின் நினைவாகவே அலைந்துகொண்டிருந்தால் உங்கள் உயிருக்கு ஆபத்து ஏற்பட்டாலும் ஆச்சரியப்படமுடியாது. நீங்கள் நினைப்பதைப்போல் குபேரன் சாதாரண ஆள் அல்ல. அதனால் தயவுசெய்து நீங்கள் மற்றவர்களைப் பற்றிக் கொஞ்சமும் நினைக்காமல் உங்கள் வேலையைப் பார்த்துக்கொண்டு போங்கள்.''

மீனு சொன்ன வார்த்தைகள் இதயத்தைத் தொட்டுத்தான் வெளிவருகின்றன என்பதை ராஜாமணி தெரிந்துகொண்டான். ஆனாலும் அவள் விஷயத்தில் கருணை காட்ட முடியவில்லை.

''நீ என்ன சொன்னாலும் அதை நான் கேட்கப்போவதில்லை. சிவப்பு விளக்கு அறையினுள் உண்மையிலேயே என்ன நடக்கிறது என்பதை நான் தெரிந்தேதான் ஆகவேண்டும்.''

''மன்னிக்கவும், என்னிடம் நீங்கள் இந்தக் கேள்வியை எப்படிக் கேட்டாலும் கிடைக்கும் பதில் மட்டும் ஒன்றாகவே இருக்கும். நான் எதுவும் சொல்லமுடியாத நிலையில் இருக்கிறேன். அதனால் எதை எதையோ கேட்டு மேன்மேலும் வேதனையை உண்டுபண்ணுதீர்கள்.''

மீனு சிவப்பு விளக்கு அறையைப் பற்றி எதுவுமே சொல்ல முடியாது என்று திட்டவட்டமாக மறுத்துவிட்டாள். அவன் அந்த அறையைப் பற்றி ஏதேதோ கேட்டபோதிலும் எந்தவிதமான பயனும் கிட்டவில்லை.

"அப்படியானால் நீ என்னை இழந்துவிடப்போகிறாயா? உனக்கு நான் வேண்டாமா?"

"உயிரை உடல் வேண்டாம் என்று எப்பொழுதாவது சொல்லுமா? நீங்கள்தான் என் உயிர். அந்த உயிரை இழக்க ஒருபோதுமே சம்மதிக்கமாட்டேன். ஆனால் உயிர் என்னைவிட்டுப் போய்விட்டால் உடல் தானாகவே அழிந்துவிடும்."

"மீனு கண்ணீர் வடித்தபடியே நின்றுகொண்டிருந்தாள். தன் வாழ்க்கையில் வேதனையான அனுபவங்களை நினைத்துக்கொண்டதும் கண்ணீர் மேன்மேலும் 'குபுகுபு'வென்று பொங்கியது.

"உனக்காக நான் இரக்கம் காட்டுகிறேன் மீனு. கம்பெனியைப் பற்றி விசாரித்து எந்தவிதமான தொந்தரவும் கொடுக்கப்போவதில்லை. ஆனால் கண்ணபிரான் கொலையுண்ட வீட்டினுள்ளிலிருந்து நீ வெளியே ஓடிவந்தாய் என்பதையாவது ஒத்துக்கொள்கிறாயா?"

மீனு சிறிது நேரம் கழித்து, நான் அந்த வீட்டின் பக்கமாகவே போகவில்லை." என்று சொன்னாள்.

"பொய் சொல்லாதே! அன்று மத்தியானத்துக்குப் பிறகு சுமார் மூன்று மணியளவில் வீட்டுக்கு வருவதாக நீ சொல்லியிருந்தாய் அதனால் நீ நிச்சயமாக வந்திருப்பாய் என்பதில் எனக்கு நம்பிக்கை இருக்கிறது."

"நான் வருவதாகத்தான் உங்களிடம் சொல்லியிருந்தேன். ஆனால் முக்கியமான வேலை இருந்ததால் என்னால் வரமுடியவில்லை."

"நீ வீட்டினுள்ளேயிருந்து வெளியே ஓடி வந்ததை முத்துக் கருப்பன் என்ற பால்காரர் பார்த்திருக்கிறார். இனிமேல் அவரை அழைத்து வந்தால்தான் உண்மையைச் சொல்லுவாயா?"

ராஜாமணி அவள் முகத்தைக் கூர்ந்து பார்த்தான்.

மீனுவுக்குக் குளிர்விட்டதைப்போல் இருந்திருக்கவேண்டும். அவள் நெற்றியில் அரும்பியிருந்த வியர்வையைத் துடைத்துவிட்டு, "எல்லாமே பொய்! என்னை அழிக்க வேண்டும் என்று பயங்கரமான சதி நடக்கிறது" என்று சொன்னாள்.

"உண்மையைச் சொன்னால் அது உனக்குச் சதியாகத்தான் தோன்றும் போலிருக்கிறது. அந்த வீட்டினுள் வளையல் ஒன்று உடைந்து கிடந்தது. மல்லிகைச் சரத்தையும் கண்டெடுத்தேன். உன் தாவணியில் இரத்தக்கறை படிந்திருந்ததையும் பார்த்தேன். இனியும் நீ உண்மையை மறைத்தால் உடனே போலீஸ் ஸ்டேஷனுக்குப் போய் எனக்குத் தெரிந்ததையெல்லாம் சொல்லிவிடுவேன். போலீஸார் உடனே உன்னைக் கைது செய்துகொண்டு போய்விடுவார்கள்" என்று அவளை மிரட்டுவதைப்போல் சொன்னான் ராஜாமணி.

உடனே மீனு நடுங்கியவளாய், "நான் எனக்குத் தெரிந்தவற்றையெல்லாம் சொல்லிவிடுகிறேன் ராஜா. ஆனால் தயவுசெய்து போலீஸில் தெரியப்படுத்திவிடாதீர்கள். என்னை போலீஸார் கைது செய்துகொண்டு போய்விட்டால் அந்த வினாடியிலேயே அதிர்ச்சி ஏற்பட்டு என் உயிர் பிரிந்துவிடும்" என்று சொன்னாள்.

அவள் இப்பொழுதுதான் ஒழுங்கான முறையில் வழிக்கு வருகிறாள் என்பதைப் புரிந்து கொண்ட ராஜாமணி, "உயிர்மேல் உனக்கு ஆசையிருந்தால் அன்றைக்கு என்ன நடந்தது என்பதை மறைக்காமல் சொல்" என்று வற்புறுத்தினான்.

மீனு தாவணி நுனியை இழுத்து முகத்தை அழுத்தித் துடைத்துக்கொண்டு, "அன்றைக்கு உங்களைப் பார்க்கவேண்டும் என்ற எண்ணத்துடன் தான் வந்தேன். நான் அங்கே வந்து பார்த்தபோது கண்ணபிரான் இறந்து கிடந்தார்." என்று சொன்னாள்.

'பொய் சொல்லுவதற்குக்கூட தனித் திறமை வேண்டும்" என்று சிரித்த ராஜாமணி, "அவர் இறந்து கிடந்தார் என்றே வைத்துக்கொள்வோம். உன் வளையல் எப்படி உடைந்தது. கூந்தலில்

சூட்டியிருந்த மல்லிகைச் சரம் எப்படி தரையில் வந்து விழுந்தது?'' என்று கேட்டான்.

மீனு பதில் பேசத் தோன்ருமல் தத்தளித்தாள்.

நான் சொல்லட்டுமா, அன்றைக்கு என்ன நடந்தது என்று? இது வெறும் அனுமானந்தான்! ஆனாலும் இது உண்மையைப்போல் பொருந்து'' என்று சொன்ன ராஜாமணி, ''அன்றைக்கு நான்தான் தூங்கிக் கொண்டிருக்கிறேன் என்ற எண்ணத்துடன் ஓடிவந்து என்னை எழுப்புவதற்காக என்மேல் விழுந்திருப்பாய். என்னேடு நீ வழக்கமாக நடந்துகொள்ளும் முறையே இதுதானே! ஆனால் அது கண்ணபிராளுக இருக்கவே நீ குற்றம் செய்தவளைப் போல் விழித்திருப்பாய். கண்ணபிரான் ஏற்கெனவே உன்மீது ஒரு கண் வைத்திருந்தார். நீ வந்து வகையாக சிக்கிக் கொள்ளவே உடனே அவர் உன்னைக் கெடுக்க முயற்சி செய்திருப்பார். நீ அவரை எதிர்த்து போராடிக் கொண்டிருந்தபோது ஒரு வளையல் நொறுங்கி விழுந்திருக்கலாம். ஆவேசத்தின் காரணமாக கூந்தலில் சூட்டப்பட்டிருந்த மல்லிகைச் சரமும் கீழே விழுந்திருக்கலாம். அதே சமயத்தில் உன்னை அவரிடமிருந்து காப்பாற்ற வேண்டும் என்பதற்காக யாரோ ஒரு ஆசாமி வந்து கத்தியால் குத்திக் கொலை செய்திருக்க வேண்டும். இப்படித்தான் கண்ணபிரானின் கொலை நடந்திருக்க வேண்டும். நான் நான் சொல்லுவது முற்றிலும் உண்மைதானே...?''

அவன் சொன்னதைக் கேட்டு மீனு ஸ்தம்பித்துப் போய்விட்டாள். சிறிது நேரம் வரையில் என்ன பேசுவது என்றே அவளுக்குத் தெரியவில்லை. கடைசியில் அவள் உண்மையைச் சொல்லுவதைத் தவிர வேறு வழியில்லை, என்பதை உணர்ந்து, ''நீங்கள் சொன்னவை எல்லாம் உண்மை. ஆனால் கண்ணபிரானைக் கொலை செய்தது யார் என்பதை மட்டும் எக்காரணத்தைக் கொண்டும் சொல்ல மாட்டேன்.'' என்ருள்.

''ஏன் சொல்லமாட்டாய்? கொலையாளியின் பெயரைச் சொல்லுவதால் நீ அடையப்போகும் நஷ்டமென்ன?''

"தயவுசெய்து என்னை மன்னித்துவிடுங்கள். இனியும் நீங்கள் ஏதையாவது கேட்டு துன்புறுத்தினால் இந்த இடத்திலேயே தூக்குப் போட்டு தற்கொலை செய்து கொள்வேன். நான் சாகவேண்டும் என்று விரும்பினால் இனிமேல் என்ன வேண்டுமானாலும் சொல்லுங்கள்."

மீனு முகத்தை மூடிக்கொண்டு விசும்பி விசும்பி அழுது அப்படியே தரையில் உட்கார்ந்தாள்.

அவளுடைய புஜந்தங்களைப் பற்றித் தூக்கி பொங்கி வழிந்து கொண்டிருந்த கண்ணீரைத் துடைத்த ராஜா கட்டிலில் உட்கார வைத்து தன் நெஞ்சோடு சேர்த்துப் பிடித்துக்கொண்டு, "உன் நிலையை நான் உணறுகிறேன். நன்றாக உணறுகிறேன் உனக் கேற்பட்டிருக்கும் கஷ்டத்தைப்போல் வேறு எந்தப் பெண்ணுக்குமே வரக் கூடாது. ஒருபுறம் குபேரனின் அட்டகாசம்,—இன்னொருபுறம் கண்ண பிரானின் மரணம். இரண்டுக்கு மிடையே சிக்கி ஒவ்வொரு விநாடியும் நீ செத்துப் பிழைத்துக் கொண்டிருக்கிறாய். ஆனால் இவை எல்லா வற்றிற்குமே விரைவில் விடிவுகாலம் உண்டு." என்று சொன்னான்

எனக்கு விடிவுகாலம் இருக்கிறதோ, இல்லையோ, அதைப் பற்றியெல்லாம் நான் கொஞ்சமும் கவலைப்படவில்லை. என்றைக் காவது நான் இறந்துவிட்டால் என் பிணத்தை எடுத்துச் சென்று அடக்கம் செய்வீர்கள் அல்லவா? என்னை அனாதைப் பிணமாக்கி குப்பை லாரியில் எடுத்துச் செல்ல அனுமதிக்க மாட்டீர்களே!"

மீனு அழுதுகொண்டே இப்படிச் சொன்னதும் அவள் அதற்கு மேல் பேசாமல் இருக்க ராஜாமணி வாயைப் பொத்திக்கொண்டான்.

"என்னையும் மற்றவர்களின் பட்டியலில் தான் சேர்த்து விட்டாய் போலிருக்கிறது! நீ பயங்கரவாதிகளின் மத்தியில்தான் சிக்கியிருக்கிறாய் என்பதும், அவர்களால் ஒவ்வொரு விநாடியும் உன் உயிருக்கு ஆபத்திருக்கிறது என்பதும் எனக்குத் தெரியும். ஆனால் அவர்களால் ஒரு சிறு துரும்பைக்கூட உன்மீது தூக்கிப் போட முடியாது. என் உயிரைக் கொடுத்தாவது உன்னைக் காப்பாற்றுவேன். அப்பொழுதுதான் இந்த ராஜாமணி எப்படிப்பட்டவன் என்பதைத்

தெரிந்துகொள்வாய்'' என்று சொன்ன ராஜாமணி, தைரியமாக இருக்கும்படிக் கூறிவிட்டு வெளியே கிளம்பினான்.

தெரு விளக்குகள் வரிசையாக எரியத் தொடங்கின.

இரவு ஆட்சி செய்து கொண்டிருந்தது.

மீனு கதவைச் சாத்திக்கொண்டு உள்ளே தாளிட்டாள். தன்னை உயிருக்கு உயிராய் நேசிக்கும் ராஜாமணி சொன்ன வார்த்தைகள் ஒவ்வொன்றும் உணர்ச்சி மயமாகத் தோன்றி ஆறுதல் உண்டு பண்ணின.

ஆனாலும் ராஜாமணியிடம் உண்மையைச் சொல்லவே முடிய வில்லையே! குபேரன் மிரட்டியதின் காரணமாக ஊமையாக அல்லவா மாறவேண்டிய அவசியம் வந்துவிட்டது.

அவள் கட்டிலில் படுத்துக்கொண்டு கொல்லப்பட்ட தன் தாயாரை நினைத்தாள். அகோரமாய் மாய்க்கப்பட்ட பரிதாபத்திற் குரிய பெண்ணைப்பற்றிச் சிந்தித்தாள். கண்ணபிரான் கொலையை நினைவு கூர்ந்தாள். இத்தனைக்கும் மூலகாரணமான குபேரனையும் எண்ணிப் பார்த்தாள்.

உடனே பயம் பிடித்துக் கொண்டது. அறையின் நான்கு பக்கமும் இருந்து உருவமில்லாத வஸ்துக்கள் அப்படி அப்படியே பறந்து வந்து தாக்குவதைப் போன்ற பிரமை உண்டாயிற்று.

அவள் நெஞ்சு அடிக்கொரு தரம் கனத்தது. பீதி பெரும் குடைச்சலை உண்டுபண்ணியது.

பெண்ணாகப் பிறந்து விட்டதால் அவளுக்கு எத்தனை எத்தனை தொல்லைகள்?

அவள் பலவிதமாகச் சிந்தித்து இனியும் உயிருடன் வாழ வேண்டுமா என்று ஆராய்ந்து கொண்டிருந்தபோது கதவு தட்டப் படும் சப்தம் கேட்டது.

ஒரு விநாடி நேரம்கூட அமைதியாக இருக்கவிடமாட்டார்கள் போலிருக்கிறதே.' என்று தனக்குள் தானே உடுத்தப்பட்ட மீனு வெறுப்புடன் எழுந்து சென்று கதவைத் திறந்ததும் வெளியே மூக்கன் நின்றுகொண்டிருப்பதைக் கண்டாள். வழக்கம் போலவே அவனுடைய கையாட்கள் இருபுறமும் நின்றுகொண்டிருந்தார்கள்.

"சொல்லுங்கடா சின்ன பெரியசாமிகளா." என்று அவர்களைத் தட்டிக் கொடுத்தான் மூக்கன்.

"பெரிய அய்யா உங்களைக் கையோடு கூட்டிக்கொண்டு வரச்சொன்னாங்க. வர்ரீகளா?" என்று சொன்னான் சின்னசாமி.

"ம்...ம்...புறப்படு...புறப்படு...இன்றிரவு உனக்கு ரெம்பவும் அவசரமான ஜோலி இருக்கிறதாம். நீ வர முடியாது என்று சொன்னால் குண்டுக் கட்டாய் தூக்கிக்கொண்டு வரச்சொன்னார்கள்." என்றான் பெரியசாமி.

இரவு!பகல் எந்நேரமும் இப்படி குபேரன் ஆள் வீட்டுக் கூப்பிடுவது சகஜம்தான். ஆனால் இன்றைக்கு அவர்கள் கூப்பிட்ட தோரணை நன்றாக இல்லாமல் இருந்ததால் என்னவோ போலிருந்தது. "எனக்கு ஒரே அசதியாக இருக்கிறது. விடிந்தவுடன் எப்படியும் வந்து பார்ப்பதாகச் சொல்லுங்கள்." என்று மிகவும் பணிவாகக் கெஞ்சினாள் மீனு.

"எஜமான் கூப்பிட்டால் அதற்கு சால்ஜாப்பா? மறுவார்த்தையே கூடாது. உடனே புறப்பட்டு வா......இல்லாவிட்டால் நாங்களும் மனிதர்களாக இருக்கமாட்டோம். முதலாளியும் மனிதராக இருக்கமாட்டார்." என்று இரு கோட்டுப் பைகளுக்குள்ளும் கைகளை நுழைத்தவாறு மிரட்டினான்.

மீனு அவர்களை எதிர்த்து வாழும் ஆற்றல் இல்லாதவள் என்பதால் பேச்சை வளர்த்துக் கொள்ளாமல் உடனே புறப்பட்டாள்.

குபேரனின் உல்லாச பங்களா அது! கன்னிப்பெண்களுடன் இரவைக் கழிக்க நேரிடும்போது அவர் இங்குதான் தங்குவார். இன்றைக்கும் அவருக்கு ஒரு கன்னிப்பெண் தேவைப்பட்டாள். அதனுல் நேராகவே இங்கே வந்துவிட்டார்.

அவரை இப்பொழுது மது ஆட்டிப் படைத்துக்கொண்டிருந்தது. அந்த மதுவுக்கு நிரந்தரமான அடிமையாகி, அந்த மது தோற்றுவித்த பூதத்துக்கு இரைகொடுக்க முடியாமல் தவியாய்த் தவித்துத் தத்தளித்துக் கொண்டிருந்தார்.

காரை விட்டுக் கீழே இறங்கிய மீனு, தன்னந்தனியாக இருக்கும் அந்தப் பங்களாவைப் பார்த்ததும் மருண்டுபோய், "இங்கேயா முதலாளி இருக்கிருர்?" என்று கேட்டாள்.

"சந்தேகம் இருந்தால் நீ உள்ளே போனதும் உண்மையைத் தெரிந்து கொள்ளலாம். உன்னிடம் ஏதோ முக்கியமான விஷயம் பேச வேண்டும் என்று சொன்னுர்." என்ருன் மூக்கன்.

அப்பொழுது கதவைத் திறந்து விரித்துக்கொண்டு, "மீனு... நான்தான் இங்கே இருக்கிறேன். தொழில் சம்பந்தமாக உன்னிடம் தனித்துப் பேசவேண்டும்." என்று சொன்னபோது மதுநெடி எங்கும் பரவியது.

அவர் மிகமிகக் கொடூரமான மனிதர் என்பதாலும், எதிர்த்து ஏதாவது பேசினுல் அதனுல் ராஜாமணியின் உயிருக்கு ஆபத்து நேரிடக்கூடும் என்று அஞ்சியதாலும் மறுவார்த்தையே பேசாமல் புலிக்கூண்டு என்பது தெரிந்தும் உள்ளே போனுள்.

இதற்கென்றே தயாராக நின்றுகொண்டிருந்த அடியாட்கள் கதவை இழுத்து மூடி வெளிப்புறமாகத் தாளிட்டுக்கொண்டார்கள்.

'என்ன எஜமான் இது?"

அவள் இப்படிக் கதறியதும், குபேரனின் அட்டகாசமான சிரிப்பு அவளுடைய குரலை அப்படியே விழுங்கி ஏப்பம் போட்டது.

குபேரன் பாட்டில் மதுவை 'கொட கொட'வென்று வயிற்றி னுள் ஊற்றிவிட்டு, "மீனு... நீ அப்சரஸ்... அபாரமான பெண் பிறவி." என்று புகழ்ந்தார்.

நெஞ்சுக்குள் நெருப்பாய் மூண்டது மீனுவுக்கு. அந்தக் கொடியவன் மூர்க்கனுகிவிட்டான் என்பதை அவள் நன்ருகவே தெரிந்துகொண்டாள்.

இனி தப்ப என்ன வழி1

அது ஒன்று தான் அவளுக்குப் புரியவில்லை.

# 19 சிவபூஜை மகிமை!

கோடிக்கணக்கான மின்னல்கள் ஒன்ருகச் சேர்ந்து வநது ஒரே நேரத்தில் தாக்கியதைப் போலிருந்தது அவருக்கு. இப்படி கொள்ளை அழகு குவிய ரோஜாப்பூவாய் மலர்ந்து கிடப்பாள் என்று அவர் கொஞ்சம்கூட எதிர்பார்த்திருக்க முடியாது.

குபேரன் போதை வெறியில் தள்ளாடி அவள் கையைப் பிடித்துக்கொண்டு, "காந்தா... என் உயிர் உள்ள வரையிலும் உன்னை மறக்கவே மாட்டேன்." என்று சொன்னுர்.

காந்தாவா? தன்னை அந்தப் பெயருடைய வேறு பெண் என்று அவர் நினைத்துவிட்டாரா?

"நான் காந்தா அல்ல, மீனு..." என்று அவள் திருத்தினுள்.

"ஓ... நீ மீனு...? எஸ் யூ... ஆர் மைடியர் மீனு... நான் உன்னை என்னுடைய ஆசைநாயகி காந்தாவாக நினைத்துவிட்டேன். காந்தா... உன் கால் தூசுகூடப் பெறமாட்டாள்." என்று சொல்லிக் கொண்டே எல்லைமீறிய போதை காரணமாகத் தள்ளாடினுர்.

ஆனுல் பொங்கி வழியும் அவளுடைய இளமையின் அழகை மட்டும் அவர் கண்கள் கொண்ட மட்டிலும் ரசிக்கத் தவறவில்லை.

இளமைத் துறுதுறுப்பும், வசீகரமும் கொண்ட அவள் பெண் இனத்துக்கே சவால்விடும் அற்புதமான உடலமைப்பைக் கொண்டவளாகக் காட்சியளித்தாள்.

அவள் கிராமத்திலே வளர்ந்த அழகி—குளத்தின் கரையில் செழித்து வளர்ந்த பசுமைப்புல்—தென்னங்குருத்து போன்ற இளமை கொண்டவள். இளநீரின் குளுமை நிறைந்தவள்.

அவர் தன்னை அத்துமீறிப் பார்ப்பதை மீனு கண்டதும் ஒரே திமிறலுடன் தன்னை விடுவித்துக்கொண்டாள்.

"உனக்கு நல்ல பலம் இருக்கிறது. இந்த அளவுக்கு உறுதி வாய்ந்தக் கையை நான் எந்தப் பெண்ணிடமும் பார்த்ததில்லை. அற்புதமான உடலமைப்பு." என்று அவர் சொல்லிவிட்டு மதுப்புட்டியை எடுத்து ஒரு கண்ணாடித் டம்ளரில் பாதி வரை மதுவை ஊற்றினார். அதற்குமேல் கொக்கோ கோலா பானத்தைக் கலந்தார்.

"ஏய் கிராமத்துக் குட்டி...இந்தா...குடிடீ..." என்று அவர் 'டீ' பட்டம் வேறு முதல் முறையாகக் கொடுத்தார்.

கண்ணபிரானைச் சமாளித்த அனுபவம் ஏற்கனவே அவளுக்கு உண்டு. முதல் இரவை முடிந்துபோன இரவாக மாற்றிக் காட்டியவள் அல்லவா?

அவள் எப்படியோ துணிந்து கையிலிருந்த மதுப்புட்டியையும், கண்ணாடித் தம்ளரையும் தட்டிவிட்டாள்.

இரண்டும் 'டங்'கென்று தரையில் மோதி உடைந்து சிதறின. மது நெடியுடன் தரை விரிப்பை நனைத்தது.

மீனு மூக்கைப் பிடித்துக்கொண்டாள். வெளியே ஓடுவதற்கு மார்க்கம் தெரியாததால் கூண்டுக்கிளிபோல் அறைக்குள்ளேயே வளைய வளைய வந்து தத்தளித்தாள்.

அவள் – தன்னிடம் வேலை செய்யும் அடிமைப்பெண்—மதுப் புட்டியைத் தட்டிவிட்டதால் அவர் எல்லை மீறிய ஆவேசமடைந்து இரண்டு கைகளையும் மூர்க்கத்தனமாகப் பற்றிக்கொண்டு அவளுடைய உதடுகளை நோக்கி தன்னுடைய முகத்தை நெருக்கினார்.

மீனு இரு கைகளாலும் அவர் நெஞ்சில் ஊன்றி பலம் முழுவதையும் கொண்டு வந்து போராடினாள்.

கிராமத்துக்கட்டையான அவள் பலசாலிதான் என்பதை ஒத்துக்கொள்ளத்தான் வேண்டும். எவ்வளவு முரட்டுப் பலத்துடன் அவரைப் பிடித்துத் தள்ளுகிருள்.

' ஐயா, என்னை விட்டுவிடுங்கள். நீங்கள் ஒரு பெண்ணிடம் இந்த அளவுக்கு கேவலமாக நடந்துகொள்வீர்கள் என்று கொஞ்சம் கூட எதிர்பார்க்கவில்லை.'' அவள் அழுதாள்.

அந்தப் பேதையால் வேறு என்னதான் செய்ய முடியும்? குபேரன் அவள் சொன்ன எதையும் காதுகளில் வாங்கிக்கொள்ளாமல் இரத்தவெறிகொண்ட வேங்கையாக மாறினுர். கைகள் இரண்டையும் பிடித்தவாறு தன்னோடு இணைத்துக்கொள்ளப் போராடினுர்.

''என்னை இம்சை செய்வதின் மூலம் ஆபத்தை அணைத்துக் கொள்ளாதீர்கள். அதனுல் வீண் தொல்லைகள்தான் உண்டாகும்.'' என்று அவள் கதறினுள்.

கைகளை விட்டுவிடாமல் பலாத்காரப் போராட்டம் நடத்திக் கொண்டிருந்த குபேரன், ''இன்றிரவுதான் உன் மீது இந்த விபரீத ஆசை உண்டாயிற்று. என்னை நானே கட்டுப்படுத்த முடியாமல் திணறிக்கொண்டிருக்கிறேன். நீ மட்டும் தலையை அசைத்தால் உன் னுடைய வாழ்க்கைத் தரத்தை எத்தனை மடங்கோ உயர்த்திவிடு வேன்.'' என்று முழங்கினுர்.

''நான் ஏழையாகவே மானத்தோடு இருக்கிறேன் ஐயா. என்னை வெளியே அனுப்பிவிடுங்கள்.''

அவரை எதிர்த்துச் சண்டைபோடும் மனத்துணிவு அவளுக்கு இல்லாததால் பரிதாபமாகக் கெஞ்சினுள்.

ஆனுல் அவரோ மிஞ்சினுர். எதைக்கண்டும் அவர் அஞ்ச வில்லை. ''உன்னுல் எனக்குத் தூக்குமேடையே கிடைப்பதாக இருந்தால் கூட நான் பின்வாங்கப் போவதில்லை. நான் எதை நினைத்தாலும் உடனே அதைச் செய்து முடித்துவிடுவேன். இல்லாவிட்டால் எனக்குப் பைத்தியம் பிடித்துவிடும்.'' என்று உறுமினுர்.

பல்லியின் கூர்மையான பற்களுக்கிடையே சிக்கிக் கொண்ட கரப்பான் பூச்சி திமிறிக்கொண்டு கடைசியில், அது என்ன செய்தாலும் செய்துவிட்டுப் போகட்டும் என்ற எண்ணத்துடன் செயலற்றுக் கிடக்குமே; அதே நிலைதான் அவளுக்கும்!

அவர் வியர்வையில் குளித்துவிட்டார். வெப்பக்காற்று மூச்சோடு கலந்து அடித்தது.

மீரு தன் கற்பைப் பாதுகாத்துக்கொள்ள வேண்டும் என்ற எண்ணத்துடன். "ஐயா... என்னை விட்டுவிடுங்கள்... உங்கள் பாவத் தொழிலுக்குத்தான் நான் உடந்தையாக இருக்கிறேன். கற்பைப் பறிகொடுத்தவள் என்ற கெட்ட பெயரையும் எனக்கு வாங்கித் தராதீர்கள். என்னை நெருங்கினுல் வீணுக அழிந்துவிடுவார்கள்.'' என்று கதறி அழுதாள்.

அவர் முழுமையாக அவளை ரசித்தார். அவள் கதறி அழுத விதம் கண்கொள்ளாக் காட்சியாக இருந்தது. கண்ணீர் வழிந்தோடியதைப் பார்த்துப் பார்த்து மகிழ்ந்தார். அவள் கைகளுக்கு நடுவே பூங்கொடி போல் துவண்டு எவ்வளவு அபாரமாகக் காணப்படுகிறாள்.

"அந்தப் பெண்ணை வெந்நீரில் போட்டுப் பொரித்து எடுத்தேன். ஆனுல் உன்னை கொதித்தும் எண்ணெயில் வடையாகத் தட்டிப் போட்டு எடுத்துவிடுவேன். என் கோபத்தைக் கிளறி உன்னுடைய அழிவை நீயே தேடிக்கொள்ளாதே."

அவர் இப்படி மிக்மிகக் கடுமையாக மிரட்டிக்கொண்டிருந்த அதே நேரத்தில் கதவு படாரென்று திறந்துகொண்டது.

இரண்டு பேர்களும் ஒரே நேரத்தில் கதவைப் பார்த்தார்கள்.

மாலினி ஆவேசம் பொங்கியவளாய் கதவைப் பிடித்தபடி நின்றுகொண்டிருந்தாள்.

அவ்வளவுதான்!

பாம்பின் பற்களில் பிடிபட்டிருந்த தவளை தன்னை ஒரே உதறல் மூலம் விடுவித்துக்கொண்டு ஓடிச்சென்று மாலினியின் பட்டுப்போன்ற மென்மையான பாதங்களில் விழுந்தது.

அவள் மாலினியைத் தூக்கி நிறுத்தி, "இது நன்றாக இருக்கிறதா சித்தப்பா...? இந்நேரம் தகவல் அறிந்து நான் இங்கே வராமல் இருந்திருந்தால் இந்தப் பெண்ணின் கதி என்னவாகியிருக்கும்? இனியும் இதைப்போன்ற தவறுகளைச் செய்யாதீர்கள். அதன்பிறகு என்னுடைய சித்தப்பா என்றுகூடப் பார்க்காமல் உங்களையே டிஸ்மிஸ் செய்யக்கூடிய சூழ்நிலைகூட உண்டாகும்." என்று மிகவும் கடுமையாக மிரட்டியவள், அவளையும் கையோடு அழைத்துக்கொண்டு விரைந்தாள்.

அவர் பேயடித்தவர்போல் அப்படியே நின்றுகொண்டிருந்தார். இத்தகைய படுதோல்வி அவருடைய வாழ்க்கையிலேயே ஏற்பட்டிருப்பது இதுதான் முதல்தடவை.

ஓர் உறுமல் மூலம் அவர் நிலைமையைச் சமாளித்துக்கொண்டு கட்டிலில் போய்க் குப்புற விழுந்தார்.

கட்டில் அவருடைய பாரத்தைத் தாங்கிக்கொள்ளமுடியாமல் கிறீச்சிட்டது.

# 20. அடங்காப்பிடாரி லாரி !

"உங்கள் சித்தப்பாவை நேரடியாக மோதிவிட்டீர்களே, அதை நினைக்கும்போது என் குலையே நடுங்குகிறது." என்று மீனு கவலையோடு சொன்னாள்.

"விரைவில் இந்த சித்தப்பா என்ன கதி ஆகிறார் என்பதை நீயே தெரிந்துகொள்ளலாம்." என்றாள் மாலினி, காரை மெதுவாக ஓட்டிக்கொண்டே.

எதிரில் படு அட்டகாசத்துடன் அடங்காப்பிடாரிபோல் பிரகாசமான விளக்குகளை எரியவிட்டவாறு வந்துகொண்டிருந்த லாரியைக் கண்டாள்.

"அந்த லாரியைப் பாருங்கள்... விளக்கை அணைக்காமலேயே வருகிறது." என்று மீனு கதறினாள்.

ஆபத்து லாரியின் உருவத்தில் வந்துகொண்டிருக்கிறது என்பதை மாலினி தெரிந்துகொண்டதும் பிரேக் கட்டையை அழுத்தினாள்.

கிரீச் என்ற ஒலியுடன் டயர்களைத் தேய்த்துக்கொண்டு வந்த வழியில் திரும்பி நின்றது.

அதற்குள் லாரி நெருங்கிவிடவே காரை வெகு வேகமாக ஓட்டிச் சென்றாள் மாலினி. லாரியும்படுவேகத்துடன் துரத்திக்கொண்டுவந்தது.

இடையே ஒரு குறுகலான வீதி வந்தது.

அந்த வீதியில் லாரி போக இடம் கிடையாது. அதை மாலினி புரிந்துகொண்டு காரை ஓட்டிச் சென்ருள்.

துரத்திக்கொண்டு வந்த புலியிடமிருந்து தப்பித்துக்கொண்ட மான்குட்டிகளின் நிலை இருவருக்கும். மீனுவின் நெஞ்சு 'பட் பட்' என்று அடித்துக்கொண்டிருந்தது அந்த ஒலியை அவர்கூடத் தெளிவாகக் கேட்டிருக்கவேண்டும்.

காரை ஓர் இடத்தில் மாலினி நிறுத்தினுள். மிகவும் சாதுரிய மாகக் காரை ஓட்டித் தப்பியதால் அவளுடைய கைகளும், கால்களும் அதிர்ந்தன.

''உங்களையும் ஒழித்துக்கட்ட முயற்சி நடைபெறுகிறது என் பதை இப்பொழுது நேரிலேயே பார்த்தீர்கள் அல்லவா?'' என்று மீனு நினைவுபடுத்தினுள்.

"நான் யார் என்பதைத் தெரிந்து கொள்ளாமல் விளையாடு கிருர்கள். என் சித்தப்பாவுக்கும், அவருடைய கூட்டாளிகளுக்கும் அந்தியக் காலம் நெருங்கி வந்துவிட்டது'' என்று அவள் சீறிவிட்டு ''நம் கம்பெனியில் தயாரிப்புத் துறையில் உண்மையிலேயே என் னென்ன நடக்கின்றன என்பதை நான் தெரிந்து கொள்ளவேண்டும்.'' என்று சொன்ருள்.

பக்கத்தில் உட்கார்ந்தபடி சிறிது நேரம் வரையில் வெளியே பார்த்துக்கொண்டிருந்தாள் மீனு. தயாரிப்புத் துறையைப்பற்றிய எல்லா அந்தரங்க ரகசியங்களும் அவளுக்குத் தெரியும். ஆனல் மாலனியிடம் எப்படிச்சொல்ல முடியும்? சொன்னல் அடுத்த சில நிமிடங்களிலேயே கொதிக்கும் வெந்நீரில் தூக்கிப்போட்டு கோழி யைப்போல் பொரித்து விடுவார்களே!

''நான் எதையும் சொல்ல முடியாத நிலையில் இருக்கிறேன். தயவுசெய்து என்னை மன்னித்து விடுங்கள்.''

தன் காதலன் ராஜாமணியை வஞ்சம் தீர்த்துவிடுவார்கள் என்று அஞ்சியதுதான் உண்மையை மறைப்பதற்கு முக்கிய காரணம்.

''ஏன் சொல்ல மறுக்கிறாய்?''

''சொன்னால்—அதைத் தெரிந்து கொண்டால் உங்கள் உயிருக்கும் ஆபத்து உண்டாகும். காலம் வரும்போது நானே எல்லாவற்றையும் விளக்கிச் சொல்வேன். இந்த அக்கிரமக்காரர்கள் என்றைக்காவது ஒருநாள் அழியத்தான் போகிறார்கள்.''

''அதிருக்கட்டும், உன்னைத் தேடிக்கொண்டு அடிக்கடி ஒரு கருப்பு உருவம் வருகிறதாமே, அதனுள் ஒளிந்துகொண்டிருக்கும் மனிதன் யார் என்பதையாவது சொல்லமாட்டாயா?''

அவள் கேவிக்கேவி அழத்தொடங்கி விட்டாள்.'' என்னை விட்டுவிடுங்கள்.''

''அவன் உன் காதலனாக இருக்கக்கூடும் என்று ராஜாமணி நினைக்கிறார்.''

மாலினி மெதுவாக இப்படிச் சீண்டிவிட்டதும் மீனா அலறியவளாய், ''இல்லை...இல்லை...அவர் மனத்தில் இப்படியொரு சந்தேகம் வரவே கூடாது. இந்த உலகத்திலேயே அவர்தான் எனக்கு தெய்வம் என்று சொன்னாள்.

''நீ தெய்வமாக நினைக்கலாம். ஆனால் இப்பொழுது அந்தத் தெய்வமே உன்னைச் சந்தேகிக்கிறதே.'' என்று மறுபடியும் அவளுடைய வாயைக் கிளறிவிடும் முயற்சியில் இறங்கினாள் மாலினி.

''சந்தேகம் வராமல் நீங்கள்தான் பார்த்துக் கொள்ளவேண்டும்'' என்று கெஞ்சினாள் மீனா.

''நீ இப்படி எல்லாவற்றையும் மறைக்கக் காரணம் என்ன?'' நாம் எல்லோரும் நல்லபடியாக வாழவேண்டும் என்று ஆசைப்படுகிறேன். இந்த ஆசையைத் தவிர வேறு ஏதுவுமே எனக்கில்லை.''

மாலினி எவ்வளவுதான் வற்புறுத்திய போதிலும் மீனா தனக்கு தெரிந்தவற்றை வெளியிடவே இல்லை.

# 21. குபேரன் எச்சரிக்கை!

தன்னுடைய ஏர்கண்டிஷன் அறையில் கொடுமைகளுக்கெல்லாம் பிறப்பிடமான குபேரன் சாய்ந்து கிடந்தார்.

கோட்டு கோதண்டம் என்ற மூக்கன் தன்னுடைய கோட்டை இன்னும் களற்றாமல் கீழே உட்கார்ந்து அவனுடைய கால்களை இதமாக அமுக்கிக் கொண்டிருந்தான்.

"இந்த மீனாப்பெண் எல்லாவற்றையும் மாலினியிடம் சொல்லியிருப்பாளா? இனியும் மீனாவை நம்புவது மடத்தனம் என்று நினைக்கிறேன்." என்று சொன்னார் குபேரன்

"ஒரேயடியாக நம்பிக்கையை இழந்துவிடவேண்டாம் பாஸ்... மீனா நாம் யார் என்பதை மிகவும் நன்றாகத் தெரிந்து கொண்டிருக்கிறாள். அதனால் நம்மிடம் மோதுவதற்கு ஒருபோதுமே துணியமாட்டாள்."

மூக்கன் அவளுக்காகப் பரிந்து பேசியதும், குபேரன் அவனைப் பார்த்து வன்மமாகச் சிரித்தார். "எதை ஆதாரமாக வைத்துக் கொண்டு இப்படிப் பேசுகிறாய் என்பது தெரியவில்லை."

"அவள் நம்மிடம் வேலைக்கு வந்து சேர்ந்து மூன்று மாதங்களுக்கு மேலாகிவிட்டன. அவள் நினைத்திருந்தால் நம்மை என்றைக்கோ காட்டிக் கொடுத்திருக்க முடியும். போலீஸ் பாதுகாப்புடன்

COMICS PDF TIMES

நம் எல்லோரையுமே அவள் தூக்குமேடைக்கு அனுப்பிவிட முடியும்.''

தூக்குமேடை என்ற சொல்லை அவர் கொஞ்சம்கூட விரும்பாமல் முகத்தைச் சுழித்துக் கொண்டார்.

அப்பொழுது கதவைத் தள்ளித் திறந்துகொண்டு மீனு உள்ளே வந்தாள். ''என்னை இங்கே வரச்சொன்னீர்களாமே.'' என்று சொன்னாள்.

''மூக்கா...நீ வெளியே போய் யாராவது உள்ளே வராமல் பார்த்துக்கொள்.'' என்று அவர் சொன்னதும், இனி தனக்கு வேலை என்பதைப்போல் மூக்கன் கோட்டை இழுத்து விட்டுக்கொண்டு சென்றான்.

மீனு குனிந்த தலை நிமிரவில்லை. அவர் முகத்தைப் பார்க்க விருப்பமே இல்லை. இரவில் அவர் கற்பழிக்க முயற்சி செய்ததை அதற்குள் எப்படி மறந்துவிட முடியும்?

அவர் காரியம் சாதித்துக்கொள்ளவேண்டும் என்பதற்காகச் சிரிப்பை வரவழைத்துக் கொண்டு, ''மீனு நின்றுகொண்டிருக்கிறாயே, உட்கார்'' என்று சொன்னார்.

''பரவாயில்லீங்க......எனக்கு வேலை இருக்கிறது'' என்று சொல்லிவிட்டு நிற்க முடியாத நிலையில் தத்தளித்தாள் மீனு.

''நேற்றிரவு நான் கொஞ்சம் மோசமாக நடந்துகொண்டேன். குடிபோதை என்னைக் கெடுத்துவிட்டது. அதன் பிறகு என்னுடைய செய்கையை நினைத்து மிகவும் வருத்தப்பட்டேன்.''

அவர் இப்படிச் சொன்னபோதிலும் மீனு அதை நம்புவதற்குத் தயாராக இல்லை. அவளுக்குத்தான் எல்லாமே தெரியுமே!

''நான் அதை அப்போதே மறந்துவிட்டேன்'' என்றாள் மீனு, இன்னும் குனிந்த தலையை நிமிர்த்திக்கொள்ளாமலேயே.

"ரொம்பவும் நல்ல பொண்ணு" என்று பாராட்டிய குபேரன், "இங்கே நடக்கும் எதையும் மாலினியிடம் நீ சொல்லிவிடவில்லையே? ' என்று கேட்டார்.

"நான் சொல்லவில்லை. சொல்லவும் மாட்டேன். என்னை நீங்கள் நம்பலாம்" என்றாள் அவள் உறுதியுடன்.

"உன்னை நான் நம்புகிறேன். கடைசி வரையில் இந்த நம்பிக்கை இருந்துகொண்டேதான் இருக்கும்" என்று சொன்ன குபேரன் என்னிடம் உனக்கு உண்மையான விசுவாசம் இருந்தால் ஒரு ரகசியத்தைச் சொல்லவேண்டும். உன்னுடைய வீட்டுக்கு ஒரு கருப்பு உருவம் வந்து போகிறதே, அது யார்?" என்று கேட்டார்.

அவள் சட்டென்று ஒரு பொய் சொல்ல வந்தாள். அப்படிச் சொல்வதைத் தவிர வேறு வழியும் இல்லை. "ராஜாமணி வருகிறார்."

"ராஜாமணி அப்படி வரக்காரணம்''

"நீங்கள் அவர் வந்து போவதைத் தெரிந்துகொண்டால் தப்பாக நினைத்துக்கொள்வீர்கள்."

"அப்படியா?"

'நான்தான் அவரை அப்படி வரச்சொன்னேன். மற்றவர்களின் பார்வை அவர் மீது விழுவதை நான் விரும்பவில்லை."

"ஜாக்கிரதை.....எக்காரணத்தைக் கொண்டும் எனக்குத் துரோகம் செய்ய நினைத்துவிடாதே. மறைமுகமாகக்கூட திட்டமிட்டு வேலை செய்யாதே."

அவள் நம்பிக்கையூட்டும் தோரணையில் தலையை அசைத்தாள். எதிர்த்து வேலை செய்யும் தைரியம்தான் அவளுக்கு உண்டாகவில்லையே.

# 22 பேய்மகனின் விபரீத ஆசை!

மாலினி சொல்லச் சொல்ல ராஜாமணியின் உடலெங்கும் நெருப்பு பற்றிக்கொண்டது போலிருந்தது.

"உங்கள் சித்தப்பாவுக்கு இறுதிக் காலம் நெருங்கிவிட்டது. என் கையினுல்தான் அவன் சாகப்போகிருன்" என்று ராஜாமணி முழங்கினுன்.

பொறுமையைக் கடைப்பிடிக்கும்படி அவள் வேண்டினுள். அவசரப்பட்டு எதையாவது செய்தால் அதுவே பெரும் ஆபத்தைக் கொண்டு வந்துவிடும் என்று சொன்னுள்.

"என்னைப்பற்றி நீங்கள் அஞ்சவேண்டாம். நல்லதொரு சந்தர்ப்பத்தை நான் எதிர்பார்த்துக்கொண்டிருக்கிறேன்" என்று ராஜாமணி சொல்லிவிட்டு, "அதோ பார்..." என்று கையை நீட்டிச் சுட்டிக் காண்பித்தான்.

தூரத்தில் குமார் நின்றுகொண்டிருந்தான்.

"அத்தான் நான் எங்கே போனுலும் விடமாட்டார்போலிருக்கிறதே. என் பின்னுலேயே நிழல்போல் தொடர்ந்துகொண்டே இருப்பாரா?"

மாலினி அதற்குமேல் அங்கே நின்று பேசிக்கொண்டிருக்க விரும்பாதவளாக கைகளை வீசியவாறு 'விசுக் விசுக்' என்று நடந்து சென்ருள்.

ராஜாமணி சைக்கிள் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த இடத்துக்கு வந்தான்.

சைக்கிள் அங்கே இல்லை.

நெஞ்சு பக்கென்று அடித்துக்கொள்ள சைக்கிள் என்னவாயிற்று என்பதை அறிய விரும்பி நாலாப்பக்கமும் பார்த்தான்.

சைக்கிள் எங்கும் இல்லை.

கூவம் நதிக்கரையில்தான் அவர்கள் நின்று பேசிக்கொண்டிருந்தார்கள்.

ஒருவேளையில் சைக்கிள் நதியில் விழுந்து கிடக்குமோ?

இப்படி அவன் நினைத்துக்கொண்டதும் நதியில் குதித்து மூழ்கி நாலாப் பக்கமும் தேடிப் பார்த்தான்.

சைக்கிள் கிடைக்கவில்லை.

யாராவது அதை எடுத்துச் சென்றுவிட்டார்களா?

இப்படி நினைத்ததும் ராஜாமணி, தன் உயிரையே பறிகொடுத்ததைப் போல் துடிதுடித்துப் போய்விட்டான்.

சைக்கிள் எங்கே?

பத்திரங்கள்—மாலினிதான் சொத்துக்களுக்கு உரியவள் என்பதை நிரூபிக்கும் பத்திரங்கள்—சைக்கிளினுள் இருக்கும் விஷயத்தை எதிரிகள் தெரிந்துகொண்டு அதைத் தந்திரமான முறையில் எடுத்துச் சென்றுவிட்டார்களா?

ராஜாமணி தன் கடமையிலிருந்து தவறிவிட்டதைப்போல் தவித்தான். மாலினிக்கு மீண்டும் ஏமாற்றத்தையும், நம்பிக்கைத் துரோகத்தையும் கொடுத்து விட்டோமே என்று நினைத்து வருந்தினான். சைக்கிளை இழந்துவிட்டாலும் அதற்குப் புதிய சைக்கிள் வாங்கிக்கொள்ளலாம். ஆனால் பத்திரங்களைப் பொறுத்த வரையில் அப்படியில்லையே! அந்த நிஜப்பத்திரங்கள் இல்லாமல் எந்த ஒரு காரியத்

தையும் சாதிக்க முடியாதே! அவனுடைய எதிர்காலம் பத்திரத்தில் அடங்கியிருக்கிறது,

கலவரமடைந்த ராஜாமணி, வீட்டின் நாலாபக்கமும் சுற்றிப் பார்த்துவிட்டு ஏமாற்றத்துடன் சிறிது தூரம் நடந்தான்.

அங்கே சைக்கிள் ஒன்று அநாதைபோல் கிடந்தது. அதன் உட்காரும் ஆசனம் தனியாகக் கழற்றிவைக்கப்பட்டிருந்தது.

அய்யோ...இதென்ன அக்கிரமம்!

அவை தன்னுடைய சைக்கிள் பாகங்கள்தான் என்பதைத் தெரிந்து கொண்டதும் ராஜாமணி ஓடிச்சென்று முதல் வேலையாக குழாயைப் பார்த்தான்.

உருட்டி சுருட்டி வைக்கப்பட்டிருந்த பத்திரங்கள் இல்லை. ஆனால் பட்டை நாமம் திருப்பதி நாமம் போடப்பட்டிருந்த ஒரு சாதாரண காகிதம் மட்டும் அங்கே இருந்தது.

ராஜாமணி என்ன நடந்திருக்கக்கூடும் என்பதை யூகித்துத் தெரிந்து கொண்டான். பத்திரங்களை குபேரன் ஆட்கள்தான் கொண்டு போய் விட்டார்கள் என்பதில் கொஞ்சமும் ஐயம் இல்லை. அவரிடம் அந்தப் பத்திரம் இருக்கும் என்பதில் கொஞ்சமும் ஐயமில்லை.

தன் சைக்கிளை தூக்கி சரிசெய்து கொண்ட ராஜாமணி அதில் ஏறி விர்ரென்று குபேரன் வீட்டை அடைந்தான்.

உள்ளே குபேரனும், மாலினியும் தங்கள் உறவுகளை மறந்து காரசாரமாகப் பேசி சண்டை போடும் குரல் இடிஇடிப்பதுபோல் கேட்டது. மாலினி கத்தினாள்—பதிலுக்கு அவரும் இரைந்தார்.

"வீட்டினுள், அதுவும் இரும்புப் பெட்டியினுள் வைக்கப்பட்டிருந்த பத்திரங்கள் காணாமல் போயிருக்கின்றன. அதைப்பற்றி விசாரித்தால் எனக்கென்ன தெரியும்" என்று பொறுப்பில்லாமல் நடந்து கொள்கிறாயே! இதற்காகவா உன்னை கஷ்டப்பட்டுப் படிக்க வைத்தேன் சித்தப்பாவாயிற்றே என்ற மரியாதையும் பயமும் கொஞ்சமாவது உனக்கு இருக்கிறதா! என்று இரைந்து கத்தினார் குபேரன்.

"நான் என்ன செய்யவேண்டும் என்று சொல்கிறீர்கள்?" மாலினி பின்வாங்கவில்லை. அவள்தான் சண்டைக் கோழியாகவே தன்னை தயார் செய்துகொண்டிருக்கிறாளே! அஞ்சாநெஞ்சனாகிய ராஜாமணி பக்கத்துணையாக இருக்கும்போது அவள் மட்டும் பயந்து விடுவாளா என்ன? அவளும் பாயத்தானே செய்வாள்.

"பத்திரங்களை நீ தான் எடுத்து யாரிடமாவது கொடுத்து மறைத்து வைத்திருக்க வேண்டும். சில முக்கியமான விஷயங்களைப் பார்த்துத் தெரிந்து கொள்வதற்காக இப்பொழுது அந்தப் பத்திரங்கள் வேண்டும்." என்றார் அவர்.

"என்னிடம் எந்தப் பத்திரமும் இல்லை." என்று மறுத்தாள் மாலினி.

"அந்தப் பத்திரங்களை நீ யாரிடம் கொடுத்து மறைத்து வைத்திருக்கிறாய் சொல்லட்டுமா? பொடிப்பயல் ராஜாமணி இருக்கிறானே; அவனிடம்தான் பத்திரங்கள் இருக்க வேண்டும்."

அந்தச் சமயம் பார்த்து ராஜாமணி வந்து, என்னையும் பத்திரங்களையும் ஒன்றாக இணைத்துப் பேசுவதைப்போல் தெரிகிறதே! நான் மட்டும் பத்திரமாக இருக்கிறேனே தவிர, வேறு எந்தவிதமான பத்திரங்களும் என்னிடம் கிடையாது." என்று சொன்னான் கிண்டலாக.

அவனைப் பார்த்ததால் இன்னும் கடுமையான ஆவேசம் வந்து விட்டது. "நீ மறுபடியும் இங்கே ஏன் வந்தாய்? மூன்று எண்ணுவதற்குள் இந்த இடத்தைவிட்டு எங்கேயாவது ஓடிப்போய்விடு. இல்லாவிட்டால் துப்பாக்கியைத் தூக்கி வந்து சுட்டுத் தள்ளிவிடுவேன்."

பத்திரங்களைக் காணமல் அவர் தேடுவதால், குமரனிடம் அந்தப் பத்திரங்கள் சிக்கவில்லை என்பதை ராஜாமணி தெரிந்து கொண்டான். அப்படியானால் மூக்கன் அந்தப் பத்திரங்களை யாருக்குமே தெரியாமல் அபகரித்துச் சென்றுவிட்டானா?

ஒரு பயங்கர சதிக்கும்பல் வேலை செய்துகொண்டிருக்கிறதா?

ராஜாமணி ஒன்றும் புரியாமல் குழம்பிய போதிலும் பத்திரங்களைப் பற்றிய எண்ணங்களைப் பிறகு வைத்துக்கொள்ளலாம் என்ற முடிவுடன், "ஏன் ஸார், துப்பாக்கிப் பிடித்துக்கூட உங்களுக்குச் சுடத் தெரியுமா? என்று அலட்சியமாகக் கேட்டான்.

"என்னைப் பார்த்தா இப்படிக் கேட்கிறாய்? ராஸ்கல். இந்த அளவுக்குத் திமிர்பிடித்த உன்னை என்ன செய்கிறேன் பார். பல வழிகளிலும் எனக்குத் தொந்தரவு கொடுக்கும் உன்னை ஒழித்துக்கட்டினால் தான் கொஞ்சமாவது மனஅமைதி கிடைக்கும்." என்று சொன்ன குபேரன் வேகமாக வீட்டினுள் ஓடினார்.

அபாயம் வரப்போகிறது என்பதைத் தெரிந்துகொண்டதும் ராஜாமணியும் மாலினியும் நடுங்கினார்கள்.

ராஜாமணி தன்னிடமிருந்து பத்திரங்கள் காணாமல் போய் விட்ட விபரத்தை சில வார்த்தைகளிலேயே கூறிவிட்டு, "முதலில் நாம் பத்திரங்களைத் தேடிக் கண்டுபிடிக்கவேண்டும். அதுவரையிலும் இங்கே எந்தவிதமான தவறுகளையும் வைத்துக்கொள்வது நல்லதல்ல" என்று சொன்னான்.

பேரிடி ஒன்று மண்டையினுள் இறங்கியதைப்போல் இருந்த போதிலும் மாலினி சுதாரித்துக்கொண்டு, "நிலைமை மோசமாகி விட்டது. அதனால் நானும் இனி இந்த வீட்டில் இருப்பது நல்லதல்ல. அதனால் நானும் உங்களுடன் வருகிறேன்." என்றாள்

அவள் சொன்னது ராஜாமணிக்கும் திருப்தியாக இருந்தது. ஏதாவது ஒரு ஹோட்டலில் தங்கியிருந்து அங்கியிருந்து என்ன செய்யலாம் என்பதைப் பற்றி ஆணித்தரமாகச் சிந்தித்து ஒரு முடிவுக்கு வரலாம் என்று எண்ணினான்.

குபேரன் துப்பாக்கியும் கையுமாக ஓடிவந்து, "இன்னும் ஏன் இங்கே நின்றுகொண்டிருக்கிறாய்? மூன்று எண்ணுவதற்குள் ஓடிப் போய்விட்டால் பிழைத்துக்கொண்டாய். இல்லையென்றால் உன்னைச் சுட்டுப் பொசுக்கிவிடுவேன்" என்று கனத்த தொண்டையில் உறுமினார்.

''சித்தப்பா, அவள் இங்கிருந்து போவதாக இருந்தால் நானும் கூடவே போக நேரிடும்'' என்று மிரட்டினாள் மாலினி. அவள் பயப் படவில்லை.

அவள் இப்படிப் பேசுவாள் என்று கொஞ்சமும் எதிர்பார்க்காத குபேரன் தனக்கு வெற்றி கிடைத்துவிட்டதைப்போல் மகிழ்ச்சியடைந் தார் அவள் இந்த வீட்டை விட்டுப் போய்விட்டால் அதன்பிறகு எந்தவிதமான சிரமமும் இல்லாமல் அமைதியாக இருக்கமுடியும் அல்லவா? தட்டிக் கேட்பதற்குகூட யாருமே இருக்கமாட்டார்கள்.

''நீதான் பெண்ணாகிவிட்டாயே உன் சுதந்திரமான வாழ்க்கை யில் குறுக்கிடும் உரிமை எனக்கேது? நீ என்ன நினைக்கிறாயோ, அதைத் தாராளமாகச் செய்யலாம்.'. என்றார் குபேரன்.

மாலினி முகத்தை ஒரு வெட்டு வெட்டிவிட்டு, ''வாருங்கள் மிஸ்டர் ராஜா, இந்த வீட்டில் இருப்பதைவிட வேறு எங்கேயாவது போய் நாம் குடியேறலாம்' என்று அழைத்துச் சென்றாள். அவர் களைக் கடந்துவந்த மூக்கன், காதல் ஜோடிகள் கோபித்துக்கொண்டு பறந்துவிட்டார்கள் போலிருக்கிறதே'' என்று சிரித்தான்.

ஆமாம் மாலினி தோல்வியடைந்து விட்டாள். ராஜாமணி ஒரு பரதேசி அவளிடமும் கையில் காசு கிடையாது. இரண்டு பேர்களு களுமாகச் சேர்ந்து தெருத்தெருவாகச் பிச்சையெடுத்துக்கொண்டு திரிவதை விரைவிலேயே நாம் பார்க்கலாம்.'' என்றார் குபேரன் பெருமையுடன்

''முதலாளி, இப்போதுதான் எனக்கு ஓர் அருமையான யோசனை உதயமாகிறது ராஜாமணியையும் மாலினியையும் உடமை யாக்த் தீர்த்துக் கட்டுவதற்கு பொருத்தமான ஒரு ஆளை தேர்ந் தெடுத்து விட்டேன்.''

''என்ன உளறுகிறாய்? ஏன்...உன்னால் அந்தக் காரியத்தைச் செய்ய முடியாதா? இதைப் போன்ற கொலைகளைச் செய்வதற்குந் தானே சின்னசாமி பெரியசாமி என்ற இரு கையாட்களையும் கூடவே கூட்டிக்கொண்டு அலைகிறாய்?''

நீங்கள் சொல்லுவது வாஸ்தவம்தான் முதலாளி. ஆனால் ராஜாமணியைக் கொலைசெய்ய முயன்று படுதோல்வியடைந்து விட்டதால் தற்சமயம் சகுனம் சரியாக இல்லை. மீண்டும் அவன் தப்பித்துக் கொள்வதுடன் போலீசார் முதல் சில சில்லரைத் தொந்தரவுகளையும் உண்டுபண்ணலாம். அதனால்தான் ஆவேசத்துடன் அவர்களைக் கொலை செய்வதற்கு ஒரு பொருத்தமானவனைத் தேர்ந்தெடுத்திருக்கிறேன்.''

"யார் அந்தப் பொருத்தமானவன்?''

இதைக்கூட உங்களால் தெரிந்து கொள்ள முடியவில்லையா பாஸ்? நம்முடைய குமார் மாப்பிள்ளையைத்தான் சொல்லுகிறேன். மாலினியைக் கல்யாணம் செய்துகொள்ள வேண்டும் என்ற ஒரே எண்ணத்துடன் குட்டிப்போட்ட பூனையைப்போல் இந்த வீட்டினுள்ளேயே வளையவளைய வந்துகொண்டிருக்கிறார். ராஜாமணி மாலினியைக் கடத்திக்கொண்டு போய்விட்டான் என்ற விஷயத்தை இலேசாக காதுகளில் போட்டாலே போதும். உடனே எரிமலையைப் போல் சீறுவார். இரண்டு பேர்களையும் கொலைசெய்து விட்டுத் தானும் தற்கொலை செய்துகொள்ள வேண்டும் என்ற வெறி உணர்ச்சிதான் பொங்கும். ஒரே திட்டத்தில் மூன்று உயிர்கள் பலி! நாம் எந்தவிதமான சிரமங்களையும் அனுபவிக்காமல் வெற்றி தேடலாம். 'என் திட்டங்கள் எப்பொழுதுமே அபாரமான வெற்றியைத் தேடித்தரும்.'

மூக்கன் சொன்ன இந்த யோசனை குபேரனுக்கு பரமதிருப்தியாக இருந்தது. உற்சாக மிகுதியினால் அவன் முதுகைத் தட்டிக் கொடுத்துவிட்டு, "நமக்கு எதிரியாக முளைப்பவர்கள் எல்லாம் விரைவில் அழிந்து ஒழிந்தாலே போதும்'' என்று சொன்னார்.

அப்போது குமார் மாப்பிள்ளை வேகமாக அங்கே வந்தார்,

அவரைப் பார்த்ததும் மூக்கன் அதிர்ச்சியடைந்தவன்போல், குரலை நீட்டி முழக்கிக் கொண்டே "சீக்கிரம் வாருங்கள் மாப்பிள்ளே! உங்கம் மானம், மரியாதை எல்லாம் ஒரே வழியாக கப்பலேறிவிட்டது. பெருத்த அவமானம்! நானாக மட்டும் இருந்திருந்தால் இந்நேரம்

எங்கேயாவது தூக்குப் போட்டுக்கொண்டு தொங்கியிருப்பேன்என்று ஓலமிட்டான்.

என்னவோ, ஏதோ என்று பதறிய குமார் மாப்பிள்ளை "என்ன மூக்கு விஷயத்தைச் சொல்லாமல் ஒப்பாரி வைக்கிறாய்?'' என்றான். ''வாட் ஈஸ் தி மேட்டர்''...கமான் டெல் மி?''

''அதை என் வாயால் எப்படிச் சொல்வேன் குமார் மாப்பிள்ளை! மனிதனுக்கு மானம்தான் பெரியது. அந்த பெரிய மானம் போய்விட்டால் அதன் பிறகு மனிதன் வாழ்ந்துதான் என்ன பயன்?'' என்று சொன்ன மூக்கன், உங்களுக்கும், மாலினி அம்மையாருக்கும் திருமணம் நடைபெறும், வயிறாரச் சாப்பாடு போடுவீர்கள் என்று நினைத்துக் கொண்டிருந்தேன். இப்பொழுது அந்த நினைப்பின் இடி விழுந்து விட்டதைப்போல் ஆகிவிட்டது'' என்று அங்கலாய்த்தான் வயிற்றிலும் அடித்துக் கொண்டான்.

''நீங்கள் என்ன சொல்லுகிறீர்கள்? உங்கள் பேச்சைக் கவனிக்கும்போது எனக்கும் உங்கள் பேச்சைக் கவனிக்கும்போது எனக்கும் மாலினிக்கும் திருமணம் நடைபெறாதுபோல் அல்லவா தோன்றுகிறது.'' என்று விழித்தான் குமார் மாப்பிள்ளை.

''தோன்றுவது மட்டுமல்ல; நிச்சயமாக உங்களுக்கும் மாலினி அம்மையாருக்கும் திருமணம் நடைபெறாது. காத்திருந்தவன் மனைவியை நேற்று வந்தவன் கொண்டு போய்விட்டான் என்ற கதையைப் போல் எங்கிருந்தோ வந்தப் பேப்பர்காரபயல் நம்முடைய மாலினி அம்மையாரை தந்திரமாக ஏமாற்றிக் கடத்திக்கொண்டு போய்விட்டான். அதாவது தங்களுக்குச் சொந்தமான மாலினியை ராஜாமணி கல்யாணம் செய்துகொள்ளப் போகிறான். இதைவிடவும் ஓர் ஆண் பிள்ளைக்கு வேறென்ன அவமானம் வேண்டும்? வெட்கக்கேடு—வெட்கக்கேடு. மானம் மட்டும் அல்ல; எல்லாமே போய்விட்டது.

அவன் சொன்ன வார்த்தைகளைக் கேட்டதும் குமார் மாப்பிள்ளை இரண்டொரு நிமிடங்கள் வரையிலும் அதுவும் பேசாமல்

அப்படியே நின்றான். பிறகு திடீர் என்று வெறிபிடித்தவன்போல் "இப்பொழுது அவர்கள் இரண்டு பேர்களும்?" என்று கத்தினான்.

குமார் மாப்பிள்ளைக்கு ஆவேசம் வந்துவிட்டது என்பதையும், அதன் விளைவு மிகமிக பயங்கரமாக இருக்கும் என்பதையும் குபேரனும் மூக்கனும் புரிந்து கொண்டார்கள், அவர்கள் உள்ளத்தில் பொங்கிக்கொண்டிருந்த மகிழ்ச்சியைக் கொஞ்சமும் காட்டிக் கொள்ளாமல் கடுகடுப்புடன் முகத்தை வைத்துக் கொண்டார்கள்.

"உங்களிடம் சொன்னால் அவர்களைச் சுட்டுக்கொன்று விடுவீர்களோ என்று பயமாக இருக்கிறது. ஏனென்றால் நீங்கள் முன்கோபக்காரர்." என்று கோபத்தை மெதுவாகத் தூண்டிவிட்டான் மூக்கன்.

"நான் முன்கோபக்காரன்தான்! எனக்குத் துரோகம் செய்த மாலினியையும், அவளுடைய கள்ளக்காதலனை ராஜாமணியையும் சுட்டுக் கொல்லத்தான் போகிறேன். அவமானச் சின்னங்களான அவர்கள் இனிமேல் இந்த உலகத்தில் உயிர் வாழவே கூடாது" என்று கத்திய குமார் மாப்பிள்ளை, குபேரனின் கையில் இருந்த கைத்துப்பாக்கியைப் பிடுங்கி எடுத்துக் கொண்டான்.

உடனே தடுப்பதைப்போல் பாவனை செய்த குபேரன், குமார் மாப்பிளே! சுடும்போது மெதுவாகச் சுடுங்கள். ஏனென்றால் மாலினி பாவம்."என்று சொன்னார். ஒரேகுண்டில் அவள் செத்துவிடக்கூடாது!"

குமார் அவர் சொன்னதைக் காதுகளில் வாங்கிக் கொள்ளாமல் ஆவேச வெறிபிடித்தவனைப்போல் பாய்ந்தோடினான்.

அவன், கண்பார்வையிலிருந்து மறைந்ததும், நம்முடைய எதிரிகள் எல்லோருமே தொலைந்தார்கள். இனிமேல் நமக்கு நிரந்தரமான வெற்றிதான்." என்று சிரித்தார் குபேரன்.

"உங்கள் வெற்றிக்குக் காரணமானவன் அடியேன்தான் என்பதை மறந்து விடாதீர்கள். ஒரே கல்லில் மூன்று மாங்காய்களை கீழே விழச்செய்து விட்டேன் பார்த்தீர்களா?

"இன்னொரு மகிழ்ச்சியான செய்தியையும் உன்னிடம் சொல்லப் போகிறேன். அதாவது நான் திருமணம் செய்துகொள்வது என்ற முடிவுக்கு வந்திருக்கிறேன்."

குபேரன் சொன்னதைக் கேட்டு மூக்கன் வியப்படைந்து, "நீங்கள் திருமணம் செய்துகொள்ளப்போகிறீர்களா?" என்று கேட்டான். "உங்களுக்கென்றும் ஒருபெண் இந்த உலகத்தில் பிறந்திருக்கிருளா?"

"ஆமாம் இப்பொழுது நான் கல்யாணம் செய்துகொண்டு அதன் சுவையையும் அனுபவிக்க வேண்டும் என்ற ஆசை ஏற்பட்டிருக்கிறது. மணப்பெண் யார் என்பதைத் தெரிந்துகொள்ளவில்லையே. என்னுடைய அந்தரங்கக் காரியதரிசியான மீனுவைதான் கல்யாணம் செய்துகொள்ளப்போகிறேன். "என்ருர் குபேரன் மீசையைத் தடவிக்கொண்டே.

"மீனுவையா...? மீனுவையா...?" என்று வியப்புடன் அலறிய மூக்கன், "இதற்கு மீனு சம்மதித்துவிட்டாளா?" என்று ஓலமிட்டான்.

"இப்பொழுது நான் எதையுமே சொல்லக்கூடாது. நாங்கள் இரண்டு பேர்களும் மணமேடையில் உட்கார்ந்திருக்கும் காட்சியை நீயே விரைவில் தெரிந்துகொள்வாய்." என்று சொன்ன குபேரன் உற்சாக மிகுதியினுல் பழத்தட்டில் வைக்கப்பட்டிருந்த ஓர் ஆப்பிள் பழத்தை எடுத்து வெற்றி பெருமிதத்துடன் கடித்துச் சுவைத்தார்.

# 23. துப்பாக்கி வேட்டை !

மாலினியும் ராஜாமணியும் வீடுகள் அதிகமில்லாத பகுதி வழியாக நடந்து போய்க்கொண்டிருந்தார்கள். வழக்கம்போல் அவர்கள் இருவரையும் சைக்கிள் தனித்தனியாகப் பிரித்திருந்தது.

"ஏன் மாலினி பேசாமல் வருகிருர்கள்? நீங்கள் கொடுத்த பத்திரங்களை ஜாக்கிரதையாகப் பாதுகாக்கத் தவறிவிட்டேனே என்று நினைத்து வருத்தப்படுகிறீர்களா?" என்று ராஜாமணி கவலைப்பட்டான்.

உடம்பைச் சிலிர்த்துக்கொண்ட மாலினி, "அப்படி ஒன்றும் இல்லை. நம்மை விடவும் எதரிகள் ஜாக்கிரதையாக இருக்கும்போது நம்மால் என்ன செய்யமுடியும்? பத்திரங்களை இழந்துவிட்டதைப் பற்றி நான் கவலைப்படவில்லை. ஆனால் இழந்த பத்திரங்களை எப்படி மீட்பது என்பதைப் பற்றித்தான் சிந்தித்துக்கொண்டிருக்கிறேன்." என்ருள்.

பத்திரங்கள் காணுமல்போனதைப் பற்றி உடனடியாக பத்திரிகைகளில் விளம்பரம் செய்துவிடவேண்டும். அப்பொழுதுதான் பத்திரங்களை எடுத்துச் சென்றிருக்கும் எதிரிகளுக்கு புத்தி வரும் அந்த பத்திரங்களை வைத்துக்கொண்டு அவர்களாலும் எதையும் செய்யமுடியாத சூழ்நிலை ஏற்படும்." என்று சொன்ஞன் ராஜாமணி

அவன் சொன்ன யோசனை மாலினிக்குத் திருப்தியாக இருந்தது. "நாம் நாளைக்கே பத்திரிகை அலுவலகங்களுக்குச் சென்று விளம்பரம் கொடுத்துவிடலாம்."

சிறிது தூரம் நடந்து சென்ற பின்பு, "மாலினி நாம் இனி மேல் எங்கே தங்குவது? புரட்சிகரமான திட்டத்துடன் நீங்கள் வெளியே வந்துவிட்டீர்கள். அந்தத் திட்டத்தை நிறைவேற்றி வைக்கும் பொறுப்பு எனக்கும் இருக்கிறது" என்று சொன்னான் ராஜாமணி.

"ஏதாவது ஒரு நல்ல ஹோட்டலாகப் பார்த்து அதில் தங்கலாம்." என்று மாலினி சொன்னாள். அதே நேரத்தில் யாரோ வேகமாக ஓடிவரும் காலடியோசைக் கேட்டுத் திரும்பினாள்.

வேகமாக வந்து நெஞ்சில் மோதியதைப்போல் இருந்தது கையில் துப்பாக்கியுடன் குமார் மாப்பிள்ளை ஓடிவந்துகொண்டிருந்தான்.

அவனைக் கண்டதும் மாலினி பயந்துபோய், "ராஜா வேகமாக ஓடுங்கள். நம்மைச் சுட்டுக் கொல்ல குமார் ஓடி வருகிறார்" என்று அலறினாள்.

ஆனால் ராஜாமணி பயந்துபோய் ஓடிவிடவில்லை. அமைதியாக நின்று பின்னால் திரும்பிப் பார்த்தான். சிரிப்பு முகமெங்கும் பரவியிருந்தது.

மிகவும் சமீபமாக குமார் மாப்பிள்ளை வந்துவிட்டான். அவன் சுட்டுக் கொன்றுவிடுவானோ என்று பயந்த மாலினி, அவன் முன்னால் போய் நின்றுகொண்டு மறைத்து அவன் மீது சாய்ந்து நின்று, "அவசரப்பட்டு எந்தவிதமான முடிவுக்கும் வந்துவிடாதீர்கள் அத்தான். நீங்கள் நினைத்துக்கொண்டிருப்பதைப்போல் நாங்கள் சுட்டுக் கொல்லப் படவேண்டியவர்கள் அல்ல. நான் உங்களுக்குத் துரோகம் செய்துவிடவில்லை. ஒரு நல்ல காரியத்தை நிறைவேற்றுவதற்காகவே ராஜா

மணியுடன் வந்திருக்கிறேன்'' என்று கெஞ்சும் தோரணையில் சொன்னாள். ராஜாமணிக்காக தன் உயிரை வேண்டுமானாலும் தியாகம் செய்ய தயாராக இருந்தாள்.

ராஜாமணி சரணாகதி அடைபவன் போல இரண்டு கைகளையும் மேல்நோக்கித் தூக்கியவாறு நின்றுகொண்டிருந்தான்.

''நல்ல காரியத்தை நிறைவேற்றுவதற்காக ராஜாமணியுடன் வந்திருக்கிறாயா? பேஷ்! பேஷ்! உன்னைப் போன்ற கன்னியை நான் வேறு எங்குமே பார்த்ததில்லை. உங்கள் இரண்டு பேர்களையுமே சுட்டுக் கொன்றால்தான் என் மனம் ஆறும். உங்கள் சாவில்தான் எனக்கு மகிழ்ச்சி காத்துக்கொண்டிருக்கிறது.'' என்று உறுமிய குமார் மாப்பிள்ளை துப்பாக்கியை நீட்டி குறி வைத்தவாறே நெருங்கினான்.

மாலினி கதறினாள் தன்னால்தானே ராஜாமணி உயிரை இழந்துவிடப்போகிறான் என்பதை நினைத்தபோது உடலெங்கும் நெருப்பு பற்றி எரிவதைப் போல் இருந்தது. குமார் மாப்பிள்ளையின் கோபத்தைத் தணித்து அவனை எப்படிக் காப்பாற்றுவது என்பதும் தெரியவில்லை.

''அதோ குமார் மாப்பிள்ளை சுடுவதற்குத் தயாராகிவிட்டானே! ஒன்று ..இரண்டு அவனுடைய விரல் துப்பாக்கியினுடைய குதிரையைப் பிடித்து இழுக்கப்போகிறது.

இனியும் அவனிடமிருந்து மீளமுடியாது என்பதைப் புரிந்து கொண்ட மாலினி இரண்டு கண்களையும் மூடிக்கொண்டு, ''எங்களைச் சுட்டுவிடாதீர்கள். நாங்கள் இறந்தபிறகு உண்மையைத் தெரிந்து கொண்டு நீங்களே வருந்துவீர்கள். கொலை செய்த குற்றத்திற்காக போலீஸார் உங்களை விடவும் மாட்டார்கள். அநியாயமாக நீங்களும் உயிரை இழந்துவிடுவீர்கள்.'' என்று கதறினாள்.

ஆனால் குமார் மாப்பிள்ளை அவள் சொன்ன எதையுமே காது காதுகளில் போட்டுக்கொள்ளாதவனைப் போல் ''ஹா... ஹா...'' என்று சிரித்துவிட்டு, ''இந்தா ராஜா துப்பாக்கி'' என்று கூறி தான்

கொண்டு வந்திருந்த துப்பாக்கியையின் ராஜாமணியின் கையில் கொடுத்தான்.

ஒன்றுமே தோன்றாமல் விளங்கிய மாலினி கண்விழித்துப் பார்த்துவிட்டு விலகி நின்றாள். குமார் மாப்பிள்ளை எதனால் இப்படி நடந்துகொள்கிறான் என்பதை அவளால் புரிந்துகொள்ளமுடியவில்லை.

ராஜாமணியும் குமாரும் ஒருவரையொருவர் ஆர்வத்துடன் கட்டித் தழுவிக்கொண்டார்கள். கேளிக்கை வெடித்தது.

"எப்படி என்னுடைய நடிப்பு? பொருத்தமாக இருந்ததா? நீங்கள் சொன்னதுபோல் இதுவரையிலும் சரியாக நடித்துவிட்டேனா!" என்று சிரித்துக்கொண்டே கேட்டான் குமார்.

"குமார் மாப்பிள்ளை சாதாரணமான ஆளா என்ன? அருமையாக நடித்துவிட்டீர்கள். மாலினி பயந்து நடுநடுங்கும் அளவுக்கு உங்கள் நடிப்பு இயற்கையாகவும் தத்ரூபமாகவும் இருந்தது" என்று பாராட்டிய ராஜாமணி, "என்ன மாலினி விழிக்கிறீர்கள்? நாங்கள் இரண்டு பேர்களும் முன்கூட்டியே திட்டம் போட்டுக்கொண்டுதான் வேலை செய்து வருகிறோம். அதில் ஓரளவு வெற்றியும் கிடைத்து விட்டது." என்று சிரித்தான்.

மாலினி சிணுங்கினவளாய், "கடைசியில் என்னைக்கூடவா ஏமாற்ற வேண்டும்! நான் பயந்துபோய்..." என்று நிறுத்தினாள்.

"பயப்படாதே, நான் உன் அருகில் தானே இருக்கிறேன்" என்று உற்சாகமாகச் சொல்லி அவளுடைய முதுகில் தட்டிக் கொடுத்த குமார் மாப்பிள்ளை, "உங்கள் இரண்டு பேர்களையும் சுட்டுக் கொல்வதற்காக கிழட்டு குபேரனும், அந்தப் பயல் மூக்கனும் என்னை இங்கே அனுப்பினார்கள்," என்று சொன்னான்.

"இப்பொழுது சுட்டுவிட்டீர்கள் அல்லவா? இந்த வெற்றிச் செய்தியை அவர்களிடம் போய்ச் சொல்லுங்கள்" என்று கூறி ராஜாமணி சிரித்ததும் மாலினியும் குமார் மாப்பிள்ளையும் சேர்ந்து சிரித்தார்கள்.

"அதிருக்கட்டும் ராஜா, எனக்கும் மாலினிக்கும் எப்பொழுது திருமணம் செய்து வைக்கப் போகிறீர்கள்? இன்னும் நான் பிரம்மச்சாரியாக நாட்களை எண்ணவேண்டியதுதானு?" என்று பெருமூச்சு விட்டான் குமார் மாப்பிள்ளை.

நாணத்திஞல் மாலினி தலையைத் தாழ்த்திக்கொள்ள, ராஜாமணி, "திருமணம் சொர்க்கத்தில்தான் நிச்சயிக்கப்படுகிறது. திருமணம் நடைபெறுவதும் நடைபெருமல் இருப்பதும் ஆண்டவன் செயல்" என்று சிரித்தான்.

உடனே குமார் மாப்பிள்ளை, "இப்பொழுதே நீங்கள் எனக்கு வாக்களித்தால் இன்னும் ஒரு மகிழ்ச்சியான செய்தியை உங்களிடம் தெரியப்படுத்துவேன். அதைக் கேட்டு நீங்களும் மாலினியும்பூரித்துப் போய் விடுவீர்கள்." என்று சொன்ஞன்.

"முதலில் அந்த மகிழ்ச்சியான செய்தியைத் தெரியப்படுத்துங்கள்" என்ருன் ராஜாமணி.

"நீங்கள் சைக்கிள் 'சீட்டுக்கு' அடியில் பத்திரங்களை மறைத்து வைத்திருந்தீர்களே, அது என்னவாயிற்று?"

குமார் மாப்பிளை இப்படிக் கேட்டதும், அந்தப் பத்திரங்கள் அவனிடம்தான் இருக்கின்றன என்பதை ராஜாமணி தெரிந்து கொண்டான்.

"நீங்கள்தான் அந்தப் பத்திரங்களை எடுத்து வைத்திருக்கிறீர்களா?"

"ஆமாம், உங்கள் சைக்கிள்மீது கேடி மூக்கனுக்கு சந்தேகம் வந்துவிட்டது. நீங்கள் சைக்கிள் 'சீட்டை' அசைத்துக் கொண்டிருந்ததை அவன் பார்த்து விட்டானும். இதைத் தெரிந்து கொண்ட நான் முன்கூட்டியே வந்து பத்திரங்களை எடுத்துச் சென்று போலீஸ் பாதுகாப்பில் வைத்திருக்கிறேன்."

• குமார் மாப்பிள்ளையின் புத்திசாலித்தனமான செய்கைகளைக் கண்டு ராஜாமணி பெருமையடைந்தான். அவனை இறுகத் தழுவிக் கொண்டு, ''உங்கள் திறமையைப் பாராட்டுகிறேன்.''

குமார் மாப்பிள்ளையின் புத்திசாலித்தனமான செய்கைகளைக் கண்டு ராஜாமணி பெருமையடைந்தான். அவனை இறுகத் தழுவிக் கொண்டு, 'உங்கள் திறமையைப் பாராட்டுகிறேன். மாலினியை வாழவைக்கும் தகுதி நிச்சயமாக உங்களுக்கு இருக்கிறது. விரைவில் இரண்டு பேர்களும் மணமக்களாகக் காட்சியளிப்பீர்கள். என் முழு ஒத்துழைப்பும் உங்களுக்கு உண்டு.'' என்று கூறியவன் உற்சாக மிகுதியினால் குமார் கன்னத்தில் ஒரு முத்தமிட்டான்

அந்த முத்தக் காட்சியைப் பார்த்ததும் மாலினி 'களுக்' கென்று சிரித்துவிட்டாள். கன்னங்கள் இரண்டும் சிவப்பு ஆப்பிள் பழங்களைப்போல் குவிந்துச் சிவந்தன.

# 24. உண்மை வெடித்தது!

மீனு பலவிதமான சிந்தனைகளுடன் அயர்ந்து தூங்கிக் கொண்டிருந்தாள். கவலைகள் நெஞ்சை அழுத்திக் கொண்டிருந்தன. நள்ளிரவு பன்னிரண்டு மணிக்குத்தான் அவளுக்குத் தூக்கமே வந்தது.

கதவு தட்டப்படும் சப்தம் இலேசாக ஒலித்தது.

பயங்கரக் கனவு கண்டவளைப்போல் மீனு திடுக்கிட்டு விழித்து எழுந்து உட்கார்ந்தாள். ஒருவினாடி நேரம்கூட அமைதியாக இருக்க முடியவில்லையே என்ற கவலை அவளை வாட்டியபோதிலும், தன்னுடைய கடமையைச் செய்துதானே ஆகவேண்டும் என்ற எண்ணத்துடன் எழுந்து சென்று கதவைத் திறந்து பார்த்தாள்.

அவள் எதிர்பார்த்ததைப்போல் முகமூடி அணிந்த நிழல் மனிதன் ஒருவன் வெளியே நின்றுகொண்டிருந்தான். அந்த உருவம் சட்டென்று அவளைத் தள்ளிக்கொண்டு உள்ளே வந்தது.

கதவைத் தாளிட மறந்த மீனு, இங்கே எக்காரணத்தைக் கொண்டும் வரவே கூடாது. என்று எத்தனையோ முறை சொல்லி விட்டேன். நீங்கள் கேட்கவே இல்லை, இனிமேல் நான் இறந்தால் தான் அமைதியுடன் இருக்க முடியுமா!'' என்று கூறிவிட்டு குலுங்கிக் குலுங்கி அழுதாள்.

"உஸ்...ஸ்" என்று இரைந்துவிட்டு அவளை அடக்கிய அந்த உருவம் ஒரு காகிதத்தை அவள் கையில் திணித்துவிட்டு அமைதியாக நின்றது.

மீனு கடிதத்தை பரபரப்புடன் விரித்துப் படித்தாள். அதில் கீழ்கண்டவாறு எழுதப்பட்டிருந்தது.

அன்புள்ள மீனு,

இப்படியொரு முடிவைத் தேர்ந்தெடுப்பதற்கு நான் மிகவும் வருத்தப்படுகிறேன். மற்றவர்களைப்போல் நானும் இந்த உலகத்தில் தலைநிமிர்ந்து வாழுவேன் என்றுதான் நினைத்துக்கொண்டிருந்தேன். ஆனால் வாழவே முடியாத சூழ்நிலை ஏற்பட்டுவிட்டது.

மீனு, எத்தனை நாட்களுக்குத்தான் உன்னை நான் திருட்டுத்தனமாக சந்தித்துக்கொண்டிருக்கமுடியும்? என்னால் உனக்கும் நிம்மதி இல்லை. எனக்கும் நிம்மதி இல்லை. இந்த நிலையில் துன்பங்களுக்கெல்லாம் காரணமாக இருக்கும் நான் வாழத்தான் வேண்டுமா? சொல் மீனு.

எனக்கு வாழ்க்கை கசந்துவிட்டது. உன்னை கண்ணபிரானிடமிருந்து காப்பாற்றுவதற்காக அவரைக் கொலை செய்தேன். அன்றைக்கே நானும் என் உயிரை மாய்த்திருக்க வேண்டும். ஆனால் பொல்லாத பாவம் வந்து என்னை எதையும் செய்யவிடாமல் தடுத்துவிட்டது.

மீனு, நான் தற்கொலை செய்துகொள்ளவேண்டும் என்ற முடிவுக்கு வந்துவிட்டேன். இனிமேல் உனக்கு எந்த விதமான தொந்தரவுகளும் ஏற்படாது. நான் ரகசியமாக வந்து சந்திக்கும் சந்திப்பு இதுதான் கடைசி முறையாக இருக்கும்.

இப்போது நான் உன்னிடமிருந்து விடைபெற்றுச் செல்ல வந்திருக்கிறேன் மீனு. உன் மனத்தைத் திடப்

படுத்திக்கொண்டு என்னை வழியனுப்பிவை. நான் எங்கே யாவது இறந்து கிடப்பதாக தகவல் கிடைத்தால் அந்தப் பிணத்துக்கு உரிமை கொண்டாடி என்னைப் புதைப்பதற்கு ஏற்பாடு செய்யாதே. அனாதைப் பிணமாகவே இந்த உலகத்தை விட்டுப் போய்விடுகிறேன்.

செய்வாயா மீனு! தைரியத்தை இழந்துவிடாதே.

ராஜாமணி நல்லவன். உன்னை வாழவைப்பதற் கேற்ற மனப்பக்குவம் அவனுக்கு உண்டு. அவனையே திருமணம் செய்துகொண்டு நல்லவிதமாகக் குடும்பம் நடத்த முயற்சி செய். கடவுள் உங்கள் இரண்டு பேர்களை யும் இணைத்து வைப்பார் என்று நம்புகிறேன்.

வருகிறேன் மீனு. எனக்கு விடை கொடுத்து அனுப்பிவை.

இப்படிக்கு,

.............

கடிதத்தைப் படித்து முடித்த மீனு, ''அண்ணே...நீங்கள் சாகவே கூடாது. அப்படியே சாகத்தான் வேண்டும் என்றால் நாம் இரண்டு பேர்களும் ஒன்றாகவே சாவோம். உங்களை இழந்துவிட்டு நான் மட்டும் எதற்காக அண்ணே கல்யாணமும் செய்துகொண்டு சந்தோஷமாக வாழவேண்டும். வேண்டாம் அண்ணே! இந்த பயங்கர உலகம் நம்மை வாழவிடாது, நாம் கடலில் விழுந்தாவது உயிரை மாய்த்துக் கொள்ளலாம்.'' என்று அழுதாள்.

அதே சமயத்தில் இன்னொரு முகமூடி உருவம் வேகமாக ஓடிவந்து 'தங்கச்சி இங்கே நான் இருக்கிறேன். இவன் யாரோ ஒருவன் கொள்ளைக் கூட்டத்தைச் சேர்ந்தவனாகவும் இருக்கலாம், அதனால் ஏமாந்து விடாதே.'' என்று எச்சரிக்கை செய்தது

மீனு திடுக்கிட்டுப் பார்த்தாள் அடிவயிற்றிலிருந்து நெருப்புப் பற்றிக்கொண்டு எரிவதைப்போல் அவளுக்குத் தோன்றியது. ஒரே

உயரத்தில் இரண்டு கருப்பு உருவங்களா? அவளுக்கு ஒன்றுமே புரியவில்லை, குழம்பினாள்.

இரண்டு உருவங்களில் தன்னுடைய அண்ணன் யார் என்று அவளுக்குப் புரியவில்லை; திகைத்தாள்.

அதே சமயத்தில் அந்த இரண்டு உருவங்களும் மிகமிகப் பயங்கரமாக மோதி தரையில் கிடந்து உருண்டன.

மீனு வாயடைத்துப்போய் நின்றுகொண்டிருந்தாள். யாரைக் காப்பாற்றுவது என்றும் புரியவில்லை. இரண்டுங் கெட்டான்நிலை என்று சொல்லுவார்களே அதைப் போன்றதொருநிலை. "முருகா, என்னை ஏன் இப்படியெல்லாம் சோதிக்கிறாய்? என் தலையில் விழுந்த அடிகள் எல்லாம் போதாதா? இன்னும் நான் அணுஅணுவாகத் துடித்துச் சாகத்தான் வேண்டுமா?" என்று கதறிய மீனு ஓர் உருவத்தின் முகமூடி அகற்றப்பட்டதும், அது ராஜாமணியாக இருப்பதைக் கண்டு திடுக்கிட்டாள்.

ராஜாமணி இரண்டு கைகளையும் உதறியவனாய் வெற்றிப் பெருமிதத்துடன் எழுந்து நின்றான். இன்னொரு உருவம் மௌனமாக நின்றுகொண்டிருந்தது.

"நீங்களா? ராஜா...? நீங்களா கடிதம் எழுதி...?" என்று தயங்கினாள் மீனு. குலைநடுக்கம் உண்டாயிற்று.

"நான்தான் கடிதம் எழுதினேன். எல்லாமே எனக்கு விளங்கி விட்டது. கண்ணபிரானைக் கொலைசெய்தது உன் அண்ணன்தான் என்பதை இந்தச் சிறிய சோதனையின் மூலம் திட்டவட்டமாகத் தெரிந்து கொண்டேன். இனியாவது உன் அண்ணன்தான் கண்ணபிரானைக் கொலை செய்தார் என்பதை ஒத்துக்கொள்கிறாயா?" என்று கேட்டான் ராஜாமணி.

மீனு பதில் பேசாமல் கைகளைப் பிசைந்தபடி நின்றுகொண்டிருந்தாள். உடன் பிறந்த அண்ணனைக் காட்டிக் கொடுப்பதற்கு எப்படி அவளுக்கு மனம் வரும்?

அதே சமயத்தில் இன்ஸ்பெக்டர் சாரங்கனும் ஏராளமான ஆயுதம் தாங்கிய போலீஸ்காரர்களும் 'திமுதிமு'வென்று அங்கே வந்தார்கள்.

போலீஸ்காரர்கள் ஒருவர் முகமூடியுடன் நின்றுகொண்டிருந்த மீனுவின் அண்ணன் என்று கருதப்படும் ஆசாமியின் கருப்பு உடைகளை கழற்றினர்.

என்ன ஆச்சரியம்! அது குபேரனின் வீட்டு வேலைக்காரன் வாசுதான்!

வாசு தலையைத் தொங்கவிட்டபடியே நின்றுகொண்டிருந்தான். மற்றவர்கள் நிமிர்ந்து பார்ப்பதற்கு அவனுக்கு என்னவோ போலிருந்தது.

"நாங்கள் மறைவாக இருந்து நீங்கள் பேசியதையெல்லாம் கேட்டுக் கொண்டிருந்தோம்." என்று சொன்ன இன்ஸ்பெக்டர் சாரங்கன், "கொலையைப்பற்றி என்ன சொல்லுகிறாய்? கண்ணபிரானைக் கொலை செய்தது நீதான் என்பதை பகிரங்கமாக ஒத்துக் கொள்கிறாயா?.' என்று கேட்டார்.

"நிலைமை இந்த அளவுக்கு வந்த பின்பு உண்மையை ஒத்துக் கொள்ளாமல் வேறென்ன செய்வது? கண்ணபிரானை நான் கத்தியால் குத்திக் கொன்றேன். ஆனால் அவரை திட்டமிட்டுக் கொல்லவில்லை. உணர்ச்சி வேகத்தினால் உந்தித் தள்ளப்பட்டு ஓர் ஆவேச வெறியுடன் அவரைக் குத்தி கொன்றுவிட்டேன்." என்று வியர்த்து விறுவிறுத்த நிலையில் மனம் திறந்து பேசிய சமையல்காரன் வாசு, பேச்சைத் தொடர்ந்தான்.

"எனக்கென்றிருப்பது இந்த ஒரே தங்கைதான். ஆனால் நானும் என் தங்கையும் அண்ணன் தங்கை என்று காட்டிக்கொள்ள முடியாத சூழ்நிலையில் இருந்தோம். நாங்கள் இரண்டு பேர்களுமே இலங்கையில் பிறந்து வளர்ந்த இலங்கைத் தமிழர்கள். நாங்கள் அகதிகளாக வந்தோம். என் தங்கையை என் தாயாரிடம் ஒப்படைத்து

விட்டு நான் மட்டும் சென்னை வந்தேன். எனக்கு வேலை கிடைத்தது. கடைசியில் தான் நாங்கள் இரண்டு பேரும் ஒரே முதலாளியிடம் வேலைக்கு அமர்ந்திருக்கிறோம் என்பதைத் தெரிந்துகொண்டோம். என் தங்கையை எங்கள் முதலாளி எப்படியோ வேலைக்கு வைத்துக் கொண்டார்.

''இந்த நிலையில் என் தங்கை அவளுக்கு ஒப்படைக்கப்பட்டிருக்கும் பயங்கரமான வேலையை என்னிடம் சொல்லி அந்த வேலையை ஒழுங்கான முறையில் செய்து முடிக்காவிட்டால் குபேரனின் ஆட்கள் தன்னைக் கொலை செய்வதற்குத் தயாராக இருக்கிறார்கள் என்பதையும் தெரியப்படுத்தினாள். அந்த வேலையை விட்டு விலகினாலும் அவள் உயிருக்கு ஆபத்து ஏற்படும். எதிர்த்துப் பேசினாலும் கொன்றுவிடுவார்கள். அவள் ஓர் அனாதை என்று நினைத்துக்கொண்டிருந்ததால் அந்த வேலையை துணிச்சலாக அவளிடம் ஒப்படைத்திருந்தார்கள். அனாதையாக இருந்தால் சொந்தக்காரர்கள் என்று சொல்லிக்கொண்டு தட்டிக் கேட்க யாருமே வரமாட்டார்கள் என்று அவர்கள் நினைத்துக் கொண்டிருந்தார்கள்.

''நான் நிலைமை தெரிந்ததும் வருந்தினேன். நான்தான் அவளுடைய சொந்த அண்ணன் என்பது குபேரனுக்குத் தெரிந்தால் முதல்வேலையாக என்னைக் கொலை செய்யலாம். அதனால் நானும் என் தங்கையும் தனித்துப் பேசி ஐந்து வருட ஒப்பந்தம் முடியும் வரையில் ஒன்றும் தெரியாதவர்களைப் போலவே நடந்துகொள்வது என்ற முடிவுக்கு வந்தோம். எப்பொழுதாவது அவளைச் சந்திக்கவேண்டும் என்ற அவசியம் ஏற்பட்டால் நள்ளிரவு நேரத்தில் முகமூடி அணிந்து வருவேன். இப்படியாக எங்கள் துயரத்துக்குரிய நாட்கள் வேதனையுடன் கழிந்தன.

''இந்த நிலையில் என் தங்கை இதோ நின்றுகொண்டிருக்கும் ராஜாமணியை காதலிக்கிறாள் என்பதையும் அவர்கள் இரண்டு பேர்களும் கல்யாணம் செய்துகொள்ள விரும்புகிறார்கள் என்பதையும் தெரிந்துகொண்டேன். என் உள்ளம் அவர்களை வாழ்த்தியது,

என் தங்கையின் வாழ்க்கையாவது வளமாக அமையட்டும் என்று இறைவனை வேண்டினேன்.

"ஒருநாள் மத்தியானத்துக்குப் பிறகு நான் மார்க்கட்டுக்கு போய் காய்கறி வாங்கிக்கொண்டு ராஜாமணியின் வீட்டு வழியாக வந்துகொண்டிருந்தேன். அப்பொழுது ராஜாமணியின் வீட்டினுள் ஒரு பெண் வீரிட்டுக் கத்தும் கூச்சல் கேட்டது. உடனே நான் பதறிய நிலையில் அங்கே ஓடிச் சென்று பார்த்தேன்.

"அந்த வீட்டினுள் கண்ணபிரான் என் தங்கையின் கைகளைப் பற்றி இழுத்துக்கொண்டு பலவந்தம் செய்ய முயற்சி செய்துகொண்டிருந்தான். அந்தக் காட்சியைப் பார்த்ததும் என் இரத்தம் கொதித்தது. மீண்டும் இரத்தக் கொதிப்பு அடங்கவேண்டும் என்ற ஆவேசம் பொங்கியது. அவனுடைய கெட்டவேளை பாருங்கள். அப்பொழுது தான் காய்கறி நறுக்கும் கத்திக்கு சாணை பிடித்துக்கொண்டு வந்திருந்தேன். ஆத்திரம் பொங்கியதால் அந்தக் கண்ணபிரானைக் கத்தியால் குத்திக் கொன்றுவிட்டேன் ஸார். என் தங்கை நிரபராதி அவள் தப்பு செய்திருந்தாலும் பயத்தின் காரணமாகவே செய்யப்பட்டதாகும். அதனால் அவளை மன்னித்து விடுங்கள்."

இவ்விதம் சொன்ன வாசு, ராஜாமணி ஸார், என் தங்கை பயங்கரவாதியைப்போல் உங்கள் கண்களுக்குத் தோன்றலாம். ஆனால் அவள் எடுப்பார் கைப்பிள்ளைப் போன்றவள். மிரட்டினால் பணிந்து விடும் சுபாவம் கொண்டவள். அதனால் அவள் செய்த தவறுகளையெல்லாம் மன்னித்து அவளை உங்கள் வாழ்க்கைத் துணைவியாக ஏற்றுக்கொள்ளுங்கள். மறுபடியும் என் தங்கையை அந்த வெறிபிடித்த மிருகங்களுக்கு இரையாகி விடாதீர்கள்." என்று கெஞ்சிக் கேட்டுக்கொண்டவன், மீனாவின் கையைப்பற்றி இழுத்து அவன் கையில் ஒப்படைத்தான்.

போலீசார் வாசுவைக் கைது செய்தார்கள்

"மீனா செய்துவந்த பயங்கரமான வேலை என்ன? இதுவரையிலும் சொல்லவில்லையே!" என்றார் இன்ஸ்பெக்டர் சாரங்கன்.

"நான் என்னவேலை செய்தேன் என்பதை நேரடியாகவே காட்ட விரும்புகிறேன். அதனால் எல்லோரும் தகுந்த பாதுகாப்பு ஏற்பாடுகளுடன் குபேரன் அண்டுகோவுக்கு வாருங்கள்." என்று கூறி அழைத்தாள் மீனா.

அவள் எல்லாவற்றிற்கும் துணிந்து விட்டாள். தன் அண்ணன் கொலைகாரனாகிவிட்ட பிறகு யாரையுமே அவள் காப்பாற்ற விரும்ப வில்லை.

குபேரன் அண்டுகோ நிறுவனத்தில் காம்பவுண்டு வாசலில் நின்றுகொண்டிருந்த கூர்க்கா, கார்களில் போலீஸார் இறங்கி வரு வதைக் கண்டதும் பதறியவனாய், "குபேரன் ஐயா இங்கே இல்லை." என்று சொன்னான்.

"அது எங்களுக்குத் தெரியும். முதலில் கேட்டைத் திறந்து விட்டதும் போலீஸார் அவன் கைகளில் விலங்கிட்டார்கள்.

பின்னர் இன்ஸ்பெக்டர் சாரங்கன் முன்னேறி வந்து பேக்டரி யிலுள்ள எல்லா பூட்டுகளையும் உடைத்தெறிந்துவிட்டு ஒவ்வொரு அறைகளாக சோதனையிட்டுக் கொண்டே சென்றார். பச்சை விளக்கு எரிந்து கொண்டிருந்த அறையின் கதவு மூடிக்கிடப்பதைக் கண்ட தும் நின்றார்.

"இந்த அறையினுள்தான் எல்லா மர்மங்களும் இருக்கின் றன. இது மின்சாரத்தினால் இயங்கும் ஒரு விசைக்கதவு இந்தக் கத வைத் திறந்துகொண்டு உள்ளே போனால் எதிர்பாராத சில நிகழ்ச்சி களைச் சந்திக்கலாம்" என்று சொன்னான் ராஜாமணி.

மீனா உயரத்தில் இருந்த பொத்தானை அழுத்தியதும் அந்த விசைக்கதவு தானாகவே திறந்து கொண்டது.

போலீஸ் அதிகாரிகளும் மற்றவர்களும் உள்ளே போனார்கள்.

அந்த அறை விசாலமான ஹால்போல் காட்சியளித்தது. அங்கே அதிகமான பொருட்களும் இல்லை.

உடனே மீனு அவர்களுடைய குழப்பத்தைப் போக்க முன் வந்தாள் "பச்சை விளக்கு எரியும்போது இங்கே வந்தால் இந்த அறை இப்படியேதான் இருக்கும். ஆனால் சிவப்பு விளக்கு எரியும் போது இங்கே வந்தால் பல மாற்றங்களையும் காணலாம்."

மீனு இவ்விதம் சொல்லிவிட்டு ஒரு பொத்தானை பிடித்து அழுத்தினாள். சிவப்பு விளக்கு உட்புறமாகவும் எரிந்தது.

உடனே 'கிர்ர்' என்ற ஒலியுடன் தரை சமசதுர வடிவத்தில் கீழே இறங்கி ஓரிடத்தில் போய் நின்றது.

"எல்லோரும் என்னுடன் இறங்கி வாருங்கள்." என்று கூறி அழைத்த மீனு அந்த பாதை வழியாக இறங்கிச் சென்றாள் மற்றவர்களும் அவளைப் பின்தொடர்ந்தார்கள்.

அது ஒரு பாதாள அறை. அங்கே சிறு சிறு பெட்டிகளில் கஞ்சா, அபின் போன்ற வஸ்துக்களும், ஆயிரக்கணக்கான ஊறுகாய் பாட்டில்களும் காணப்பட்டன.

இன்ஸ்பெக்டர் சாரங்கனும், ராஜாமணியும் வியப்புடன் ஒருவர் முகத்தை ஒருவர் பார்த்துக்கொண்டார்கள்.

"என்னுடைய வேலை என்ன என்பதை இப்பொழுது தெரிந்து கொண்டிருப்பீர்கள் என்று நினைக்கிறேன்.

வெளிநாடுகளுக்கு ஊறுகாய் புட்டிகளை பார்சல் செய்வது என்னுடைய வேலை. ஆனால் நான் ஊறுகாய்களுக்குப் பார்சல் செய்வதற்குப் பதில் கஞ்சா, அபின் போன்றவற்றையே பாட்டில்களில் அடைத்து ஊறுகாய் லேபிளுடன் பார்சல் செய்வேன். அவர்கள் என்னைக் கொன்றுவிடுவார்களோ என்ற பயத்தினால்தான் என் மனச்சாட்சிக்கு விநோதமான இந்தக் காரியங்களையெல்லாந் செய்தேன். இப்பொழுதுதான் என் தலையில் சுமத்தப்பட்டிருந்த பெரும் பளு இறங்கியதைப் போல் இருக்கின்றது." என்று சொன்ன மீனு தலையைத் தாழ்த்திக்கொண்டாள்.

''யாரோ வருவதுபோல் தோன்றுகிறது.'' என்று ஒரு போலீஸ்காரர் எச்சரிக்கை செய்தார்.

உடனே இன்ஸ்பெக்டரும் மற்றவர்களும் மேலே விரைந்து வந்தார்கள்.

சுமார் நூற்றுக்கும் மேலான தடியர்களும், குபேரன், மூக்கன் ஆகியோரும் ஆளுக்கொரு கைத்துப்பாக்கி சகிதம் நின்றுகொண்டிருந்தார்கள்.

குபேரன் அவர்களைப் பார்த்தவுடன் சற்றும் தாமதிக்காமல், ''சுமான்! சுட்டுத் தள்ளுங்கள் '' என்று இரைந்தார்.

உடனே எல்லோரும் ஒரே நேரத்தில் சுட்டார்கள். ஆனால் வெடியோசைதான் கேட்கவில்லை. போலீஸ் தரப்பைச் சார்ந்த யாரும் குண்டடி பட்டுக் கீழே விழவும் இல்லை.

குபேரன் எதிர்பாராத அதிர்ச்சிக்குள்ளாகி ஒன்றும் புரியாமல் தத்தளித்தார். குண்டுகள் ஏன் வெடிக்கவில்லை என்பது புரிந்து கொள்ளமுடியாத பெரும் புதிராக அவருக்குத் தோன்றியது.

''என்ன மாமா விழிக்கிறீர்கள்?'' என்ற குரல் கேட்டது.

எல்லோரும் அந்த குரல் வந்த திசைப் பக்கமாகத் திரும்பிப் பார்த்தார்கள். குபேரன் கூடத்தான்.

அங்கே, மாலினியும், குமார் மாப்பிள்ளையும் கைகோர்த்தபடி சிரித்த முகத்துடன் வந்துகொண்டிருந்தார்கள்.

''கோபித்துக்கொள்ளாதீர்கள் மாமா. நானும் மாலினியும்தான் துப்பாக்கிகளில் இருந்த எல்லா குண்டுகளையும் எடுத்துவிட்டோம். அதனால் இந்தத் துப்பாக்கிகளினால் யாரையுமே ஒன்றும் செய்ய முடியாது என்பதை நினைவூட்ட விரும்புகிறேன்.'' என்று குமார் சொல்லிவிட்டு அமோக வெற்றி பெற்றுவிட்டவனைப்போல் எல்லா பற்களையும் வெளியே காட்டியவாறு சிரித்தான்.

குபேரன் பற்களை 'நறநற' வென்று கடித்துவிட்டு சுவர் ஓரமாகப் பதுங்கிச் சென்றார். யாரும் எதிர்பாராத அவர் சுவரை ஒட்டியுள்ள பொத்தானை அழுத்தியதும் சட்டென்று பெட்டி போன்ற ஒன்று வாயைப் பிளந்தபடி வந்து அவரைத் தூக்கிக்கொண்டு சென்றது. கண் இமைக்கும் நேரத்திற்குள் பழையபடி சுவர் மட்டுமே இருந்தது. குபேரன் என்ன ஆனார் என்றே தெரியவில்லை.

"என் மாமனார் தாவி விட்டாரே! அவரை விட்டுவிடாதீர்கள்! அடிபட்டுச் சென்ற பாம்பு நிச்சயமாக வஞ்சம் தீர்த்துக்கொள்ள முயற்சி செய்யும்." என்று குமார் படபடத்தான்.

போலீஸ் அதிகாரிகள் முதல் வேலையாக எதிரிகளைக் கைது செய்துவிட்டு குபேரனைத் தேடிக்கொண்டு ஓடினார்கள்.

குபேரன் அந்தக் கூட்டத்தில் இல்லை. அவர் எப்படியோ தப்பிவிட்டார்.

மாலினி கொடூரமான தன் சித்தப்பாவின் நடவடிக்கைகளைக் கண்டு குலைநடுங்கியவளாய் என்ன செய்வது என்று தோன்றாமல் விழித்துக் கொண்டிருந்தாள்.

அவளுடைய கையைப் பற்றியவாறு குமார் அழைத்துச் சென்றான்.

தன் அண்ணன் வாசு கைது செய்யப்பட்ட நிலையில் நிற்பதைக் கண்டு மீனா அழுதாள். கொடிய செயல்களுக்கெல்லாம் மூல காரணமாக விளங்கும் குபேரன் தப்பிவிட்டதைக் கண்டு என்ன நடக்கப்போகிறதோ என்று நினைத்து அதிகக் கவலையடைந்தாள். அவனால் யாருக்கு என்ன ஆபத்து ஏற்படும் என்று முன்கூட்டியே யாராலும் சொல்ல முடியாது.

மீனா பயங்கரமான செயல்கள் செய்வதற்கு உடந்தையாக இருந்தபோதிலும், அவள் போலீசாருடன் ஒத்துழைக்க முன்வந்ததால் மன்னிக்கப்பட்டாள்.

"மீனு, குபேரன் வழக்கமாக எங்கே போவார் என்பது உனக்குத் தெரியுமா?" என்று ராஜாமணி கேட்டான்.

"எனக்குச் சரிவரத் தெரியாது. ஆனால் அவரைப் பார்ப்பதற்காக காந்தா என்ற ஒரு பெண் இங்கே அடிக்கடி வந்துபோவாள்." என்று சொன்னாள், மீனு.

ராஜாமணி அவள் சொன்னதை பெரிய போலீஸ் அதிகாரியிடம் தெரியப்படுத்திவிட்டு, "காந்தாவின் வீடு எங்கே இருக்கிறது என்பதைத் தெரிந்து கொண்டால் ஒருவேளை குபேரனை நாம் அங்கே சந்திக்க முடியும்." என்று சொன்னான்.

"அந்த வேலையை உங்கள் இரண்டு பேர்களிடமும் ஒப்படைக்கிறேன். உங்களுக்குத் துணையாக பல ரகசியப் போலீஸ்காரர்கள் வருவார்கள்." என்று அதிகாரி சொன்னார்.

மீனு, அவள் இங்கே வேலைக்கு வந்து சேர்ந்த புதிதில் கொடூரமான முறையில் கொலை செய்யப்பட்ட ரூபவாணி என்ற பெண்ணைப் பற்றியும் விளக்கினாள்.

இதுநாள் வரையிலும் அவள் இதை மறைத்து வைத்தது குற்றம்தான்.

ஆனால் சொன்னால் தன் உயிருக்கு ஆபத்து ஏற்படும் என்ற அச்சம் காரணமாக மறைத்து வைத்திருந்ததால் அந்தக் குற்றத்தைப் பெரிதாக போலீசார் எடுத்துக் கொள்ளவில்லை.

"இப்பொழுது நமக்குத் தேவை குபேரன் மட்டும்தான் அவன் எங்கிருந்தாலும் உடனே கைது செய்யப்படவேண்டும்." என்று போலீஸ் அதிகாரி சொன்னார்.

ராஜாமணியும் மீனுவும் அங்கிருந்து விரைவாக வெளியேறினார்கள்.

COMICS PDF TIMES

# 25. ஆசை நாயகியின் கண்ணீர்!

காந்தா மிகவும் ஆடம்பரமானதொரு வீட்டில் வசித்து வந்தாள். அந்த வீட்டுக்கு ராஜாமணியின் ஏற்பாட்டின்படி மீனு மட்டுமே அனுப்பப்பட்டாள்.

ராஜாமணியும், சாதாரண உடையுடன் கூடிய பத்துக்கும் மேற்பட்ட போலீஸ்காரர்களும் அந்த வீட்டைப் பார்க்கும்படியான தூரத்தில் உள்ள ஒரு வீட்டினுள் ஒளிந்துகொண்டிருந்தார்கள்.

அவளுக்கு ஏதாவது ஆபத்து என்ருல் உடனே சிவப்பு ரிப்பனை அந்த வீட்டின் ஜன்னல் கம்பியில் கட்டவேண்டும். அந்த ரிப்பனைப் பார்த்து விட்டால் உடனே மறைந்திருக்கும். போலீசாரும் ராஜாமணியும் அவளுடைய உதவிக்கு வந்துவிடுவார்கள்

மீனு அங்கே வந்தபோது காந்தா மட்டுமே இருந்தாள். குபேரனே மற்றவர்களோ வீட்டில் இருப்பதாகத் தெரியவில்லை. அவளிடம் எந்தவிதமான பதட்டமும் இல்லாததால் குபேரன் வந்திருக்க முடியாது என்று மீனு எண்ணிக் கொண்டாள்.

''மீனுவா...? நீ இன்றைக்கு வேலைக்குப் போகவில்லையா?'' என்று கேட்டாள் காந்தா. வழக்கத்தைப் போன்ற துருதுருப்பு அவளுடைய பேச்சில் இல்லை.

ராஜாமணியும், போலீஸ் அதிகாரியும் 'எப்படி எப்படி நடந்து கொள்ளவேண்டும்' என்று பாடம் சொல்லிக் கொடுத்திருந்ததால் அவள் அதன்படியே நடக்க முன்வந்தாள்.

''கம்பெனியில் என்ன நடந்தது என்று உனக்குத் தெரியாது போலிருக்கிறதே.''

அவள் திகைப்புடன் பார்த்தாள். "என்ன நடந்தது? அவருக்கு மறுபடியும் பைத்தியம் பிடித்து ஏதாவது செய்து விட்டாரா?'' என்று கேட்டாள்.

பைத்தியமா? குபேரன் அடிக்கடி வெறிபிடிக்கும் தன்மை கொண்டவர்தானு?

''அவருக்குப் பைத்தியம் பிடிக்கவில்லை. என் பின்னுலேயே சதாவும் சுற்றிக்கொண்டு திரிந்தார் அல்லவா ராஜாமணி என்ற வாலிபர். அவரும், மாலினியும் சேர்ந்து கம்பெனியைக் கவிழ்த்து விட்டார்கள். குமார் சதி செய்துவிட்டார். போலீஸார் கம்பெனியைச் சுற்றி வளைத்து குபேரனைத் தவிர மற்ற எல்லோரையும் கைது செய்து விட்டார்கள்.''

மீனு இப்படிச் சொன்ன வார்த்தைகளைக் கேட்டு மகிழ்ந்து கொண்டிருந்த காந்தா, குபேரனை போலீஸார் கைதுசெய்யத் தவறி விட்டார்கள் என்பதை அறிந்தவுடன் பெரும் அதிர்ச்சிக்குள்ளானுள். அவளை நோக்கி வந்து கொண்டிருந்த மகிழ்ச்சி எந்தத் திக்கை நோக்கிப் போனதோ என்று தெரியவில்லை.

அவள் நீரூற்றுபோல் பொங்கிக் கொண்டிருந்த கண்ணீரைத் துடைத்துவிட்டு, ''மீனு, அவர் இங்கே வந்தாலும் வரலாம், அதனுல் தயவுசெய்து உடனே ஓடிப்போய்விடு.'' என்று படபடத்தாள்.

''அவர் இங்கே வந்தால் எனக்கு ஆபத்து வரும் என்று பயப்படுகிறுயா? இல்லாவிட்டால் உனக்கே ஏதாவது...?''

''மதில்மேல் இருக்கும் பூனை எந்தப் பக்கம் குதிக்கும் என்பதை எப்படி நாம் எதிர்பார்க்க முடியும்? நாம் கூட்டுச் சதி செய்வ

தாக நினைத்து நம் இரண்டு பேர்களுக்குமே ஆபத்தை உண்டு பண்ணலாம்.''

மீனு அவளுக்கு ஆறுதல் சொன்னுள். தைரியம் உண்டு பண்ணினுள். ''உன்மேல் சிறு துரும்புகூட விழ அனுமதிக்க மாட் டேன்.'' என்று சொன்னுள்.

''இருந்தாலும் எனக்குப் பயமாகவே இருக்கிறது.'' என்ருள் காந்தா. ''என்மேல் நம்பிக்கைவை.'' என்று சொன்ன மீனு, சுவரில் காணப்பட்ட போட்டோவைப் பார்த்துவிட்டு, ''இது...இது...இந்தப் பெண், உன் பக்கத்தில் இருப்பவள் யார்?'' என்று கேட்டாள்.

காந்தா அந்தப் போட்டோவைக் களற்றி எடுத்துப் பார்த் தாள். அவள் கண்களிலிருந்து வழிந்தக் கண்ணீர் போட்டோவின் கண்ணுடியை நனைத்தது.

''என் தங்கையை உனக்குத் தெரியுமா?'' என்று காந்தா, தொண்டை அடைத்துக்கொள்ள கேட்டாள்.

போட்டோவில் காணப்படும் பெண்மணிதான், ஆரம்பத்தில் மீனு வேலைக்குச் சேர்ந்தபோது கொதிக்கும் நீரில் தூக்கிப்போட்டு பதைக்கப் பதைக்க படுகொலை செய்யப்பட்டவள்.

இவள் அவளை தங்கை என்று சொல்கிருளே, அதன் பொருள் என்ன? கொல்லப்பட்டவள் காந்தாவின் உண்மையான தங்கைதானு?

அவளும் காந்தாவும் ஜோடியாக எடுக்கப்பட்ட போட்டோ அது!

காந்தாவுக்கு எதுவுமே தெரியாதா? அவள் படுகொலை செய் யப்பட்ட துயரக கதையை அப்படியே மறைத்துவிட்டாரா?

''இப்பொழுது உன்னுடைய தங்கை எங்கே? வீட்டில்தான் இருக்கிருளா?'' என்று அவள் கேட்டாள்.

மீண்டும் 'பொல பொல'வென்று கண்ணீர் அவளுடைய கண் களிலிருந்து தெறித்து விழுந்தது. ''வேலை செய்துகொண்டிருந்த

போது அவள் கொதிக்கும் எண்ணெயில் தவறுதலாக விழுந்து இறந்து விட்டாளாம்.'' என்று சொன்னாள்.

அவளிடம் உண்மை மறைக்கப்பட்டு பொய்க்கதை கட்டிவிடப் பட்டிருக்கிறது என்பதை மீனு தெரிந்துகொண்டதும், இதுதான் அவளுடைய மனத்தைக் கலைப்பதற்குத் தக்க தருணம் என்பதை என்பதை உணர்ந்து, ''உங்கள் தங்கையின் உயிர் பிரிந்தபோது நானும் பக்கத்தில்தான் இருந்தேன். அவளிடைய கொடூர மரணத்தைப் பார்க்க நேர்ந்த துர்ப்பாக்கியசாலிகளில் நானும் ஒருத்தி.'' என்று சொன்னாள்

''கொடூர மரணமா?'' அவள் பதறினாள்.

''எந்த மனிதனாலுமே நினைத்துப் பார்க்க முடியாத கொடூர மான தண்டனைதான் அது. அவள் கம்பெனியின் ரகசியத்தை வெளி யிட முயன்றாள் என்ற குற்றத்துக்காக அவளுடைய கைகளையும் கால் களையும் கட்டி அப்படியே கொதிக்கும் தண்ணீரில் தூக்கிப் போட்டு பொரித்து எடுத்துவிட்டார்கள்.'' என்றாள் மீனு.

''நீ சொன்னதில் பொய் எதுவும் இல்லையே...'' என்று காந்தா சிறிது நேரம் கழித்து, பொங்கி வழிந்து கொண்டிருந்தக் கண்ணீரைத் துடைத்துக்கொண்டே கேட்டாள்.

''நான் கண்ணால் பார்த்தேன். அப்பொழுதெல்லாம் படுகொலை செய்யப்பட்டவள் உன்னுடைய தங்கைதான் என்ற உண்மை எனக்குத் தெரியாமல் போய்விட்டது.'' என்றாள் மீனு.

இதுவரையிலும் அந்த போட்டோ பழைய படங்களுடன் கூடிய பெட்டியினுள் வைக்கப்பட்டிருந்ததாகவும், சிறிது நேரத்திற்கு முன்னால்தான் ஏதோ ஒரு ஞாபகத்துடன் சுவரில் எடுத்து மாட்டிய தாகவும் சொன்னாள்.

''என் தங்கையைக் கொலை செய்துவிட்டு இதுவரையிலும் என்னை ஆசை நாயகியாக வைத்திருந்த அந்த அயோக்கியனை விடவே கூடாது. பழிக்குப்பழி வாங்கியே தீரவேண்டும்.'' என்று

கர்ந்தா கர்ஜனை செய்தாள். உடன் பிறந்த இரத்தம் அழிக்கப்பட்டதே என்ற ஆவேசம் உடலெங்கும் காட்டுத் தீயாகப் பரவி நின்றது.

"எனக்கும் அதே எண்ணம்தான். குபேரனை இனிமேல் இந்த உலகத்தில் நடமாடவே விடக்கூடாது. கொடுமை செய்வதைப் பொழுது போக்காகக் கொண்ட அவனை அழித்தே தான் ஆக வேண்டும்." என்று மீனுவும் பதிலுக்கு முழங்கினாள்.

ஆனால் குபேரன் எங்கே இருக்கிறான் என்பதைக் கண்டு பிடிக்க வேண்டுமே! அவர் இங்கே வருவார் என்பதற்கு என்ன உறுதி இருக்கிறது?

"மறுபடியும் குபேரன் இங்கே வருவார் அல்லவா?"

"எதையும் உறுதியாகச் சொல்லமுடியாது."

"இந்த வீட்டைத் தவிர வேறு எங்கேயாவது அவர் போவாரா?"

"அவன் மிகவும் மட்டரகமான மிருகம். கேவலமான மனிதப் பிறவி. இழிவான சாக்கடையோரமாகக் குடியிருக்கும் பெண்களிடம் கூட தொடர்பு வைத்திருப்பான்."

அவள் வேதனையுடன் இப்படிக் குமுறியபோது அதே அறையினுள் வைக்கப்பட்டிருந்த டெலிபோன் ஓங்காரச் கூச்சல் போடுவதைப்போல் அலறியது.

குபேரன்தான் எங்கேயாவது இருந்து அவசரம் அவசரமாக அவளுக்கு டெலிபோன் செய்கிறாரா? ஆசைநாயகியான அவளுடன் எங்கேயாவது ஓடிப்போய்விடவும் திட்டம் போட்டிருக்கலாம்.

மீனு, டெலிபோன் செய்திருப்பது குபேரனாக இருக்கக்கூடுமோ என்பதை நினைவுபடுத்தி, "பக்குவமாக நடந்துகொள். அது குபேரனாக இருந்தால் நான் இங்கே இருப்பதையோ, உன் தங்கை கொலை செய்யப்பட்டாள் என்பவை நீ கண்டுபிடித்துவிட்டதையோ சொல்லி விடாதே." என்று சொன்னாள்.

சிற்றின்ப வேட்கையின் காரணமாக தங்கையையே இழந்து விட்ட காந்தா கொஞ்சம்கூட தன் பழிவாங்கும் உணர்ச்சிகளைக் குறைத்துக்கொள்ளவில்லை.

அவள் 'விருட்டென' எழுந்து சென்று ரிசீவரை எடுத்து "ஹலோ யார் பேசுவது?" என்று கேட்டாள்.

மறுமுனையிலிருந்து பேசுவது குபேரன்தான் என்பதைத் தெரிந்துகொண்டதும், மீரு எல்லாவற்றையும் தெளிவாகத் தெரிந்து கொள்ளவேண்டும் என்பதற்காக, 'யார் குபேரன் அத்தானு? எங்கிருந்து பேசிகிறீர்கள்? லஸ்முனையில் உள்ள பப்ளிக் டெலிபோன் பூத்திலிருந்தா...?" என்று அவள் பேச்சைத் தொடர்ந்துகொண்டே போனுள்.

குபேரன் லஸ்முனையிலிருந்து பேசுகிருர் என்பதை அவளுடைய பேச்சு மூலம் கிரகித்துத் தெரிந்துகொண்ட மீரு, "காந்தா... நீண்ட நேரம் நேரம் பேசிக்கொண்டிரு. ஒரு நொடியில் நாங்கள் போய் வளைத்துப் பிடித்துக்கொள்கிருேம்." என்று சொன்னவள், அங்கிருந்து ஓட்டம் பிடித்தாள்.

# 26. கொள்ளையோ கொள்ளை!

குபேரன் பப்ளிக் டெலிபோன் பூத்தைவிட்டு வெளியே வருவதற்கும் போலீஸார் விரைந்து வந்து அவரைச் சுற்றி வளைத்துக் கொள்வதற்கும் சரியாக இருந்தது

பாதைகளின் நாற்புறமும் பெரும் கூட்டம் கூடிவிட்டது. குபேரன் வெலவெலத்துப் போய்விட்டார்.

போலீஸார் அவருடைய கைகளை விலங்கினுள் திணித்தார்கள். அவர் கொடூரமான மனிதர் என்பதால் கால்களையும் இரும்புச் சங்கிலியால் இணைக்கப்பட்டது.

''என்ன முதலாளி... நீங்கள் எங்கே போனாலும் உங்களை விடமாட்டோம். என்றைக்கு நீங்கள் தூக்குமேடையில் தொங்குகிறீர்களோ, அன்றைக்குத்தான் சென்னை நகரமக்களுக்கெல்லாம் நல்ல காலம்.'' என்று ராஜாமணி முன்னால் வந்து சொன்னான்.

குபேரன் அவனைப் பார்த்த பார்வை இருக்கிறதே, அது சாதாரணமானதல்ல. எரிக்கும் சக்தி கண்களுக்கு உண்டென்றால் எப்பொழுதோ அவன் கருகிச் சாம்பலாகி இருப்பான்.

''நீங்கள் இவ்வளவு விரைவில் பிடிபட உதவி செய்தது யார் என்பதையும் தெரிந்துகொள்ளுங்கள். அவள் இன்னும் சில விநாடிகளில் இங்கே வந்துவிடுவாள்.''

ராஜாமணி சொல்லிக்கொண்டிருந்தபோதே அம்பாசிடர் காரை அநாயசமாக ஓட்டிக்கொண்டுவந்த காந்தா ஓரமாக நிறுத்திவிட்டு பரபரப்புடன் ஓடிவந்தாள்.

''மதிப்பிற்குரிய குபேரன் அவர்களே! அந்தப் பெண் யார் என்பதை இப்பொழுதே நீங்கள் நேரில் பார்த்துத் தெரிந்துகொள்ளுங்கள்.''

அவன்தான் இதையும் சொன்னான்.

காந்தாவும் தனக்குத் துரோகம் செய்துவிட்டாள் என்பதைத் தெரிந்து கொண்டு அவர் குமுறினர்.

வேறு என்ன தான் அவரால் செய்ய முடியும்?

''மீனுவின் தாயாரைக் கொலை செய்துவிட்டு அவளைக் கடத்திக்கொண்டு வருவதற்குக் காரணமாக இருந்த கண்ணபிரானின் கையாள் போலீஸாரிடம் நடந்ததைச் சொல்லி அப்ருவராக மாறினன்.

குபேரனுக்குத் தூக்குத்தண்டனை கிடைத்தது.

அவனுடைய ஆட்களில் பலர் ஆயுள் தண்டனை அடைந்தார்கள்.

மீனு தன்னைப் பற்றிய ரகசியங்கள் எதையுமே தன் காதலன் ராஜாமணியிடம் மறைக்கவில்லை. தன் உணர்வை அழித்து ரகசியமான முறையில் கண்ணபிரான் கழுத்தில் தாலி கட்டியதையும், அதன் பிறகு ஏற்பட்ட அல்லல்களையும் விளக்கினுள்.

ராஜாமணி கடந்த காலத்தை கெட்ட கனவாக நினைத்து அவளை—மீனுவை அன்புக்குரிய மனைவியாக ஏற்றுக்கொண்டான்.

குமார்—மாலினி, ராஜாமணி—மீனு தம்பதிகளுக்கு ஒரே மேடையில் வைத்தே திருமணம் நடந்தேறியது.

மீனு இப்பொழுது ராஜாமணியின் சட்டரீதியான மனைவி.

அன்றிரவுதான் அவர்களுக்கு முதல் இரவு!

இதில் இன்னொரு வியப்பான செய்தி என்னவென்றால் அன்றிரவும் முழு நிலவு உதயமாகியிருந்தது.

அன்றொரு நாள் வந்த முழு நிலவு நெருப்பாக மீனாவைச் சுட்டது. அதைச் சபித்தான்.

ஆனால் இன்றிரவு வந்திருக்கும் முழு நிலவு அப்படி அல்ல. அந்த நிலவிலிருந்து புது ஜோடிகளுக்குத் தேவையான குளிர் அருவி கொட்டியது. அதன் குளுமையை அவர்கள் ஆசை ஆசையாக அனுபவிக்கிறார்கள்.

இரு ஜோடிகளும் முழு நிலவின் குளுமையான ஒளியுடன் முதல் இரவின் மகிழ்ச்சியைத் பரிபூரணத் திருப்தியுடன் அனுபவித்தார்கள்.

அந்த முழு நிலவுக்கும், இந்த முழு நிலவுக்கும் தான் எவ்வளவு வித்தியாசம்!

நேராக முழு நிலவுக்கே பயணம் செய்துகொண்டிருந்ததைப் போன்ற மனப்பூரிப்பு எல்லோருக்கும்.

இதுவரையிலும் அவர்கள் அனுபவித்துவந்த தொல்லைகள் அகன்றன. எங்கு பார்த்தாலும் கொள்ளையோ கொள்ளை!

ஆம்!

அது இளம் தம்பதிகளுக்கு இன்பக் கொள்ளை!

முற்றும்.

அச்சிட்டோர்: ஜோதிமணி பிரஸ், மதுரை—'70.

# காதலித்த கல்லூரி மாணவி

(திகைப்பூட்டும் மர்மக்கதை)

புதுமை எழுத்தாளர்

மகேஸ்வரன்

**கைவண்ணத்தில் உருவான ஒப்பற்ற பயங்கரநாவல்!**

கல்லூரி மாணவி வித்யாவை கல்லூரி மாணவன் மாதவன் காதலிக்கிறான். ஆனால் வித்யாவின் இதயங்கவர்ந்தவன் சி. ஐ. டி. சிவகுமார். வயிற்றில் குண்டுக் காயத்துடன் வித்யாவின் படுக்கையறைக்குள் தஞ்சம்புகும் மாதவன் அங்கே சிவகுமாரின் வரவை எதிர் பார்க்கவில்லை. வித்யாவிற்கு மனப்போராட்டம். முடிவில் காட்டிக் கொடுத்தாள் காரிகை! ஆனால் மாதவனே அங்கே பிணமாகக் கிடந்தான்.

சிலோனிலிருந்து தன் கணவனைத்தேடி சென்னைக்கு வந்து சி. ஐ. டி. சிவகுமாரிடம் சிக்கிக்கொண்ட ரோகிணி என்ற இளம்பெண் சொல்லும் தகவல்கள் மூலம் மாதவன்தான் ரோகிணியின் கணவன் என்று ஊகித்து அவளுக்கு அடைக்கலம் தருகிறான், ஆனால், அடுத்தடுத்து பல கொலைகள். அடைக்கலம் புகுந்தவர்களே சிவகுமாருக்கு புதிராக இருக்கும் போது, இந்நாவலைப் படிக்கும் வாசகர்களுக்கு பெரும் புதிராக இருக்கும் என்பதில் ஐயமில்லை.

**200 பக்கங்கள் மலிவு விலை ரூ. 1-50**

இது ஒரு கலைப்பொன்னி வெளியீடு

விற்பனையாகிறது !

மர்மம் நிறைந்த புதுமை நவீனம்!!

# காட்டுமிராண்டியின் காதலி

ஆசிரியர்: பீ. டி. சாமி.

இருபுறமும் வார்னீஷ் பிரிண்ட் !

ஜாக்கட் அட்டை ! பெரிய சைஸ் !

ஜப்பான் தலைநகர் டோக்கியோவிலிருந்து விண்ணில் பறந்த அமெரிக்க உல்லாச கிளப் விமானத்தில் ஆஸ்திரேலிய அழகி சிசிலி, ஜப்பான் அழகி மிஸ் மிதண்டா, அமெரிக்க அழகி ரோஸ்லின், லண்டன் அழகி கிரேஸ் மாத்தி, இத்தாலிய அழகி எஸ்தர், பிரெஞ்சு அழகி மெக்பத், சீனத்து அழகி கிஸ்-மஸ்-கி, இந்திய அழகி தமிழ்க்கொடி, பணிப்பெண் லல்லி ஆகிய ஒன்பது இளம் பெண்களும் நான்கு ஆண்களும் இருந்தனர். இடையில் விமானத்துக்கு ஏற்பட்ட கதியும், காட்டுமிராண்டியின் அத்துமீறிய செயல்களுக்கும் பலியான அப்பெண்களின் சோக நிகழ்ச்சியை மர்மப் பாணியில் புதுப் பொலிவுடன் ஆசிரியர் இந்நூலில் விளக்குகிறார்.

**200 பக்கங்கள். மலிவு விலை ரூ. 1-50**

இது ஒரு கலைப்பொன்னி வெளியீடு !

**மலிவுப் பதிப்பு!** **விலை ரூ. 1-00**

**முதன்முதலாக எம். ஜி. ஆரைப் பற்றி வெளிவரும் நூல்.**

## பொன்மனச் செம்மல்

# புரட்சி நடிகர் எம்.ஜி.ஆர்.

**அணிந்துரை: மாண்புமிகு முதல்வர் மு. கருணாநிதி.**

நான்கு கோடித் தமிழர்களின் உள்ளங்களில் இதயஜோதியாய் விளங்கும் நமது அண்ணன் எம். ஜி. ஆர். வாழ்க்கையிலும், திரைப்படத்திலும் நடந்த சம்பவங்களை சதிலீலாவதி முதல் மாட்டுக்கார வேலன் வரை ஒன்றுவிடாமல் தொகுத்துக் கூறும் ஒப்பற்ற உயிரோவியம்!

அறிஞர் அண்ணா வாழ்க்கை வரலாறு புத்தகத்தைச் சமர்ப்பித்த தூத்துக்குடி இளம் நண்பர் பாண்டியனின் கைவண்ணம் உள்ளத்தைப் பரவசமடையச் செய்யும் விதமாக அழகான தமிழிலே பளிச்சிடுகிறது.

மக்கள் திலகத்தைப் பற்றிய ஒவ்வொரு செய்தியும் அற்புதமான நடையில் எழுதப்பட்டு உள்ளது

கவர்ச்சிகரமான முறையிலே அழகிய ஆர்ட் அட்டை முகப்போடும், ஆறு கலர் வால்போஸ்டுடனும் இந்நூல் அச்சிடப்பட்டுள்ளது.

ஏராளமான பக்கங்கள்! இருப்பினும் தமிழக மக்களின் இதயங்களை எல்லாம் மகிழ்விப்பதற்காக மலிவுப் பதிப்பாக வெளியிடுகிறோம்.

தனிப் பிரதி வேண்டுவோர் ரூ. 1-20 M. O. மூலம் அனுப்பி பெற்றுக்கொள்ளவும்.

பரபரப்பூட்டும் புதுமை நவீனம்!

மர்மக்கதை மன்னர்

# நாஞ்சில் பி. டி. சாமி எழுதிய

# நடிகையின் தேன் நிலவு

(பயங்கர மர்ம நாவல்)

தேன் நிலவிலே சிந்தும் கற்பனைத் தேன் துளிகளோடு திகிலையும் திகைப்பையும் கலந்து ஒரு கவர்ச்சி நடிகையுடன் உறவாடும் கதையை ஆசிரியர் திரைப்படம் பார்ப்பது போன்று அமைத்திருக்கிறார்.

ஒவ்வொரு அத்தியாயத்திலும் ஒரு புதுமையைப் புகுத்தி வாசகர்களைத் திகைப்பில் ஆழ்த்தும் அற்புதமான கதைப்போக்கு!

புதுமையான கதை! அருமையான நடை! அற்புதமான கற்பனை! நிமிடத்திற்கு நிமிடம் திகைப்பூட்டும் பயங்கரம்! உணர்ச்சிகளைக் கிளறும் காதல் களியாட்டங்கள்! ஒப்பற்ற துப்பறியும் சாகஸம்! ஒற்றர்களின் காட்டு மிராண்டித்தனமான செயல்கள்!

ரசிகர்களுக்குத் திகட்டாத
திகைப்பூட்டும் மர்மக்கதை!

இருபுறமும் வார்னீஷ் பிரிண்ட் ஜாக்கட் அட்டை
பெரிய சைஸ்

**200 பக்கங்கள். மலிவு விலை ரூ. 1-50**

இது ஒரு கலைப்பொன்னி வெளியீடு!

## கைவசமுள்ள நவீனங்கள்!

சிரிக்கும் கண்கள்
அண்ணு யார்
பயங்கர சாமியார்
பாசக் கயிறு
பாதாளப் பேய்
இடிந்த கோவில்
சிங்கப்பூர் கைதி
சந்தித்த இரவு
மலர் மஞ்சம்
மர்மக் குரல்
மஞ்சள் நிற பூ
கதவைத் தட்டிய கை
துப்பறியும் காதலன்
நீலரோஜா
மறைந்த நிழல்
அதிசயப் பிறவி
மாயக் கள்ளி

## ஏராளமான பக்கங்கள்!

## ஒவ்வொன்றும் 50 காசு!

# கைவசமுள்ள நவீனங்கள்!

ஒரு துப்பாக்கி ஒன்பது கொலை
அண்ணாவின் புரட்சி
சீமானை மயக்கிய செந்தாமரை
இரும்பு மனிதனின் இதயராணி
கட்டழகியின் கடைசி இரவு
விருந்திற்கு வந்த விஷ மங்கை
காலேஜில் கண்டெடுத்த கடிதம்
நள்ளிரவில் நடன மங்கை
மரியகுட்டி கொலை வழக்கு
மன்மதன் கோயில் மலர்கள்
அம்மணி அளித்த பிணம்
இருளில் மறைந்த இரத்தப் பேய்
கோடீஸ்வரன் குமாரி
மறைக்கப்பட்ட மங்கை
மலர்ந்த மொட்டு
கனவில் வந்த கட்டழகி
ஓடிவந்த காரை தேடிவந்த பாவை
படுக்கையறையில் பயங்கர மிருகம்

## ஏராளமான பக்கங்கள்!

## ஒவ்வொன்றும் 50 காசு!


கலைப் பொன்னி வெளியீடு
மலிவுப் பதிப்பு
விலை ரூ 1.
மர்ம நாவல்